GAYAR MALAR

வரி '95 விலை ரூ. 7/-

மங்கையர் மலர்





இதயம்
நல்லெண்ணெய்

நானும் ஒரு கில்லாடி தான் ...

என்ன சார்...
என்ன அப்படிப் பார்க்கறீங்க?
என்னடா வீட்டுக்காரியை
ஆபீசுக்கு அனுப்பிச்சிட்டு இவன்
சமையல் பண்ணிக்கிட்டு
இருக்கானேன்னா?



இன்னைக்கு வீட்ல விசேஷங்க.
எங்க கல்யாண நாள். அவளுக்கு லீவு
கிடைக்கலை. நான் ஆபீசுக்கு லீவு
போட்டுட்டு என் நளபாகத்தை
ஆரம்பிச்சிட்டேன். சமையலிலே
நானும் ஒரு கில்லாடி தான்.
இருக்கவே இருக்கு
இதயம் நல்லெண்ணெய்.
அதுல சமையல் செஞ்சா சுவையும்
மணமும் பிரமாதம்.

இதயத்திற்கு இதமானது **இதயம் நல்லெண்ணெய்**

இதயம் நல்லெண்ணெய் இரத்தத்தில்
கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கிறது.

BOMBAY DISTRIBUTOR
M/s. P.R. OIL DEPOT (P. Ramalingam)
MATUNGA (C.R), BOMBAY - 400 019
Phone: 4372077 & 4732473

DELHI DISTRIBUTOR
M/s. SRI RAMA STORE
SHOP No.4, RAMA MARKET MUNIRKA,
NEW DELHI - 110 067 Phone : 662686 & 652476



Silverspoon

வாழ்க்கை நெய் மணக்கும்

— மஞ்சுளா ரமேஷ்

மதுரையில் மகளிர் விழா ரொம்பச் சிறப்பாக நடந்தது. பரிசளிப்பு விழா முடிந்தவுடன், ஒரு கல்யாணம் நல்லபடியாக முடிந்த திருப்தி. எல்லோரும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தோம். பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட மதுரை வானொலி நிலைய இயக்குநர் செல்வி. லீலா எனக்கு மூத்த சகோதரி போன்றவர். இருபது வருடங்களாக அன்பைப் பொழிபவர். அவர்,

"மஞ்சு, இந்த ரெண்டு நாட்டுப்புறப் பாடல்களைப் பாரு. இப்பல்லாம் நாம ஆபீஸ், வீடுன்னு ரெண்டு பொறுப்புக்களைச் சுமக்கிறோம். வீட்ல அவதி அவதியாக வேலை செஞ்சுட்டு ஆபீசுக்கு ஓட்டம். ஆபீஸ்ல மென்னி பிடிக்கும் வேலை. மீண்டும் வீட்டுக்கு ஒரு ரேஸ், ராத்திரி சமைக்க. இப்படித்தான் இன்னிக்குப் பெண்ணோட வாழ்க்கை.

நாம யாரும் பெரிசா பாராட்டுப் பத்திரம் எதிர்பார்க்கலை. ஆனா, 'என்ன பெரிசா கிழிச்சிட்டா' என வீட்லயும், 'வீட்டு வேலை முக்கியம்னா ஆபீஸ் வரக் கூடாதும்மா'ன்னு மானேஜர் ஆபீஸ்லேயும் இடிக்கிறாங்க. இந்த மாதிரி இட்டாம அனுதாபமா அவளைப் பார்க்கலாமே! அந்தக் காலத்திலேயே ஒரு கணவன் தன் மனைவி இப்படி இரண்டு விதமாகவும் அற்புதமா வேலை செய்யறதைப் பெருமையாப் பாடியிருக்கான், பாரேன்" என முதலாவது பாட்டைக் காண்பித்தார்...


"அரிசி முனைப் போட்டு
அரமனையும் சுத்திவந்தா
அரிசி மண மணக்கும்
அரமனையும் பூ மணக்கும்

பருப்பு முன போட்டு
பட்டணமும் சுத்தி வந்தா
பருப்பு மண மணக்கும்
பட்டணமும் பூ மணக்கும்

வரிசை மணாளனோடு
வாய்சிரித்துப் பேசிவந்தால்
வாழ்க்கை நெய் மணக்கும்
வாசநறும் பூ மணக்கும்."

படிக்கும்போதே மனசு எப்படி குதி போடுது? அரிசி, பருப்பை உலையிலே போட்டு, அது வெந்து போவதற்குள் வெளியிலே போய் அரண்மனை வேலையை முடித்து வந்துவிடுவாளாம். சாப்பாடும் மணக்கிறது. அரண்மனையும் மணக்கிறது. நாம் குக்கர் வைத்துவிட்டு மற்ற வேலைகளைப் பார்க்கப் போவது ஞாபகம் வருகிறது இல்லையா? இப்படி ஒரு கணவன் தன் மனைவியைப் பெருமையாக வாய் விட்டுச் சொன்னால் இன்னும் எத்தனையோ வேலைகளைச் செய்யலாமே!

இதெல்லாம் பெண்ணடிமைத்தனம், பெண்களை இன்னும் கொஞ்சம் வேலை வாங்க



சில பிரச்னைகள்; சில வார்த்தைகள்!

போகிப் பொங்கல் கோலம் - 12 புள்ளி; 12 வரிசை



- உமாமகேஸ்வரி

ஆண்கள் செய்யும் பாசாங்கு வேஷம் என நம்மில் சில சகோதரிகள் கர்ஜிக்கிறது காதில் விழுகிறது. ஆனால், அந்தப் பாசாங்கு வேஷத்திற்குக் கூட அல்லவா இன்று பஞ்சம்? பெண்கள் எத்தனை உழைத்தாலும் 'என்ன அதிசயம்' எனும் அலட்சியம்தானே மற்றவர்களிடம் தூக்கி நிற்கிறது.

லீலா கொடுத்த இன்னொரு பாட்டு என் நெஞ்சைப் பிழிந்துவிட்டது.

பட்டு தலையாணி
பாட்ட மூடு கச்சேரி
பட்டு தெறல் கொலைஞ்சேன் - நான்
பாட்ட முட்டு சீரெளத்தேன்
புன்னித் தலகாணி
பொறந்த இடம் கச்சேரி
புன்னி தெறல் கொலஞ்சேன் - நான்
பொறந்த இடம் சீரழிஞ்சேன்
சங்கு மணியடிக்கும்
சர்க்காரு என் தொரையே
சார்ந்திருக்கும் போலீசாரே
சர்க்காரு வக்கீலே - நான்
தந்ததை வாங்கிக்கிட்டு - என்
சவத்தையும் விட்டுடுங்கோ
குண்டு மணியடிக்கும்
கோர்ட்டாரு என் தொரையே - நான்
குடுத்ததை வாங்கிக்கிட்டு - என்
கொளந்தையை விட்டிருங்கோ"

ஆண்டவனே, இது பாட்டா? ஒரு பெண்ணின் நிலைகுலைந்த கதறல். 'பாட்ட' என்றால் ஜீவனாம்சத்திற்கான வழக்காம். அந்தக் காலத்திலேயே இந்த கோரம் இருக்கின்றது. கேளுங்களேன், 'தந்ததை வாங்கிக்கிட்டு என் **சவத்தை** விட்டுடுங்கோ'. ஆமா, அவ மனசால செத்தே போயாச்சு. 'என் உடம்பை விட்டுவிடுங்கள், நான் மானமாகவாவது வாழ்கிறேன், குடும்பமா கணவனா என்ன சுகம் கண்டேன்' எனும் விரக்தி. கடைசியில் 'என் கொளந்தையை விட்டிருங்கோ' என்கிறாள். இந்த உடம்பு வாழ்வதே என் கொளந்தைக்குத்தான், அதை விட்டுடுங்க! மண்ணில் புரண்டு பஞ்சாயத்தார் முன் கதறும் ஒரு பெண் தோன்றவில்லையா? மனம் கனத்துப் போய்விட்டது.

அவள் மட்டுமா, அந்தக் காலத்தில் மட்டுமா? இன்றைக்கும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமே, எத்தனை எத்தனை பெண்களை கண்ணீர்க் குளங்களின் நடுவிலே.

"நீ அழகில்லை" என விலக்கி வைக்கும் ஒருவன்.

"உங்கப்பன் சொன்னபடி பத்து சவரன் போடவில்லை" என மற்றொருவன்.

"தீபாவளிக்கு ஏண்டி ஸ்கூட்டர் தரலை?" இரண்டு குழந்தைகள் பெற்றும் மாமனாரை எதிர்பார்க்கும் கயவன்.

எத்தனை பேரில்லை. ஆண்கள் மட்டும்தானா, பெண்கள் கூடத்தான். அன்றலர்ந்த பூவாக வந்த இளம்பெண்களை, போலீஸ்காரன் நகக்கணுவில் ஊசி ஏற்றுவது போல நெஞ்சில் சொல்லம்புகளை வீசுகிறார்கள். மனிதர்களுக்கு ஏனிந்தப் பேராசை!

வரதட்சணை, சீர்செனத்தி என்பது மட்டுமல்ல. நாம் காணும் பல குடும்பங்களிலுமே இன்றைய நிலையில் அன்பு, நேசம் என்பது ரொம்பக் குறைந்துபோய்விட்டது. ஒருவருக்கொருவர் சாடிக் கொள்வதும், நான் சொல்வதுதான் சரி என அதற்கு ஒத்துப் போகாதவர்களை வாய்க்கு வந்தபடி ஏசுவதும், மற்றவர்களின் மனங்களைப் புண்படச் செய்வதே, நான் எடுத்துவந்த அவதாரத்தின் நோக்கம் என வாழ்வதும்....

ஏன், ஏன்? இந்த மனுஷ்ய ஜன்மங்கள் இப்படிப் பேயாய்ப் பேராசை பிடித்து அலைகிறார்கள்?

சிறு குழந்தையின் கள்ளம் கபடமற்ற

சிரிப்பு —

காதலால் கட்டுண்ட இளம் தம்பதியரின் கண்களில் மின்னும் கிறக்கம் —

அன்பால் வாழ்ந்த வயதான தம்பதியரின் கனிவான சிரிப்பு —

இவற்றிலே வாழ்வு எத்தனை சொர்க்க மானதாக இருக்கிறது? நாங்கள் கணவன், மனைவி, குழந்தை என வாழலாம், ஆனால் அடுத்தவள் சந்தோஷமாக வாழ (அது மருமக ளாக இருந்தால் இன்னும் கொஞ்சம் ஆத்திரம் அதிகமாகும்) பொறுக்க மாட்டோம் என்பது ஏன்? இவர்கள் எல்லாம் எதை மூட்டை கட்டிக் கொண்டு போகப் போகிறார்கள்?

நொந்து போன மனங்கள் இரத்தம் தோய இடும் சாபங்களால், கண்ணீரால் இவர்கள் எதைச் சாதிக்கப் போகிறார்கள்?

மற்றவர்களின் மனங்களை நோகடிக் கும் முன், ஒரு நிமிடம் வாய்மூடி யோசித் துப் பார்ப்போம். எதற்காக இந்த வாழ்க்கை? நாம் செருகப் போகும் கத்தியால் எதிராளி ரத்தம் சிந்துவதால் நாம் சந்தோஷம் பெறப் போகிறோமா? யோசிப்போம்.

அதற்குப் பதிலாக நாம் ஒரு சிறிய கற்ப னையை விரித்துப் பார்ப்போம் -

'கலகல'வென சிரிக்கும் கணவன், மனைவி குழந்தைகள்! அதைப் பாசப் பரிவோடு பார்த் துக் கொண்டு இருக்கும் தாய் தந்தையர்!

அலுவலகத்தில் சொந்த உழைப்பால் முன்னேறும் ஒருவருக்கு நாம் மனதாரத் தெரிவிக்கும் பாராட்டு!

அவனை/அவளை தூர் பரப்பாமல் ஆத் மார்த்தமாக நேசிக்கும் மனோபாவம்!

உண்மையாகவே ஒரு பெண் தவறு செய் தாலும் அவளைப் பற்றிப் பேசாமல் அன் போடு மன்னித்து, ஆதரவாகப் பேசுவது!

இதெல்லாம் எத்தனை சந்தோஷமாக இருக்கும்? பின் வாழ்க்கையை நாம் எதற்குத் தான் வாழ்கிறோம்? எப்போது பார்த்தாலும் மனசில் பொறாமை, கசப்பு, வெறுப்பு, வேதனை இவற்றுக்காகவா?

ஐயோ, நாம் கண்டிப்பாக, சந்தோஷமாக வாழவேண்டும். அதற்குத்தானம்மா நாம் பிறந்தது.

அந்தப் பாட்டில் வருவது போல எத்தனை பெண்கள் போலீசிடமும், போலி வேடதாரிகளிடமும் சிக்கிச் சீரழிந்து வரு வதை நாம் அன்றாடம் பேப்பர்களில் பார்க் கிறோம். போலீஸ் துறை இத்தனை கேவலப் பட்டுப் போனது இதற்கு முன் எப்போதும் இல்லை. இதை உயர் அதிகாரிகள் உணர்ந்த தாகவே தெரியவில்லை. இதற்காக என்ன நடவடிக்கை எடுக்கிறார்களோ ஆண்டவ னுக்குத்தான் வெளிச்சம்! அவர்களுக்கு எங்கே இதற்கெல்லாம் நேரம்!

இவர் சொன்னார் அவர் சொன்னார் என போலிச் சாமியார்களிடம் போய்த் தம் குமுறல்களை யெல்லாம் பெண்கள் கொட் டும் போதுதான் அவர்கள் பலவீனர்களாகி விடுகிறார்கள். எதற்கு இந்த பலவீனம். வேண் டாம்!

பெண்களாகிய நாம்தான் நம்மைத் தேற்றிக் கொள்ள வேண்டும், முன்னேற வேண்டும். ஒருவரை ஒருவர் பிறாண்டிக் கொண்டுவிட்டு, பிறகு ரத்த காயங்களுடன் ஓர் ஓநாயிடம் போனால் அது தன் வேலை யைத்தானே காட்டும்?

வேண்டாம் நமக்கு இந்த அவலங்கள். மன சில் ஒரு மூல மந்திரத்தை ஜபிப்போம். அது,

'அன்பு... அன்பு... அன்பு...' என்பதாகத் தான் இருக்க வேண்டும்.

என்ன ஒரு கொசு! மழைகாலம், குளிர்காலம் வந்தால் கொசுத் தொல்லை. மேட் போட்டுத் தூங்கப் பார்த்தால் அதற்கெல்லாம் கொசு மசிவதில்லை. கொசுவத்தி மேட் போடுமுன் அதன்மேல் நான்கு துளி வேப்பெண்ணெயை விட்டு சுவிட்சைப் போடுங்கள். வீடு முழுவதும் லேசான வேப்பெண்ணெய்வாசனை பரவும். வரட்டுமே, இரவு பூராவும் கொசு இருக்க வேண்டுமே! இதுமட்டுமா, காலையில் எழுந்திருக்கும்போது சளி, ஜலதோஷம், ஆஸ்துமாகாரர்கள் எந்தக் கஷ்டமும் இல்லாமல் புத்துணர்ச்சியுடன் எழுந் திருக்கலாம். செய்துதான் பாருங்களேன். பிறகு இந்த ஜெயாவிடம் எல்லாவற்றிற்கும் யோசனை கேட்க ஆரம்பித்து விடு வீர்கள்!

- ஜெயா லோகநாதன்

இது சரியா? - வாசகிகளின் கேள்விகள்

ஆயில்யம், பூராடம், கேட்டை, மூலம் – இவை அசுப நட்சத்திரங்களா? இந்த நட்சத்திரங்களில் பிறந்த பெண்களுக்குத் திருமணமே நடக்காது என்பது போல முத்திரை குத்திவிடுகிறார்கள். இது சரியா?

தி.நகர் ரங்கநாதன் தெருவில், 'ஜோதிடச் சுடர் ஒளி' என்னும் ஜோதிட மாத இதழை நடத்தி வரும் ஆசிரியர் திருமதி ஹனீபா, 15க்கும் மேற்பட்ட ஜோதிட புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்–

"எதையும் ஆராயாமல் மேலெழுந்த வாரியாக ஒதுக்கலாகாது. ஒன்றை நாம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பன்னிரெண்டு ராசிகளும் ஒன்பது கிரகங்களும் சேர்ந்ததுதான் ஜாதகம். ஆகவே அந்தப் பெண் பிறந்த ஒரே ஒரு நட்சத்திரத்தை மட்டுமே வைத்துக் கொண்டு அசுப நட்சத்திரம் என்று நிர்ணயிப்பது மிகத் தவறானது.

"ஆயில்ய நட்சத்திரத்து மருமகள் ஆசந்தியிலே." என்கிறார்கள். அந்த மாமியாரின் தாலி பாக்யம் வலுவாக இருப்பின் ஆயில்ய நட்சத்திரத்து மருமகளால் ஒரு ஆபத்தும் நிச்சயம் வராது. தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்துக்கு எப்படி நெறிகட்டும்? அவரவர் விதிப்படி தான் நடக்கும்.

'பூராட நட்சத்திரத்துப் பெண் கழுத்தில் நூலாடாது' என்பார்கள். நான் பார்த்ததில் பூராட நட்சத்திரத்தில் பிறந்த பெண்களை மணம் புரியும் ஆண்கள் வாழ்க்கையில் மளமள என உயர்ந்து வீடு, வாகனம், செல்வச் சேர்க்கை என்று வசதி பெருகுகிறது.

ஆண்மூலம் அரசாளும்- பெண் மூலம் நிர்மூலம் என்பார்கள். ஆணி மூலம் அரசாளும் என்பதேசரி. பெண் மூலம்-நிர்மூலம் அல்ல நிர்மலம். நிர்மலம் என்றால் தூய்மை. மூல நட்சத்திரத்தில் பிறந்த ஆண் பெண் இரு பாலரும் செல்வாக்குடன் வாழ்வார்கள்.

கேட்டை. ஆண் கேட்டை கோட்டையாளும். பெண் கேட்டை சேட்டனுக்கு (சகோதரனுக்கு) ஆகாது. ஆனால் கேட்டை நட்சத்திரத்து பெண் புத்திசாலி. படித்தவள். பொறுமை சாலி. நகைச் சுவை உணர்வு மிக்கவள்.

எனவே திருமணம் என்று வரும்போது பிறந்த நட்சத்திரத்தை மட்டும் பார்க்கக்கூடாது. நட்சத்திரப் பாதம் மற்ற பொருத்தம், லக்கினம், 2ம்வீடு, 7ஆம் வீடு, 5,9ஆம் வீடுகள் குரு சுக்கிரன் செவ்வாய் என்று அனைத்தையும் ஆராய்ந்த பின்னரே ஜாதகம் கணிக்க வேண்டும். வெறும் மூட நம்பிக்கையுடன் பயன்படும் இந்தப் பழ மொழிகளை நம்பி பெண்களும் பெற்றோரும் சோகக் கடலில் மூழ்கத் தேவையில்லை. நிச்சயமாக ஜாதகத்தில் எல்லா அம்சங்களும் குறைவானதில்லை.. பல அம்சங்களில் நிறைவு இருக்கும். தகுதி

பெண் மூலம் நிர்மூலமா?



• ஜெயகுமார்



• சுகுமார்



• ஹனீபா



• ரமேஷ்குமார்



• ராஜேந்திரன்

நிறைந்த ஜோதிட வல்லுநரிடம் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுவது நல்லது."

சாதாரணமாக அரசு அங்கீகாரம் பெற்ற வங்கிகள் 10% முதல் 13% வரை வருட வட்டி வழங்கும் போது பல தனியார் நிறுவனங்களும் நகைக் கடைகளும் ஆண்டுக்கு 20%, 25%, 30% வரை முதலீடு செய்யும் தொகைக்கு வட்டி வழங்குவதாக விளம்பரம் கொடுக்கின்றன. செலுத்தும் தொகைக்கும் அவர்கள் அளிக்கும் வட்டிக்கும் பின் தேதியிட்ட காசோலை அளிப்பதாகவும் சொல்லப்படுகிறது. இது சாத்தியமா? இது போன்ற நிறுவனங்களை நம்பி முதலீடு செய்யலாமா?

–சாந்தி, சென்னை - 36

"அதிக வட்டி தருவது சாத்தியமே" என்கிறார் லலிதா ஜுவல்லரி உரிமையாளர் குமார்.

"வியாபாரத்தில் கையிருப்புப் பொருளை (Stock) ஒருமுறை விற்று முடித்தால் 10% சதவிகித லாபம் இருக்கும். இப்படி வருடத்துக்கு ஆறு முறை stock விற்றால் கிடைக்கும் லாபம் 60% டர்ன் ஓவராக எடுக்கலாம். ஆனால் 1000 ரூபாய் லாபத்தில் 600 ரூபாய் லாபம் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்த குறுக்குக் கணக்கை வைத்துத்தான் எந்த வியாபாரிகளும் தங்களிடம் டெபாஸிட் செய்யும் மக்களுக்கு வட்டி விகிதம் தருகிறார்கள்.

ஆனால் அது நம்பிக்கைக்குரிய ஸ்தாபனமா? வியாபாரத்தில் எப்படியிருக்கிறார்கள். மார்க்கெட்டில் பெயர் எப்படி? அந்த நிறுவனத்தின் பின்னாலிருக்கும் நபர்கள் யார்? என்பதையெல்லாம் அனுமானித்து யாரிடம் முதலீடு செய்ய வேண்டும் என்பதை மக்களே தெளிவாக யோசித்து நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்."

எலக்ட்ரிக் உதவியால் இயங்கி வரும் மின்சார சுவிட்சுகளை அணைக்காமல் பல நேரங்களில் அதாவது டி.வி. மிக்ஸி, ரேடியோ போன்றவற்றின் நாப்புகளை மட்டும் திருத்தி விடுகிறோம். இப்படி நாப்புகளை மட்டும் திருத்தி விட்டு மெயின் சுவிட்சுகளை அணைக்கா விட்டாலும் மின்சாரச் செலவு ஆகுமா?


"மின்சாரப் பொருட்கள் என்று எடுத்துக் கொண்டால் எல்லாப் பொருட்களுக்குமே ஆஃப் செய்யும் படியான அமைப்பு இருக்கும். இதை ஆஃப் செய்து விட்டாலே மின்சார ஓட்டம் தடை பட்டு விடுகிறது. எனவே நிச்சயமாக கரண்ட் செலவு வராது. ஆனால் மின்சாரப் பொருட்களை பயன்படுத்திய பிறகு மெயின் சுவிட்சை ஆஃப் செய்து விடுவது பாதுகாப்பு முறையாகும். குழந்தைகளோ நாமோ ஃபிளக்கில் தவறுதலாக கை வைக்க நேரிட்டால் ஷாக் அடிக்க வாய்ப்புண்டு. அதுமட்டுமல்ல அதிக வோல்டேஜ் ஏற்படும்போது டி.வி. மிக்ஸி போன்ற விலை மதிப்புள்ள பொருட்கள் பழுதாகவும் நேரிடும்."

சில பெண்கள் காது மடலில் தோடுக்கு மேல் 'கோப்பு' 'மோக்கு' குத்தி நகை போட்டுக் கொள்கிறார்கள். அந்த ஃபாஷன் மாறி விட்டால் பிறகு என்ன செய்வார்கள். அந்த ஓட்டை அப்படியே இருக்குமா?

– த.சாந்தி, திருவாரூர் -51.

'நாகரீகமும் ஒரு வட்டம் தான்' என்கிறார் பிரபல ஜி.ஆர். தங்கமாளிகை உரிமையாளர் ராஜேந்திரன்.

"காதுக்கு மேலாகக் குத்திக் கொள்ளும் மோக்கு இப்போது பழையபடி ஃபாஷன் ஆகிவிட்டது. 10



புளி அவல் செய்வதற்கு புளியைக் கரைத்து செய்வதற்கு பதில் அவலை தேவையான அளவு நீரில் ஊறவைத்தபின் ரெடிமிக்ஸ் புளியோதரை பௌடரை வாணலியில் நல்லெண்ணெய் ஊற்றி அதில் போட்டு ஊற வைத்த அவலைப் போட்டு கலக்கினால் சூப்பர் டேஸ்டாக இருக்கும். மேலாகக் கொஞ்சம் தேங்காய்த் துருவலைப் போட்டு கிளறி சாப்பிட்டால் மிகுந்த சுவையாக இருக்கும். சீக்கிரத்தில் செய்து விடலாம்.

–உஷா நாராயணன்.

வருடமாக மூக்கு குத்திக் கொள்ளும் பழக்கம் ஃபாஷனாக இல்லை. இப்போது மறுபடியும் ஆரம்பமாகி விட்டது. கொஞ்ச காலம் ஒவ்வொன்றும் ஃபாஷனாகத்தான் இருக்கும். வளருகின்ற பருவத்தில் மூக்கு காது மடலில் துளையிட்டால் அவர்கள் வளர வளர துளை மறைந்துவிடும். வயது வந்த பெண்கள் போடும் கோப்பு, மோக்கு துளைகள் அப்படியே தான் இருக்கும்."

நம் வீட்டில் வி.சி.பி. அல்லது வி.சி.ஆர் இருக்கிறதோ இல்லையோ மத்தியத் தரக் குடும்பங்களில் கூட கல்யாணம் மற்றும் விசேஷங்களுக்கு வீடியோ எடுப்பது ஃபாஷன் ஆகிவிட்டது. புதிதில் அடிக்கடி அந்த கேசட்டுகளை போட்டுப் பார்க்கிறோம். பின்பு சலித்துப் போய் ஒரு மூலையில் ஒதுக்கி வைத்து விடுகிறோம். கேசட்டைப் பயன்படுத்தாமல் சில மாதங்களுக்கு அப்படியே வைத்திருந்தால் பூஞ்சக்காளான் (Fungus) வந்து விடுகிறதே! இதை எப்படி நீண்ட நாள் பாதுகாக்கலாம்?

– ஜானா, கல்கத்தா - 26.

'மிக, மிக சுலபம்' என்கிறார்கள் நீங்கள் கேட்டவை நிறுவனத்தின் உரிமையாளர்கள் ரமேஷ்குமாரும், ஜெயக்குமாரும்.

நடந்த நிகழ்ச்சியை திரும்பத் திரும்ப நினைத்து மகிழ்வதற்காகத்தான் வீடியோ எடுக்கிறோம். ஆகவே நாம் வாங்கும் கேஸட் 'ப்ரோ' 'நேஷனல்' போன்ற தரமானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் பல காலம் பிரிண்ட் அப்படியே இருக்கும். வெயில் காலத்தில் கேஸட்டைப் பற்றி கவலைப் பட வேண்டாம். மாதத்துக்கு ஒரு முறை கேஸட்டை ரீவைண்ட் செய்வது நல்லது. அதேபோல வெயிலில் காஸட்டை 5 நிமிடம் வைத்து எடுப்பதும் நல்லது. எப்போதும் காஸட்டை உறையுடன் வைக்க வேண்டும். ஏ.ஸி. செய்யப்பட்ட அறையில் கேஸட்டை வைத்தால் விரைவில் காளான் சேர்ந்துவிடும். அதேபோல மழைக்காலமும் குளிர்காலமும் காஸட்டுக்கு எதிரி. எனவே காஸட்டை கம்பளி, அல்லது ஸ்வெட்டருக்குள் சுற்றி வைப்பது நல்லது. இரும்பு பீரோவில் வைக்கக் கூடாது. நிகழ்ச்சிகளை பதிவு செய்த ஒரிஜினல் காஸட்டை நீங்களோ உறவினர்களோ அடிக்கடி பயன் படுத்தக் கூடாது. ஏனெனில் அதை நெகட்டிவ் போல வைத்துக் கொள்ள வேண்டும். ட்யூப்ளிகேட் கேசட்டில் பதித்ததையே பார்ப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். அப்போது தான் ஒரிஜினல் கேசட் எந்த பாதிப்பும் இல்லாமல் இருக்கும். வி.சி.பி.யில் போடும் முன்னர் ஹெட் கிளீனர் கொண்டு ஹெட்டை சுத்தம் செய்துவிட்டு பின்னர் பயன்படுத்த வேண்டும். இதனால் காஸட்டில் உண்டாகும் கீறல்களும், முன்னதாக பயன்படுத்திய மற்ற காஸட்டுகளில் இருந்த பூஞ்சக்காளானும் இந்த காஸட்டில் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளலாம். காளான் பிடித்திருந்தால் டெக்கில் போட்டுப் பார்க்கும்போது படம் ஓடும்போது பல இடங்களில் கறுப்பாக தெரியும். படம் தெரியாது. காளான் அதிகமாக பிடித்திருந்தால் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளும். காளான் குறைவாக சேதப்படுத்தியிருந்தால் காஸட்டை வெயிலில் உலர்த்தினால் ஓரளவு சரியாகி விடும். பின்பு காஸட்டின் கேஸை மாற்றி விட்டு வேறு கேஸில் ஸ்பூலை பதித்துப் பயன்படுத்தலாம்.



தீபாவளி மருந்துப்பொடி மீந்து விட்டால்

நான் தீபாவளிக்காக வாங்கிய மருந்துப் பொடி மீந்து போய்விட்டது. ஒரு நாள் டீ போடும் பொழுது சிட்டிகை இந்த மருந்துப்பொடி போட்டேன். இந்த டீ சாப்பிட்டவுடன் எனக்கு வரும்போல இருந்த தலைவலியும், சுரமும் பறந்து விட்டது. இப்பொழுதெல்லாம் நாங்கள் டீ பவுடருடன் தீபாவளி மருந்துப்பொடி கலந்து வைத்து விட்டோம். (தீபாவளி மருந்துப்பொடி நல்ல நாட்டு மருந்துக் கடையில் வாங்க வேண்டும்)

–வைதேகி

மங்கையர் மலர்

அடுத்த இதழ்....

ஆண்டு மலர்

அதிக பக்கங்கள்....

ஏராளமான சிறப்பு அம்சங்கள்!

உதாரணத்திற்கு -

சேமிப்பிற்குச் சிறந்த வழி

(தங்கமா, ரியல் எஸ்டேட்டா, 'ஷேர்' வாங்கிப் போடுதலா? எந்த வகைச் சேமிப்பில் நீங்கள் முதலீடு செய்தால் அதிக பலன்களைப் பெறலாம்?)

- சிறப்புக் கட்டுரைத் தொடர் ஆரம்பம்

மங்கையர் மலருடன் **வைகிங்**® (பனியன்கள், உள்ளாடைகள் தயாரிப்பு நிறுவனம்) இணைந்து வழங்கும்

ஆன்மீகப் பக்கங்கள் — கும்பகோணத்தைச் சுற்றி நவக்கிரக நாயகர்கள் தனித் தனி ஊர்களில் குடிகொண்டுள்ளனர். மாதம் ஒருவராக இவர்களை வலம் வருவோமே!

இன்னும் ஒரு தகவல்....

ராகா ஹெர்பல் பவுடர் நம்முடன் இணைந்து நடத்தும் மகளிர் விழா கடலூரில் பிப்ரவரியில் நடைபெற உள்ளது. கடலூர், பாண்டிச்சேரி, நெய்வேலி, விழுப்புரம், திண்டிவனம் போன்ற ஊர்களைச் சேர்ந்த மகளிர் நிறுவனங்கள் உடனே மங்கையர் மலருடன் தொடர்பு கொள்ளவும். அனைவரும் வாருங்கள், சிறப்பாக இவ்விழாவினைக் கொண்டாடுவோம்!

அட்டை வண்ணப்படம் : யோகா

அம்மா! உனக்குப் ப்ரைஸ் கிடைச்சிருக்கு!



• ஹரி, நாகராஜன், மணியம் செல்வன் தம்பதியர்....

மங்கையர் மலர் & போலார் ஹை-பவர் லோ-வோல்டேஜ் கிரைண்டர் மோட்டார் இணைந்தளிக்கும் பரிசுத் திட்டம் •

'**போ**லார் ஹை-பவர் லோ-வோல்டேஜ் கிரைண்டர்' போட்டிக்கு இவ்வளவு தூரம் வரவேற்பு இருக்கும் என்று உண்மையாகவே நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஒவ்வொரு தபால் நேரத்திற்கும் ஒவ்வொரு மூட்டை போஸ்ட் வந்து இறங்கியது. திக்குமுக்காடிப்



• செங்கல்பட்டில்....

போனோம்.

அதேபோல 14, 15-ந் தேதிகளில் அலுவலகத்திற்கு நிறைய பேர் வந்தவண்ணம் இருந்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் விடைகள் எழுதிய கவர், இரவு எட்டரை மணிக்குக்





• திருக்கழுக்குன்றத்தில்....


கூட வந்து கொடுத்துவிட்டுப் போனார்கள். பத்து விடைகளும் சரியாக எழுதப்பட்ட கவர்கள் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. மறுநாள் காலையில் போலார் நிறுவன தமிழகத்தின் விற்பனைப் பிரிவு மேலாளர் நாகராஜன் நம் அலுவலகத்தில் வந்து கடிதமூட்டைகளைப் பார்த்துவிட்டுச் சந்தோஷப்பட்டார், ''அடேங்கப்பா, இவ்வளவு பேரா எழுதிப் போட்டு இருக்கிறார்கள்'' என்று.

இம்முறை குலுக்கலில் தேர்ந்தெடுக்க புகழ்பெற்ற ஓவியர் மணியம் செல்வனையும், அவருடைய துணைவியாரையும் அழைத்தபோது மகிழ்வோடு வர ஒப்புக் கொண்டார்கள். அதேபோல வைகிங் பனியன் உரிமையாளர்களில் ஒருவரான ஹரிதாஸ் ராவும் அச்சமயம் அங்குவர, அவரும் இந்தச் சிறு நிகழ்ச்சியில் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டார்.

காகித மூட்டைகள் பிரித்துக் கொட்டப்பட்டன. நம்



• அம்பத்தூரில்....



• வடபழனியில்....

அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் நன்கு கலக்கிவிட்டார்கள். மணியம் செல்வன் கையைத் துழாவி ஒரு கவரை எடுத்துக் கொடுத்தார். தொடர்ந்து எல்லோர் முன்னிலையிலும் மணியம் செல்வன் தம்பதியரும், ஹரிதாஸ்ராவும் எடுத்துக் கொடுத்த கவர்களில் இருந்த விடைத்தாளின் முக வரிகள் வாசிக்கப்பட்டன.

சென்னையில் மூன்று இடங்களுக்கும், செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களுக்கும் பரிசு கிடைத்திருந்தது. அவர்களுக்கு நேரில் சென்று கொடுத்துவிடலாம் என முடிவு செய்தோம்.

செங்கற்பட்டு என்.என்.ஜி.ஓ. நகரில் ஜகதா சுந்தரமூர்த்தி வீட்டிற்குத் திடீரென்று போய்க் கூட்டமாக நின்றபோது ஜகதாவிற்கு ஒன்றும் புரியவில்லை. அவருடன் அவருடைய தாயாரும், மகனும் வீட்டில் இருந்தார்கள். "எங்க வீட்டுக்காரருக்குப் புஸ்தகங்கள் படிச்சாலே பிடிக்காது. இப்போ மார்கழி மாசமாச்சே. மங்கையர் மலர்ல கோலம் வந்திருக்குமேன்னு அடுத்த தெருவிலேர்ந்து வாங்கிட்டு வந்தேன். போட்டிய பார்த்து அனுப்பறப்ப



• சைதாப்பேட்டையில்....

ரொம்ப நாளாயிடிச்சு. அவசரமா கார்டில் போட்டேன். ஒன்பது கண்டுபிடிச்சுட்டேன். பத்தாவது பரிசு அறிவிப்பா தான் இருக்கும்னு நினைச்சேன். அது சரியாப் போச்சு!" கிரைண்டர் இல்லாத அவர்களுக்குக் கிரைண்டர் கிடைத்ததில் நமக்கும் சந்தோஷம்.

திருக்கழுக்குன்றம் உமாமகேஸ்வரி வேலைக்குப் போயிருந்தார். அவர்தான் அந்த முகவரியில் இருப்பவர் எனப் பலரும் உறுதிப்படுத்திச் சொல்லவும், அவருடைய தாயார், சகோதரியிடம் ஒப்படைத்துவிட்டு வந்தோம்.

சென்னையில் சைதாப்பேட்டையில் மற்றொரு கிரைண்டர் கிடைத்திருந்தது. சிறிய அளவில் ஃபைனான்ஸ் கம்பெனி வைத்து நடத்திக் கொண்டிருக்கும் ரமணியைப் போலவே அவருடைய கணவர் பலராமனும் மங்கையர் மலர் வாசகராம். நாகராஜனிடம் இந்த மோட்டாரின் தனிச் சிறப்பு என்ன என்று பேட்டி கண்டு கொண்டிருந்தார்.

வடபழனியில் மஞ்சுகருணாகரனின் மகள் கோலம் போட்டுக் கொண்டிருந்தார். மார்கழி மாதம் என்பதால் மாலையிலும் கோலம் போலும். நாம் மங்கையர் மலரில் இருந்து வந்திருக்கிறோம் என்றவுடன் பாதிக் கோலத்திலேயே நிறுத்திவிட்டு அம்மாவைக் கூட்டிவர ஓடினாள். இந்தத் திடீர் விசிட் அவர்களுக்கும் திகைப்பு. மஞ்சுவின் சகோதரி, "நான் சொல்லி நீ எழுதிப் போட்டே! உனக்குப் பிரைஸா?" என்றார். கருணாகரன், "உங்க பேர் இருக்கிறதால இவருக்குக் கிடைச்சது போலிருக்கு!" என்றார். ஆக மொத்தம் அங்கே கொடுத்துவிட்டு அம்பத்தூருக்குப் பறந்தோம்.

மூடிய வாசற்படியில் அமர்ந்து கொண்டு ஓர் இளம்பெண் மூன்று சிறுவர்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். விஷயத்தைச் சொன்னவுடன் "வாரே வாஷ்!" என்று கதவை விரியத் திறந்து கொண்டு உள்ளே போய், "அம்மா உனக்கு ப்ரைஸ் விழுந்திருக்கு!" என்றார் சத்தமாக. கமலா சுந்தரம் தம்பதிகள் அக மகிழ்ந்து போனார்கள். கமலா பல வருடங்களாகத் தொடர்ந்த வாசகியாம். "பத்து வருஷங்களுக்கு முன்னே எல்பிஜி கேஸ் ஸ்டவ் போட்டியில் எனக்கு ப்ரைஸ் விழுந்திருக்கு. அப்போ விழா மேடையில உங்களைப் பார்த்தேன்" என்றார்.

இந்தச் சுற்றுப் பயணத்தை முடிக்க இரவு எட்டு மணியானது. மற்ற ஊர்களில் கிரைண்டர் கிடைத்திருக்கும் நபர்களுக்குப்

'இந்தக் குழந்தைகள் கறிகாயே சாப்பிட மாட்டேனென்கிறார்கள்' எனக் கூறுபவர்களுக்கு: விலைமலிவாகக் கறிகாய் கிடைக்கும் குளிர்காலத்தில் மீந்த கறிகாயோ அல்லது குழந்தைகளுக்குப் பிடிக்காத காய்கறியோ (பாகற்காய் தவிர) எல்லாவற்றையும் அலம்பி, நறுக்கி குக்கரில் தண்ணீர் அதிகம் விடாமல் வேகவிட்டு, ஆறியபின் மிக்ஸியில் அரையுங்கள். பின் இக்கலவையில் ஒரு கப் எடுத்து நாம் செய்யும் சாம்பார், கூட்டு, கீரை வகைகளில் கலந்து விடுங்கள். நம் சமையல் படுதூக்கலாக இருக்கும்.

இதேபோல் கறிவேப்பிலை கையில் இருக்கும்போது சூடான வாணலியில் கொஞ்சம் தனியா, உளுத்தம்பருப்பு, மிளகு, சீரகம் (எல்லாம் 2 ஸ்பூன்) பெருங்காயம் வறுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு நாம் செய்யும் மோர்க்குழம்பு, சாம்பார், ரசம், கூட்டு என செய்து கடைசியில் ஒரு ஸ்பூன் இப்பொடியைப் போடுங்கள். சமையல் ஆளைத் தூக்கும்.

- ஜெயா லோகநாதன்



பார்சலில் அனுப்புவது எனும் முடிவுடன் அவரவர் திரும்பினோம்.

பத்து விடைகளும் சரியாக எழுதிக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் :—

1. ஆர். அலமேலு,
   சென்னை - 27.
2. கே. மஞ்சுளா கருணாகரன்,
   சென்னை - 26.
3. பி. ரமணி பலராமன்,
   சென்னை - 15.
4. கமலா சுந்தரம்,
   சென்னை - 53.
5. எஸ். ஜகதா சுந்தரமூர்த்தி,
   செங்கல்பட்டு.
6. ஆர். உமாமகேஸ்வரி,
   திருக்கழுக்குன்றம்.
7. எஸ். ஜே. பத்மாவதி,
   கடலூர் - 2.
8. ஜி. மனோன்மணி,
   ஈரோடு - 7.
9. கே. மங்கை,
   ஹோசூர் - 9.
10. கே. சஜிதாபேகம்,
    மதுரை - 16.
11. பாப்பா உத்திரேசன்,
    சேலம் - 5.
12. எஸ். ராமதிலகா,
    திருத்துறைப்பூண்டி - 13.
13. என். பார்வதி,
    திருநெல்வேலி - 11.
14. எம். ஆர். பத்மாவதி,
    திருச்சி - 2.
15. என். பவானி,
    உடையார்பாளையம்
    - 608 901.

— மஞ்சுளா ரமேஷ்

படங்கள் : ராஜு



Your home needs all the modern conveniences : Washing machine, TV, VCR, Refrigerator, etc. Here is the best way to get them. Consumer loans from ***Dhanalakshmi Bank.***

The repayment terms are easy and the procedure quite simple. So, next time, when you plan to buy latest conveniences, remember ***Dhanalakshmi Bank.***

For over six decades we have helped housewives make their lives a lot easier.

Get in touch with us. We'll be with you all the way. *

* We also offer Home loans and Vehicle loans.

THE DHANALAKSHMI BANK LIMITED
Corporate Office: Thrissur - 680 001

CHAIRMAN: T.S. PATTABHIRAM

MANAGING DIRECTOR : T.S. RAMAKRISHNAN

T H E   B A N K   F O R   T H E   F U T U R E

SASI / 595 / 94

ஒன்று + ஒன்று =

"அவ கிடக்கா மாப்பிள்ளை" என்றார் மாமா மறு முனையிலிருந்து. என் முகத்தில் பெருமையில் விரிந்த புன்னகை. அவர் சொன்னது என் அருகில் நின்றிருந்த வைஷ்ணவிக்கும் கேட்டிருக்க வேண்டும். ஏற்கெனவே சூம்பியிருந்த அவள் முகம் மேலும் கன்னிப் போனது.

"கம்மா விளையாட்டுப் பிள்ளை மாதிரி எதாவது சொல்லிட்டிருப்பா. அவள் பேச்சு எதையும் சீரியஸா எடுத்திட்டு அவளை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டாம்" என்றார் தீர்மானமான குரலில். அப்புறம் கொஞ்ச நேரம் சம்பிரதாயமாகப் பேசினார். குஜராத்தின் மழை பற்றி விசாரித்தார். தீபாவளிக்கு எப்போது வருகிறீர்கள் என்று கேட்டார். போனை வைப்பதற்கு முன் வைஷ்ணவி




ஒன்று


பெ. நாயகி

விடம் 'நீ எதுவும் பேசணுமா?' என்று ஜாடையில் கேட்டேன். அவள் மறுக்கவே போனை வைத்து விட்டு இருநூற்று சொச்சம் பில் பணம் கட்டிவிட்டு அங்கிருந்த மற்றவர் களின் வியப்பான பார்வைகளில் நீந்தியபடி வெளியே வந்தோம்.

வைஷ்ணவியைப் பார்க்க பாவமாக இருந்தது.

"சொல், எங்கே போகலாம்?" என்று கேட்டேன். அமைதியாக இருந்தாள். இப்போ திருக்கும் மூடுக்கு வீட்டுக்குப் போனால் நிலைமை முற்றலாம். ஹிந்தி புரியாது என்ற சாக்கில் டிவியும் பார்க்க மாட்டாள். தலை வலி போன்ற சாக்குகள் சொல்லிவிட்டுப் படுக்கப் போய்விடுவாள். அசாதாரண அமைதி எனக்கும் எரிச்சல் தரலாம். குஜராத்தி ஓட்டல்





17 புள்ளியிலிருந்து 9 புள்ளி வரை
(ஊடு புள்ளி) —பா. பிரேமலதா ராணி

கள் வைஷ்ணவிக்குப் பிடிப்பதில்லை. நண்பர்கள் வீடு....

"சிங்கானி சார் வீட்டுக்குப் போகலாமா?" என்று கேட்டேன். தலையசைப்பில் சம்மதம் சொன்னாள். பைக்கைக் கிளப்பினேன்.

சிங்கானி சார் எனக்கு பாஸ். ஆனால் அப்படிப் பழகாதவர். குஜராத் வந்து இங்கே சேர்ந்த பிறகு கடந்த நான்கைந்து வருடங்களில் அவருக்கு நிறைய ஓய்வு தந்து நான் வேலை பார்த்திருக்கிறேன். அதில் நெருக்கமாகிப் போனார். அவருக்குப் பிள்ளைகள் கிடையாது. அவரை விட அவருடைய மனைவி ரொம்பவும் ஹோம்லி டைப். மேடம் என்று ஆரம்பத்தில் சொல்லிக் கொண்டிருந்தேன். 'எனக்குத் தம்பி கிடையாது, நீ என்னை நீதி என்றே கூப்பிடு' என்று சொல்லி அன்பால் நெருக்கமாகிப் போனார்.

'வேலையில் செட்டில் ஆகி இவ்வளவு நாளாச்சு, இன்னும் ஏன் பையா கல்யாணம் பண்ணிக்காமல் இருக்கிறாய்' என்று அரித்துக் கொண்டே இருந்தார். வைஷ்ணவியின் போட்டோவைக் காட்டிய போது அதனை சிறிது நேரம் இமைக்காமல் பார்த்திருந்து விட்டு 'பையா! எனக்கென்னவோ இவள்தான் உனக்காகப் பிறந்தவள் என்று தோன்றுகிறது' என்று அபிப்ராயம் சொன்னவர். நான் ஓ.கே எழுதிப் போட, திருமணம் உறுதி ஆகி ஆகஸ்டில் லீவு எடுத்துக் கொண்டு போய் வைஷ்ணவியை மனைவி ஆக்கிக் கொண்டு உறவுக்காரர்கள் வீடுகளுக்கு ஒரு ரவுண்ட் அடித்து விட்டு லீவு தீர்ந்தவுடன் குஜராத் வந்து சேர்ந்ததெல்லாம் இன்னும் நினைவுகளின் ஈரம் காயாத ஒரு மாதக் கதைதான்.

இங்கே வந்தபின் வைஷ்ணவி சிங்கானி மேடத்துக்கு ஸ்பெஷல் ஆகிப் போனாள். இரண்டு மூன்று சந்திப்புகளில் பெண்கள் எப்படித் தான் ஒருவருக்கொருவர் நெருக்கமாகி விடுகிறார்களோ என்று தோன்றியது. வைஷ்ணவிக்கு இந்தி தெரியாது. சிங்கானி மேடத்துக்கு ஆங்கிலம் தகராறு. இருந்தும், இங்குள்ள மற்ற தமிழ்க் குடும்ப பெண்களை விடவும், வைஷ்ணவிக்கு, 'பேட்டி, பேட்டி' என்று அன்பைச் சொரிந்த சிங்கானி மேடம் தான் ரொம்ப பிடித்தமாகிப் போனார்.

"ஆயியே, ஆயியே" என்று வரவேற்ற மறு நொடியில் வைஷ்ணவியின் முக வாட்டத்தை அளந்து விட்டார் நீதி.

"என்ன பேட்டி முகம் வாடியிருக்கு! பையா நீ எதும் திட்டினாயா?" என்று என்னிடம் கண்டிப்பான குரலில் கேட்டபடி வைஷ்ணவியின் கைகளை இடது கையில் பிடித்துக் கொண்டு வலது கையால் அவள் முகத்தைத் தடவிக் கொடுத்தார்.

"வாடியிருந்தால் கூட என் பேட்டி அழகாய்த்தான் இருக்கிறாள்..." என்றார்.

இந்த வார்த்தைகள் வைஷ்ணவியின் முகத்தில் சிரிப்பை வரவழைத்தன.

"என்ன மோஹன் எதும் பிரச்னையா?" என்று இந்தியில் என்னிடம் மெதுவாகக் கேட்டார் சிங்கானி சார்.

"சேச்சே! அதெல்லாம் இல்லை. அவள் வீட்டுக்கு போன் போட்டுப் பேசினோம். அதிலே கொஞ்சம் வீட்டு ஞாபகம் கிளர்ந்திருக்கலாம்" என்று சமாளித்தேன்.


"தாங்க் காட்!" என்றார். "கொஞ்சம் பயந்து விட்டேன்."

வழக்கமான உபசரிப்புகள், டீ, பிஸ்கட், சம்பிரதாயப் பேச்சுகளின் இடையிடையே வைஷ்ணவியைக் கவனித்த நீதி, "கொஞ்சம் இருங்க! நீங்க ஆம்பளைங்க பேச உட்கார்ந்தா கம்பெனி, ஃபீல்டு, ப்ரொடக்ஷன் தான், வேற டாபிக்கே கிடையாது. வைஷ்ணவிக்குள்ளே ஏதோ எண்ணம் நிறைஞ்சிகிட்டிருக்கு அவளைப் பேச விடுங்க" என்றார் நடுவில் வெட்டி.

திடுக்கிட்ட வைஷ்ணவி, "அதெல்லாம் இல்லை" என்று நெளிந்தாள்.

"நான் சொல்கிறேன் நீதி. வைஷ்ணவிக்கு ஊருக்குப் போகணுமாம். டிக்கெட் எடுக்கச் சொல்றா..."

உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் அனைத்திலும் சிறந்ததையே அளிக்கிறீர்கள்...



... ஆனால் அது மட்டும் போதுமா ?

குடும்பத்தினர் எனும்போது, அனைத்திலும் சிறந்தவற்றையே அளிக்க விரும்புவீர்கள். அவர்களின் ஆரோக்கியத்திலும், உடல்நலனிலும் பெரும் அக்கறை எடுத்துக்கொள்வீர்கள். ஊட்டச்சத்துக்கள் நிறைந்த சுவைமிக்க உணவைத் தயாரிக்க பெரும்பாடு படுவீர்கள். ஆனால் இத்தனை அன்பு அக்கறையை மீறி அன்றாட ஆரோக்கியத்திற்கு மிக அவசியமான ஒன்று உங்கள் கவனத்திலிருந்து தப்பிவிடும். அதுவே, குடிநீர் !

நோய்களில் 80%, தண்ணீரினால் பரவுகின்றன என்பதை அறிவீர்களா ?
ஒரு கோப்பையில் உள்ள நீரிலே, சீதபேதி, டைபாய்டு, காலரா, மஞ்சள்காமாலை மற்றும் வயிற்றுக் கோளாறு போன்ற நோய்களைப் பரப்பும் நோய்க் கிருமிகளும், வைரஸ்களும் இருக்கலாம். அரித்துப்போன குழாய்கள், அடைத்துக்கொண்டுள்ள வடிகால்கள், மற்றும் சுத்தம் செய்யப்படாத ஸ்டோரேஜ் டாங்குகள் வழியே இந்நோய்கள் உங்கள் வீட்டிற்குள் பரவும். இந்நிலையில் தூய்மையான, மாசற்ற குடிநீரை பெறும் நிச்சயமான வழி எது ?



குடி நீரை கொதிக்க விடலாம் ஆனால் ?
கொதிநிலைக்கு வந்தபின்னர் தண்ணீரை 15-20 நிமிடங்களாவது குறைந்தபட்சம் கொதிக்க விடவேண்டும். அதன்பின் அது ஆறும்வரை காத்திருக்க வேண்டும். தண்ணீரை ஆறவிட்டு வேறு பாத்திரத்தில் மாற்றுவதற்குள் மீண்டும் அதில் தூசும் அழுக்கும் படியலாம்.



வாட்டர் ஃபில்டர்கள் நண்பனா, எதிரியா ?
ஃபில்டர்கள், தண்ணீரில் உள்ள அழுக்குகளையும் கிருமிகளையும் வடிகட்டலாம். அதையும் மீறி நுண்ணிய வைரஸ்களும் நோய்க்கிருமிகளும் எப்படியோ தப்பிவிடும் தவிர ஃபில்டர் கேண்டில்களை சரிவர கழுவாவிட்டால் அதுவே நோய்க்கிருமிகளின் இருப்பிடமாக மாறும்.




குழாய் அட்டாச்மெண்டுகள்-எந்த அளவு பாதுகாப்பானவை ?
நீர்க்குழாய்களில் பொருத்தப்படும் அட்டாச்மெண்டுகளில் நீரைத் தூய்மைப் படுத்துவதற்காக அயோடின் ரெஸின் உபயோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு முறை குழாயைத் திருகும்போதும் வெளியேறும் சிறிதளவு அயோடின் நாளடைவில் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கலாம். அப்படியும் இந்த அட்டாச்மெண்டுகள் ஆற்றல் மிக்கவைதானா என்பதை நிச்சயம் கூறுவதற்கில்லை.



அல்ட்ரா வயலெட் ஒளி-உங்கள் நம்பிக்கை நட்சத்திரம்.
அல்ட்ரா வயலெட் முறை சூரிய ஒளியைப் போன்று செயல்படுகிறது. தண்ணீரை தூய்மைப்படுத்துவதற்கு இதுவே பாதுகாப்பான மற்றும் இயற்கையான முறை என்று கருதப்படுகிறது.

இன்று இம்முறையினால் செயல்படுகின்ற சிஸ்டம் ஒன்று கிடைக்கிறது. அதுவே **அக்வாகார்டு**. ஒரு ஸ்விட்சைத் தட்டினால் போதும், தூய்மையான குடி நீர் தயார்.



அக்வாகார்டு எளிதாகவும், ஆற்றலுடனும் செயல்படுகிறது.

- இது தண்ணீரிலிருந்து நிறம், மணம், தூசு, க்ளோரின் போன்ற இரசாயன பொருட்களை அகற்றுகிறது.
- அல்ட்ரா வயலெட் முறை, நீரினால் பரவும் நோய்களுக்குக் காரணமான நோய்க்கிருமிகளையும், வைரஸ்களையும் அழிக்கிறது.

அக்வாகார்டில் மட்டுமே இணையற்ற **எலெக்ட்ரானிக் கண்காணிப்பு முறை** உள்ளது. இது நீரின் தூய்மையான தரத்தை கண்காணிக்கிறது. தண்ணீரின் தூய்மையின் அளவு, முன் கூட்டியே நிர்ணயித்த தரத்திலிருந்து குறைந்தால் நீரோட்டத்தை உடனே நிறுத்தி விடுகிறது.

உங்கள் குடும்பத்தினரின் ஆரோக்கியத்தை விளையாட்டாக நினைக்கலாமா? பாதுகாப்புடன் இருங்கள். அக்வாகார்டு பொருத்துங்கள்.

94/EFL/589/Tam



உங்கள் இல்லத்தில் இலவச செய்முறை விளக்கத்திற்கு எங்களுக்கு எழுதவும் அல்லது எங்களை அணுகவும்.

யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்

யூபேஷ் குப்தா பவன், முதல்மாடி, 85, சயானி ரோடு,
பிரபாதேவி, பம்பாய்-400 025. தொ. பேசி : 430 1725.

அக்வாகார்ட்

ஆற்றலும் வாட்டர் ஃபில்டர்-கம்-ப்யூரிஃபையர்

பாதுகாப்பான, தூய்மையான குடிநீர் பெறுவதற்கு

அக்வாகார்ட் என்றே அழைத்து யூரேகா என்று கேட்டுக் கேளுங்கள்



வைஷ்ணவி என்னை முறைக்கவில்லை. விஷயத்தை ஆரம்பித்ததற்கு நன்றி என்பது போல் பார்த்தாள். அவளுக்கு தீதியும் சிங்கானி சாரும் ஞானப் பெற்றோர் மாதிரி. எனக்கும், என் பேச்சை விட அவர்கள் சொன்னால் கொஞ்சம் புரிந்து கொள்வாள் என்று தோன்றியது.

"முதன் முறையாக பெற்றோர் உடன் பிறந்தோரைப் பிரிந்து இவ்வளவு தூரம் பாஷை புரியாத ஊருக்கு வந்திருக்கிறாள். வீட்டு ஞாபகம் வரத்தான் செய்யும். நீதான் இதமா நடந்துக்க முயற்சி பண்ணணும். ஆசைப்பட்டாள் என்றால் ஒருமுறை ஊருக்குத்தான் போய் வாயேன்..." என்றார் தீதி.

"ஆமாம் மோஹன் எப்படியும் அடுத்த மாதம் தீபாவளிக்காக நீ போக வேண்டும் தானே, ஒன்று செய் இப்போது ஒரு வாரம் லீவு எடுத்துக் கொண்டு போய் இவளை விட்டு வா. பிறகு போய் அழைத்துக் கொள்ளலாம்," என்றார் சிங்கானி சார்.

"ஆனால் விஷயம் அவ்வளவு சாதாரணம் இல்லை. இப்போ போனால் வைஷ்ணவி அடுத்த வருஷம் மே ஜூனில்தான் வருவாளாம்...."

சிங்கானி சார், மேடம் இருவர் முகத்திலும் அதிர்ச்சி வெளிப்படையாகவே தெரிந்தன.

"பேட்டி!" என்று அருகில் உட்கார்ந்திருந்த வைஷ்ணவியைக் கொஞ்சம் அணைப்பாய்ப் பிடித்தார் தீதி. "ஏம்மா?" என்று கேட்டார்.

"என்னுடைய கோர்ஸ் பாதியில் நிற்கிறது. முதல் வருடம் முடித்து விட்டேன். பைனல் இயர் முடித்து விடலாமே என்றுதான்..." என்றாள் வைஷ்ணவி அமைதியாக.

"தாங்க் காட்! இதுதானே காரணம்? என்னவோ ஏதோ என்று பயந்து விட்டோம்" என்றார்கள் இருவரும். சகஜமாக உட்கார்ந்தார்கள்.

"என்ன கோர்ஸ்?"

"எம்.எஸ்ஸி பிஸிக்ஸ்."

"பொல்லாத எம்.எஸ்ஸி. ஊரில் இல்லாத கோர்ஸ்" என்றேன் அலட்சியமாக.

"சும்மாயிரு பையா" என்று அடக்கிய தீதி, "ஏன் பேட்டி! நேரடியா எக்ஸாமுக்கு நீ போக முடியாதா?" என்று கேட்டார்.

"இல்லை மேடம்! எங்க காலேஜ் அட்டன்டன்ஸ் விஷயத்தில் ரொம்ப ஸ்ட்ரிக்ட். லெக்சர் க்ளாஸஸ், ப்ராக்டிகல் க்ளாஸஸ் எல்லாம் மிஸ் பண்ணிட்டு எக்ஸாம் போறதும் கஷ்டம். கல்யாணத்தைக் காரணம் காட்டி ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கித்தான் இவ்வளவு நாள் சும்மாயிருந்தேன்."

"தீதி! நான் என்ன சொல்றேன்னா,



திடீரென்று புதுமணத் தம்பதியர் வந்தனர். ஸ்வீட் செய்ய குலோப்ஜாமூன் மிக்ஸ் இருந்தது. ஆனால் நேரமில்லை. அவர்களோ சிறிது நேரத்தில் செல்ல வேண்டுமென்றனர். சேமியா பாயசம் செய்து அதில் இரண்டு ஸ்பூன் குலோப்ஜாமூன் மிக்ஸ் கலந்தேன். சுவையான சுவை. மாறுபட்ட பாயசமாகவும் இருந்தது.

— பவானி

இதை டிஸ்கன்டின்யூ பண்ணிரு. கரஸ்பான்டன்ஸ் கோர்ஸ்ல எம்.ஏ. எதாவது எடுத்துப் படி. கம்ப்யூட்டர் கோர்ஸ் பண்ணு. எதுன்னாலும் சேர்த்து விடறேன்..."

"ஒரு வருஷம் முடிச்ச கோர்ஸை எதுக்கு விடணும்? அதுவும் செகன்ட் இயர் ஃபீஸூம் கட்டி, ஒன்றரை மாசம் க்ளாஸூம் அட்டன்ட் பண்ணியாச்சு..."

"பெரிய ஃபீஸ். விடேன் நானே கவலைப் படலை. உனக்கென்ன?"

"நீங்க ஏன் கவலைப்படப் போறீங்க? முதல் வருடம் படித்ததும் அந்த செமஸ்டர்களில் யுனிவர்ஸிடி ஃபர்ஸ்ட் எடுத்ததும் நான்தானே!"

"வாட்!" என்று வியந்தார் சிங்கானி சார்.

"பி.எஸ்ஸில நான் கோல்ட் மெடலிஸ்ட். அதனாலதான் எங்க காலேஜ்ல எனக்கு இவ்வளவு நான் ஃபீஸ் கொடுத்தாங்க."

"யாருக்கு வேணும் சார் இவளுடைய ராங்க்கும் படிப்பும். எம்.எஸ்ஸி முடிச்சு என்ன வேலைக்கா போகப் போறா. பிஜி கோர்ஸ்தான் வேணும்னா எம்.ஏதான் படிக்கச் சொல்றேனே...."

"இவ்வளவு ஆல்டர்நேடிவ்ஸ் சொல்றீங்களே. அதற்குப் பதிலா ஸ்ட்ரெய்ட்டா என்னை இன்னொரு ஆறேழு மாதம் படிக்க விடுங்களேன். என்ன ப்ராப்ளம்?"

"நோ" என்றேன் தீர்மானமாக.

திருமணம் உறுதியானதாக அப்பாவிடமிருந்து கடிதம் வந்த பிறகு எவ்வளவு கற்பனைகளை வளர்த்து வைத்திருந்தேன். ஐந்து வருட சேமிப்பையும் எப்படிக் கரைத்தேன்! புது மனைவிக்காக குடியிருந்த வீட்டை விட்டு புதிய வீடாகப் பார்த்து மாறினேன். புதிய சோபா செட், புதிய டைனிங் டேபிள், புதிய ஃப்ரிட்ஜ், புதிய ம்யூசிக் சிஸ்டம், புதிய அடுப்பு, புதிய கலர் டி.வி. என்று எல்லாமே புதிது. பாத்ரூமின் வாளிகளைக் கூட மாற்றினேன். வைத்திருந்த நான்கு வருட பழைய பைக்கைக் கூட விற்று விட்டு புதிய யமஹா. நண்பர்களிலிருந்து வீட்டு ஓனர் வரை எல்லோரும் கேலி செய்ததைக் கூட கண்டு கொள்ளவில்லை. எல்லாமே வைஷ்ணவியை பிரமிக்க வைக்க வேண்டும் என்கிற ஒரே காரணத்துக்காக.

அவள் இங்கே வந்த பிறகு பக்கத்து ஹில் ஸ்டேஷன் மவுன்ட் அபு கூட்டிப் போய் வந்தேன். கிட்டத்தட்ட தினமும் மாலை வேளைகளில் பைக்கில் உட்கார வைத்து ஊர் சுற்றினேன். எல்லோர் வீடுகளுக்கும் கூட்டிப் போனேன். அதிகப்படி விலை தந்து புதிய பழைய தமிழ்ப்பட வீடியோ கேஸட்டுகள் அகமதாபாத்திலிருந்து வரவழைத்துக் காட்டினேன். ஏழெட்டுமுறை சமைத்துக் கூடக் கொடுத்தேன். இன்னும் அடுத்த மாதம் ஜெய்ப்பூர், உதய்பூர் என்று ராஜஸ்தானின் முக்கிய இடங்கள் சுற்றுவதற்குக் கூட திட்டங்கள் வைத்திருக்கிறேன்.

இவளுக்கு என்னடாவென்றால் ஊருக்குப் போக வேண்டுமாம். போய்க் காலை முதல் மாலை வரை வகுப்பறைகளில் உட்கார்ந்து க்வான்ட்டம் மெக்கானிக்ஸ் லெக்சர் கேட்கணுமாம். வெள்ளை கோட்டுகள் அணிந்து கொண்டு லேபுகளில் அலைய வேண்டுமாம். நான்சென்ஸ்!

சரியாய்த்தான் சொன்னார்கள் பொம்பளைகளை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும் என்று. கொஞ்சம் மதிப்பு கொடுத்து யோசனை கேட்க ஆரம்பித்தால் இப்படித்தான் மெச்சூரிட்டி இல்லாமல் பெரிய நினைப்பெல்லாம் நினைக்க ஆரம்பிப்பார்கள்.

அப்படி படிப்புதான் முக்கியம் என்றால் எதற்காக கல்யாணம் பண்ணணுமாம். ஒரேடியாக கோர்ஸ் முடித்து அடுத்த வருடம் பண்ணிக் கொண்டிருக்கலாமே.

"நானா கல்யாணத்துக்கு அலைந்தேன்! அப்பாதான் ஏதோ உலகில் இல்லாத அதிசய

மாப்பிள்ளை, போனால் கிடைக்க மாட்டார் என்று ஜோசியர் சொன்னதாக உங்களைப் பிடித்தார்" என்றான் கேலியாக.

"அதன் பிறகாவது நீ படிப்பு ஆசையை விட்டிருக்கணும்."

"நான் படிப்பு முடியும் வரை கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்னு உறுதியா சொல்லியிருந்தேன். அப்பாதான் உங்ககிட்ட பேசிட்டதாகவும் நீங்க கல்யாணத்துக்கப்புறம் அவள் படிப்பைத் தொடருவதில் எந்த ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னீங்களாம்..."

"நோ. உங்கப்பா கூட நான் பேசியதே கிடையாது."

"எனக்கென்ன தெரியும். நாம் குஜராத் கிளம்புற அன்னிக்குக் கூட அப்பா சொன்னார் மாப்பிள்ளையிடம் பேசிட்டேன். ஒரு மாசம் கழிச்சு செப்டம்பர் கடைசிலேயோ அக்டோபர் முதல் வாரத்துலியோ கொண்டு வந்து விடறேன்னு சொல்லிட்டார். நீ சும்மா அவரை அனர்த்தி தொந்தரவு பண்ணக் கூடாதுன்னார். அதனால்தான் இன்று வரை நான் இதைப் பற்றி ஆரம்பிக்கவே இல்லை." என்றவளைப் பார்க்க பாவமாகவும் இருந்தது. சிரிப்பாகவும் இருந்தது.

"உங்கப்பா உன்னை சக்கையா ஏமாத்தியிருக்கார்" என்று சிரித்தேன்.

"நிஜம்மாவா சொல்றீங்க. வேணும்னா வாங்க. ஊருக்குப் போவோம். அப்பாவிடமே கேட்போம்."

சிரித்தேன். "உங்கப்பா கிட்ட கேட்பதற்காக ஊருக்குப் போகணும்னு என்ன அவசியம்? போனில் பேசலாமே."

"உங்கப்பா போனில் என்ன சொன்னார்?" என்று கேட்டார் நிதி.

"என்னைத் திட்டறார். நல்ல பொம்பளையா பொறுப்பா புருஷன் சொல் கேட்டு நடன்னு அட்வைஸ் பண்றார். ஏதோ கல்யாணம்னு ஆகிற வரைக்கும் போனா போகுதுன்னுதான் காலேஜ் அனுப்சாராம்...."

"அவர் சொல்றதிருக்கட்டும் நிதி. உங்களுக்கே தெரியும் இவளை இங்கே வரவேற்க நான் செய்த ஏற்பாடுகள் எல்லாம். நீங்க கூட எவ்வளவு கேலி செஞ்சீங்க. இங்கே இவள் வந்த பிறகும் எவ்வளவு செஞ்சேன். சே! இந்தப் பொம்பளைங்களுக்கு என்ன செய்தாலும் திருப்திங்கறதே கிடையாது...." என்று பொருமினேன்.

நிதி என்னையே கொஞ்ச நேரம் கூர்ந்து பார்த்தார்.

"பையா! ஒரு கதை சொல்லவா? அகஸ்டஸ்னு ஒரு பெரிய பணக்காரன் இருந்தானாம். அவனுடைய இளம் மனைவி மேரியின் பிறந்த நாளுக்கு ஒரு வைர நெக்லஸ் பரிசாய்க் கொடுத்தானாம். 'எதுக்குங்க இவ்வளவு காஸ்ட்லி ப்ரசண்ட்'னு கேட்டாளாம் மேரி. 'உன்மேல் எனக்கு அவ்வளவு காதல்'னு சொன்னானாம். அவள் தன் வேலைக்காரியைக் கூப்பிட்டு அவளுக்கு அந்த நெக்லஸைத் தூக்கிக் கொடுத்து விட்டாளாம். அகஸ்டஸ் பதறிப் போய் 'வாட் நான்சென்ஸ்! மேரி! என்ன காரியம் செய்கிறாய்!' என்று கத்தினானாம். மேரி சிரித்து 'பார்த்தீங்களா! காதல் கீதல்ங்கறதெல்லாம் சும்மா. நீங்க ப்ரஸண்ட் பண்ணியதும் மேரிக்கு அல்ல. மேரிக்குத்தான் என்றால் அதனை அவள் என்னவும் செய்வதற்கான உரிமையும் தந்திருக்க வேண்டும். நீங்கள் ப்ரஸண்ட் தந்தது மிஸஸ் அகஸ்டஸுக்கு. அதை அவள் மிஸ்டர் அகஸ்டஸ் எப்படி விரும்புகிறாரோ அப்படித்தான் உபயோகிக்க முடியும் இல்லையா?" என்றாளாம்.


உறைந்து போய் உட்கார்ந்திருந்தேன்.

நிதி தொடர்ந்தார். "நீங்கள் ஆண்கள் எல்லோருமே அகஸ்டஸின் ரூபங்கள்தான் பையா. பெண்கள் எல்லோரும் மிஸஸ் அகஸ்டஸ்களாய்த்தான் இருக்க வேண்டும். மேரிகள் என்கிற ஐடன்டிடியைத் தொலைத்து விட வேண்டும். அப்படி இருந்தால்தான் நல்ல மனைவி. திருமணமான புதிதில் இளம் தம்பதிகள் ஏழெட்டு மாதங்கள் பிரிய வேண்டியது அதுவும் பெண்ணின் படிப்புக்காக பிரிய

பொதுவாகவே துணிகளை பிரஷ் செய்வதற்கு பிளாஸ்டிக் பிரஷ்களே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு பதிலாக பாத்திரக் கடைகளில் விற்கும் மெல்லிய தேங்காய் நார்களால் செய்யப்பட்டுள்ள பிரஷ்களை உபயோகித்தால் சட்டை காலர் மற்றும் புடைவை ஃபால்ஸ் இவை சீக்கிரம் கிழிந்து பாழாவதில்லை. அழுக்கையும் எளிதாக எடுத்து விட முடிகிறது. இது பலவருடங்களாக நான் கையாளும் உத்தி. நீங்களும் செய்து பாருங்கள்.

— லக்ஷ்மி சிவகுமார்





விருந்தாளிகள் வந்திருந்தனர். டிபனுக்கு இட்லி ரெடியாக இருந்தது. தொட்டுக் கொள்ள அவசரமாக சட்னி தயார் செய்ய வேண்டும். தேங்காய் சட்னி பிடிக்காது என்று கூறிவிட்டனர். வெங்காய சட்னி என்றாலும் உரிக்க லேட்டாகும். என்ன செய்வதென்று யோசித்தேன். மாகாளிக் கிழங்கு ஊறுகாய் கொஞ்சம் மீதியிருந்தது. அதனுடன் சிறிது தேங்காய் வைத்து மிக்ஸியில் ஒரு சுற்று சுற்றி அரைத்தேன். நிமிடங்களில் உப்பு, உறைப்பான புது சட்னி ரெடி.

— ஏ.வி. உஷா

வேண்டியது அவசியமில்லாத ஒன்று என்று நினைக்கிறாய். ஆனால் பையா! மனதில் கை வைத்துச் சொல். ஒருவேளை உனக்கு ஆறு மாதத்துக்காக ஒரு வெளிநாட்டு டிரையினிங் இப்போது வந்தால், புது மனைவியை விட்டு விட்டுப் போக முடியாது என்று மறுப்பாயா?"

கரீரென்று உறைத்தது எனக்கு.

"பையா! உனக்கு அவளைப் பிரிவதில் இருக்கும் கஷ்டத்தை விட இவளுக்காக நாம் இவ்வளவு செய்திருக்க இவை எதையும் கண்டு மயங்காமல் படிப்பு முக்கியம் என்று ஓடுகிறாளே; இவ்வளவுதான் பெண்டாட்டியின் மேல் உனக்கு கன்ட்ரோலா என்று அடுத்தவர்கள் கேலி செய்வார்களே என்கிற ஈகோ உறுத்தல்தான் அதிகம் என்று நினைக்கிறேன்."

மௌனம் சாதித்தேன். வைஷ்ணவியின் முகத்தில் சந்தோஷப் படலம். தான் சொல்ல நினைப்பதை சொல்ல முடியாததை எல்லாம் தன் சார்பில் சொல்லும் நிதியை அவள் நன்றியுடன் பார்ப்பதாகத் தோன்றியது எனக்கு.

"வைஷ்ணவியின் எதிர்பார்ப்பு என்ன என்றே அறிந்து கொள்ளாமல் நீயாகவே செய்த காரியங்களை எல்லாம் அவளுக்காக செய்ததாக லிஸ்ட் போடாதே. அவள் எதிர்பார்ப்பில் கூட உன் ஆக்ரமிப்பு இருப்பதாக அர்த்தமாகி விடும். அவள் படிப்பு தொடருவதா இல்லையா என்பது நீயும் அவளுமாகக் கலந்து கொண்டு எடுக்க வேண்டிய முடிவு. அதை விட்டு விட்டு உனக்கு மனைவியாக ஆன ஒரே ஒரு காரணத்துக்காக அவளுடைய படிப்பு, ராங்க், சாதனை எல்லாவற்றையும் பாதியில் விட்டு விட வேண்டும் என்கிற உன்னுடைய, அவளுடைய தந்தையுடைய எதிர்பார்ப்பு எதைக் காட்டுகிறது? அவளை சரியான முறையில் கன்வின்ஸ் பண்ண வேண்டும் என்கிற அளவு கூடப் பொறுப்பான சிந்தனை உங்களிடம் இல்லாததற்கு என்ன அர்த்தம்? பெண் என்றால் ஜஸ்ட் ஜடம். கல்யாணம் ஆகும் வரை போனால் போகட்டும் என்று தந்தை படிக்க வைப்பதும், ஆனபின்பு படிப்பு போதும் என்று கணவன் சொல்வதும் ஏன் என்று அவள் கேட்க முற்பட்டால் 'அவகிடக்கா' என்று இருவரும் சேர்த்து எக்காளமிடுவதும்...."

"நோ... யு ஆர் கெட்டிங் எக்ஸைட்டட் அன்ட் க்ராஸிங் தி லிமிட் ஐ திங்க்..." என்று மென்மையாகக் கண்டித்தார் சிங்காளி சார்.

"ஐ'ம் சாரி பையா! அதிகபட்ச உரிமை எடுத்துக் கொண்டு விட்டேன்...."

"இல்லை நிதி...." என்றேன் லேசான குற்ற உணர்வுடன். கொஞ்ச நேரம் அசாதாரண அமைதி.

"எல்லோரும் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். என்னுடைய ஆசை இவ்வளவு பேரைக் குழப்பும் என்று தெரிந்திருந்தால் ஆசையே பட்டிருக்க மாட்டேன். நான் படிப்பை விட்டு விடுகிறேன்...." என்றாள் வைஷ்ணவி மெல்லிய குரலில்.

"ப்ளீஸ்...." என்று குறுக்கிட்டார் சிங்காளி சார். "உங்கள் இருவருக்குமே சொல்கிறேன். எந்த முடிவும் உணர்ச்சி வேகத்தில் எடுக்காதீர்கள். இப்போதைக்கு இந்த விஷயத்தை விட்டு விடுங்கள். நேரம் தந்து, தீர யோசித்து, சிந்தனைக்கு இடம் கொடுத்து, இருவருக்கும் சம்மதமான ஒரு முடிவுக்கு வாருங்கள். இந்தப் பிரச்னை என்றில்லை. எந்த பிரச்னைக்குமே இப்படித்தான் தீர்வு காண வேண்டும். திருமண பந்தத்தின் வெற்றி என்பது ஒன்றையும் ஒன்றையும் கூட்டி விடை ஒன்று என்று ஆக்க வேண்டிய புதிர்க் கணக்கு. இருவரும் தங்களில் பாதியையாவது இழப்பதற்குத் தயாராக வேண்டும். ஒருவரை முழுவதுமாக இழக்க வைத்து அடுத்தவரின் முழு ஆக்ரமிப்பில் இந்தக் கணக்கு பூர்த்தியாகலாம். ஆனால் பூரணமாகாது...."

சிங்காளி சாரின் வார்த்தைகள் எங்கள் சிந்தனைக்குத் தூண்டுகோலாய் விளங்கின. நல்ல முடிவு எடுக்க துணை செய்தன.

சிரிப்பு வாங்கலையோ சிரிப்பு

புத்தகம் முழுக்க சிரிப்புத் துணுக்குகள். ஆசிரியர் ந. கைலாசம்.

''ஏன் அந்த ஆளையே வீடியோவில் காட்டிக் கொண்டே இருக்கிறார்கள்?''

''இன்னும் அவர் மொய் எழுதவில்லை யாம். ஆகவே மண்டபத்தை விட்டுப் போய் விடாமல் வீடியோவில் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள்!''

விலை ரூ. 10.00

(ஆதிலட்சுமி புத்தக சாலை, 22, லாஸ் தோட்டம், புதுச்சேரி - 605 010)

நெஞ்சைக் கவரும் நீதி நூல்கள்

ஆத்திச் சூடி, கொன்றைவேந்தன் போன்ற நீதி நூல்களின் மூலமும், உரையும். ஆசிரியர் - கருப்பூர் மு. அண்ணாமலை.

விலை ரூ. 45.00

பொது அறிவு 1000

மிகப் பெரிய காட்டு மிருகம் எது என்பதிலிருந்து 'ஆக்ரிபியஸ்' என்றால் என்ன என்பது போன்ற பொது அறிவு 1000. ஆசிரியர் - பிரேமா ரகுநாதன்.

விலை ரூ. 25.00

(இரண்டும் - இலக்குமி நிலையம், 53, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14.)

மலைநடைப் பயணம்

'ட்ரெக்கிங்' எனப்படும் மலையில் ஏறுகின்ற, நடக்கின்ற பொழுதுபோக்கு உடற்பயிற்சி பற்றிய நூல். ஆர்வமுள்ளவர்களுக்கு உதவியாக இருக்கும். ஆசிரியர் - அரிமதி இளம்பரிதி.

விலை ரூ. 35.00

மாணவர்களுக்கு மணியான நாடகங்கள்

பல்வேறு நாடகப் போட்டிகளில் பரிசு பெற்ற நாடகங்கள். ஆசிரியர் - தி. அமிர்த கணேசன்.

விலை ரூ. 20.00

(இரண்டும் - பதிப்பு - தமிழாலயம், 10, பொன்னுசாமி நாயக்கன் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.)

12 ராசிகளுக்கும் குரு பெயர்ச்சிப் பலன்கள்

11.11.94 முதல் 6.12.95 வரைக்கான பலன்களைக் கூறுபவர் : விட்டலாபுரம் ராஜன்.

விலை ரூ. 9.00

1995 - ஆம் ஆண்டு ராசிபலன்

12 ராசிகளுக்குமான பொதுப் பலன்கள் மற்றும் மாதாந்திரச் சிறப்புப் பலன்கள். ஆசிரியர் : விட்டலாபுரம் ராஜன்.

விலை ரூ. 11.00

இராகு - கேது பெயர்ச்சிப் பலன்கள்

22.5.94 முதல் 9.12.95 வரையிலான 12 ராசிகளுக்கான பொதுப்பலன்களுடன் 27 நட்சத்திரங்களுக்கான சிறப்புப் பலன்களும். ஆசிரியர் - மணிமேகலைப் பிரசுர ஆசிரியர்குழு.

விலை ரூ. 7.00

(மூன்றும் - மணிமேகலைப் பிரசுரம், த. பெ. எண். 1447, 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 600 017.)

சிறப்புத் திருத்தலங்கள்

நாகேஸ்வரன் கோயில், திருநன்னாறு போன்ற திருத்தலங்களைப் பற்றிய விளக்கங்கள், மகிமைகள். ஆசிரியர்கள் - கே. என். சரஸ்வதி, பாலு. அர்த்தநாரீசுவரர்.

விலை ரூ. 9.00

ஜாதகாலங்காரம்

சத்ரு, ரோக, களத்திர போன்றவற்றின் நிலை அறிதலுக்கான விளக்கமான நூல். ஜோஸ்ய ஆர்வம் உள்ளவர்களுக்குப் புதையல். தொகுப்பாசிரியர் கே. என். சரஸ்வதி.

விலை ரூ. 60.00



(இரண்டும் - கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

முன்னேற முப்பது யோசனைகள்

பத்திரிகைத் துறையில் பல்லாண்டு காலம் அனுபவம் பெற்ற எஸ். லட்சுமி சுப்பிர மணியம் தன் வாழ்வின் அனுபவங்கள் மூலம் யோசனைகள் தருகிறார்.

விலை ரூ. 45.00

நல்ல தமிழ் அறிவோம்

இன்றைய மாணவர்கள் அவசியம் படிக்க வேண்டிய நூல். ஆசிரியர் : தி. முத்து. கண் ணப்பன்.

விலை ரூ. 25.00

(இரண்டும் - கங்கை புத்தக நிலையம், 13, தீன தயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017)

இந்து சமய சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

உண்ணும்போது முதல் பல்வேறு வாழ்க்கை நிலைகளில் இந்து சமயம் கூறியுள்ள சாஸ் திர சம்பிரதாயங்களை விளக்குபவர் ச. சுப்பிர மணியம்.

விலை ரூ. 15.00

டாக்டர். நரேந்திரனின் விநோத வழக்கு

எழுத்தாளர்சுஜாதா எழுதிய நாடகம். பிரபல கணேஷ், வசந்த் வருகிறார்கள்.

விலை ரூ. 19.00

(இரண்டும் - குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001)

பாரதிதாசன் ஒரு சித்திரக்கவி

பாரதிதாசனின் கருத்துக்கள் மற்றும் கவிதை களின் மூலமாக பாவேந்தரைப் படம் பிடிக் கிறார் ஆசிரியர் நாரா. நாச்சியப்பன்.

விலை ரூ. 10.00

(அன்னை நாகம்மை பதிப்பகம், 2/141-2வது தெரு, கந்தசாமி நகர், பாலவாக்கம், சென்னை - 600 041)

மிதிக்கப்பட்ட ரோஜாக்கள்

உண்மை நிகழ்ச்சிகளை, பெண்கள் குலைக் கப்படுவதைச் சிறுகதை வடிவில் தருபவர் பா. இராமமூர்த்தி.

விலை ரூ. 18.00

(திலகம் வெளியீடுகள், தெய்வ வளாகம், 5-ஏ, வெங்கடேச செளத்ரி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை - 45.)

குப்பையும் செல்வமாகும் (இரண்டாம் பகுதி)

நாம் மிகச் சாதாரணமாக நினைக்கும் பல பொருட்களில் தொழில் தொடங்குவதற்கான பெரிய ரகசியங்கள் இருப்பதைக் கூறுபவர் டாக்டர் என். கே. சண்முகம். உதாரணம். - தேமலை ஒழிக்க சீமை அகத்தி ஆயின்ட் மென்ட்.

விலை ரூ. 20.00

(நர்மதா பதிப்பகம், 16/7, ராஜாபாதர் தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 17)

சுவையான சமையல் குறிப்புகள்

சாதம் முதல் பாயசம் வரை. ஆசிரியர் - எஸ். லீலா.

விலை ரூ. 15.00

(கண்ணப்பன் பதிப்பகம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.)

பதுமைகள் சொன்ன பரவசக் கதைகள்

விக்கிரமாதித்தனுக்குப் பதுமைகள் சொன்ன தாக வழிவழியாக வரும் புகழ்பெற்ற கதை கள். தொகுப்பு - எம். ஏ. பழனியப்பன்.

விலை ரூ. 28.00

கமலாம்பாள் சரித்திரம்

இலக்கிய வரலாற்றிலே நீங்காத இடம்பெற்ற புகழ்பெற்ற கதை. 19 ஆம் நூற்றாண்டு சமூக வாழ்வை அற்புதமாய்ப் படம் பிடிக்கும் காவியம். ஆசிரியர் பி. ஆர். ராஜமய்யர்.

விலை ரூ. 40.00

(இரண்டும் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரை வேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இன் டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600 098)

லீலா நாடக ஸாயி

பகவான் சத்யசாயியிடம் நீங்கா ப்ரேமை கொண்ட ரா. கணபதி தன் அற்புதச் செய லாற்றலுடன் நூல் முழுவதும் ஸாயி ப்ரேமை யைக் கொட்டியுள்ளார். லீலா நாடகங்கள் கண்முன் நடனமாடுகின்றன.

விலை ரூ. 45.00

(திவ்ய வித்யா ட்ரஸ்ட், 106/1, ஹபிபுல்லா ரோடு, தி. நகர், சென்னை - 600 017)

இடையிடையே சம்பந்தமில்லாத சில வார்த்தைகள்

□ டிசம்பர் மாத மங்கையர் மலரில் சென்னை நாயுடு ஹால் நிறுவனத்தினர், பெண்கள் பனிரென ஆடை அணிவதன் மூலம் பெண்களுக்குத் தன்னம்பிக்கை பிறக்கிறது, தைரியம் வருகிறது. வெற்றி கிட்ட வழி செய்கிறது என்று சொன்னது முற்றிலும் உண்மை. இதை நான் என் அனுபவத்தில் பல தடவை கண்டிருக்கிறேன்.
லால்குடி -1, ஆர். கெஜலட்சுமி.

□ கூந்தல் பராமரிப்பு பக்கங்கள் தெவிட்டாத தேனமுது. கூந்தலைக் கண்டே காதலிக்கும் ஆசை வேரூன்றிவிடும் வகையில் இருந்தன; மிகவும் பயனுள்ள பக்கங்கள்.
திருச்சி - 8, மா. நளினி.

□ பொதுவாய் மங்கையர் மலரை நான் கடைசிப் பக்கத்திலிருந்து (திருமண மலருக்காக) புரட்டிப் படிப்பதை வழக்கமாய்க் கொண்டு, அதேபோல் டிசம்பர் மாத இதழையும் கடைசிப் பக்கம் முதல் படிக்கத் துவங்கிட இடையில் சில பக்கங்களில் சம்பந்தமில்லாத சில வார்த்தைகள் வந்து ஒளிந்து கிடப்பதை(!)ப் படித்துவிட்டு மிகுந்த குழப்பத்துடன் 7, 6, எனப் பக்கங்களைத் தள்ளிவிட்டு 5 ஆம் பக்கத்தில் உள்ள பரிசு அறிவிப்பைக் கண்ட பின்னரே நான் "தெளிந்தேன்"!
சிதம்பரம் - 1, த. சூர்யா.

□ மாஸ்மீடியா சினிமா. தேசியம் ஆண்ட நாட்டை இன்று திராவிடம் ஆள்வதற்குச் சினிமா தான் ஏணி. ஓர் எம்.ஜி.ஆர்., ஓர் என்.டி.ஆர்., ஒரு ரீகன் சினிமாவினால் நாட்டைப் பிடித்தவர்கள். ஆனால் அவர்கள் தங்கள் கொள்கைகளை சினிமாவில் புகுத்தினார்களேயொழிய ஆபாசத்தையல்ல. எனவே விழித்துக் கொண்டது வடஆற்காடு மாவட்டமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக, தமிழனாக இருக்கட்டும். ஆபாசத்தை ஒழிப்போம் எனச் சபதமேற்போம். வட ஆற்காட்டைப் பின்பற்ற நாகை காயிதே மில்லத் மாவட்டம் தயார். எங்கள் மாவட்டக் கலெக்டர் என்ன சொல்வாரோ?
கருப்பம்புலம் - 7,
சுப்பு வேதையா சித்திரவேலு.

□ ஆங்கிலத்தில் ஓர் அறிவொளி இயக்கம் கட்டுரை மிகவும் அருமை. அதிகம் பேர்களுக்குப் பயன்படும் விதமான இந்த இயக்கத்தை அறிந்து கொள்ள இது மிகவும் தேவையான கட்டுரை.
பெங்களூர், ஆர். உஷா.

□ நமக்கிருக்கும் ஒரு வாழ்க்கையை அன்பாய் அனுபவிப்போம்... வீண் வம்பு வாதங்களால் மனக்கசப்பு உண்டாக்கும் துஷ்ட ஈகோ பிரச்னையை வேரோடு துறந்து 'ஓகோ' என வாழ வழிகாட்டிய தலையங்கம், நம் எல்லோர் மனத்திலும் நிலையாய் இருக்க வேண்டிய அற்புதமே!
மதுரை - 16, எல். எம். மங்கை.

□ வேலூரில் 'மனித மாண்பு மேம்பாட்டு இயக்கம்' வைத்த தீர்மானங்கள் முழுதும் வரவேற்கத் தக்கவை. பெண்களை போகப் பொருளாக மட்டும் நினைக்கிற அத்தகைய பாடலாசிரியரை ரசிக, ரசிகைகள் உதறித்தள்ள வேண்டும்.
விருத்தாசலம், புவனாமோகன்.

□ "பெண்கள் பத்திரிகை என்றாலே சமையலும் கோலமும்தானா?" என்ற கேள்வி எத்தனையோ வாசகர்கள் மனத்தில் எழுந்த கேள்விதான். அதனைச் செயல் வடிவில் கொணர்ந்த தங்களுக்கு என் நன்றி! இதற்கான விளக்கமான விடைகளைப் பிரபலங்களிடம் மட்டும் கேட்காமல் வாசகர்களிடம் கேட்பது குறித்து மகிழ்வு கொள்கிறேன்.
திருவாரூர், த. கமலா தியாகராஜன்.

□ ஆசிரியர்கூறியது போல் நம்மிடையே இருப்பது ஒரு வாழ்க்கை; அதைச் சந்தோஷமாக அன்பு தந்து வாழ்வோமே என ஒவ்வொருவரும் எண்ணிவிட்டால் எங்கும் சந்தோஷம்தானே!
மதுரை - 10, ஆர். ஏ. வளர்மதி.

□ ராணுவத்திலும் பெண்மையின் கொடி பறக்கிறது என்பதைக் கம்பீரமாக விவரித்த கட்டுரையைப் படித்து முடித்ததும் கனமாய் ஒரு சல்யூட் அடித்தேன்!
அயன்புரம், த. சத்தியநாராயணன்.

சொல்ல விரும்புகிறோம்!



கிராம்டன் கிரீவ்ஸ் வழங்குகிறது உங்களுக்கு முதன்மையான வீட்டு உபயோக சாதனங்கள் அணிவரிசை. [illegible]

கிராம்டன் கிரீவ்ஸ் ஓவன் டோஸ்டர் கிரில்லர்: [illegible] 50°c முதல் 300°c [illegible] 15 லிட்டர் மற்றும் 29 லிட்டர்களில் - இரண்டு [illegible]



கிராம்டன் கிரீவ்ஸ் ஃபுட் ப்ராஸஸர்: [illegible]

கிராம்டன் கிரீவ்ஸ் ஆட்டோமேட்டிக் எலக்ட்ரிக் குக்கர்: [illegible]



[illegible]

கிராம்டன் கிரீவ்ஸ் வீட்டு உபயோக சாதனங்கள், உங்கள் வாழ்க்கை [illegible]

The Thapar Group
கிராம்டன் கிரீவ்ஸ் லிமிடெட்
[illegible]
[illegible] 400042
[illegible]: 5784129/5789451/5784211
[illegible]: 5783468

கிராம்டன் கிரீவ்ஸ் லிமிடெட்

அப்ளையன்ஸஸ்

உங்களால் ஊக்குவிக்கப்பட்டவை. எங்களால் உருவாக்கப்பட்டவை.

ULKA-18310-TAM

அலுவலகங்களில் சில

இது கொஞ்சம் தர்மசங்கடமான கட்டுரைதான். சில இடங்களில் நடக்கவும் நடக்கிற நடப்பு. கட்டுரை ஆசிரியர் விவரிக்கிறார். படிப்போமே!

பெண்கள் ஆண்களுக்குச் சமமாக எழுத்தராக, தட்டச்சர்களாக மற்றும் பல விதங்களில் உத்யோகம் மேற்கொண்டது சுமார் ஐம்பது வருடத்து நடப்பு. கடந்த இருபது வருடங்களில் பெண்கள் மேற் கொள்ளாத பணியேயில்லை என்கிற அளவில் வந்தாயிற்று.


1950களில் நாணிக் கோணி நூறு முறை குனிந்து குனிந்து மேலாக்கை கவனித்துக் கொண்டு ஆண் யாராவது அருகில் வந்தாலே கடிதம் கொடுக்கவோ அல்லது கையைப் பிடித்து இழுக்கவோ தான் என்று பயந்திருந்து நூல் பிடித்தாற்போல் ஆபீஸ் போய் வந் தார்கள்.

60களில் போனோமா வந்தோமா என்று வேலையைப் பார்த்து வீடு விரைந்தார்கள். சந்தேகம் வேலையில் வந்தால் கூட ஆண் களிடம் கேட்டதில்லை.பிராணன் போனா லும் காபி மக்கு வெளியே போனதில்லை.

70களில் பெண் ஊழியரிடை மட்டுமே அரட்டை அடித்தார்கள். காபி மக்குக் குழு வுடன் போய் வந்தார்கள். ஆண்களிடம் அத்யாவசியம் தவிர பேசுவதில்லை.

80களில் சக ஆண் ஊழியர்களிடம் பழகப் பேச ஆரம்பித்தார்கள். தேர்ந்தெடுக் கப்பட்ட அதாவது நடுவயது ஆண்கள், கண் ணியத்தோற்றம் உள்ளவர்கள் அல்லது கனிந்த அனுபவம் உள்ளவர்கள் அந்த ரீதியில் தொந்தரவு இல்லாதவர்கள் என்று கருதப்பட்டவர்களுடன் உத்யோக நிமித்தம்

மாலதி



வழுக்குப் பாறைகள்

அல்லது சொந்த துக்கம், பாரம் பரிமாற்றம் என்கிற மாதிரி பழக்கம் இருந்தது.

சிலவருடங்களாகக் கணிசமான கலாச்சார மாறுதல் தென்படுகிறது.

பாதுகாப்பான தூரங்களில் பொம்மைகளாக உலவி வந்த பெண்கள், அதிலும் தம் குடும்பத்தவரல்லாத அசல் பெண்கள், ரத்தமும் சதையுமாய் கைக் கெட்டும் தூரங்களில் அதிலும் நிறைய கால அவகாசங்களில் பேச்சு வார்த்தைகளோடு கிடைப்பது ஆண்களுக்குச் சௌகர்யமாகத்தான் தோன்றியிருக்க வேண்டும். பலவிதங்களில் அவர்களின் கவனத்தைக் கவர முடியும். அதிகமான சவடால்களில், அலட்டல்களில், சத்தமான வீறாப்புகளில், நமுட்டான அழுத்தங்களில், Cross Word போடுகிற, ஆங்கில நாவல் படிக்கிற அறிவு ஜீவிப் போர்வைகளில் எவ்வளவு வழியில்லை?

பெண்கள் நிறைய அலங்காரம் பண்ணிக் கொள்வதுண்டு. அது பெண்மையின் அம்சம். அதில் தவறேதுமில்லை. அலங்காரங்கள் பார்வையாளருக்குத்தான் என்பதிலும் சந்தேகம் அதிகம் இல்லை.

ஆனாலும் அதையும் மீறி பேச்சு வார்த்தைகள் வழியாக அவர்கள் ஆண்களை ஒரு சௌகர்ய தூரம் வரை நெருங்க விடுகிறார்கள் என்பதும் உறுத்தல் தான்.

இதற்கு என்ன காரணம்?

அதிருப்திகள் நிறைந்த குடும்ப வாழ்க்கை? வேக யுகம்? பொருளாதார சுதந்திரம்? கேள்வி கேட்கத் தவறி விட்ட கண்டு கொள்ளாத சமுதாயம்.

இந்தக் கட்டுரையில் வேலைக்குப் போகும் பெண்களைக் குறைவாகப் பேசுவதாகத் தயவு செய்து யாரும் நினைக்க வேண்டாம். நம்முடைய ஆண்-பெண் உறவை கணவன் மனைவி தவிர மற்றபடி நேராகப் பார்ப்பதில்லை. ஆனால் இன்றைய கால கட்டத்தில் அலுவலக நட்பு சாத்தியமானது. அது எந்த அளவு சில ஏன் பல சமயங்களில் ஏமாந்த உணர்வுமயமான பெண்களைப் பாதித்து விடுகிறது என்று எச்சரிக்கவே இந்தக் கட்டுரை.

எப்போது வெளிப்படையாக குடும்பக் கட்டுப்பாடு, அரசியல் வன்முறைகள், பாலியல் வக்கிரங்கள், பெண்களின் பிரத்யேகத் தேவைகள் தொந்தரவுகள் பற்றிப் பரவலாகப் பேச ஆரம்பித்து விட்டோமோ, எப்போது எல்லாம் கலந்த டீவி, பத்திரிகைகளைக் குடும்பத்துக்குள் அனுமதித்து விட்டோமோ அப்போதே பெண்கள் அந்தரங்கங்களைத் துறந்தாகி விட்டது.

ஒரு பெண்மணி குறிப்பிட்டார், சக ஊழியர் ஒருவர் எப்போதும் அவரிடம் தன் மனைவி குழந்தைகளைக் குறை கூறுவாராம்.

"வருடக் கணக்காகிறது மேடம், குழந்தைகள் என்னிடம் பேசுவதே இல்லை! சாப்பாடு என் பொண்டாட்டி போடவே மாட்டா. வெச்சிருவா. நானே போட்டுச் சாப்பிட்டு வந்திருவேன்."

"என் தங்கை பிள்ளை இருக்கான். நான் செத்தா நீ தாண்டா தூக்கிப் போடணும்னு சொல்லியிருக்கேன்."

இந்த மாதிரி பேசிக் கொண்டே 'இருந்திருக்கிறார். தோழிக்கு வேறு கட்டிடத்துக்கு

மாற்றல் ஆயிற்று.

ஆண் நண்பர் தினப்படி வர ஆரம்பித்தார். எதுவுமே வித்யாசமாக நடந்து கொள்வதில்லை. தப்பான பேச்சுமில்லை. ஆனால் எப்போதும் குடும்பத்துக்குறை, 'உங்களைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை' என்று சொல்லாமல் சொல்கிற தோரணை. பார்த்தார் தோழி. கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். 'அடிக்கடி வரவேண்டாம். வந்தாலும் உங்கள் வீட்டுக் கதை எனக்கு அனாவசியம்.' தோழியின் அணுகுமுறை சரிதான் எனப் படுகிறது. அவ்வளவு தூரம் அவர் விட்டதே கூட அதிகம் என்றும் சொல்லாம். புதுக் கோட்டையில் ஒரு பாங்க் ஊழியர்களைச் சந்திக்க நேர்ந்தது. தாரிணி, இந்திரா, பார்வதி முதலியவர்கள். இந்தக் குறிப்பிட்ட விஷயம் பற்றிச் சொன்னபோது ஆமாதித்தார்கள். கல்யாணமான ஆண் பெண்கள், வளர்ந்த குழந்தைகள் உடைய வாழ்க்கையில் செட்டில் ஆன ஆண் பெண்கள் சிநேகித முறை தாண்டி எப்போதும் ஜோடிகளாகப் பழகுவதும் அலுவல் விட்டு அவரவர் வீடு திரும்புவதும் தினம் பார்க்கக் கிடைக்கும் காட்சியென்றார்கள். அந்த உறவின் நோக்கம் என்ன? நிச்சயம் affair இல்லை. sex இல்லை. வாழ்க்கை முறையை சட்டபூர்வமாக பந்தம் ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கம் இல்லை என்றார்கள்.

பின் என்ன? எங்கோ கிடைக்காத அங்கீகாரத்தைப் பெறுதலா? இதில் வேடிக்கை என்னவென்றால் அவரவரின் spouse வேறு ஒரு அலுவலகத்திலோ வீதியிலோ இன்னொருவரிடம் அதே அங்கீகாரம் அல்லது பரிதாபம் தேடிக் கொண்டிருப்பார்.

ஒரு ஆண் குறிப்பிட்டார். "நானே என் ஸர்வீஸில் நிறைய பார்த்திருக்கிறேன் நீங்கள் சொன்னபடி.. பெண்கள் மேலே விழுந்து 'எதற்கும் தயார்' என்கிற விளிம்பில் பேசுவார்கள். சின்ன advance செய்தோமானால் விசித்திரமாக சுருங்கிக் கொண்டு 'அப்படியில்லை' என்பது போல் நடந்து கொள்வார்கள்" என்றார். இது முழுக்க முழுக்க ஆணின் கோணம்.

ஒரு முறை ஒரு பிரபல ஆண் எழுத்தாளர், "ஒவ்வொரு பெண்ணுக்கு ஒவ்வொரு விளிம்பு இருக்கிறது. நாங்கள் பரவாயில்லை என்று ஏதோ செய்யப் போக ஒருத்தி பயங்கரமாகத் துள்ளுகிறாள், ஒருத்தி உதறித் தள்ளுகிறார்" என்று, 'ஈவ் டீசிங்' பற்றிக் குறிப்பிடப் போக ஜோதிர் லதா கிரிஜா பதிலுக்குச் சாடியது நினைவு வருகிறது. "ஆக ஒவ்வொரு பெண்ணுக்கும் கடைசி விளிம்பைப் பார்த்தாக வேண்டுமா ஆண்களுக்கு" என்று முறைத்தார், ஜோதிர் லதா கிரிஜா.

அதுபோல நம் தோழியின் கோணத்தை விட்டு விடுவோம். அந்த observation முக்கியம். அதில் நிஜம் இருக்கிறதா இல்லையா?

"இந்தப் புடவை உங்களுக்கு நன்றாயிருக்கிறது"

"என்ன இன்று அமர்க்களமான டிரஸ். கண் கூசுகிறதே."

"காதணிகளை நல்ல டேஸ்ட்டோடு உபயோகப் படுத்துகிறீர்கள்."

இந்த மாதிரி விமர்சனம் வந்தால் என்ன செய்ய வேண்டும்? நம் தோழிகள் சொல்கிறார்கள்–

அதிகப்படி முக்கியத்துவம் கொடுக்காமல் ஒரு புன்னகையோ உதட்டளவு தேங்க்ஸோ சொல்லிவிட்டு விடவேண்டும் என்றார்கள். அதற்கும் மீறின விமர்சனம் வந்தால் என்ன செய்வது?

"இந்த ஆரஞ்சு சிவப்பு போன்ற டார்க் கலர் கட்டுபவர்கள் passionate என்பார்கள். நிஜமா?" என்று ஒரு ஆண் ஊழியர் கேட்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள் என்ன செய்யலாம்?

"I don't know" மாதிரி பட்டும்படாமலும் பதில் கொடுக்கலாம் என்றார் தாரிணி பேசுபவர் மதிப்புக்குரிய அதிகாரியாயிருந்தால் என்ன செய்யலாம்?

எத்தனையோ விதத்தில் பிடிக்காததை 'மூஞ்சி காட்டி'த் தெரிவிக்கலாம் என்றார்.

"அணிவானேன்? யாராவது விமர்சனம் செய்தால் மூஞ்சி காட்டுவானேன்? என்ன அலங்காரம் பண்ணிக் கொண்டாலும் அது பார்வையாளருக்குத்தானே? மனசைத் தொட்டுச் சொல்லுங்கள். அலங்காரம் நன்றாயிருக்கிறது என்று யார் சொன்னாலும் சந்தோஷம் ஏற்படும் தானே" என்று கேட்டபோது பாய்ந்தார்கள்.

"அது எப்படி? அலங்காரம் எங்கள் உள் மனசின் வெளிப்பாடு. ஆனந்தத்தின் சுய நம்பிக்கையின் பிரத்யேக உள்ளிருப்பின் expression. பெண்மையின் தனித் தன்மை. அதை ரசித்தால் சந்தோஷம் தான். ஆனால் குறிப்பிட்டவர் உள்நோக்கோடு விமர்சனம் பண்ணுவது எங்களுக்குத் தேவையில்லை. அதைச் சொல்லவும் தயக்கமில்லை" என்றார் ஒருவர்.



இனிப்புகள் செய்யும்போது சிறிது முன்பாகவே (பதத்திற்கு முன்னால்) எடுத்து, சரியாக துண்டங்கள் போட முடியாது போனால், இரவு ஃப்ரிஜில் வைத்துவிட்டு மறுநாள் எடுத்துத் துண்டு போட்டால் சரியாக வரும்.

– என்.எம்.சாரதா.

அகத்தின் அழகு.

மனம். மனை. இரண்டும் அழகுபட இருந்து விட்டாலோ அதன் சிறப்பே தனி. அதன் மகிழ்ச்சியே வேறுதான். அதுவும் உங்கள் கலை உணர்விற்கு ஏற்ப அமைந்து விட்டால் சொல்லவும் வேண்டுமா.

இதோ கல்பத்ருமா. கைதேர்ந்த கைவினைக் கலைஞர்களின் படைப்புகளின் நிலை கண்ணாடி. தொன்மையான கலை சிற்பங்கள், உலோக வடிவங்கள், தஞ்சை பாணி ஓவியங்கள், சுட்டமண் கலை பொருட்கள், மரவேலைப்பாடுகள், விளக்குகள். இன்னும் பல வகையான கைவினை படைப்புகள், பரிசு பொருட்கள்.

அனைத்துடன் உங்கள் இல்லத்தை அழகுபடுத்த

காத்திருக்கிறது. கல்பத்ருமா.





Kalpa Druma

Centre for Exquisite Handicrafts

நம் கலை பாரம்பரியத்தின் பாங்கானதொரு பிரதிபலிப்பு

61, கதீட்ரல் சாலை, (ஹோட்டல் சோழா ஷெரட்டன் எதிரில்) சென்னை - 600 086. இந்தியா. Phone: (044) 826 7652/825 9619 Fax: (044) 825 9528
Tlx: 041-25165 DEVI IN (வேலை நேரம் ஞாயிறு உட்பட: 9.30 A.M. – 8.00 P.M.)
எக்ஸ்லண்ட் கார்பொரேஷனின் ஒரு அங்கம்.

ADQUEST 154-94

பட்சணங்கள், பிஸ்கட்டுகள் போன்ற வற்றை ஃப்ரிட்ஜில் வைத்தால் நமுத்து விடும், ஈரப்பசையோடு இருக்கும் என்று பல சகோதரிகள் எண்ணுகின்றனர். இது தவறு. நன்றாக மூடக் கூடிய ஈரப்பசையில்லாத பாட்டில் அல்லது பாத்திரத்தில் வைத்து ஃப்ரிஜில் வைத்தால் மழை காலத்திலும் அவை பல நாட்கள் மொறுமொறு என்று இருக்கும்.

– என்.எம். சாரதா.



"ஆண்-பெண் சிநேகிதத்தை ஏன் அப்படி எடுத்துக் கொள்ள வேண்டும்? ஆணுக்கு ஆண் நண்பர் போலப் பெண்ணுக்குப் பெண் நண்பர் போல இருசாரார் பரஸ்பரம் அதி தீவிர dependence நிலைக்குப் போனாலும் தான் என்ன தப்பு? அவரவர் குடும்பங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வளவு தானே?" என்றார்.

ஒரு தோழி "இந்த மாதிரி சிநேகிதங்களில் ஒன்றே ஒன்றுதான் பாயிண்ட். சம்பந்தப்பட்ட ஆண் பெண்ணின் தராதரம் பார்க்கப்பட வேண்டியது முக்கியம். பெண்களைப் பொறுத்தவரை நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் வேண்டும்" என்றார் அவர். "இங்கு தராதரம் எங்கிருந்து வந்தது? dependence கூடிய ஆண்-பெண் உறவு வழுக்குப் பாறை தான் என்றும் A யில் ஆரம்பிப்பது நிச்சயம் முடிவது z ல்தான் என்றும் நிபுணர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்களே?" இது மாற்றொரு வாதம்.

ஆக, இன்றைய பெண் சந்திக்கும் எத்தனையோ தர்ம சங்கடங்களில் இதுவும் ஒன்று. பல்வேறு டென்ஷன்களால் வீட்டில் அவதிப்பட்டு மனம் குமுறி ஆபீஸுக்கு வரும் பெண்ணிற்கு ஓர் இளைப்பாறுதல் தேவையாக இருக்கிறது. ஆனால் அது சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த கதையாக ஆகிவிடக் கூடாதல்லவா? இளம் பெண்களின் டீன்ஏஜ் உணர்வுகள் ஒரு மாதிரி என்றால், குடும்பச் சூழலில் சிக்கித் தவிக்கும் நடுத்தர வயதுப் பெண்களின் கொந்தளிப்புகள் ஒரு மாதிரி. அவர்களின் மனக்குழப்பங்கள் இன்னும் அதிகமாகவே இருக்கும்.

எனவே சகோதரிகளே, அலுவலக மாயச் சுழல் நட்பில் சிக்கி விடுபவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரியத்தான் செய்கிறார்கள். நம் நிலை, நாம் எடுத்து வைக்கும் காலடிகள் ரொம்பவும் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. எதற்கும் நிதானிப்போம்.

அலுவலகங்களில் எத்தனையோ விதமான பிரக்ருதிகள் உண்டு.

பக்கத்திலிருக்கிற கோயிலுக்குப் போய்விட்டு வந்து உள்ளங்கை குங்குமத்தைப் பெண்கள் முன் நீட்டு வர். யாராவது எடுக்கத் தயங்கினால் 'ஓ, இன்னைக்கு எடுத்துக்கக் கூடாதா?' வேறு.

தான் எந்தப் பெண்ணிடமும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாமல் யார் யார் எந்த எந்தப் பெண் முன் நின்றார் உட்கார்ந்தார் பேசினார் கூடப் போனார் வீட்டுக் குள் நுழைந்தார் என்கிற விவரங்களை உரத்த குரலில் கூறுபவர்கள்.

ஆஃபீஸில் ரொம்ப ஸ்ட்ரிக்டாகவும் நேர்மையாகவும் யாரையும் அண்டவிடாத பெரிய அதிகாரிகளுக்கு உத்தியோக நிமித்தம் நெருக்கமான ஒரிரு பெண்களை இணைத்துக் கதை கட்டிப் பேசித் தீர்த்துக் கொள்ளும் ஒரு ரகம்.

Missed Abortion, MTP ஆகி லீவ் முடிந்து ஜாயின் ஆகிற இளம் பெண் ரிப்போர்ட் பண்ண நேரில் வரும்போது சந்தர்ப்பத்தை வீணாக்காமல் விவரங்கள் கேட்கிற குட்டி காபின் அதிகாரிகள். ஹாலில் நாலு பேர் முன்னால் பேசுகிற சலுகையில் அசிங்கமான திரைப்படம், டீ.வி.ஸீரியல் பற்றிய அடிமட்டத்துக் கமெண்ட்ஸ்களை வாய் கூசாமல் உதிர்க்கிறவர்கள்.

குடும்ப நலத்திட்ட ஸர்க்குலர்களை வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து அலசு கிற அடாவடிகள்.

'உள்ளே போ' 'வெளியே எடு' போன்ற சாதாரண வார்த்தைப் பிரயோகங்களில் கூட வக்கிர ரசனையைத் தேடுகிற புரையோடிப் போன கேஸ்கள். இப்படி எத்தனையோ.


காட்டனில் மின்னும் கலையழகு!

"இன்றைய நவீன பெண்கள் நிறைய பேர் பருத்தி உடைகளை அதிகம் விரும்புகிறார்கள். அது புடைவையானாலும் சரி, சுடிதார் ஆனாலும் சரி. அதிலே பல புதுமைகளைக் கொண்டு






அறிமுகம்!
ஹேரோ 23
அலைகடல் கூந்தலின் ரகசியம்
தலைகளில் படைக்கும் காவியம்
இளமையின் ரகசியம்
ஆரோக்கியமான முடி.
தலையின் குளிர்ச்சி,
கூந்தலின் வளர்ச்சி
அனைத்துதருவது ஹேரோ
23. இது ஒரு சித்த
மருத்துவ தயாரிப்பு!
இயற்கையாய் நாம் அன்று
அனுபவித்த மூலிகைப்
பலன்களின் மொத்த
உருவமே ஹேரோ 23.
அது இன்று உங்கள்
அருகாமையில் உள்ள
ஒவ்வொரு கடைகளிலும்.
இன்றே வாங்கி பயன்
பெறுங்கள். தேவையற்ற
கலப்புகள் ஏதுமின்றி
சித்த மருத்துவ
சிரோன்மணிகளால்
உருவாக்கப்பட்டது.
Hairoo23
HERBAL HAIR OIL
இனியென்ன
தாமதம்?
தலைமுறை
தலைமுறையாய்
தலைகளில்
படைப்போம்
ஒரு காவியம்.
Mfrs: A1 HERBALS SUPER INDIA, SALEM-636 010.
Marketed by: VIVEK'S AGENCY,
No.10, Valluvar Nagar, Annadhanapatty,
SALEM - 636 002. Phone : 51987
வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.
பிரபல மருந்து மற்றும் ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கும்.
UNIQUE/VA/0611/2/94


உங்கள்
கடைக்காரரை
கொண்டு வரச்
சொல்லுங்கள்!
கம்ப்யூட்டர் கணிக்கும்
உங்கள்
நேரம்
1995 வருட
பலன்கள்
பிறந்த தேதி தெரிந்தால் போதும்
உங்கள் குடும்ப உறுப்பினர்கள்,
நண்பர்கள், அனைவருக்கும்
1995 எப்படி
அமையப் போகிறதென்று கம்ப்யூட்டர்
துல்லியமாக கணித்த பலன்களை
இப்புத்தகத்தில் அறியலாம்!
விலை ரூ.7/- மட்டும்
ஆத்மா பப்ளிகேஷன்ஸ்
ஆத்மா நூலகம்,
25, கெனால் பேங்க் ரோடு,
கஸ்தூரிபா நகர்,
அடையாறு, சென்னை - 20.



• முடிச்சு போட்டு 'டை'!

வரும்போது கலையழகும் சேருகிறது. நம் வெயில் காலத்திற்கேற்ற பருத்தி உடையில் அழகிய வண்ணங்கள் வரும்போது பெரும் வெற்றி அடைகின்றன. அழகிய காட்டன் புடைவை அணிந்த பெண்ணின் தோற்றமே கம்பீரமாகத்தானே இருக்கிறது!''


என்கிறார் பவித்ரா சாரீஸ் என்ற பெயரில் தன் புடைவைகளை வியாபார உலகிற்குக் கொண்டு வந்திருக்கும் உமா சரவணன். தனிப் பெண்ணாக இருந்து கொண்டு வியாபாரம் முழுவதையும் கவனித்துக் கொள்கிறார். பிரிண்டிங், டையிங் எனத் தயாரிப்பில் இருந்து மார்க்கெட்டிங் வரை அத்தனையையும் வெற்றிகரமாக இவர் செயல்படுத்துவது ஆச்சர்யமான விஷயம்தான். இந்தத் தைரியம் இவருக்கு எப்படி வந்தது?

''புடைவை என்றால் மயங்காத பெண் உண்டோ?'' என்றவர், ''எனக்கும் இயற்கையாகவே புடைவைகள், அதன் வண்ணங்களிலே ஈடுபாடு உண்டு. என் கணவர் கப்பலில் வேலை செய்கிறார். அவருடன் பல நாடுகளுக்குப் போய் இருக்கிறேன். குஜராத், கல்கத்தா போன்ற ஊர்களுக்குப் போகும்போது அங்கே பெண்களின் கைவேலைத் திறனைப் பார்த்துப் பிரமித்துப் போயிருக்கிறேன். புடைவைகளிலேயும், திரைச்சிலை போன்ற துணிகளிலும் அவர்கள் பதிக்கும் பிரிண்டுகள் அற்புதமாக இருக்கும். அவற்றை நான் உடுத்த ஆரம்பித்து, அதை என் தோழிகள் கேட்க அவர்களுக்கும் வாங்கிக் கொடுத்தேன். இப்படித்தான் என் புடைவை வியாபாரம் ஆரம்பித்தது.

பிறகு என் கணவர் வருடத்திற்கு ஏழெட்டு மாதங்கள் கடற்பிரயாணம் செய்யும்போது நான் தனியே இருப்பேன். குழந்தைகள் ஸ்கூலுக்குப் போக ஆரம்பித்தார்கள். எதையாவது பயனுள்ளதாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் எனக்குப் பிடித்த பிரிண்டிங் & டையிங் கோர்ஸ் படித்தேன். வீட்டிலேயே ஒரே டேபிள் போட்டு, துணி, டிசைன் இவற்றுடன் கொஞ்சமாகப் புடைவைகளில் பிரிண்ட் போட்டேன். என்னைக் கவர்ந்த பல டிசைன்களை 'பிளாக்கு'களாகச் செய்து பிரிண்ட் போட்டு விற்றேன். அமோகமான வரவேற்பு இருந்தது. நல்லி, குமரனிலும் நல்ல ஆதரவு கிடைத்தது. இப்போது இரண்டு இடங்களில் பிரிண்ட்டும், ஒரிடத்தில் 'டை' போடுவதுமாக ஆரம்பித்துவிட்டேன். சென்னை லஸ் கார்னரில் ஷோரூம் திறக்கும் அளவிற்கு வளர்ச்சி அமைந்தது'' எனப் பெருமிதத்துடன் கூறுகிறார்.

ஒரு பெண் தானே கலைக் கண்ணோடு டிசைன்களைத் தேர்ந்தெடுத்து அதை 'பிளாக்'

• புடைவையில் 'டிசைன்' பதிக்கிறார்கள்!



காக அமைத்துப் புடைவைகளில் பதித்துப் பிரிண்ட் செய்வதால் ஓர் அழகிய கலைநயம் பவித்ரா புடைவைகளுக்கு வந்துவிடுகிறது. இப்படி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட 'பிளாக்'குகளை வைத்திருக்கிறார் இவர்.

''பிளாக்குகள்தான் என் சொத்து என்று கூடச்சொல்லலாம். கோயில் சிற்பமானாலும் சரி, வீடுகள் ஆனாலும் சரி, எங்கேயாவது ஒரு வித்தியாசமான டிசைனைப் பார்த்தால் உடனே அதை வரைந்து கொண்டு விடுவேன். அதை பிளாக்காகச் செய்து புடைவையில் பிரிண்ட் போட்டால்தான் தூக்கம் வரும். 'டைல்ஸ்' போன்ற அமைப்பிலும் கூட, புடைவைகளில் டிசைன்களைக் கொடுக்கிறோம்'' என்கிறார்.

பிறகு பிரிண்டிங் புடைவையை அதற்கான நீளமான மேஜையில் பின் போட்டு இழுத்துப் பதித்து விடுவார்கள். எந்த வர்ணத்தில் பிரிண்ட் செய்ய வேண்டுமோ அதை நன்கு கலந்து கொள்வார்கள். பிறகு எந்த டிசைன் தேவையோ அதை வண்ணத்தில் முக்கிக் கச்சிதமாய்ப் புடைவையின்மேல் அழுத்தும் போது அந்த பிரிண்ட் விழுகிறது. உடனே காய்ந்தும் போய்விடும்.

புடைவை நீளத்திற்கு பார்டர், தலைப்பில் பெரிய மயில், குறுக்கும் நெடுக்குமாக டிசைன் என எப்படி வேண்டுமானாலும் செய்யலாம்.





• வண்ணம் கலக்கிறார்கள்....

உமா பம்பாயில் இருந்தும், திருப்பூரிலிருந்தும் வெள்ளையில் வாயல், மல், கோட்டா துணி வகைகளைத் தருவிக்கிறார். அதனை ப்ளீச் செய்து, வெள்ளையில் டிசைன் பதிப்பதாக இருந்தால் அப்படியே வேலையை ஆரம்பித்து விடுகிறார்கள். இல்லையெனில் தேவையான வண்ணங்களில் முக்கிச் சாயம் ஏற்றுகிறார்கள். இவற்றில் புட்டாக்கள் போன்றவை வைக்கும்போது, வெள்ளையைத் தேவையான இடங்களில் கட்டிவிட்டுச் சாயம் ஏற்றுவார்கள். அதைப் பிரித்து உலர்த்தும் போது கட்டிய இடம் மட்டும் புட்டாவாக வெள்ளை நிறத்தில் மலரும். மற்றவை தோய்த்த வண்ணத்தில் மிளிரும்.

அதன் பக்கத்தில் கச்சிதமாக இன்னொரு வண்ண பிரிண்ட்டும் செய்யும்போது அழகிய தோற்றம் வருகிறது. பிறகு இதை டிரம்களில் இறக்கிக் கொதிக்க வைத்து அதிக சாயங்களை அகற்றி பாலிஷ் செய்து புதிய புடைவைகளாக பிளீச் செய்கிறார்கள்.

''இந்த டிசைன்கள்தான் என்னுடைய தனித்துவம். குஜராத்தில் இருந்து பாந்தினி டிசைன், கல்கத்தாவிலிருந்து மதுபனி டிசைன் என நிறைய வைத்திருக்கிறேன். 'சவுத்-ஈஸ்ட் டிசைன்' என்றே பெயர் வைத்தேன். நம்முடைய புடைவைகளில் அவர்களுடைய



நுணுக்கமான டிசைன்கள் புதுப் பொலிவு பெறு கின்றன. ஒரு முறை ஸ்ரீலங்கா போயிருந்தபோது அங்கே ஓர் ஓவியம் பார்த்தேன். புத்த மரத்தடியில் ஒரு தாயும் குழந்தையும் இருப்பது போல. கிளையும் கப்புமாக அந்த மரமும், ஓவியமும் சிறப்பாக இருந்தன. அதை அப்படியே பிளாக் செய்து கூடிதாரில் போட்டேன். தீபாவளி நேரத்தில் அந்தப் புதுமையான டிசைனை நிறையப் பேர் வாங்கிச் சென்றார்கள்...''

''மற்ற ஊர்களைப் பற்றியே சொல்கிறீர்களே, நம் ஊருக்குச் சிறப்பான டிசைன்கள் இல்லையா?''

''நிச்சயம் உண்டு. மயிலும், அன்னமும் நமக்கே உரியவைதான். இவை தவிர, 'டெர்ரகோட்டா' வகை குதிரை, யானைகள் நம் கிராமங்களில் இருந்து வந்தவைதான். ஐயனார் கோயில் டிசைன்களில் இருந்து எடுக்கப்படும் நவீனவகை பிரிண்டுகளை இன்று எத்தனை பேர் வாங்குகிறார்கள்! நான் புடை வைகளில் நிறைய 'டெர்ரகோட்டா' வகை குதிரை, யானைகளைப் பயன்படுத்தி இருக்கிறேன்.

அதே போல எத்தனை டிசைன்கள் வந்தாலும் மயிலிற்கும், அன்னத்திற்கும் இருக்கும் மவுசு குறை யாது. பட்டுப் புடைவைகளிலேயே அதற்கு அடுத்த படியாகத்தான் மற்றவை எல்லாம். அதனால்தான் நானும் நிறைய விதவிதமான மயில் அன்ன டிசைன் கள் வைத்துள்ளேன்...'' என்கிறார்.

கடந்த ஐந்தாண்டுகளாக இத்துறையில் ஈடுபட்டு மெதுவாக, ஸ்திரமாக முன்னுக்கு வந்து கொண்டிருக் கும் உமா சரவணன் இதுவரை தான் பெற்ற வெற்றி கள், சாதனைகள், ரசனைகளைச் சொன்னார். வியா பாரம் என வரும்போது நிச்சயம் பல பிரச்னைகளும் வருமே!

''நிறைய...'' எனச் சிரிக்கும் உமா, ''ஒரு முறை ஆயிரம் புடைவைகளுக்கு ஆர்டர் எடுத்து அதிகமாகப் பத்துப் பேரை வேலைக்கு எடுத்து மடமடவென பிரிண்ட் போட ஆரம்பித்தோம். இத்தனைக்கும் தரமான வண்ணம். அப்படியே சாயம் பிரிந்து புடைவை முழுவ தும் பரவ ஆரம்பித்துவிட்டது. இவற்றை ஒன்றும் செய் யவே முடியாது. நிறைய நஷ்டம் ஏற்பட்டு விட்டது.

அதேபோல இந்தத் தீபாவளி சமயத்தில் புயல் மழையால் எங்கள் ஷெட்டே விழுந்துவிட்டது. அதோடு நாங்கள் சேர்த்து வைத்திருந்த பல மெட்டீரியல்ஸ்




போய்விட்டன.

என்னைப் பார்த்துப் பல பெண்கள் இத் துறையில் இறங்கினார்கள். பத்து புடைவை விலை நஷ்டம் ஏற்படும்போது அவர்களால் தாங்க முடிவதில்லை. ஆனால் என் கணவர் தன்னால் இயன்றவரை பொருளாதார ரீதியாகவும், மனோரீதியாகவும் எனக்கு ஆதரவு தருகிறார். அதனால்தான் நான் நிற்கிறேன். குழந்தைகள் பள்ளி, அவர்களின் போக்குவரத்து இதனூடே இந்தத் தொழிலையும் வளர்க்க நிச்சயம் மனோபலம் நிறைய வேண்டும்!''

உண்மைதான். ஆரம்ப காலத்தில் புடைவைகளை மடித்துப் பையில் வைத்துக் எனப் பயப்பட வேண்டியதில்லை. சாதாரண ஒரு வாயல் புடைவை வாங்கும் விலையிலேயே கைவண்ணம் நிறைந்த இந்தப் புடைவைகளை வாங்கலாம்'' என்கிறார் உமா.

''இவை தவிர இந்த டிசைன்களின் மேலேயே முத்து, சமிக்கி போன்றவற்றைத் தைத்தும் தருகிறோம். இவற்றை ஊனமுற்ற பெண்கள் அழகாக எங்களுக்குச் செய்து தருகிறார்கள். இந்த வகையில் அவர்களுக்கு என்னால் வேலை கொடுக்க முடிந்ததே எனச் சந்தோஷமாக இருக்கிறது. இந்த வேலைப் பாடுகள் நிறைந்த சல்வாரை நிறையப் பேர்



கொண்டு டிசைன்களைக் காண்பித்து ஆர்டர் கேட்பாராம். இன்று இவரைத் தேடி நிறைய பேர் வந்து ஆர்டர் கொடுத்துவிட்டுச் செல்கிறார்கள்.

''காரணம் என்னுடைய தனிப்பட்ட டிசைன்கள், தரம் மற்றும் விலை. மற்ற 'பொமக்' கடைகளில் அவர்கள் வாங்கி அதன்மேல் சிறிது தொகை வைத்து விற்கிறார்கள். ஆனால் நானே தயாரித்து விற்பதால் என்னால் சாதாரணமான விலைக்குக் கொடுக்க முடிகிறது. 'பொமக்' என்றாலே ஏதோ காஸ்ட்லி வாங்குகிறார்கள். ரெங்காச்சாரி, பெங்கால் காட்டன்களையும் வாங்கி அவற்றிலும் பிரிண்ட் செய்கிறேன். இப்போது பட்டுப் புடைவைகளில் இந்த பிரிண்ட்டை விரும்பிக் கேட்டு இருக்கிறார்கள். அதையும் கூடச் செய்து கொண்டு இருக்கிறோம்.''

விரைவில் பவித்ரா பிரிண்ட்டுகள் அகில இந்தியப் புகழ்பெற்றுவிடும் போல இருக்கிறதே!

— புவன்

படங்கள் : ராஜு



தொழில் நுட்பம்

பேட்டர்ன் செலக்டர் டயல்
வகைவகையான பேட்டர்ன்களில் இருந்து தேர்ந்தெடுக்க ஒரு டயல் சுழற்றினாலே போதும்.

முகப்பு பிளேட்டில் தகவல்கள்
தடிமனான புத்தகங்கள் இல்லை. ஒரு பார்வையிலேயே வேண்டியதை அறியலாம்.

தையல் செலக்டர்
ஸிக்-ஸாக் முதல் நேர்த்தையல் வரை ஒவ்வொரு முறையும் புது டிசைன் உருவாக்கலாம்-ஆட்டோமேட்டிக் காஜா வசதியும் உண்டு.

உள்ளமைப்பு விளக்கு
தையல் மீது வெளிச்சம் விழுவதால் சிரமமின்றி தைக்கலாம்.

ஸ்நாப்-ஆன் பிரஸ்ஸர் ஃபுட்
பிக்கோ, கார்டிங், ஜிப் வைப்பது, பித்தான் வைப்பது, காஜா போடுவது, எந்த வேலையானாலும் பிரஸ்ஸர் ஃபுட்டை அழுத்தி மிக எளிதாகச் செய்யலாம்.

டைமண்ட் வடிவ ஃபீட் டாக் கத்
ஸிக்-ஸாக் ஸ்ட்ரெட்ச் தையல் அல்லது மிகவும் உறுதியான மூன்று தையலை மிகவும் சௌகரியமாகத் தைக்கலாம்.

ஃப்ரீ ஆர்ம்
கை கப்புகள் அல்லது சல்வார் ஹெம்களைக் கூட சிரமமின்றி தைத்திட அகற்றத்தக்க ஆர்ம் உதவுகிறது.

லேசான எடை
கையடக்கமானது. எளிதில் எடுத்துச் செல்லலாம். எனவே, பத்திரமாக எடுத்துவைத்து வேண்டும்போது வெளியே எடுக்கலாம்.

உள்ளமைப்பு மோட்டார்
பலமணி நேரமானாலும் சிரமமின்றி தைக்கலாம்.

தையலை சுலபமாக்கிடும்

ஒரு டயலைச் சுழற்றுங்கள். உஷா வண்டர்ஸ்டிட்ச் வழங்கிடும் அதன் வலுவான அம்சங்கள் அனைத்தையுமே. எனவே, மிகமிகக் கஷ்டமான தையல்களைக் கூட இப்போது வண்டர் ஸ்டிட்ச் செய்கிறது இதனால் மிகவும் சிக்கலான டிசைன்களைக் கூட நீங்கள் உருவாக்கலாம்-சுலபமாக.

புதிய உஷா வண்டர்ஸ்டிட்ச். இப்போது தன்னேரில்லாத ஒரு ஸ்டைலுடன் தைக்க உதவுகிறது.

wonder STITCH

USHA JANOME JAPAN

இவ்வளவு சுலபமான தையல், இதற்கு முன்பு இல்லை.

ULKA 20000 TAM

புது வருஷம் பிறக்கிறது வழக்கம் போலவே.

இந்த புத்தாண்டு தொடக்கத்திலும் சில உறுதிகள் அல்லது தீர்மானம் எடுப்பீர்கள் வழக்கம் போலவே.

'நான் 'டயட்'டில் இருக்கப் போகிறேன்' இது உங்கள் சபதம்.

'இன்னைலருந்து சிகரெட்டை விட்டாச்சு' இது உங்கள் கணவருடையது.

எதுவும் புதிதில்லை. எல்லாம் நீங்கள் முன்பே முயற்சித்தவைதாம். முயற்சித்து முடியாமல் போய் விட்டவைதாம். ஏனோ இந்த புத்தாண்டு சபதங்கள் மட்டும் கார்காலத்து பனியைப் போல் விரைவில் கரைந்து போகின்றன.

புத்தாண்டு சபதம் என்பதே மனோரீதியாக நமக்கு நாமே மேற்கொள்கிற ஒரு தாக்குதல்தான். அந்த மோதலில் நமக்குத் தேவையான சக்தியை நாம் பெறுகிறோம்.

மாறுவதற்கான மனப்பக்குவமும், துணிவும் உங்களுக்கு இருக்குமேயானால், புத் தாண்டு சபதங்கள் பனிபோல் கரைந்து போவதற்கு சான்ஸே இல்லை.

நாம் எடுக்கின்ற தீர்மானங்கள் ஏன் புஸ் ஸென்று போய் விடுகின்றன தெரியுமா? முறையான சிந்தனையும், சரியான திட்டமும் இல்லாத காரணத்தால்தான்.

எப்போதுமே பின்வாங்குகிறவர் தன்னைப் பற்றி மோசமாகவே உணர்கிறார். சந்தோஷத்தில் துள்ளுகிறவரோ, 'நான் அதைச் செய்து காட்டுவேன்' என்கிறார்.

புத்தாண்டு சபதம்



உங்களுடைய புத்தாண்டு சபதம் ஜெயிக்க வேண்டும் இல்லையா? இதோ சில யோசனைகள். முயற்சித்துப் பாருங்களேன்.

'முன்னதாகவே திட்டம்'

பெரும்பாலானவர்கள் கணநேரத்தில் முடிவு எடுத்து விடுகிறார்கள். எப்படி செயல்படுத்தப் போகிறோம் என்ற சிந்தனை அப்போது இருக்காது.

குறைந்தது இரண்டு வாரங்கள் முன்பு (புது வருடம் பிறப்பதற்கு) திட்டமிடல் வேண்டும். எதைப் பற்றி? எந்தப் பழக்கத்தை நீங்கள் விட்டு விட விரும்புகிறீர்களோ அதைப் பற்றி. எதை மாற்றியாக வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதைப் பற்றியுந்தான்.

'இலக்குகள் யதார்த்தமாய் இருக்கட்டும்':

புத்தாண்டில், 'நான் இதை விடப் போகிறேன், அதை பின்பற்றப் போகிறேன்' என்று மனம் அனேக தீர்மானங்கள் போடும்.

'நான் உடம்பின் எடையைக் குறைப்பேன்' 'பேரண்ட்ஸுடன் கலகலப்பாக பழகுவேன்' என்கிற மாதிரி இளைஞர்கள் சபதம் எடுப்பார்கள். சிலர் இரண்டு, மூன்று தீர்மானங்கள் வைத்திருப்பார்கள். இன்னும் சிலரோ பத்து வரை கூட லிஸ்டை நீட்டி இருப்பார்கள். எத்தனைக்கு அதிகமோ அத்தனைக்கு ஃபெயிலியர்தான். ஏதாவது ஒன்றை இலக்காகக் கொண்டு, மனதை ஒருமுகப்படுத்தி முயன்றால் அவர்கள் வெற்றி பெற முடியும்.

'நான் ஃப்ரெஞ்சு கற்றுக் கொள்ளப் போகிறேன்' ஒரு இளம்பெண் புத்தாண்டில் தீர்மானம் செய்தாள். இரண்டு முறை வகுப்பில் சேரவும் செய்தாள். ஆனால், தொடர முடியவில்லை. வேலை, வீட்டுக் காரியங்கள், அஞ்சல் வழி பட்டப் படிப்பு என்று முன்பே அஷ்டாவதானம் செய்கிறவளால் எப்படி முடியும்? மூன்றாவது புத்தாண்டின் போது, ஃப்ரெஞ்சு வகுப்பிற்கு நேரம் கிடைக்கும்படியாக தன்னுடைய ஷெட்யூலை அமைத்துக் கொண்டாள். இம்முறை அவள் நினைத்ததை முடித்தாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா!

'ஒரு நேரத்தில் ஒரு அடி' என்று காலை எடுத்து வையுங்கள். உங்கள் கணக்கு தப்பாது. ஃப்ரெஞ்சு என்ன, பாட்டு, ஓவியம், நடனம், கம்ப்யூட்டர் எது பற்றியாயினும்... நீங்கள் சபதத்தில் வெற்றி பெற முடியும்.





'இன்னது' என்பதில் தெளிவாய் இருங்கள்:

'நான் நல்ல பெண்ணாய் இருப்பேன்'... 'என் புத்தியை விசாலப்படுத்திக் கொள்வேன்' என்கிற ரீதியில்தான் பலரும் உறுதி எடுக்கிறார்கள், மேம்போக்காக.

உண்மையிலேயே பயன்பெற விரும்பினால், 'நான் இன்னது செய்யப் போகிறேன்'



என்பதைத் தெளிவாக கூறி விட வேண்டும்.

'நான் எல்லோரிடமும் ஃப்ரண்ட்லியாக இருப்பேன்' என்பதை விட, 'இன்று முதல் ஆஃபீஸில் எல்லோருக்கும் குட்மார்னிங் சொல்லப் போகிறேன்' என்கிற வார்த்தை சக்திவாய்ந்தது.

'எது மாற வேண்டும்' என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அதைப் போலவே 'எதற்காக மாற வேண்டும்' என்பதும் முக்கியம்.

'ஊதாரிச் செலவுகளை குறைத்துச் சேமிக்கப் போகிறேன்' இது ஒரு நல்ல தீர்மானம். 'சேமித்து, வீடு வாங்குவேன்' இது மிகத் தெளிவான நல்ல தீர்மானம். 'எதற்கு...' 'ஏன்', இவ்விரண்டையும் போலவே 'எப்படி' என்பதும் முக்கியமானதே. 'நான் இப்போது பார்க்கிற வேலையை விட மேலும் அதிகச் சம்பளம் கிடைக்கக்கூடிய வேலை தேடிக் கொள்வேன்' என்கிற போது உங்கள் சபதம் சாத்தியமாவதுடன், சாதனையும் ஆகி விடுகிறது.

'சுயதிருப்திக்கு முதலிடம்' :-

'சிகரெட்டை விடப் போகிறேன்' என்று ஒருவர் சபதம் எடுப்பதாக வைத்துக் கொள்வோம். 'சபதம்' எடுக்கிறவர்களை இரண்டு வகையாக பிரிக்கலாம். முதலாமவர் தனக்காக தன் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளும் எண்ணத்தில் சபதம் எடுக்கிறார்.

இதில் நாம் மற்றவரின் நன்மை, அக்கறை இவற்றையும் நினைத்து நம் சபதத்தை விசாலப்படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டாமவர் - தன்னுடைய பெற்றோர் அல்லது மனைவிக்குப் பயந்து 'நோ ஸ்மோக்கிங் ரிஸல்யூஷன்' போடுகிறார். இவர்களில் முதலாமவரின் முயற்சி மட்டுமே வெற்றி பெறுகிறது. காரணம், அவருடைய 'Self motivation'.

'அடுத்தவர் உதவியை நாடுங்கள்' :-

'நான் புதிதாய் ஒரு வேலை தேடிக் கொள்ளப் போகிறேன்' என்று சபதம் போட்டு விட்டு சும்மா இருக்க முடியுமா? அடுத்தவரை பிடித்தால்தான் காரியம் ஆகும். அது. குடும்ப உறுப்பினராகவோ அல்லது சிநேக வட்டத்தைச் சேர்ந்தவராகவோ கூட இருக்கலாம்.

உங்கள் சபதம் பற்றி வெறுமனே தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தால் போதுமா?

'இன்று முதல் ஆறு மணிக்கே எழுந்து கொள்ளுவேன்' என்கிறவர் டைம்பீஸின் உதவியை நாட வேண்டும். அத்துடன் மனைவியின் ஒத்துழைப்பையும் கோர வேண்டும்.

'மாற்றுகளை முயற்சியுங்கள்':-

ஒரு வேண்டாத பழக்கத்தை விடுவதைக் காட்டிலும், ஒரு விரும்பத்தக்க பழக்கத்தை மேற்கொள்வது சுலபமான காரியம்.

'வாக்கிங்' போக நேரமே கிடைக்கவில்லை என்கிறவர் 'ஆஃபீஸில் இருந்து வீட்டுக்கு நடந்தே வருவேன்' என்று முடிவு பண்ணினால் பஸ் சார்ஜ் மீதமாவதுடன், 'வாக்கிங்' போகிற பலனும் கிடைத்து விடும்.

'நினைவூட்டல் அவசியம்':-

ஒரு குண்டு பெண்மணி தன் எடையில் 20 கிலோவை குறைத்துக் கொள்ள வேண்டி இருந்தது. அவர் என்ன செய்தார் தெரியுமா? ரெஃப்ரிஜிரேட்டர் மீது தன்னுடைய ஃபோட்டோவையும், பக்கத்திலேயே நீச்சல் உடையில் நிற்கும் மாடலிங் பெண் ஒருத்தியின் ஃபோட்டோவையும் ஒட்டி வைத்தாள். அந்த ஃபோட்டோ அவர் டயட்டில் கட்டுப்பாடாக இருக்க உதவியது.

'என்னோட கடன்லாம் தீர்றவரைக்கும் அனாவசியமா துணிமணிகள் வாங்கப் போறதில்லை' என்கிற சபதம் அனேகமாய் தோற்றுப் போகும். டிபார்ட்மெண்டல் ஸ்டோரை தற்செயலாக சுற்றி வரும் போது 'ஒரு கறுப்பு ஷார்ட்டி., மஸ்டார்ட் கலரில் ஒரு அவுட்ஃபிட், ப்ரோக்கட் முகப்புடன் ஒரு ஸ்டெப்கட் சோளி... சிகப்பு நிற ஸ்கர்ட் என்று கண்ணின் உத்தரவுகளுக்கு மனம் கட்டுப்பட்டு பர்ஸ் காலியாகி விட்டிருக்கும்.

பெட்டர் சொல்யூஷன் என்ன தெரியுமா? மாதாந்திர லிஸ்டில் 'ட்ரஸ் மெட்டீரியல்' என்ற இடத்திற்கு நேராக ஒரு x மார்க்கைப் போட்டு விடுவதுதான்.

'சமூகக் கண்ணோட்டத்துடன்':-

'வேலைக்காரியை கடுமையான வார்த்தைகளால் திட்ட மாட்டேன்', 'அக்கம் பக்கத்து பெண்மணிகளை கண்டமேனிக்கு விமர்சிக்க மாட்டேன்' 'அடுத்தவர் விஷயத்தில் அனாவசியமாக மூக்கை நுழைப்பதில்லை', 'ஏதாவது ஒரு திக்கற்றோர் இல்லத்துக்கு என்னால் இயன்ற பணம், துணி அல்லது புத்தகம் கொடுத்து உதவப் போகிறேன்...' என்கிற மாதிரி உங்கள் சபதம் இருந்தால்... ஓ, ஹவ் கிரேட் யூ ஆர்!

'விட்டு விடாதீர்கள்':-

'காலண்டரில் ஒவ்வொரு நாளுமே புதிது தான்...' என்கிறார் ஒரு நண்பர். இதில் என்ன புத்தாண்டு சபதம் பெரிதாய்... என்கிற விதமாய் முணுமுணுப்பு.

புத்தாண்டு பிறப்பு வருவதே, எல்லோரும் தங்கள் சுயமேம்பாட்டில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான். அதற்காகவே 'Happy New year' சொல்கிறார்கள். (Definition எப்படி.?) நம்பிக்கை, புதுப்பித்தல் போன்றவற்றிற்கு பொன்னான வாய்ப்பு இந்தத் தொடக்கம். பயன்படுத்திக் கொள்ளுங்கள். All the best!

- தேவநாதன்

சிலருக்கு குளிர்காலத்தில் சளி பிடித்துக் கொள்ளும். தினமும் இரவில் 20 துளசி இலைகளுடன் ஐந்து மிளகு சேர்த்துக் கடித்துச் சாப்பிட்டு, ஒரு டம்ளர் வெந்நீர் குடியுங்கள். என்ன, உங்கள் மூக்கையே நீங்கள் நம்ப முடியவில்லையா? வெயில் காலத்து மெட்ரோ வாட்டர் குழாய் போல் காய்ந்துள்ளதா?

- ஆர். பார்வதி



"என்னங்க... இங்க வாங்களேன்" சமையலறையிலிருந்து என் அன்பு மனைவியின் அலறல் கேட்க, என்னமோ ஏதோ என பயந்தபடி போய் பார்த்தால், அறை மூலையில் பேயறைந்தவள் போல் நின்றிருந்தாள்.

"என்ன ஆச்சு ஷைலா?"

"சிலிண்டர் பின்னாடி ஒரு எலி."

ஏதோ புலியைக் கண்டவள் போல் உதறும் குரலில் கூறினாள். சாதாரணமாய் புலியைக் கண்டால் கூட பயப்படாதவள்தான். ஆனால் இந்த பிளேக் கலவரத்தினால் எலியைக் கண்டு கொஞ்சம் பயந்து விட்டாள் அவ்வளவுதான்.

"ப்பூ... எலிதான நிமிஷத்துல அடிச்சிடறேன்." ஒரே நாளில் முப்பது முயலை வேட்டையாடிய என் கொள்ளுத் தாத்தாவை மனதில் நினைத்துக் கொண்டு கம்புடன் புறப்பட்டேன். பரம்பரைச் சொத்தாக கொள்ளுத் தாத்தாவிடமிருந்து எனக்கு ஒற்றைத் தலைவலி மட்டும்தான் வந்திருந்தது.

"எனக்கு ஆபீஸ்க்கு லேட்டாயிடும் அடுத்த தடவை அடிச்சிடுறேன்" என்று சாக்குச் சொல்லி, "இன்று போய் நாளை வருகிறேன்" எனத் திரும்ப வேண்டிய நிலை.

ஞாயிற்றுகிழமை நிதானமாய் எழுந்தால் போதும் என ஆனந்தமாய் நானும் குழந்தைகளும்

எலி ரொம்ப



தூங்கிக் கொண்டிருக்க என் மனைவியிடமிருந்து ஒரு குட்டி அலறல். சுதாரித்துக் கொண்டு எழுவதற்குள் ஒரு பெரிய அலறல்.

"ஏன் இப்படி அலர்ற? அக்கம்பக்கம் இருக்கறவங்க நான் ஏதோ உன்னை அடிச்சுக் கொடுமைப்படுத்தறதா நினைச்சுக்கப் போறாங்க."

பாய்லர் போடக் கட்டைகளை எடுக்கப் போனவள் எலியைக் கண்டு குட்டியாய் அலற, அதைக் கேட்டு அரண்டு போன எலி ஓட முயற்சிக்க, குறுக்கே இருந்த இவள் கால்மீது ஏறி ஓட டபிள் அலறல்.

கீச்!

பூர்ணிமா

"இன்னிக்கு எனக்கு இரண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும்.

ஒண்ணு அது இந்த வீட்ல இருக்கணும், இல்லை நான் இருக்கணும். எது வேணுமோ முடிவு செஞ்சுக் கோங்க" என்று கோபமாய் சீறிவிட்டுப் போன மனைவியைச் சமாதானப்படுத்த வேண்டி அன்றைய தினம் எலி வேட்டை தினமாக அறிவிக்கப் பட்டது. கார்ட்டூன் நிகழ்ச்சிகள் போகிறதே என்று முணுமுணுத்த படியே குழந்தைகள் கலந்து கொண்டாலும் எலி வேட்டை சிறிது நேரத்தில் சூடுபிடிக்க உற்சாகமானார்கள்.



ஆனால் எலிதான் கிடைக்கவில்லை.

"ம்.... மரப்பெட்டிக்குப் பின்னாடி ஓடித்துப்பா."

மகன் எதிரிப்படையைக் கண்டு விட்டமாதிரி உற்சாகமாகக் குரல் கொடுக்க மெல்ல மரப்பெட்டியை நகர்த்தி அடிக்கக் கை ஓங்கும் முன் கட்டிலடிக்கு ஓடிவிடும். கட்டிலை நகர்த்தி, சோபாவை நகர்த்தி, டி.வியை நகர்த்தி, வீடு அலங்கோலமானதுதான் மிச்சம்.

"இவ்வளவு சாமான் சேர்த்து வைச்சா எலி என்ன, யானையைக் கூடப் பிடிக்க முடியாது, இந்த வீட்ல."

"ஆடத் தெரியாதவ மேடை கோணல்னாளாம். ஒரு எலிய அடிக்கத் துப்பில்லை. என்னைக் குறை சொல்ல வந்திட்டீங்க."

எலி வேட்டை திசை திரும்பி எங்கள் சண்டையில் முடிந்தது. கலைத்துப் போட்ட பொருட்களை மீண்டும் சரியாய் வைக்கவே மிச்சப் பொழுது சரியாகிவிட்டது. இந்தத் தேடலில் காணாமல் போன பேனா, பொம்மைகள், சீப்பு இத்தியாதி இத்தியாதிகள் கிடைத்ததில் குழந்தைகள் சந்தோஷப்பட்டதுதான் லாபம்.

வீட்டிலும் எலி, வெளியிலும் எலி, கனவிலும் எலி, நினைவிலும் எலி என எப்போதும் எலியைப் பற்றிய சிந்தனைதான் எனக்கு. எலி பிடிக்க நாங்கள் பட்ட பாட்டைக் கேட்டுவிட்டு எங்கள் ஆபீஸ் ப்யூன் ஒரு பூனைக்குட்டியை என் தலையில் கட்டினான். எப்படியோ எலி ஒழிந்தால் போதும் என்று அதை வாங்கிக் கொண்டேன்.

எலியைப் பிடிக்கத் தெம்பு வேண்டுமென பாலும் பிஸ்கட்டுமாய் பூனைக்கு விருந்து நடக்க வயிறு நிரம்பி பூனை எலியைப் பிடிக்க முயற்சி செய்யாமல் ஜாலியாய்ச் சுற்றி வந்தது.

"இன்னிக்கு அதுக்குச் சாப்பிட எதுவும் கொடுக்காதே. பசி பொறுக்காம எலியைப் பிடிச்சி தின்னுடும்" என்ற அருமையான ஐடியாவை நான் தர அன்று பூனைக்குக் கட்டாய விரதம். விரதத்தை முறிக்க எலியைப் பிடிக்காமல் திருட்டுத்தனமாய் பாலைக் குடிக்க முயற்சித்து மொத்த பாலும் வேஸ்ட்.



எதிரிலேயே எலி வந்தாலும் கண்டுகொள்ளாமல் போனபோதுதான் பூனைக் குட்டி சுத்த சைவம் என்பது தெரிந்தது. விரட்டி அடித்துவிடலாம் என்றால் குழந்தைகள் கண்ணைக் கசக்க, வேறு வழியின்றி பூனைக்கு அன்று முதல் தண்ட பால்

எங்கள் குடையில் இரண்டு, மூன்று இடங்களில் லேசாக ஒழுகியது. ஸ்டிக்கர்களை எடுத்து அதன்மேல் ஒட்டி வைத்துவிட்டேன். பிறகு தண்ணீர் சிறிது கூட மேலே படவில்லை.

- எஸ். விஜயலஷ்மி

ஊற்ற வேண்டியதாகிவிட்டது.

பாம்பு பிடிப்பவர்கள் போல எலி பிடிப்பவர்கள் கிடைப்பார்களா என தேடியும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் வாயில் கிடைத்த பொருட்களையெல்லாம் எலி கடித்துக் குதறியது.

ஒரு நாள் என் மனைவி ஐந்தாறு எலிப் பொறிகளுடன் உள்ளே நுழைந்தாள். அக்கம் பக்கத்து வீட்டிலும் எலித் தொல்லை என எல்லோருக்கும் சேர்த்து வாங்கினாளாக்கும் என்றால்,

"ரூமுக்கு ஒண்ணு வைச்சா ஒண்ணுல இல்லாட்டி இன்னொண்ணுல அகப்படும். அதுதான் இத்தனை எலிப் பொறி வாங்கினேன்."

அமெரிக்காவிலிருக்கும் அவள் அக்கா வாங்கித் தந்த அருமைப் புடவையை எலியார் டேஸ்ட் பார்த்ததால் அதை ஒழிக்காமல் விட மாட்டேன் என வீர சபதம் போட்டிருந்தாள். அதை நிறைவேற்றத்தான் இத்தனை எலிப் பொறிகள்.

"வெங்காய மசால்வடைதான் ரொம்பப் பிடிக்கும். எங்க வீட்ல கூட மசால்வடை வெச்ச பிறகுதான் எலி மாட்டிச்சு" தோழி ஒருத்தியின் யோசனையைச் சிரமேற்கொண்டு தெருவோரக் கடையிலிருந்து கமகமவென மணம் கமழும் மசால்வடைகள் வாங்கி வந்தாள். நாவில் நீர் ஊற ஒன்று கேட்டும் கொடுக்காமல்,

"எலி மட்டும் மாட்டட்டும் உங்களுக்கு மசால்வடை மாலையே போடுகிறேன்" என்றாள். 'அந்த நாளும் வந்திடாதோ" என நான் கனவு காண ஒருமுறை பூனைக்குட்டியின் வால்தான் எலிப் பொறியில் மாட்டியது. மற்றபடி மசால்வடைக்குக் கூட மயங்கவில்லை அந்த எலி. ஆனால் நாளுக்கு நாள் அதன் வாயில் சிக்கி சிதறும் பொருட்களின் எண்ணிக்கை மட்டும் அதிகமாகிக் கொண்டே போனது.

ஊரிலிருந்து வந்த என் தம்பி எங்கள் எலிபிடி, புராணத்தைக் கேட்டு கேலியாய்ச் சிரித்தபடி,

"ஒரு எலிய பிடிக்கவா இவ்வளவு படாத பாடுபட்டீங்க? எலி பாஷாணம் வாங்கி கோதுமை மாவுல கலந்து உருண்டை பண்ணி எலி நடமாடற இடமாப் பார்த்து வைங்க. மூணுநாளுக்குள்ள அது சாகாட்டி என் பேரை மாத்திக்கிறேன்" என்று பந்தயம் கட்டி விட்டு இப்போது தேடிக் கொண்டிருக்கிறான் மாற்றிக் கொள்வதற்கு ஒரு நல்ல பேரை.

கடைசியில் ஒருநாள் என் அருமை மகன் பிஸ்கட் தின்ன நொறுக்குத் தீனி டப்பாவை அணுக, சரிவர, மூடாத டப்பாவிற்குள் நுழைந்து கொண்டு கொட்டமடித்துக் கொண்டிருந்தது எலி. அப்புறமென்ன, சட்டென மூடியை அழுத்தி மூடிவிட்டான். ஏதோ தங்கப் பதக்கம் வாங்கிவிட்ட மாதிரி குதித்தான் என் மகன். என் மனைவி பிள்ளையாருக்கு வேண்டிக் கொண்டிருந்த தேங்காயை உடைத்துவிட்டு வந்தாள்.

வழக்கம் போல் காலை எழுந்தவுடன் காப்பி, பின்பு அரக்க பரக்க ஆபீஸ், மாலை முழுவதும் கேபிள் என சாதாரண நிலைக்குத் திரும்பினோம்.


சிறிது நாளுக்கெல்லாம், என் மகன் கதவிடுக்கில் சிக்கிய எலியாகக் கிறீச்சிட, அடித்துப் பிடித்து ஓடிப் போய் பார்த்தால் அவன் மிக்கிமௌஸ் பொம்மையிலிருந்து காணாமல் போன பஞ்சு, என் மனைவியின் அயல் நாட்டுப் புடவையின் துணுக்குகள், கட்டில் மெத்தையிலிருந்து பிரிந்த ஸ்பாஞ்சு என எலிவந்த நாள்முதலாய் மாயமான மொத்த பொருளும் அலமாரியில் தஞ்சமாகியிருக்க அங்கிருந்து நண்டும் சிண்டுமாய் ஆறேழு எலிக்குட்டிகள் திசைக்கு ஒன்றாய் துள்ளி ஓட எனக்குத் தலையைச் சுற்றியது.

"ஒரு எலியைப் பிடிக்கவே அந்தப் பாடு பட்டோமே, இத்தனையும் எப்படிங்க பிடிக்கறது?"

மூட்டை பூச்சிக்காக வீட்டை கொளுத்துவதா? ஆனால் வேறு வழி? அத்தனை எலிகளை அடிக்கவோ பிடிக்கவோ எனக்குத் தெம்பில்லை. அதுவுமில்லாமல் தாய் எட்டடி பாய்ந்தால் குட்டிகள் பதினாறடி பாயாதா? எட்டடியே தாங்க முடியவில்லை, பதினாறடியை எப்படி சமாளிப்பது?

"தண்ணி வசதி இல்லாட்டியும் பரவாயில்லை. கடை கண்ணி தூரமா இருந்தாலும் பரவாயில்லை. வீடு சின்னதா இருந்தாலும் வாடகை கூடுதலானாலும் சரி எலி இல்லாத ஏரியாவாப் பார்த்து ஒரு வீடு பாருங்க" என்ற என்னை ஒரு மாதிரியாய் பார்த்தார் புரோக்கர். அவருக்குத் தெரியுமா எலி வேட்டை கஷ்டம்?

பெண்கள் பத்திரிகை என்றாலே



வாசகிகளின் பதில்


பெண்கள் பத்திரிகை என்றாலே சமையலும் கோலமும்தான் என இளக்காரம் செய்பவர்களுக்கு இதோ என் பதில் :-

"எண் சாண் உடலுக்கு வயிறே பிரதானம்" என்ற பழமொழியின்படி உயர்திணை, அஃறிணை யாவருக்கும் பசி உண்டு. அந்தப் பசியைப் போக்க ஊட்டச்சத்துள்ள சரிவிகித உணவினை அளித்து, தத்தம் வேலைகளில் சோர்வின்றி உற்சாகமாக ஈடுபட வைப்பது சமையல் எனும் அறுசுவை உணவுதானே?

குறிப்பாக, நம் இந்தியாவின் பல மாநிலங்களில் பலதரப்பட்ட இன, மொழி, கலாசாரப் பின்னணிகளில் அவரவர்க்குரிய பாணியில் எத்தனை விதவிதமான உணவுகள்! இவற்றை அறிய ஒவ்வொரு பெண்ணும் அந்த அந்த மாநிலங்களுக்குச் சென்று கற்று வரவா முடியும்?

பல மாநிலத்தவரின் உணவுக் குறிப்புகளை "பெண்கள் பத்திரிகை" பிரசுரித்து "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த மனப்பான்மையில் சேவை புரிகிறது. அதே சமயம் அப்படிக் கற்றுக் கொள்ளும் உணவினைச் செய்து அவளேயா தின்கிறாள்? தன் கணவருக்கும், குழந்தைகளுக்கும் சுவையாக உடல் நலத்திற்கு நலமூட்டுவதற்காகத்தானே சமையல் செய்து குடும்ப உடல், மனநலத்தைக் காப்பாற்றுகிறாள்? இதுதானே ஆரோக்கியமான சமுதாயத்தின் ஆரம்ப வித்து?

'பெண்கள் பத்திரிகை அவசியம்தானா?' எனச் சிந்திக்கும் திரு. மாலன் (தினமணி) அவர்கள் ஒரு முறை பெண்கள் பத்திரிகையில் வரும் சமையல் குறிப்புகளைப் படித்திருந்தால் சாதம் வடிக்கத் தெரியாமல் அமெரிக்காவில் திண்டாடியிருக்க மாட்டார். சமையல் செய்வது ஈஸி எனவும் உணர்ந்திருப்பார்.



அடுத்து "பெண்கள் பத்திரிகையில்" கோலம் என முகம் சுளிப்பது எவ்வளவு அபத்தம்! அறிவுள்ள கலைத்திறன் மிக்க, கற்பனைத்திறன் கொண்ட கலை அது. உண்மையில் "கோலம்" என்ற கோட்டிலிருந்துதான் ஓவியம், சிற்பம், விஞ்ஞானம் (டயக்ராம்), பூகோளம் (Map), கணிதம் (Graph, Geomentary) என அறிவியல் பரிமாண வளர்ச்சியே ஏற்பட்டது. ஒரு விஞ்ஞானி தன் புதிய கண்டுபிடிப்புக்குக் கோலம் என்ற கோட்டின் உதவியால்தான் கற்பனைக்கு உருவம் கொடுத்து நிழலை நிஜமாக்கி புதிய பொருளை கண்டுபிடிக்கிறார். ஓர் இன்ஜினீயர் கோலம் என்ற தாய் கோட்டின் மூலம் ஆலயங்கள், விஞ்ஞான கூடங்கள், ஃபாக்டரிகளை உருவாக்குகிறார். அறிவியல் உலகின் புதிய புதிய கண்டு பிடிப்புகளுக்கு அடிப்படைக் காரணமே "கோலம்" என்ற கலைத்திறன்தான் என்பதை மறுக்க முடியாத உண்மை. இப்பொழுது சொல்லுங்கள் பெண்கள் பத்திரிகையில் கோலம் என்பது கேவலமா?

(இந்தியா டுடே தமிழ்) ஆசிரியர் திருமதி வாஸந்தி அவர்கள் "இந்தியா டுடே"க்கு பெண் வாசகர்கள் குறைவு என்பதை தன் பத்திரிகை மூலம் கூறாமல் "மங்கையர் மலர்" என்ற "பெண் பத்திரிகை" மூலம் கருத்துக்களை கூறியிருப்பதிலிருந்து எந்தச் செய்தியும் பெண் பத்திரிகை மூலம் சென்றால் எல்லாத் தரப்பு மக்களுக்கும் செய்தி எட்டும் என்பது புரிகிறதல்லவா?

"அந்தரங்கம் புனிதமானது" என்ற கருத்தினை மீறி பெண்களை அவமதிப்புக்கு உள்ளாக்கும் "நாப்கின்" சமாசாரங்கள், குடும்பக் கட்டுப்பாடு பிரசாரங்கள், பெண்களை காமப் பொருளாக, போகப் பொருளாக மாற்றும் விளம்பரங்களை எதிர்க்க, சக்தி வாய்ந்த சாதனமாக "பெண்கள் பத்திரிகை"தான் முழங்குகிறது. இதன் மூலம் பெண்களின் ஒருமித்த கருத்துகளும் கண்டனங்களும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியுடன் சிந்திக்கவும் வைக்கிறது. அதே சமயம் நாகரீக மோகத்தால் நம் இந்திய பண்பாட்டை, கலாசாரத்தை அழிக்கும் தன் இனப்பெண்களையும் கண்டிக்கத்தவறுவதில்லை இந்தப் "பெண்கள் பத்திரிகைகள்."

பெண்களுக்குச் சமூகத்திலுள்ள உரிமைகள், சமூக பொறுப்புகள், கடமைகள் பற்றி, ஆணித்தரமாக (பெண்கள் பத்திரிகைகள்) எழுதுவதால் பாதிக்கப்பட்ட பெண் வாசகிகள் சிந்தித்து, தீர்க்கதரிசனத்துடன் அதேசமயம் விவேகமாக வாழ்க்கைப் பிரச்னைகளை அலசி

லும் மும்தானா?

ஆராய்ந்து சுயமாக முடிவெடுப்பது, ஆலோசனை வழங்கல் போன்ற கருத்துச் சுதந்திரத்திற்கு வழிகாட்டியே பெண்கள் பத்திரிகை தான்.

சில சமயங்களில் லீகலாக சட்டப் பிரச்னைகளையும் சமாளிக்க வழிகாட்டி உதவி செய்வதும் "பெண்கள் பத்திரிகைகளே!" ஆண்கள் பிரச்னைகளையும் அலசி ஆராய்ந்து அவர்களுக்குரிய அன்பை, ஆதரவையும் பகிர்ந்து கொடுப்பதும் "பெண்கள் பத்திரிகைகளே!"

பெண்கள் பத்திரிகைகளில் வரும் கலந்துரையாடல், போட்டிகள், ஆக்க பூர்வமான கட்டுரைகள் மூலம் சாதாரண பெண்வாசகி கூட, தனக்குள் தன்னையறியாமல் ஒளிந்திருக்கும் திறமையை, அறிவை, அனுபவத்தை சமயோஜிதத்தை ஆக்கப் பூர்வமாக பகிர்ந்து தன்னையும் வளர்த்துக் கொண்டு மற்ற வாசகர்களையும் வளரச் செய்து ஆணுக்கு நிகராய் சாதனை புரிந்து சரித்திரம் படைக்க வைப்பதும் "பெண்கள் பத்திரிகைதான்" சமையல் கட்டில் அடைபட்ட பெண்களை சமூகப் பெண்ணாக மாற்றி மேடையிலே பங்கேற்று முழங்கிட வைப்பதே "பெண்கள் பத்திரிகைதான்."

"மாற்றான் தோட்டத்திற்கும் மணம் உண்டு" என்ற நல்ல பண்பினை, சகிப்புத் தன்மையை, விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையை, பகுத்தறியும் தன்மையை, அன்பு, ஆதரவை ஒழுக்கத்தை இந்திய பண்பை, ஆடம்பரத்தால் விளையும் அவதியை தன்னைத்தானே சோதித்து அறிதல் போன்ற பயிற்சியை "மங்கையர் மலர்" "ராஜம்" "மங்கை" போன்ற தமிழக பெண்கள் பத்திரிகைகள் தங்கள் வாசகர்களுக்குத் திரும்ப திரும்ப போதித்து (வாசகர்களை) பண்படுத்துவதால் பிரச்னைகளை அணுகும் முறையில் சாந்தம், நேர்மை வளர்கிறது.

பெண்கள் பல துறைகளில் சாதனைப் படைப்பதற்கு காரணமே இவர்களை வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டி உற்சாக மூட்டி, தன்னம்பிக்கை மற்றும் வழி முறைகளை போதித்து வழிகாட்டும் பெண்கள் பத்திரிகைகள்தான்.

அரசியல் பொய்யும், புரட்டும், வஞ்சகமும் நிறைந்த "சாக்கடை". அதைப் பற்றி அதிகம் பெண்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. அதே சமயம் எய்ட்ஸ், ஓட்டுரிமை, போதையால் விளையும் தீமைகள், கன்ஸ்யூமர்ரைட்ஸ், கல்வி சமூக விரோதிகள் பிரச்சனை, சிறு தொழில் தொடங்குதல், மாறிவரும் சூழ்நிலையில் குழந்தை வளர்ப்பு, சமூகத் தொண்டு போன்ற வற்றில் பெண்கள் பத்திரிகை இன்னும் ஆழமாக இறங்கி மக்களிடம் ஓர் எழுச்சியை, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

- என்ஷா.

சாதாரணமாகவே பெண்களுக்கான பிரத்யோக செய்திகளைத் தாங்கி, விளம்பரப் படுத்திக் கொண்டு வெளியாகும் பத்திரிகைகளைவிட 'குடும்பப் பத்திரிகை' என்ற பெயரில் சினிமா, அறிவியல், அதிசயங்கள், இசை இசை போன்ற தொடர்பற்ற விஷயங்களைக் கொண்ட பத்திரிகைகளே பெண்களை பெருமளவு ஈர்க்கின்றன என்பதே பத்திரிகை முகவராக ஐந்து ஆண்டு அனுபவத்தில் நான் கண்ட உண்மை.

- மு. முருகேசன், இராமநாதபுரம்.

அரசியலிலும் பெண்கள் பங்கு பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் இன்னும் அதிகம் தேவை. ஏன் என்றால் நடுத்தர வருவாய் உள்ளவர்கள் குறிப்பாகப் பெண்கள் தேர்தலின் பொழுது ஓட்டுப் போடச் செல்வதே இல்லை. தற்பொழுது உள்ள பல கட்சி ஜனநாயகம் போய் இரு கட்சி ஜனநாயகம் தோன்றவும் நல்ல வளமான இந்தியா/தமிழகம் தோன்றவும் மங்கையர் மலரில் அதிகமான கட்டுரைகள் வர வேண்டும்.

கிராமங்கள் 80% என்ற அடிப்படையில் இன்னும் உங்களது வீச்சு கிராமப்புறப் பெண்கள் பற்றியதாக, திருவிழாக்களில் ஏற்படும் ஜாதிக் கலவரங்கள் பற்றிய தொகுப்புகள், அதைத் தடுக்க நல்ல வளமான சிந்தனைகள், கிராமப் பெண்களின் பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆக்கமான, ஊக்கமான கட்டுரைகள்,

வீட்டிற்கு வரும் தபால் கவர்களில் உள்ள நம் பெயர், விலாசம் பகுதியைக் கத்திரித்து எடுத்து வைத்துக் கொண்டால், பொதுக் காரியத்திற்கு நம் சாமான்களை வெளியில் தரும்போது ஒட்டி அனுப்ப வசதியாக இருக்கும். அதுமட்டுமின்றி, திருமண வீட்டிற்கு, கவரில் பணம் போட்டுத் தரும்போது, நம் பெயர் விலாசத்தைக் கவரின் பின்னால் ஒட்டியனுப்ப உதவியாக இருக்கும்.

- வி. தனுக

மேக்ஸிமா அளிக்கிறது....

வளமான வருங்காலத்திற்கு வழிகாட்டும் கவர்ச்சிகரமான, விசேஷ திட்டங்கள்

மேக்ஸிமா பெனிஃபிட் ஃபண்ட் லிமிடெட்

நீங்கள் முதலீடு செய்வதைவிட அதிகத் தொகை திருப்பியளிக்கும்
பிரத்தியேகமான நிதித் திட்டங்கள்

டிரிப்பிள் பபிள் டெபாசிட்

குறைந்த பட்ச டெபாசிட் தொகை	காலம்	முதிர்வுத் தொகை
ரூ.50,000/- (கூடுதலாக எந்தவொரு தொகையும் ரூ.50,000/-த்தின் மடங்குகளில் இருக்க வேண்டும்)	5 ஆண்டுகள்	ரூ.1,52,600

தகுதி - அனைவருக்கும் தகுதி உண்டு **வகை** - குமுலேட்டிவ் டெபாசிட்

ஓல்டு கோல்டு டெபாசிட்

குறைந்த பட்ச டெபாசிட் தொகை	காலம் மாதங்களில்	வட்டி வழங்குவது	வட்டி விகிதம்
ரூ.10,000/- (கூடுதலாக எந்தவொரு தொகையும் ரூ.5,000/-த்தின் மடங்குகளில் இருக்க வேண்டும்)	12	மாதம்தோறும்	**20.00%**
	24		**20.50%**
	36	காலாண்டுதோறும்	**21.00%**
	48		**21.50%**
	60	அரையாண்டுதோறும்	**22.00%**

தகுதி - 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே **வகை** - பிக்சட் டெபாசிட்

ஓல்டு வேர்ல்டு டெபாசிட்

குறைந்த பட்ச டெபாசிட் தொகை	காலம் மாதங்களில்	முதிர்வுத் தொகை	வருடாந்தர வருமானம்
ரூ.10,000/- (கூடுதலாக எந்தவொரு தொகையும் ரூ.5,000/-த்தின் மடங்குகளில் இருக்க வேண்டும்)	12	ரூ.12190.00	**21.90%**
	24	ரூ.15000.00	**25.00%**
	36	ரூ.18675.00	**28.91%**
	48	ரூ.23450.00	**33.62%**
	60	ரூ.29195.00	**38.39%**

தகுதி - 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே **வகை** - குமுலேட்டிவ் டெபாசிட்

பர்த் ஓர்த் டெபாசிட்

தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு உங்கள் பிறந்த நாளன்று ரூ.1,060/- டெபாசிட் செய்து, 5வது ஆண்டு தொடங்கி, வாழ்நாள் முழுதும், ஒவ்வொரு பிறந்த நாளன்றும் ரூ.1,000/- பெற்றுக் கொள்ளுங்கள்

தகுதி - பிறந்த நாள் அன்று மட்டுமே


உங்கள் முதலீட்டிற்கு 2% ஊக்கத்தொகை பெறுவீர்

மேக்ஸிமா பெனிஃபிட் ஃபண்ட் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம் : ஜெயம் பில்டிங், முதல் மாடி, AA-147, III வது அவென்யூ, (அண்ணா நகர் ரவுண்டானா அருகில்) அண்ணா நகர், சென்னை 600 040.
தொலைபேசி: 6280468/4941849/456950/458549/452559

மேக்ஸிமா - அதிக பட்ச நம்பிக்கைக்குரியது

Aparna/MIF-558/94



அதைவிட உங்கள் அக்கறைகளையும் உணர்ந்தவர்கள்.

குக்கரில் சாதம் செய்யும்போது அடியில் கட்டிகட்டியாக ஆவதைத் தடுக்க ஓர் எளிய வழி: சாதம் ரெடியானதும் குக்கரிலிருந்து சாதத்தை ஒரு கேசரோலில் எடுத்து வைத்துவிட்டால் சாதம் பொலபொல வென்று உதிர் உதிராக இருக்கும்.

- டி. விஜயலட்சுமி

பேட்டிகள் வேண்டும்.

சினிமாவில் கிராமங்களின் பக்கம் வரச் செய்த பாரதி ராஜா போல், கிராமப் புறப் பெண்களின் நலத்திற்குத் தூசி தட்டி, மேம்பாடு அடையச் செய்ய மங்கையர் மலர் வர வேண்டும் என்பது ஆசை!

-- செ. நாகராஜன்.

பொதுவாக யார் ஒருவர் தனி ஒதுக்கீடு போல் தனக்காக மட்டும் என்ற ஒன்றை ஏற்படுத்தி கொள்கிறார்களோ, அப்போதே அவர்கள் மற்றவர்களைவிட, அதாவது அதிக மானவர்களிடமிருந்து (Majorities) தன்னைத் தானே பிரித்து கொள்கிறார்கள் என்றுதான் அர்த்தம். இதனை ஒரு வகையான Complex என்று கூட சொல்லலாம். படிப்பு, வேலை வாய்ப்பு, ஆட்சியில் பங்கு, வேட்பாளர் தேர்வில், ஏன் பேருந்தில் கூட!.. அந்த வகையில் ஒன்றுதான் பெண்களுக்கான தனியான பத்திரிகை.

இன்றைய சூழ்நிலையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் படிப்பதற்கும் மற்றய பொழுது போக்கிற்கும் ஆண்கள் எடுத்துக்கொள்ளும் நேரத்தைவிட, பெண்களுக்குக் கிடைக்கும் நேரம் மிகவும் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் நமது வாழ்க்கை முறை அப்படி.. மேலும் ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு வகையான செய்திகளுக்கு முக்கியத்துவம் தருவதால் அத்தனையையும் பெண்களால் படிக்க முடியவில்லை/ தேவையுமில்லை. எனவே மேற்கண்ட அனைத்திலும் பெண்களுக்கென தேவையானவற்றை மட்டும் வடிகட்டி, சுருக்கிக் கொடுத்தால், அதனை மட்டுமே பெண்கள் படித்தால் உலகமே வலம் வந்தது போல் அமையும். எனவே இப்போதைய நிலையில் பெண்களுக்கென தனியான பத்திரிகை தேவையே.

இன்று பெண்கள் நுழையாத துறையே இல்லை. கட்டுரையில் குறிப்பிடாத பேருந்து ஓட்டுநர், நடத்துனர் இவ்விதழில் வேறு பக்கத்தில் வெளியாகியுள்ள இராணுவம் மற்றும் பைலட்டாகக் கூட வந்து விட்டனர். எனவே பெண்கள் பத்திரிகையில் சமையல், கோலம் மட்டும் என்பது போதாது. அப்படி இல்லை என்பதும் உண்மை.

மற்ற பத்திரிகைகளைப் போல அனைத்துச் செய்திகளையும் குறிப்பாக பெண்கள் சம்பந்தப்பட்ட செய்திகளையும் தர வேண்டும். அத்துடன் அரசியல் என்பதும் பெண்களுக்கு அத்தியாவசியம் என்ற இக்காலத்தில் உள்/வெளி நாட்டு அரசியல், அறிவியல், இராஜதந்திரம், விளையாட்டு, ஆபாச வன்முறையில்லாத சினிமா செய்திகள்/பெண்கள் சம்பந்தப்பட்ட 'கரு' உள்ள பட விமர்சனங்கள் போன்று அனைத்து வகை செய்திகளையும் கலந்து, கதம்பமாக அதேசமயம் போர் அடிக்காமல், ஜனரஞ்சகமாக தரவேண்டும். இந்தப் பத்திரிகைகளில் இச் செய்தி வந்தால் சரியாக, உண்மையாகத்தான் இருக்கும் என்ற எண்ணம் ஏற்படுகிற வகையில் அமைய வேண்டும்.

நான் அறிந்தவரை "மங்கையர் மலர்" மேற்கண்டவற்றை அவ்வப்போது அளித்து வருகிறது என்று கருதுகிறேன். இன்னும் தொடாத பல புதியபகுதிகளையும் அவ்வப்போது சூழ்நிலைக்கேற்றவாறு வழங்க வேண்டும் என்றும் அன்புடன் வேண்டுகிறேன்.

- - த.சாந்தி, திருவாரூர்.

Chemical process (சமையல்) மற்றும் "கணக்குடன் (கணிதத்துடன்) சேர்ந்த ஓவியம் (கோலம்) போன்றவையும் ஒரு கலைதான். ஆனால் இதுவேதான் பெண்கள், பெண்கள் என்றாலே இவைகள்தான் என்பதை வன்மை யாகக் கண்டிக்கிறேன். இவற்றையும் மீறி பெண்கள் பத்திரிகையில் மிக நல்ல செய்திகள் வருகின்றன. அவைகள் குடும்பத்திற்கு மிக உகந்ததாகவும், அதேசமயம் பெண்மையின் அருமையை புரிய வைப்பவையாகவும் அமைந்துள்ளன. குறிப்பாக மங்கையர் மலர், மங்கை, ராஜம் ஆகிய பத்திரிகைகள். மங்கையர் மலரைப் பெருமைக்காக சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம்.

பெண்கள் பத்திரிகை என்றாலே மேற்கூறிய இரண்டும்தான் என்பதனை முறியடித்து அவற்றோடு மற்றவையும் உண்டு என சாதித்து சாதனை புரிந்துள்ள "மங்கையர் மலரே" இவர்களுக்குப் பதில்தானே!

-- ஜானகி நாகராஜன்

குழந்தைகளுக்காக ஒரு கோயில்!

கல்வியில் குழந்தைகள் இன்று கைதேர்ந்தவர்களாகி விட்டாலும் கலாச்சாரத்தில், பண்பாட்டில் அவர்கள் நிலை யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. வன்முறை கலாச்சாரம் பெருகி விட்ட இன்றைய நிலையில் சமுதாயச் சிந்தனை கொண்ட மதிஒளி சரஸ்வதி தலைமையில் பதினைந்து ஆண்டுகளாக குழந்தைகள் நலனுக்காக நடந்து வருகிறது "நந்தலாலா சேவா சமிதி." இதற்காக குமாரி சரஸ்வதி பல்வேறு செயல் திட்டங்களைச் செய்து



வருகிறார்.

அவர்களது அடுத்த முயற்சி குழந்தைகளுக்காகவே, அவர்கள் மனம் லயித்துப் பூஜை செய்ய ஒரு கோயில் கட்டுவதுதான். அதுதான் "நந்தலாலா ஸ்ரீ கிருஷ்ணர்" கோயில். ஜாதி, மத பேதமின்றி அங்குள்ள கிருஷ்ணர் பாதங்களுக்கு குழந்தைகளே அபிஷேகம், பூஜை செய்யலாம் என்பதே இதன் சிறப்பு. ஏற்கெனவே 'நந்தலாலா' எனும் குழந்தைக் கிருஷ்ணன் அங்கு கொலுவீற்றிருக்கிறான். இன்றைக்கு அறுபது லட்சம் ரூபாய் மதிப்புள்ள மயிலாப்பூர் ரங்காச்சாரி சாலையில் உள்ள இரண்டு கிரௌண்டு இடத்தைக் கோவிலுக்கு இனமாகக் கொடுத்துள்ளார் ஓர் அன்பர். அவரது வாரிசுகள் அதற்காக துளிக்கூட முகம் சுளிக்கவில்லை என்பது நமக்கு வியப்பளித்த செய்தி. இப்போது அங்குள்ள சிறு கோவிலை விரிவுபடுத்தி பெரிய கோவிலாகக் கட்டுவதே தற்போதைய திட்டம்.

"கடவுள் என்றால் ஏதோ பெரியவர்களுக்கு, முற்றும் துறந்த ஞானிகளுக்கு என்பது போல



நடந்து கொள்கிறார்கள். பூஜை வேளையில் 'இங்கே வராதே, இதைத் தொடாதே' என அவர்களை விரட்டுகிறோம். பூஜை முடிந்து சாப்பாடு போடும் வரை அவர்கள் வெளியே இருக்கிறார்கள். இது தவறு. குழந்தைகளுக்கு அந்தச் சிறு வயதிலேயே பூஜை, பக்தியை மனதில் பதிய வைக்க வேண்டும்" என்கிறார் மதிஒளி சரஸ்வதி. அதற்காகத்தான் அவர்களை மனதில் கொண்டு முழுக்க இக் கோயில் திட்டமிடப் பட்டுள்ளது.

கோவிலின் மேற்புறத்தில் "நந்தலாலா கிருஷ்ணர்" விக்கிர முள்ள கருவறையும், கீழ்த்தளத்தில் தியான மண்டபம், நூலகம் எனும் சிறப்பு அம்சங்களும் நிறைந்து குழந்தைகளுக்காக "கலைக் கோவிலாக" உருவகம் பெற இருக்கின்றது. கலைகள், வேதங்கள், உபநிஷங்கள் எது வேண்டுமானாலும் பெறலாம்.

வாஸ்து விஞ்ஞானி ஸ்ரீ கணபதி ஸ்தபதி இதற்கு வடிவமைத்துள் ளார். "பத்தாம் நூற்றாண்டி லிருந்து (ஆயிரம் வருடங்களாக) பெரியவர்களுக்காக கோவில் கட்டி வந்த எங்கள் பரம்பரையில் நான் குழந்தைகளுக்காக ஒரு கோவிலைக் கட்டியது இதுதான் முதல் முறை" என்று பாராட்டினார்.

- பானுமதி



மங்கையர் மலர் & மீரா ஹெர்பல் பவுடர்

இணைந்து வழங்கும் கூந்தல் பராமரிப்புப் பக்கங்கள்!



இயற்கையாகவே நம் பாதங்களில் ஏற்படும் பிரச்சனைகள் வெடிப்பு, நகங்களில் சொத்தை விழுவது போன்றவை. இது மாதிரி பிரச்சனைகளுக்கு Pedicure செய்வது நல்ல தீர்வு. இது அழகுக்கு மட்டுமல்லாமல் ஆரோக்கியத்திற்கும் உதவுகிறது.Pedicure செய்வது தேவையற்றது என்று நினைக்காமல் உங்கள் பாதங்களை சரியான முறையில் பாதுகாப்பது நல்லது. ஏனென்றால் Pedicure செய்யும் போது முதலில் சுடுநீரில் பாதங்களை மூழ்க வைத்து இருப்பதால் கால்களுக்குப் புத்துணர்ச்சியும், பாதங்களின் அடியில் உள்ள கிருமிகள் அழியவும் ஏதுவாகும். முதலில் கால்களிலுள்ள வெடிப்புகளை foot scraper வைத்துச் சரியான முறையில் Scrap செய்து வெடிப்புகளை நீக்க வேண்டும். பாதங்களில் உள்ள வெடிப்புகளை நீக்கி சுத்தம் செய்த பின் நகங்களை அழகான வடிவில் வெட்டி, நகங்களின் இடுக்குகளையும் சுத்தம் செய்து பின் நன்றாக பாதங்களை 'மசாஜ்' செய்தால் கால்களில் வலி நீங்குவது மட்டுமின்றி இரத்த ஓட்டம் சீராக்கப்பட்டு கண்டிப்பாக பாதங்களுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும். இடைவிடாமல் நகப்பூச்சு உபயோகப் படுத்துபவர்கள் நகங்களை சுத்தம் செய்து சிறிது நேரம் இடைவெளி விட்டு நகப்பூச்சு உபயோகிக்கவும். குறைந்த, விலையுள்ள நகப்பூச்சு உபயோகம் செய்தாலும் நகம் சொத்தை விழுவது போன்ற பல தொல்லைகள் உண்டாகும்.

அழகு நிலையங்களைப் பொறுத்தவரை Pedicure set ஒருவருக்கு உபயோகப்படுத்தினால் மீண்டும் அதை சுடுநீரில் கழுவ வேண்டும். இது மிகவும் அவசியம்.

எனது வயது 18 எனது நெற்றி மிகவும் பெரியது. புருவத்திற்கும், தலைமுடியின் ஆரம்பத்திற்கும் நடுவே 8 செ.மீ. இடைவெளி உள்ளது. இதனால் முன்தலை சொட்டை விழுந்தது போல உள்ளது.

எனது பெரிய முகத்திற்கு எனது தலைமுடியே (அடர்த்தியும் இல்லை) பகை.

முன் நெற்றியில் முடி வளர என்ன செய்ய வேண்டும்?

- சுதாப்ரியா கோவை —1

உங்கள் விஷயத்தில் முன் நெற்றியில்



அம்மா இத்தனை வருடங்களாக மறைத்து வைத்திருந்த ரகசியம்

பாதங்களை பாதுகாப்போம்!

பதில்கள் : மைதிலி பாபு

மட்டும் முடி வளரச் செய்வது என்பதைவிட முன் நெற்றியை மறைக்கும்படி முன்புற முடியை உங்கள் முகத்திற்குத் தகுந்தவாறு கட் செய்து கொள்வது சாத்தியம். முன்புற முடியை cut செய்து Setting சரியான முறையில் செய்து கொண்டால் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்.

தலைமுடி கொட்டாமல் இருக்க கரு கருவென்று வளர உபயோகிக்கச் சொல்லும் தைலங்களால் வேறு ஏதேனும் தொல்லை உண்டா?

தலையில் நெற்றிக்கு அருகில் இரு பக்கத்திலும் லேசாக அரிக்கிறது சொறிந்தால் கருப்பாக திட்டு திட்டாக ஆகி விடுகிறது. என்ன செய்வது?

- புவனாமோகினி, விருதாசலம்.

1) தாங்கள் முன் கூட்டியே எழுதிய எண்ணெயைத் தொடர்ந்து உபயோகித்தால் கண்டிப்பாக நல்ல பலன் தரும். தொடர்ந்து ஒரே விதமான எண்ணெயை உபயோகிக்கவும். அடிக்கடி எண்ணெயை மாற்றுவது தவறு.

2) நீங்கள் எழுதிய நெற்றிக்கு அருகில் உள்ள கருப்புத் திட்டுகளை நல்ல தோல் நிபுணரிடம் காட்டி ஆலோசனை பெறவும்.

எனக்கு முழங்காலில், கால் விரல்களில் கருள்கருளாக கருமையாக முடி உள்ளது. அவற்றை நீக்க ஹேர் ரிமூவர் பயன்படுத்தியும் போகவில்லை. எனவே அவற்றை நீக்கவும் மீண்டும் வளராமல் தடுக்கவும் வழி சொல்லுங்கள்.

- புவனா, கும்பகோணம்.

நீங்கள் எழுதியுள்ளது போல் முழங்கால், கால் விரல்களில் ஹேர் ரிமூவர் பயன்படுத்தினால் முடி வளர்வது தடுக்கப்படாது. இதற்குச் சரியான முறை Waxing தான். இடைவிடாமல் தொடர்ந்து Wax செய்தால் முடி வளர்வது கட்டுப்படும். எலக்ட்ராலிஸஸ் முறையில் முடி வளராமல் தடுக்கலாம். ஆனால் அது முகத்திற்கு மட்டும்தான் பொருந்தும்.

மூக்கின் மேல்பாகம் சொரசொரப்பாக காணப்படுவது ஏன்? அதை எவ்வாறு குணப்படுத்தலாம்?

- எல்.சேதுக்கரசி,
பேரளம் - 609 405.

மூக்கின் மேல்பாகம் சொர சொரப்பாகக் காணப்படுவதற்கு காரணம் Black (or) White headsதான். இது அதிகமாகும் போது தோலின்

இந்த மாதம் பரிசுபெற்ற கட்டுரைக்கு மீரா அளிக்கும் பரிசு ரூ. 1000/- மதிப்புள்ள குக்கர்	அடுத்த மாதம் போட்டிக்கான தலைப்பு — 'என் தலைமுடி எனக்குச் செய்த உபகாரம்!' கடைசி தேதி : 15.01.'95

துளைகளை மூடி விடுகிறது. நாளடைவில் இறுகி முகத்தின் அழகைக் கெடுக்கிறது. நல்ல பார்லருக்கு சென்று பேஷியல் செய்து கொண்டால் இதை நீக்கி சுத்தம் செய்து விடுவார்கள். ஐந்து அல்லது ஆறு முறை செய்து கொண்டால் உங்கள் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும்.

எனக்கு 35 வயதாகிறது. 25 வயதிலே தலைமுடி எல்லாம் நரைத்து விட்டது. 30 வயதில் புருவத்தில் உள்ள சில முடிகள் நரைத்தன. தற்சமயம் மூக்கின் உள்ளே இருக்கும் முடி முதல் முழுக்க நரைத்து விட்டன. நான் முட்டை, பால், பச்சைக் காய்கறிகள், பழங்கள், பருப்பு என சரிவிகித உணவுதான் சாப்பிடுகிறேன். எனக்கு என்ன குறைபாடு? விளக்கமாகக் கூறவும்.

- ரஞ்சினி, சென்னை - 10.

கண்டிப்பாக உடம்பில் உள்ள சக்திக் குறைவினால்தான் இவ்வாறு ஏற்பட்டுள்ளது. சரியான டாக்டரிடம் காண்பித்துச் சிகிச்சை பெறவும். உடம்பில் பித்தம் அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளவும்.

கூந்தலின் வளர்ச்சி ஒரு சில வயது வரைதானா? ஏன் கேட்கிறேன் என்றால், என் தோழி ஒருத்திக்கு ரொம்ப வருஷமாகவே கூந்தல் ஒரே அளவில் உள்ளது. தோழியின் வயது 45. அது சாத்தியம்தானா?

- ரா.சு.வள்ளி, பெசன்ட் நகர்.

கூந்தலின் வளர்ச்சியானது மூன்று மாதத்திற்கு அரை இன்ஞ் என்ற அளவில் இருக்கும். ஹேர் கட் செய்து வந்தால் முடி ஓரளவு வளருமே தவிர சிலர் நினைப்பது போல் அதிகமாக வளராது. 45 வயது ஆகும் போது இயற்கையான மாற்றங்கள் நம் உடலில் ஏற்படுவதால் உடம்பின் சக்தியானது குறைய ஆரம்பித்து முடிக்குத் தேவையான போஷாக்குக் கிடைக்காததால்கூட, முடி வளர சாத்தியமாவது இல்லை. ஆனால் முடி கொட்டாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

பரிசு பெற்ற கட்டுரை :—

நரைப் பிரச்னையை இப்படிச் சமாளித்தேன்!

எனக்கு 20 வயது ஆனபோதே தலைமுடியில் வெகுவாக நரை உருவாகிவிட்டது. என் தோழிகள் என்னை, "இவளுக்குக் கல்யாணமாகும்போதே கிழவியாகத்தான் இருப்பாள்" என்று கிண்டல் பேசுவார்கள். எனக்கு வேதனையாகவும் அவமானமாகவும் இருக்கும். நிறைய மருத்துவர்களைச் சந்தித்து மருந்துகள் சாப்பிட்டேன். ஏதேதோ தைலமெல்லாம் உபயோகித்தும் பார்த்தேன். எதுவும் பயனளிக்கவில்லை என்பதோடு கணிசமான அளவில் முடியையும் உதிர்த்ததுதான் மிச்சம். இவ்வளவுக்கும் எந்த மருந்தையும், தைலத்தையும் உடனுக்குடன் மாற்றாமல் குறைந்தபட்சம் ஆறு மாதங்களாவது உபயோகித்துப் பார்த்த பின்பே மாற்றுவேன்.

இதெல்லாம் பயனளிக்காமல் சோர்ந்திருந்த நேரத்தில் என் தந்தையின் நண்பரான தமிழ் மூலிகை வைத்தியர் ஒருவர் ஆலோசனை கூறினார் - கையாந்தரை என்ற மூலிகையை அரைத்துச் சாறெடுத்து ஒரு பங்கு தேங்காய் எண்ணெய்க்குக் கால் பங்கு நல்லெண்ணெய், கால் பங்கு விளக்கெண்ணெய், அரை பங்கு சாறு கலந்து சொடசொடப்பு அடங்கும் வரை காய்ச்சி ஆறவைத்து பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொண்டு அதையே தினமும் தலைக்குத் தடவி வரவும். வாரம் ஒருமுறை தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும் சொன்னார். இத்துடன் வாரம் ஒரு முறை ஐந்து பெரிய நெல்லிக்காய்களைப் பசும் பாலில் (ஒரு தம்ளர்) நன்கு வேகவைத்து எடுத்து மையாக அரைத்துத் தலையில் தடவி ஒரு மணி நேரம் ஊறிய பின் வெதுவெதுப்பான நீரில் தலையைத் தேய்த்து அலசி குளித்து விட வேண்டும் என்றும் கூறினார்.

நான் இவ்விரு முறைகளையும் தொடர்ந்து கடைப்பிடித்து வந்ததில் மூன்று நான்கு மாதங்களுக்குள்ளாகவே எனக்கு நரை

இருந்தது என்று கூட யாரும் சொல்ல முடியாதபடி. நரையே இல்லாமல் போனதோடு லேசாகச் செம்பட்டை முடியாக இருந்த என் முடியும் நன்கு கறுப்பாக மாறியது. இப்போது நரையும் இல்லை. முடி உதிர்வதோ நொறுங்குவதோ இல்லை. என் வாழ்நாளில் அந்த வைத்தியரையும் மறக்க முடியாது.

- ச. வெற்றிச்செல்வி,
திருச்சி - 21.

பிரசுரத்திற்குச் சில கட்டுரைகள்.....

நரையும் விளக்கெண்ணெய் மகாத்மியமும்!

எனக்குப் பதின்மூன்று வயது ஆகும் போதே முடி நரைக்க ஆரம்பித்துவிட்டது. திருமணமான பின்பு இதைப் பற்றி ஒரு தாழ்வு மனப்பான்மை. ஒரு நாள் என் கணவர் ஹேர் கட்டிங்கிற்குச் சென்றபோது அங்கு முடி திருத்துபவர் பேச்சோடு பேச்சாக விளக்கெண்ணெய் முடியை நன்கு கருமைப் படுத்தும் என்று கூறியதும் அதை என் கணவர் என்னிடம் கூறினார். நான் அன்று முதல் காலையில் எழுந்ததும் 2 ஸ்பூன் விளக்கெண்ணெயை உச்சந்தலையில் வைத்துக் கொண்டு பின்பே வீட்டு வேலைகளைச் செய்வேன். ஆச்சரியப்படும் வகையில் இன்று என் தலைமுடி முழுவதும் நல்ல கறுப்பாக மாறிவிட்டது. ஒரு நரை முடி கூட இல்லை. இன்றும் நான் காலையில் எழுந்ததும் விளக்கெண்ணெயைத் தலையில் வைத்துக் கொண்டு தான் வீட்டு வேலைகளைச் செய்கிறேன். இதனால் உடல் சூடும் குறைகிறது.

இது தவிர, சாதாரணமாக நாம் தேங்காய் எண்ணெயைத் தலைக்குப் பயன்படுத்தும் போது அத்துடன் சம அளவு விளக்கெண்ணெய், சிறிது வெந்தயம், சிறிது வேம்பாளம் பட்டை (நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும்) எல்லாவற்றையும் கலந்து தலைமுடிக்கு உபயோகப்படுத்தினால் உடல் சூட்டைத் தணித்து தலைமுடியும் கருமையாகும்.

- வி. வித்யா வைத்யநாதன்,
கோபிசெட்டிபாளையம்.

கறிவேப்பிலை மகத்துவம்!

நான் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டு இருந்தபோது, முன் தலையில் ஓரிரண்டு நரைமுடிகள். பித்த நரை என்று அம்மா சொல்லவும் அலட்சியப்படுத்தி விட்டேன். விளைவு, அடுத்தடுத்த நாட்களில் வெளிப்படையாய் அதிக நரை தெரிய வந்த போது ஆடிப்போய் விட்டேன்.

அப்போதுதான் யதேச்சையாய் வீட்டுக்குப் பொட்டலம் கட்டிவந்த பெண்கள் பத்திரிகையின் ஒரு பக்கத்தில் வெளியாகி இருந்த கறிவேப்பிலை மகத்துவம் பற்றிப் படித்தேன். கறிவேப்பிலைக்கும் தலைமுடிக்கும் பூர்வஜென்மத் தொடர்பு இருக்கும் போலத் தெரிகிறது. என் கறிவேப்பிலை ட்ரீட்மெண்ட் என் நரைகளையெல்லாம் போக்கி முடியைப் புதுப் பொலிவுடன் திகழச் செய்தது. நான் என்ன செய்தேன்?

1. பச்சையாய்க் கொழுந்து கறிவேப்



சர்க்கரைப் பொங்கல் செய்ய இரண்டு தம்ளர் அரிசிக்கு அரை தம்ளர் பயத்தம்பருப்பு சரியான அளவாகும். அரிசியையும், பருப்பையும் லேசாக வாணலியில் புரட்டி எடுத்துக் கொண்டு தண்ணீரில் களைந்து, சாதாரணமாக பொங்கலுக்கு வைக்கும் தண்ணீரில் இரண்டு தம்ளர் குறைத்து, அதற்குப் பதிலாக இரண்டு தம்ளர் பால் விட்டுச் செய்தால் சர்க்கரைப் பொங்கல் மிகுந்த சுவையுடன் இருக்கும். விருப்பமுள்ளவர்கள் ஒரு பிடி கடலைப் பருப்பும் சேர்க்கலாம். அரை கிலோ வெல்லத்தைத் தண்ணீரில் கரையவிட்டு இறுத்திக் கொண்டு, நல்ல பாகு வந்தவுடன் (கெட்டிப் பாகு) வெந்த அரிசியை சேர்த்துக் கிளறி, ஏலக்காய், முந்திரி, நெய் சேர்த்து இறக்கினால் நல்ல மணமாகவும், சுவையாகவும் இருக்கும். - வி. கீதாஞ்சலி

அல்ட்ரா கிரைண்ட்+ வீட்ல இருந்தா வேலை எவ்வளவு ஈஸி!




ULTRA
GRIND +

12 month warranty


இந்தியாவின் முதல் ''டேபிள் டாப்'' ஆட்டுக்கல்

என்னைப் போல ஒங்களைப் போல பிஸியா இருக்கற புதுயுகப் பெண்களுக்காகவே தயாரிச்சிருக்காங்க இந்த அல்ட்ரா கிரைண்ட் + ஆமாம்! இந்த அல்ட்ரா கிரைண்ட் + வந்ததிலேருந்து இட்லி தோசைக்கு மாவு அரைக்கறது ஈஸி! சட்னிக்கு தேங்காய் துருவறது ஈஸி! சப்பாத்தி மாவு பிசையறது ஈஸி! இப்படி, நம்மளோட வேலையெல்லாம் எவ்வளவு ஈஸியாயிடுச்சு பாத்தீங்களா?

என்னப் பொருத்தவரைக்கும் இல்லத்தரசிக்கு வசதி மட்டுமில்ல; இல்லத்திற்கே பெருமை தர்றது இந்த அல்ட்ரா கிரைண்ட் + என்ன, நான் சொல்றது சரிதானே!



மாவு பிசை சாதனம்



தேங்காய்த் துருவி

எல்ஜி தயாரிப்பு

எல்ஜி அல்ட்ரா அப்ளையன்சஸ் லிட்
எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-641 045.
போன்: 0422-216132. பேக்ஸ்: 0422-212610
மண்டல அலுவலகம்: சிந்தூர் டவர்ஸ்,
95, லஸ் சர்ச் சாலை, சென்னை- 600 004. தொ.பே: 4992101

PATENT PENDING DESIGN REGD. NO. 163445 & 163446.

புதுயுக வசதி அல்ட்ரா. புதியதோர் அனுபவம் அல்ட்ரா.

Anugrah 1693/94

பெண் குழந்தை பிறந்தது என்று கவலை வேண்டாம்!
அதனை கொண்டு சென்று அரசு தொட்டிலில் இட வேண்டாம்!

உங்கள் பெண், ஆண் குழந்தைகளை படிக்க வைக்க திருமணம் முடிக்க கவலை கொள்ள வேண்டாம். இதோ ஒரு அருமையான திட்டம்! சிறிய முதலீடு! பெரிய வருமானம்!!

திருமாங்கல்ய திருமண திட்டம்



வயது	தாங்கள் செலுத்தும் தொகை	டெப்பாசிட் செய்யும் மாதங்கள்	தங்களுக்கு கிடைக்கும் தொகை
1 வயது	ரூ. 1,000/-	240	64,000
1 வயது	ரூ. 2,500/-	240	1,60,000
1 வயது	ரூ. 5,000/-	240	3,20,000
5 வயது	ரூ. 15,000/-	180	3,60,000
10 வயது	ரூ. 45,000/-	120	3,60,000

✳ இவை தவிர இன்னும் பல டெப்பாசிட் திட்டங்களும், 6 மாத வட்டி 1 வருட வட்டி டெப்பாசிட் செய்தவுடனேயே பெறும் திட்டங்கள் உண்டு.

✳✳ தங்க நகை, இந்தியாவில் எங்கும் உள்ள சொத்துக்களுக்கும் பணம் கிடைக்கும்.

தொடர்பு கொள்க!

சேவா தேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் செவ்வாய் வார விடுமுறை

சசிநாத் சாஸ்வத நிதி லிமிடெட்

H.O. 36, ரங்கநாதன் தெரு,
சென்னை - 600 017. Ph : 4346786
கிளைகள் : 35, M.C. ரோடு சென்னை - 600 021.
34, C, ரயில்வே ரோடு, காஞ்சிபுரம் - 631 501.
56, கடப்பா டிரங் ரோடு, திருத்தணி - 631 209.

மக்கள் சேவையில் 17 ஆம் ஆண்டு

சசிநாத்துடன் இணைவோம்! சௌவுக்கியமாக வாழ்வோம்!

SOORYA ADVERTISINGS

மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்!

பிலையை அடிக்கடிச் சாப்பிட்டேன்.

2. கறிவேப்பிலைப் பொடி, துவையல் கண்டிப்பாய் தினசரி சாப்பாட்டில் சேர்த்துக் கொண்டேன்.

3. தேங்காய் எண்ணெயுடன் கறிவேப் பிலையைப் போட்டுக் காய்ச்சி இரண்டு நாட்கள் வைத்திருந்து வடிகட்டினால் எண் ணெய் பச்சைக் கலரில் இருக்கும். இதைத் தலைக்குத் தடவவும், குளிக்கும் முன் மசாஜ் செய்யவும் பயன்படுத்தினேன்.

4. உளுந்து, பயறு இரண்டையும் அரைத் துத் தயிரில் கலந்து தேய்த்து ஊறியபின் சியக்காய் கொண்டு கழுவி, சுத்தமாய்த் தலையை உலர்த்தி பின் ஜடை போட்டேன். (சுத்தமாய் ஈரமில்லாமல் உலர்த்துதல் முக்கி யம்.)

5. கூந்தல் பராமரிப்புக்கென்று எங்கும் அலையாமல் வீட்டில் உள்ள கறிவேப்பிலை கொண்டு, நோயாளிகளை டானிக் கொடுத்து எப்படிப் பராமரிக்கிறோமோ அப்படி அதே போன்ற அக்கறையுடன் செயல்பட்டதில் மீண்டும் - நரை வராதவண்ணம் தடுத்து விட்டேன். இது நடந்து 18 வருடங்கள் ஆகின்றன.

- எஸ். விஜயா செல்வராஜ்,
வெள்ளக்கோவில்.

நரை முடியா?
IT'S GONE!

பித்த நரையால் அவதிப்பட்ட எனக் குப் - படிப்பறிவில்லாத ஒரு வயதான (வேலைக் காரி) பெண்மணி மருந்து கூறினார் -

'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.'

மங்கையர் மலர் & ஃபிலிப்ஸ் நிறுவனம்

இணைந்து நடத்தும் இம்மாத இல்லத்தரசி சிறப்புச் சமையல் போட்டி


சமையல் கூப்பன்

பொருள் : ஆட்டோ ரைஸ் குக்கரை உபயோகித்துச் செய்யும் பண்டங்கள்
கடைசி தேதி : 15.01.'95

என்ற தலைப்பில் இத்துடன் சமையல் குறிப்பை அனுப்பியுள்ளேன். இதுவரை இந்தச் சமையல் குறிப்பு எந்தப் பத்திரிகையிலும் வெளியானதில்லை என்று உறுதி கூறுகிறேன்.


கையொப்பம்

(வழக்கமாக மங்கையர் மலர் தரும் பரிசுகள் தவிர) ஃபிலிப்ஸ் அளிக்கும் பரிசுகள் :
முதல் பரிசு - மிக்ஸர் கிரைண்டர் (ரூ. 2175/- பெறுமானமுள்ளது)
இரண்டாம் பரிசு - ஹேண்ட் மிக்ஸர் (ரூ. 1700/- பெறுமானமுள்ளது)
மூன்றாம் பரிசு - பழம் பிழியும் கருவி (ரூ. 800/- பெறுமானமுள்ளது)
ஆறுதல் பரிசுகள் (3) - பழம் பிழியும் கருவி (½ லிட்) (ரூ. 650/- பெறுமானமுள்ளது)



லிக்விட் ஷூ பாலிஷ்களில் வரும் பிரஷ்களை பாலிஷ் தீர்ந்துவிட்டதும் தூக்கி எறியாமல் அதனைக் கோலம் போடும்போது செம்மண் இட உபயோகப்படுத்தலாம். அந்த டப்பாவிலேயே செம்மண்ணைக் கரைத்து வைத்துக் கொண்டு உபயோகப்படுத்தலாம். கைகளில் செம்மண் கறைபடுவதைத் தவிர்க்கலாம்.

- என். லலிதா



என்ற குறள் ஞாபகத்துக்கு வர - அவள் சொல்படி கேட்டேன்.

மருதாணி இலை, கறிவேப்பிலை, கரிசிலாங்கண்ணி, வேப்பிலை, செம்பருத்தி இலை இவை அனைத்தையும் கைப்பிடியளவு எடுத்துச் சுத்தம் செய்து தேங்காய் எண்ணெயில் மைபோல் அரைத்துக் கலந்து கொதிக்க வைத்து பின் அந்த எண்ணெயை மூன்று நாட்கள் வெயிலில் வைக்கவும். பின் வடிகட்டி பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொண்டு காலையில் எழுந்ததும் தலையின் எல்லாப் பாகங்களிலும் படும்படி தேய்க்க - இருந்த ஒன்றிரண்டு நரையும் It's gone! என்ன ஆச்சரியம்!

நம்பிக்கையும், விடாமுயற்சியுமாய் இதைத் தொடர்ந்து செய்தால் இளநரை நிச்சயம் போகும் என்ற அவள் அறிவுரை எத்தனை உண்மை!

- இரா. சரஸ்வதி,
மன்னார்குடி - 12.

ஊர்வசி சாபம் உபகாரத்தில் முடிந்தது!

உச்சந்தலையில் லேசாக நரை எனக்கு. ஆனால், அது பார்க்கிறவர்கள் கண்ணை நன்றாக உறுத்தும். ஒருநாள் அவசரமாக மாதர் சங்கத்திற்குப் போக வேண்டி இருந்தது. சமையலை முடித்துக் கொண்டு போக வேண்டும். கற்சட்டியில் இருந்த கரி, எண்ணெய்ப் பிசுக்குடன் நன்றாகக் கையில் பட்டுவிட்டது. வேலைக்காரியை மனதாரத் திட்டிக் கொண்டே கையைத் தலையில் நன்றாகத் தேய்த்துவிட்டு வேலையை முடித்தேன். அதற்குள் என்னுடன் கூட வரவேண்டிய தோழிகள் வந்துவிட்டனர். அவசரமாக அலங்காரத்தை முடித்தாக வேண்டும். கண்ணாடி முன் நின்று தலைவாரத் துவங்கினேன். என்ன அதிசயம்! நரை இருந்த இடத்தைத் தேட வேண்டி இருந்தது. "ஊர்வசி சாபம் உபகாரம்" என்பது போல் வேலைக்காரி நன்றாகச் சுத்தம் செய்யாத பாத்திரத்தின் கரி சமய சஞ்சீவியாக என் நரையை மறைத்துப் 'பளபள'வென்று அழகாகக் காட்சி அளித்தது. எப்படியோ அன்று அந்தப் பெரிய நிகழ்ச்சியில் என் நரையைச் சமாளித்தேன்.

- ஸ்ரீதேவி ராஜம், சென்னை - 97.

நரை தவிர்க்க நெல்லிக்காய்!

நரை என்பது 35 வயதிலேயே சிலருக்கு வந்துவிடும். இது இயற்கை. எங்கள் வீட்டில் இந்த நரைப் பிரச்னையை மிகவும் செலவு இல்லாமல் சமாளித்து வருகிறோம். எங்கள் வீட்டில் நெல்லிமரம் உள்ளது. அதனால் ஒவ்வொரு வருடமும் நெல்லிக்காய் சீசனில் நெல்லிக்காயை நன்கு வெயிலில் காய வைத்து எடுத்து காய்ந்ததை சீயக்காய் அரைக்கும் மெஷினில் அரைத்து வைத்துக் கொள்வோம். தலைக்குக் குளிக்கும்போது கொஞ்சம் புளித்த தயிர், முதல் நாள் சாதம் வடித்த கஞ்சி இவற்றுடன் சிறிது நெல்லிக்காய் பவுடர் கலந்து தலையில் நன்கு தேய்த்துக் குளிப்போம். வெயில் நாட்களில் பெண்கள் இரண்டு மூன்று நாட்கள் வாரத்தில் இந்தப் பவுடர் தேய்த்துக் குளிப்போம். ஆண்கள் தினமும் குளிக்கும்போது வெறும் நெல்லிக்காய் பவுடரை மட்டும் தலையில் தேய்த்துக் குளிப்பார்கள். இதனால் நரை முடி ஆரம்ப நிலையில் உள்ளது கூடக் கறுப்பாகிவிடும்.

நாட்டு மருந்துக் கடையில் வேம்பாளம் பட்டை என்ற ஒரு பட்டை கிடைக்கும். இதை வாங்கிவந்து தேங்காய் எண்ணெயுடன் கலந்தால் எண்ணெய் சிவந்த நிறத்தில் இருக்கும். இந்த எண்ணெய்தான் எங்கள் வீட்டில் யாவரும் தடவிக் கொள்கிறோம். இந்த எண்ணெயை தினமும் தடவி வந்தால் 60 வயது வரை நரை எட்டிப் பார்க்காது.

- ஆர். உஷா ராதாகிருஷ்ணன்,
சீர்காழி - 7.



Mrs. B. MYTHILI

Dip in Hair dressings, River Academy, Hangkong, Dip. in Teachers Training, IVETE South America,

Specialist Member BABTAC, UK

Consultant in Beauty Culture & Beauty Theraphy

MYTHILI'S

அழகுக்கலை பயிற்சி வகுப்புகள் அழகுக்கலை நிலயத்தில் இணைந்தது.

1. அழகுக்கலை நிலையம் துவங்கத் தேவை யான பயிற்சிக் கட்டணம் ரூபாய் 8,500/- (காலம் 1 மாதம்)

பாடங்கள் : அழகுக்கலை, முடிவெட்டுதல், 40 வகையான கொண்டைகள், முகம், முடிக்குத் தேவையான புதிய மெஷின்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.

2. அழகுக்கலை நிபுணர்களுக்கான அட்வான்ஸ் (2 நாட்களுக்கு) :

(1) எலக்ட்ரோதெரபி; (2) தெர்மாலிஸிஸ்; (3) புருவத்தைப் பெரிதுபடுத்துதல்; (4) அரோமாதெரபி; (5) சைனீஸ் கட்ஸ், ஹேர் ஸ்லைட்ஸ் இன்னும் பல.

அழகு நிலையத்தின் சிகிச்சைகள் :

எங்களது ஹெர்பல் சிகிச்சையின் மூலம் முகத்தில் உள்ள சுருக்கங்கள், கரும்புள்ளிகள், முகப்பரு நீக்குதல், முடிகொட்டுதல், இளநரை, பொடுகுத் தொல்லை, ஹெர்பல் டை போடுதல், ஹென்னா கண்டிஷனிங் செய்தல் போன்றவை செய்யப்படும். சைனீஸ் ஸ்டைல், புது வகையான ஹேர்கட்டிங் செய்தல், அரோமாதெரபி மூலம் தேவையில்லாத சதைகளைக் குறைத்தல், வலியின்றி காது குத்துதல், புருவத்தைப் பெரிதுபடுத்துதல், முகத்தில் உள்ள தேவையில்லாத முடியை நிரந்தரமாக நீக்குதல், சினிமா மேக்கப் போல மணப்பெண் அலங்காரம் செய்தல் போன்றவை உண்டு.

கீழ்க்கண்ட தனித்தனி சர்டிபிகேட் வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

காலம் : 2 மாதம்
கட்டணம் : ரூ. 3,000/-

1. அழகுக்கலை மட்டும், 2. 40 வகையான கொண்டைகள், 3. முடி வெட்டுதல் மட்டும், 4. ஹெர்பல் கெமிக்கல் products (20) 5. சைனீஸ் முறை குக்கிங், 6. பதிக் முறை ப்ரின்டிங், 7. ஜர்னலிஸம் & மாஸ் கம்யூனிகேஷன், 8. Costume Designing மற்றும் பல பாடங்கள்.



மதுரையில் மகளிர் விழா





மங்கையர் மலர்
ராகா ஹெர்பல் பவுடர்

மங்கையர் மலர் &
ராகா ஹெர்பல் பவுடர்
இணைந்து வழங்கிய
மதுரையில் மகளிர் விழா

ராகா ஹெர்பல் பவுடரின் நிர்வாக இயக்குனர் திரு. சி. கே. குமாரவேலு ரொம்ப நாளாகச் சொல்லிக் கொண்டிருந்தார், "எங்களுடன் இணைந்து நீங்கள் ஏன் மகளிர் விழா பண்ணக் கூடாது?" என்று. நடுவில் நவ ராத்திரி, தீபாவளி, மழை, புயல்... அப்பாடா, எல்லாம் முடிந்து டிசம்பரில் ராகா ஹெர்பல் பவுடர் நிறுவனத்துடன் இணைந்து மதுரையில் மகளிர் விழா கொண்டாடத் தீர்மானித்ததுதான் உங்களுக்குத் தெரியுமே!



• கூந்தல் அலங்காரங்கள்....



• வனிதா, லீலா, மைதிலி, விஜி.

அறிவித்த நாளில் இருந்து மதுரையில் இருந்து பல மகளிர் மன்றங்கள் எங்களைத் தொடர்பு கொண்டார்கள். எப்படி என்கிறீர்களா? எல்லாம் எஸ்.டி.டி.. தொலைபேசி, தந்தி வாயிலாகத்தான். இந்த வித்தியாசம் அவர்களின் ஆவலைக் காட்டியதை நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

இந்த முறை இரண்டு நாட்களாகப் பிரித்திருந்தோம். ஏனென்றால் நிகழ்ச்சிகள் நிறைய. 9.12.94 அன்று காலையில் கோலப் போட்டி ஆரம்பம். வழக்கம் போல உற்சாகமாகப் பெண்களின் அணிவகுப்பு. குறிப்பிட்ட நேரத்தில் கோலம் போடத் தொடங்கினார்கள். என்ன கைவண்ணம் என்கிறீர்கள்! லேடி டோக் கல்லூரியின் தரை முழுவதும் வண்ணங்கள் மலர்ந்தன. கயிறு கட்டிப் பார்வையாளர்களைத் தடுத்து வைத்திருந்தும் உற்சாகமான கமெண்ட்டுகள்.


"விமரிசனம் செய்யாதீர்கள்!"

"பேசாதீர்கள்!"

என்றெல்லாம் அவ்வப்போது அறிவிப்புச் செய்ய வேண்டியதாகப் போயிற்று. அந்த இளம் காலைப் போதிலேயே சி. கே. குமாரவேலு தன் தாயார், மனைவியுடன் ஆடிட்டோரியத்துக்கு வந்துவிட்டார். அவருடன் சுந்தரேசன், நாகராஜன் போன்ற மூத்த அதிகாரிகளும் வந்திருந்தார்கள். சி.கே. குமாரவேலுவின் தாயார் கைவேலைத் திறனிலும், பல கலைகளிலும் வல்லுநர். எனவே, கோலப் போட்டியில் அவரும் ஒரு நடுவராக இருந்தார். அவருடன் சென்னையிலிருந்து வந்திருந்த ஓவியர் சசி, மதுரையைச் சேர்ந்த உமாமகேஸ்வரி மற்றும் மதுரை மாவட்டப் பள்ளிக் கல்வி அதிகாரி பாலாம்பாள் ஆகியோர் நடுவர்களாக இருந்தார்கள்.

தாய் மகவு இணைந்த அழகிய ஓவியமும், நீர்மேல் கோலமும், நுண்கலைத் திறன் கொண்ட வண்ணக் கோலமும் முறையே முதல், இரண்டு, மூன்று பரிசுகளைப் பெற்றன. பல கோலங்களில் மங்கையர் மலர், ராகா ஹெர்பல் பவுடர் பற்றி வாழ்த்துக்கள். நடுவில் கல்கி விநாயகர் வேறு. கோலங்கள் பெரும்பாலானவை அழகாகவே இருந்தன. 'கள்ளிப்பால் ஊத்தினாலும் உயிர்த்தெழுவோம்' என்ற ஓவியம் மனத்தைப் பிசைந்தது.







• இரண்டாம் பரிசு

• மூன்றாம் பரிசு

பரிசு பெற்றவர்களின் பெயரை மறுநாள் மாலை வரை ரகசியமாகவே வைத்திருந்தோம்.

மதியம் நாடகப் போட்டி, மகளிர் மன்றங்களுக்கிடையே ஒரே போட்டா போட்டி தான். பெண் சிசுக் கொலை, மாமியார் - மருமகள் உறவு, பெண் கல்வி, பெண்ணின் மீது ஏவப்படும் அராஜகம் என பிய்த்து உதறி விட்டார்கள். போட்டிக்கு நடுவர்களாக விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணனும், மாவட்ட பொதுஜனத் தொடர்பு அதிகாரி தாமரைச் செல்வம் அவர்களும் மதுரை வானொலி நிலைய நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திருமதி. ஜோதி மணியும் வந்திருந்தார்கள். போட்டிகள் முடிந்து தன் கருத்தைக் கூற மேடையேறிய விஜயலட்சுமி தன் கணீர்க் குரலில் அருமையாக நாட்டுப் பாடல்களைப் பாடிப் பேசினார்.

"கோலமா எனக் கேலி செய்கிறார்கள். கோலம் பெண்களின் கலை வெளிப்பாடு. அவர்களுக்கு இருக்கும் கணக்குத் திறனின் வெளிப்பாடு" என்றார். "நாடகங்கள் சில சமயம் வரம்பு மீறும்போது ரசிக்க முடிவதில்லை. சிலவற்றை ரொம்ப நாசூக்காகச் சொல்ல வேண்டும்" என விமர்சித்தார். மாலை மயங்கியது.

அடுத்த நாள் காலை பத்து மணிக்கு நேருக்கு நேர் நிகழ்ச்சி. தமிழ்நாடு மருத்துவ மனையிலிருந்து மகப்பேறு மருத்துவ நிபுணர் டாக்டர் வசந்தா சிவானந்தம், பதினெண் சித்தர் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் சிநேகலதா இளங்கோவன், அழகுக்கலை நிபுணர் மைதிலி பாபு, கிரையாலேயே எல்லா வியாதிகளையும் குணப்படுத்த முடியும் என்ற பொதட்டூர் சோமசுந்தரம் ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள். இதில் வாசகிகள் பலர் மிகவும் உபயோகமான பல கேள்விகளை அற்புதமாகக் கேட்டார்கள். (எனவே இதைத் தனியாக அடுத்த இதழில் பிரசுரிக்கிறோம்.)

அடுத்து ஆரோக்கிய வினாடி வினா போட்டி. மேடையிலிருந்து அழகு, ஆரோக்கியம், மருத்துவம், மனநலம் சம்பந்தமாக முப்பது கேள்விகள் கேட்கப்பட்டன. பெண்கள் எல்லாம் கனஜோராக எழுதிக் கொடுத்







• சிநேகலதா

• பரிசு பெறுகிறார்கள்....



• முதல் பரிசு

தார்கள்.

அடுத்தது பேச்சுப் போட்டி. இந்த முறை நிறைய நிகழ்ச்சிகள் என்பதால் மூச்சுவிட முடியவில்லை. சாப்பாட்டு இடைவேளை கூட விட முடியவில்லை. ஆயினும் மதுரை வாசகிகள் உற்சாகம் குன்றாமல் இருந்தார்கள். அவரவர் சாப்பாடு எடுத்து வந்திருந்தார்கள். வெளியே போய் சாப்பிட்டால் உள்ளே நடப்பது கேட்காமல் போய்விடுமே என அரங்கத்தைச் சுற்றி, மேடையில் பக்கத்தில் என அந்த எல்லைக்குள்ளேயே வளைய வளைய வந்து கொண்டிருந்தார்கள். "உங்களுக்கும் கொண்டு வந்திருக்கிறோம், சாப்பிட வாருங்கள்" என அழைப்பு வேறு. மதுரையைச் சேர்ந்த அழகுக்கலை நிபுணர் விஜி, மகளிர் விழா இரண்டு நாளும் முழுக்க தன் பார்லரைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அரங்கில் வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தது மட்டுமின்றி மங்கையர் மலர் அலுவலகக் குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் வற்புறுத்திச் சாப்பிட வைத்துக் கொண்டிருந்தார்!

பேச்சுப் போட்டிக்கு வருவோம். "என் அம்மான்னா அம்மாதான்!" என எட்டுப் பேர் பேசினார்கள். 'என் பொண்ண மாதிரி இல்லையாக்கும்" என மூன்று தாய்மார்கள் பேசினார்கள். தன் தாய் எத்தனை கஷ்டங்களிலும் தாங்கள் பெண் என்பதற்காகக் குறைத்துச் சொல்லாதது மட்டுமல்லாமல் ஒரு தோழியாக வாழ்ந்ததைச் சொன்னார்கள். ஒருவர் 'இன்று நான் பல கலை நிபுணியாக இருக்கிறேன் என்று சொன்னால் அதற்கு என் தாய்தான் காரணம்' என்றார். 'பெண்ணே தாயாகித் தன் குடும்பத்துப் பிரச்னைகளை எல்லாம் தீர்ப்பதை ஒரு தாய் பேசினார்.

மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி தங்கசாமியும், எழுத்தாளர் நீரஜாவும் நடுவர்களாக இருந்தார்கள்.

அடுத்ததாகக் கூந்தல் போட்டி. இவ்விரண்டுமே இந்த முறை முதன் முறையாகச் சேர்க்கப்பட்ட போட்டிகள். கூந்தல் போட்டி பார்க்க சுவாரஸ்யமாக இருந்தது. நடுவர்களாக அழகுக் கலை நிபுணர் மைதிலி பாபுவும், ராகா ஹெர்பல் பவுடர்நிர்வாக இயக்குனர் சி. கே. குமாரவேலுவின் மனைவி

• குமாரவேலுவுக்கு நினைவுப் பரிசு

• தமிழ்நாடு மருத்துவமனை டாக்டருக்கு....



வீணா குமாரவேலுவும இருந்தார்கள். அழகுக் கலை நிபுணர்களுடன், அழகுக் கலை பயி லாத இல்லத்தரசிகளும் துணிந்து போட்டி யிட்டது ஆச்சரியமென் றால், முதல் பரிசைத் தட்டிச் சென்றதும் அவர் களில் ஒருவர்தான் என் பது பாராட்டப்பட வேண்டிய விஷயம் தானே! இருபது நிமிடங் களில் மடமடவென்று, தாங்கள் அழைத்து வந்தி ருந்த பெண்களின் தலையில் தங்கள் கை வண்ணத்தைக் காட்டினார்கள். ஒருவர் அந்த நேரத்தில் இரண்டு தலையலங்கா ரங்கள் செய்தார். நல்ல சுவாரஸ்யமான போட்டி.



• கோலத்திற்குப் பதிவு.....

அடுத்தது ஆரம்பித்ததம்மா மாறுவேடப் போட்டி! நண்டும் சிண்டும் நார்த்தங்காயு மாக என்ன குழந்தைகள், எத்தனை வேடங்கள், என்ன திறமைகள். உண்மையி லேயே நம் அடுத்த தலைமுறை பற்றி நாம் பெருமைப்படத்தான் வேண்டும். பெண் களும் தங்கள் குழந்தைகளை இதுபோன்ற போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ளச் சொல்லி ஊக்குவிப்பதும், இவ்வளவு பூரம் சிரத்தை எடுப்பதும் மகிழ்ச்சியான விஷயம். சிலுவை சுமந்து தள்ளாடி நடந்து சென்ற குழந்தை மனத்தைப் பிழிந்தது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என வலம் வந்தார்கள். ரோபோ,

பரிசு பெற்றவர்கள் விவரம் : —

நாடகப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் :

மாதங்கி லேடீஸ் க்ளப் - முதல் பரிசு
காமகோடி மகளிர் மன்றம் - இரண்டாம் பரிசு
மதுர பாஷிணி மகளிர் மன்றம் - மூன்றாம் பரிசு
இறையியல் கல்லூரி (பெண்கள் ஐக்கிய சங்கம்) - ஆறுதல் பரிசு

கூந்தல் அலங்காரப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் :

பி. கமலவேணி பாலு - முதல் பரிசு
ஜெயா மகேந்திரன் - இரண்டாம் பரிசு
எம். கீதா - மூன்றாம் பரிசு

வினாடி-வினா போட்டியில் பரிசு பெற்றவர்கள் :

சுமதி இராஜகோபாலன் - முதல் பரிசு
மங்களம் ஜெகதீசன் - இரண்டாம் பரிசு
சாரதா கணேசன் - மூன்றாம் பரிசு
லதா விஜயகுமார், எஸ். சங்கரி சுப்ரமணியம்
சுப்ரமணியம், திருமதி. அபுபக்கர்
வி. வள்ளிமயில், ஆர். லதா - ஆறுதல் பரிசு

பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் :

சுமதி ராஜகோபால் - முதல் பரிசு
மதிப்பிரியா - இரண்டாம் பரிசு
அன்பரசி - மூன்றாம் பரிசு
பரகத் நிஷா - ஆறுதல் பரிசு
பத்ரி சுந்தரகோபால் - ,, ,,



• கோலத்தில் மும்முரம்....

காவல்துறை டிஎஸ்பி செல்வி. வனிதாவும் வந்தார்கள். அடுத்தது மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. கிருஷ்ணசாமி ராஜீவன் வந்து சேர்ந்தார்.

பரிசளிப்பு விழா துவங்கியது. முதலில் பேசிய வனிதா, பெண்கள் இது போன்ற விழாக்களில் தன்னம்பிக்கை பெறுவதைக் குறிப்பிட்டார். கலெக்டர் சுருக்கமாகப் பேசி விட்டு அவசர வேலையாகக் கிளம்பி விட்டார். லீலா, "எதிரே பார்க்கும் முகங்கள் எல்லாம் எனக்குப் பரிச்சயமானவையே" என்றார் ஆத்மார்த்தமாக. மகிழ்வோடு இந்த விழாவைப் பாராட்டினார். இடையில் தன் துணைவியாருடன் வந்து சேர்ந்த மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் (ஊரகம்) திரு. சுப்ரமணியன், "பெண்கள் தைரியமாக நியாயத்தை எதிர்த்துப் போராட வேண்டும்" என்றார். "பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் அதிகம் என்றாலும் பெரும்

வயக்காட்டு பொம்மை இப்படி நிறைய.

இப்போட்டிக்கு நடுவர்களாக மதுரை வானொலி நிலைய நிகழ்ச்சிப் பொறுப்பாளர் எம். ரமேஷ் மற்றும் சிநேகலதா இளங்கோவன் ஆகியோர் இருந்தார்கள். நிகழ்ச்சி நடந்து கொண்டு இருக்கும்போதே பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள மதுரை வானொலி இயக்குனர் செல்வி. லீலாவும்,

மாறுவேடப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் :

பி. நித்யா	-	முதல் பரிசு
ஆர். நாகசக்தி	-	இரண்டாம் பரிசு
ம. வர்ஷிணி	-	மூன்றாம் பரிசு
கே. விக்னேஷ், எல். அபிராமி, ரேஷ்மா, ஜி. அருண்ராஜ், கே. விக்ராந்த், கே. ஹரிணி, டி. ஜெயலட்சுமி, சிந்து மீனா, ஆர். கிருத்திகா, ம. நரேந்திரா	-	ஆறுதல் பரிசுகள்

கோலம் - பரிசு பெற்றவர்கள் :

முதல் பரிசு	-	வி. பொன்னம்மாள்
இரண்டாம் பரிசு	-	ரேவதி ஸ்ரீனிவாஸ்
மூன்றாம் பரிசு	-	முத்து வீரப்பன்
பா. மனோன்மணி (சிவகாசி), மேரி சரோஜா ஜோசப், எஸ். ஹன்ஸா காஷியப், சுமதி ராஜகோபாலன், என். கௌரி.	-	ஆறுதல் பரிசு

சிறப்பு ஆறுதல் பரிசு :

1. ராஜேஸ்வரி, 2. எஸ். ஆனந்தி, 3. எஸ். பூர்ணிமா,
4. ஏ. கஸ்தூரிபாய் (சிவகாசி), 5. சீதாலட்சுமி தேவராசன், 6. ம. சித்ரா,
7. ஆர். ஜானகி ராமராஜ், 8. என். தேவி, 9. செல்வி. ஆர். தென்றல்,
10. எஸ். பத்மாவதி. (இருவரைத் தவிர மற்ற அனைவரும் மதுரையைச் சேர்ந்தவர்கள்)

சிறப்புப் பரிசு : ச. அன்பரசி.


வெளிநாட்டுத் தயாரிப்புகள் இந்தியாவில் குவியும் இவ்வேளையில்...
இதோ ஒரு இந்தியத் தயாரிப்பு - வெளிநாட்டினர் இறக்குமதி செய்ய விரும்புவது...
இந்தியரோ அதை அடைவதில் பெருமை கொள்ளுவது!
kali
அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா, ஜப்பான் முதலிய நாடுகளில் இந்த சர்வதேச வடிவமைப்பு தனிப்புகழ் பெற்றது.
காளி
காப்பர் பாட்டம்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பிரஷர் குக்கர்
&
பிரஷர் பான்
இணையற்ற அம்சங்கள்
★ புத்தம் புதிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீலினாலான நவநாகரீக வடிவமைப்பு. துருப்பிடிக்கும் பாகங்கள் கிடையாது ★ உறுதியான காஸ்கட் மற்றும் பேக்லைட் கைப்பிடிகள் ★ பழுதடையாத பாதுகாப்பு அமைப்புகள் ★ 5, 6.5 மற்றும் 8 லிட்டர் அளவுகளில் குக்கர்கள். பிரஷர் பானும் உண்டு ★ விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட காளி காப்பர் பாட்டம். 40 ஆண்டுகளுக்கும் மேலான காளியின் தரம் மற்றும் திறன்
kali
காளி பிராண்ட் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஃபாக்டரி
42/6-B, மெட்ராஸ் ரோடு, மேலக்காவேரி 612 002, கும்பகோணம்.
போன்:21149, 24008 டெலக்ஸ்:0467-201 KALI IN ஃபேக்ஸ்:91-435-23048
காளி: ஒரிஜினல் காப்பர் பாட்டம் சமையல் பாத்திரங்கள் - அனைத்திற்கும் மேலானது.

எமது புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

சூர்யா எஸ்டேட் பைனான்ஸ்

டெப்பாசிட்தாரர்களுக்கு வருடத்திற்கு

24% வட்டி + 3% பரிசு

வழங்குகிறது.

பென்சன்தாரர்களுக்கு 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

SEF

மேலும் கவர்ச்சிகரமான டெபாசிட் திட்டங்கள் உண்டு

விவரங்களுக்கு அணுகவும்:

சூர்யா எஸ்டேட் பைனான்ஸ்

12, வெங்கடேசன் தெரு, தி.நகர், சென்னை-600 017. போன்: 4342405

(G.R. தங்க மாளிகைக்கு எதிரில்) ஞாயிறு வார விடுமுறை.

புகழ்பெற்ற ஜோதிஷர், மந்திர சாஸ்திர நிபுணர் பண்டித காழியூர் ம. பத்மனாபன்.



பிரபல ஜோதிஷர் (பண்டித காழியூர் பத்மநாபன்) காழியூர் ஸ்ரீனிவாசாச்சாரியாரின் மூத்த புதல்வரும், ஜோதிஷ மந்திர சாஸ்த்திரங்களில் 45 வருட காலம் நன்கு தேர்ச்சியும், ஆசிர்வாதமும், பெற்றவரால் மகத்தான சக்தி வாய்ந்த யந்திரங்கள், சக்கரங்கள் வெள்ளியில் தயாரிக்கப்படுகின்றன.

மகாலெஷ்மி கவசம் 200/– மகா சுதர்சன யந்திரம் ரூ 200/- லக்ஷ்மி நரசிம்ம கவசம் ரூ 200/-தனாகர்ஷண யந்திரம் ரூ 300/- மகா சுதர்சன சக்கரம் ரூ 500/- மஹாலக்ஷ்மி சக்ரம் ரூ 500/- இவை தவிர அநேக விதமான யந்திரங்களும், கவசங்களும், (விசேஷ பூஜா க்ரமப்படிக்கு) தயாரித்து அனுப்பப்படும். வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை DD மூலம் அனுப்ப வேண்டும். தபால் செலவு ரூ 50/-

கம்ப்யூட்டர் ஜாதகம் தமிழ் / ஆங்கிலம் ரூ 40/-
ஜாதகத்தின் பொதுப்பலன்களை நேரில் சொல்வதற்கு ரூ 50/-
ஆயுள் பலன்(வருஷம், மாதம், தேதி, நேரம், வார) ரூ 175/-

மூன்று கேள்விகளுக்கு ரூ 25/- வேண்டுவோர் கடிதத் தொடர்பு கொண்டு விபரம் அறிந்து பணம் அனுப்பி சகல நன்மைகளும் அடைவீர்களாக.

பிரபல ஜோதிஷர் **பண்டித காழியூர் பத்மநாபன்,**
"தபோநிதி"
நெ. 5, வித்யோதயா முதல் மெயின் தெரு,
தபெ எண் : 1411, திநகர், மதராஸ் 600 017. Ph. 826 3814
தென்இந்தியா (கிளைகள் ஏதும் கிடையாது)

முக்கிய கவனிப்பு :-

தபால் மூலம் வரும் எல்லா கடிதங்களும் வெகு கண்டிப்பாக பரம இரகசியமாக வைக்கப்படுகின்றன. வீட்டில் கிரகதோஷம் மற்றும் எந்த விதமான தோஷங்களும் பாதிக்காமலிருப்பதற்கு, சுதர்சன ஹோமம், மகா சுதர்சன சக்ரம் பிரதிஷ்டை செய்து தரப்படும். உள்ளூர் வாசிகளுக்கு மட்டும் நேரில் செய்யப்படும். நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

Kowsalya Ads



• எஸ்.பி. சுப்பிரமணியம், ஸ்ரீனிவாசன், ஆறுமுகம்....

கேவலமான விஷயங்களில் பெண்களின் தொடர்பு இருப்பதை அறிய நேரும்போது வருத்தமானதாக இருக்கிறது. திருச்சி சாமியாரோடு திவ்யா, திருவனந்தபுரத்தில் விஞ்ஞானிகளின் கேவலங்களுக்குக் காரணமாக ஒரு பெண்... இதெல்லாம் வருத்தப்பட வேண்டிய விஷயங்கள்'' என்றார்.

பிறகு பரிசுமழை ஆரம்பித்தது. ஏற்கெனவே அறிவித்திருந்த பரிசுகள் தவிர கோலப் போட்டிக்குக் குமாரவேலுவின் தாயார் பத்து பரிசுகள் அதிகமாகக் கொடுத்தார். குழந்தைகள் மாறுவேடப் போட்டிக்கும் குமாரவேலு பரிசுகளை அதிகப்படுத்தினார். சுப்ரமணியம், லீலா, வனிதா ஆகியோர் மாற்றி மாற்றிப் பரிசுகளைக் கொடுத்து மகிழ்ந்தார்கள். (பரிசுகள் அனைத்தையும் 'வெள்ளி நகைகளுக்கும், வேலைப்பாடுகள் மிகுந்த வெள்ளி சாமான்களுக்கும்' புகழ் பெற்ற சென்னை மயிலாப்பூரில் இருக்கும் 'சுக்ரா ஜுவல்லரி'யில் வாங்கியிருந்தோம்.)

மதுரை ஏஜெண்ட் ஸ்ரீநிவாசனுக்கும், 'என் கடன் உதவி செய்வதே' என இதற்காகவே திருச்சியிலிருந்து உதவியாளரோடு வந்த ஆறுமுகத்திற்கும் நினைவுப் பரிசு கொடுத்து மகிழ்ந்தோம். விழாவில் மதுரையில் இருந்து பல பத்திரிகைகளுக்கும் எழுதும் விஜயாகண்ணனும் கலந்து கொண்டார்.

மொத்தத்தில் உற்சாக ஊற்று. திரும்பத் திரும்ப பல பெண்களும், ''நாங்க எத்தனை நாளா இந்த விழாவிற்காகக் காத்திருந்தோம். ரொம்ப நல்லா பண்ணிட்டீங்க. ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்று மனத்திலிருந்து வந்த குரலோடு பிரியாவிடை கொடுத்து வழியனுப்பி வைத்தார்கள்.

— மஞ்சுளா ரமேஷ்

புகைப்படங்கள் :
விடிவெள்ளி ஆறுமுகம்

• பேச்சுப் போட்டியில்....

பரிசளிப்பு விழாவில் எஸ்.பி., கலெக்டர், லீலா, வனிதா, திருமதி. சுப்ரமணியம்....





• ஸ்நேகலதா, பிரம்மானந்த ஸ்வாமிகள்....

முதுமையால் நோயா?

நோயால் முதுமையா?

அறுபத்தைந்து வயது நிறைந்த பெண் மணி மருத்துவமனைக்குத் தூக்கி வரப்பட்டார். அரசில் மிக உயர்ந்த பதவியைப் பார்த்த ஓர்அலுவலரின் வாழ்க்கைத் துணைவி என்பது அந்த நோய்க்குத் தெரியுமா? அந்த அம்மையா ருக்குப் பக்கவாதம் வந்து பேசவும் முடியாமல், நடக்கவும் இயலாமல் நினைவாற்றல் குறைந்த நிலையில்தான் பதினெண் சித்தர் மருத்துவ மனைக்கு வந்தார். ஆம், கொண்டு வரப்பட் டார். எண்ணங்களை சொற்களில் வடிக்கும் சக்தியில்லாமல் அவரால் தன் நிலையைத் தானே விளக்க முடியவில்லை!

டாக்டர் பிரம்மானந்த ஸ்வாமிகளின் அற்புத மருந்துகளும் வர்ம முறையில் அளிக்கப் பட்ட சிகிச்சையும் இரண்டே மாதங்களில் அவரைப் பேசவும் நடக்கவும் மட்டும் வைக்க வில்லை. அவர் உடல் மிகவும் தேறியிருந்தது. அவராலேயே நம்ப முடியவில்லை!

இதேபோன்று எழுபது வயது கண்ட ஓர் ஓய்வுபெற்ற அரசு அதிகாரி ரத்த அழுத்தம், சர்க்கரை வியாதியுடன் கால்வீக்கம் கண்டு நடக்க முடியாமல் துணையுடன் வந்தவர் இரண் டரை மாதங்களில் நடக்கும் திறனை மீண்டும் பெற்றதுடன் இரத்த அழுத்தமும் கட்டுப்படுத் தப்பட்டது.

வயதானவர்களுக்கு மனக்கவலை போதாது என்று உடல் கோளாறும் வந்துவிட்டால் கவிஞன் சொன்னது போல,

கடந்த காலமோ திரும்புவதில்லை
நிகழ் காலமோ விரும்புவதில்லை
எதிர் காலமோ அரும்புவதில்லை
இது தானே அறுபதின் நிலை

என்ற உணர்வே மிஞ்சும்.

ஒய்வாக வாழ வேண்டிய முதுமையை கவலைக்கும் பிணிக்கும் இரையாக்கலாமா? முதியவர் என்றால் முடங்கித்தான் கிடக்க வேண்டுமா?

முதுமை ஏதோ திடீரென்று வந்துவிடுவதில்லை. முதுமைக்கு நம்மை முழு மனத்துடன் ஆயத்தப்படுத்திக் கொண்டு வந்தால் அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவோ அதிர்ச்சியடையவோ தேவையில்லை.

இளமையில் உட்கொண்ட வீரியமிக்க மருந்துகள் தினையறுப்பது போல முதுமையில் சாவதானமாகப் பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்கிறார் டாக்டர் சிவராமன்.

சிலருக்கு முதுமை இளம் வயதிலேயே சம்பவிக்கலாம். அதிக வேலைகள், அதிகமாக உண்ணல், நோய்க்கு இரையாவது, தீய பால்வினை, தீய பழக்கவழக்கங்கள், மனக்கவலை ஆகியவை முதுமையை விரைவுபடுத்தக்கூடும்.

ஆயினும் இயல்பான முதுமை வந்து கொண்டிருக்கிறது என்பதை இயற்கை தலைமுடி நரைப்பது, தோல்கள் சுருங்குவது, முதிய தோற்றம் ஏற்படுவது, நோய் தோன்றுவது, இறுதியில் மரணம் என்ற ஐவகை நிலைகளாகக் காட்டுகிறது. இவற்றையே நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு என்பார்கள்.

எலும்பு, நரம்பு இவற்றின் பாதிப்புதான் முதுமையின் முதல் தாக்கம். இதுதான் சிறிது சிறிதாக இதர உறுப்புகளையும் பாதிக்கிறது. மூட்டு, தசைகள், நரம்பு, ஜீரண உறுப்புகள் இவற்றின் செயல் வன்மை குறையத் தொடங்கும். உடலில் உள்ள ஏழு தாதுக்களும் படிப்படியாக பலஹீனமடைவதால் இந்த பலக் குறைவு ஏற்படுகிறது என்கிறார் மருத்துவர்.

மூட்டு வலி, நரம்புத் தளர்ச்சி, ஐம்புலன்களின் வீரியம் குறைதல், மதுமேகம், ரத்தக் கொதிப்பு, தோல் சுருங்குவது, மாரடைப்பு ஆகியவை வயதானவர்களுக்குப் பொதுவாக வரும் கோளாறுகள்.

முதியவர்கள் உரிய மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வதுடன் தினமும் நடைபயிற்சி, யோகம், தியானம் இவற்றில் ஈடுபடுவது சிறந்தது. அதிக புளி, கொழுப்பு, உப்பு, இனிப்பு இவற்றைக் கூடியவரை குறைப்பது நல்லது. முதியவர்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். கவலையும் மன இறுக்கமும் ஏற்படாமலிருக்கத் தங்களுக்குப் பிடித்த பொழுதுபோக்குகளில் ஈடுபடலாம்.


குறிப்பாக முதியவர்கள் அறுவை சிகிச்சை செய்யாமல் தவிர்ப்பது நல்லது என்கிறார் மருத்துவமனையின் மேலாண்மை இயக்குனர் சிநேகலதா. தன் மருத்துவமனையில் மூட்டுவலி, நரம்புத் தளர்ச்சிக்குத் தகுந்த மூலிகை எண்ணெய்களைக் கொண்டு வர்ம சிகிச்சை அளிப்பதன் மூலம் உடனடியான வியக்கத்தக்க நிவாரணம் ஏற்பட்டுள்ளதை அவர் பெருமிதத்துடன் விளக்குகிறார்.

முதுமையைத் தவிர்க்க முடியாது. ஆனால் முதுமையில் வரும் நோய்களைத் தவிர்க்க முடியும். அப்படியும் நோய்கள் வந்துவிட்டால் சித்த மருத்துவத்தின் மூலம் நன்கு குணப்படுத்த முடியும் என்கிறார் உறுதியாக, திருமதி சிநேகலதா.

— ஜெயா

நாம் சிறு குழந்தைகளுக்கு ரெடிமேட் டிரஸ் வாங்கும்போது அதனுடன் தலைக்குக் குல்லாவும் கிடைக்கும். அதனைப் போட்டால் தலையில் எலாஸ்டிக் இறுக்கிப் பிடிப்பதால் தடம் விழும். அந்த இடத்தில் ரத்த ஓட்டம் இன்றி ரத்தம் கட்டிவிடும். அந்த எலாஸ்டிக்கைத் தனியே பிரித்து எடுத்துவிடுங்கள். அழகான வட்டவடிவமான கர்சிப் தயார்!

- டி. எஸ். சீதா அண்ணி



வாஷிங் மெஷினா... வேலைக்குப் பெண்ணா?

யோசிக்காமல் சொல்ல முடியும். வாஷிங் மெஷின்தான் வேண்டும் என்று. இன்று நடுத்தர வீடுகளில் மிக்ஸி, கிரைண்டர், கலர் டி.வி., ஃபிரிட்ஜ் வரிசையில் அதி வேகமாக இடம் பிடித்துக் கொள்ள ஆரம்பித்திருக்கிறது வாஷிங் மெஷின். அரை குறையாக அழுக்குப் போகாமல் ஏதோ துவைத்தோம் அலசினோம் என்று முணு முணுப்போடு வேலை செய்ய வரும் பெண்களுக்கு வாஷிங் மெஷின் ஒரு சவாலாகி விட்டது.

இவர்கள் துவைப்பதை விட நிச்சயமாக வாஷிங் மிஷின் சுத்தமாகத் துவைக்கிறது; அலசுகிறது; உலர்த்துகிறது. ஐந்தே நிமிடம் போதும். தண்ணீர் செலவும் குறைவு. மொத்தத்தில் நேரத்தின் அவசியத்தை அறிந்த பெண்களுக்கும் பணி புரியும் பெண்களுக்கும் கை கொடுக்கத் தோழி போல் வந்திருக்கிறது வாஷிங் மெஷின்.

வாஷிங் மெஷின் என்றாலே ''வாஷோடெக்'' பெயர் நினைவிற்கு வரும் அளவுக்கு இருபது வருடங்களாக மக்களிடம் பெயரைத் தக்க வைத்திருக்கும் வாஷோடெக்ஸ் நிர்வாகி ஜனகராஜன்,


''துவைக்கும் மிஷின் முன்பே வந்து விட்ட போதிலும் 1974-ல் முதன் முதலாக டிரையருடன் கூடிய வாஷோடெக்ஸ் வாஷிங் மிஷினை இந்தியாவுக்கு நம்பர் 1 ஆக அறிமுகப்படுத்திய நேரத்தை நினைத்தால் இப்போது சிரிப்பாக இருக்கிறது'' என்கிறார்.

''தமிழ் நாட்டில் எங்கே எக்ஸிபிஷன் நடந்தாலும் அங்கே 'வாஷோடெக்ஸ்' மிஷினுடன் நான் இருப்பேன். அப்போதைய மக்கள் வாஷிங் மிஷினை நம்பகமான பொருளாக ஏற்றுக் கொள்ளவில்லை. வசதி படைத்தவர்கள் சிலர் வாங்கினார்கள். நடுத்தர மக்கள் அது என்ன என்றுகூட கேட்கவில்லை. ஆனாலும் விடாமல் 'டெமோ' செய்து காட்டுவேன். அப்போது ''இது என்ன துவைக்கும் மிஷினா? இல்லை துணியைக் கிழிக்கும் மிஷினா?'' என்று கேலியோடு கேட்கக் கூடிய கண்ணோட்டமே இருந்தது. அது மட்டுமல்லாமல் வீட்டு வேலைக்கும் எளிதாக ஆட்கள் கிடைத்துக் கொண்டிருந்தார்கள்


நாளடைவில் எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு பெண்கள் போக ஆரம்பித்து விட்டபடியால் வீட்டு வேலை செய்ய ஆள் கிடைப்பதே கடினம் என்றாகி விட்டது. அந்தத் தருணத்தில் பல டீலர் களை எங்களுக்காக நியமித்துக் கொண்டேன்.

மார்க்கெட்டிங் நபர்களை அனுப்பி பல இடங்களில் வீடு வீடாகச் சென்று வாஷிங் மெஷின் எப்படிப் பயன்படுத்துவது என்று விவரித்தோம். கொஞ்சம் கொஞ்சமாக டிமாண்ட் வர ஆரம்பித்தது. புதுப்புது டீலர்களும் வாஷோடெக்ஸ் மிஷினை விற்பனை செய்ய எங்களை அணுகினார்கள். தகுந்த தொழில் நுட்பத்துடன் தரமாக நடுத்தர மக்கள் வாங்கும் நிலைக்கு ஏற்ப குறைந்த விலையை நிர்ணயம் செய்ததால் மக்கள் மத்தியில் எங்கள் பெயர் பதிவாகி விட்டது.''

W-XL



W-RMT





• ஜனகராஜன்

''ஆக, வாஷிங் மிஷின் வாங்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்கிறீர்களா?''

''நிச்சயமாக அதிகரித்திருப்பது மட்டுமில்லை வாங்கும் பொருளைப் பற்றிய விழிப்புணர்வும் விஷய ஞானமும் பெண்களிடம் அதிகரித்திருக்கிறது.

காரணம் கல்விதான்.

பல பத்திரிகைகள் வாசிக்கிறார்கள். வாங்கும் பொருள் நல்லதா பயன் உள்ளதா என்று மற்றவர்களுடன் சேர்ந்து விவாதிக்கிறார்கள். நிறைய சந்தேகம் எழுப்புகிறார்கள். விலை குறைவா? தரம் உயர்ந்ததா? வசதிகள் நிரம்பியதா நம் வாழ்நாள் முழுவதும் உழைக்க வல்ல வாஷிங் மிஷின் தானா என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட பின்னரே வாங்குவதற்கு விரும்புகிறார்கள். நாம் வெளி நாட்டவர்களைப் போல ஒரு பொருள் வாங்குவதும் பிறகு தூக்கி எறிவதுமான முறையில் செய்ய முடியாது. நம் பொருளாதாரம் அறிந்துதான் எதையும் செய்ய முடிகிறது. மேலும் இப்போதுள்ள பெரும்பான்மையான குடும்பங்களில் ஆணும் பெண்ணுமாக வேலைக்குப் போகிறார்கள். பொருளாதார சிக்கலை ஓரளவு சரிக்கட்டிக் கொள்கிறார்கள். அதனால் அவசியமான தேவைக்குரிய பொருள்களை வாங்குவதில் பெண்கள் அதிக முக்கியத்துவம் காட்டுகிறார்கள்.''

''வாஷிங் மிஷின் மின்சார தொடர்புடன் இயங்கக் கூடியது. அதன்மீது தண்ணீர் எப்போதும் படவேண்டி இருப்பதால் துரு,மின்சாரக் கசிவு ஏற்பட வாய்ப்புண்டா?''

''இந்தியாவில் நாங்கள் மட்டுமே மெஷினின் பாடியை அலுமினியத் தகட்டால் செய்கிறோம். அதனால் துருப்பிடிக்க வாய்ப்பே கிடையாது. இந்த அலுமினிய பாடிக்கு 10 வருட உத்தரவாதம் தர முடிகிறது. மின்சாரம் செல்லும் வயர்களை ரப்பர் குழாய்க்குள் பொருத்தமான இடங்களில் செலுத்தி இருப்பதால் தக்க பாதுகாப்பு வசதி அதிகம் உண்டு.''

''வாஷிங் மிஷினை என்னென்ன விதங்களில் தயாரிக்கிறீர்கள்?''

''இரண்டு வடிவங்களில். 4.5 கிலோ கொள்ளளவு கொண்ட மாடல், துவைக்கவும் அலசவும் வசதி கொண்டது. RMT மாடல் உண்டு. இது நவீனப் படுத்தப்பட்டது. சுவிட்சை ஆன் பண்ணியதும் அருகில் இருக்க வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் பஸ்ஸர் ஒலி அழைக்கும். தண்ணீரை வெளியேற்ற வால்வ் சிஸ்டம் உண்டு. 4 வழி செலக்டிவ் சுவிட்ச் உண்டு. விதவிதமான துணிகளையும் மெல்லிய நுட்பமான துணிகளை துவைப்பதற்கு ஏற்ற ஸ்பீட் கண்ட்ரோல் முறையையும் அமைத்திருக்கிறோம்.''

''எப்படி எல்லாம் வாஷிங் மிஷினை பராமரித்தால் பழுதில்லாமல் பார்த்துக் கொள்ளலாம்?''

''முதலாவதாக வாஷிங் மிஷின் வாங்குவதாக இருந்தால் நல்ல தரமான நிறுவனமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வாஷிங் மிஷின் வைப்பதற்கு பெரிய வீடுதான் வேண்டும் என்பதில்லை. ஏற்றதொரு இடம் வேண்டும் அவ்வளவுதான். வாஷிங் மிஷினை ஆன் செய்யும் போது கைகளில் ஈரமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சுவிட்சுகள் சரியாக இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். தடிமனான துணிகள், சாதாரண துணிகள், மிக மென்மையான துணிகள் என்று தரம் வாரியாக பிரித்துக் கொள்ள வேண்டும். அதனதன் தன்மைக்கு ஏற்ப சுவிட்ச் கண்ட்ரோலை பயன் படுத்தலாம்.

4.5. கிலோ கொள்ளளவு கொண்ட மிஷினில் கொள்ளளவுக்கு உட்பட்ட துணிகளையே துவைக்க வேண்டும். ஒரு நாளில் எத்தனை மணிநேரம் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். பயன்படுத்தியவுடன் மின் தொடர்பை துண்டிக்க வேண்டும். வெயில் படும்படியாக மிஷினை வைக்கக் கூடாது. நிழலில் வைக்க வேண்டும். துவைத்து முடித்தபின் மிஷினைத் திறந்து வைத்து ஆற விட வேண்டும். வெளிப்புறத்தை சுத்தமாகத் துடைத்து நாங்கள் தரும் கவரைப் போட்டு மூடி வைக்க வேண்டும். அதனால் நிறம் வெளுக்காது. கீறல்கள் ஏற்படாது. எப்போதும் புதுப் பொலிவுடன் இருக்கும்.

மெஷினை உபயோகிக்கும் போது நீர்க் கசிவு ஏற்பட்டால் உடனே சரி செய்துவிட வேண்டும். சின்னச் சின்னப் பிரச்னைகள் வரும்போது உடனே சரி பார்த்துக் கொள்வது நல்லது.''

''புதிதாக வாங்க வரும் வாடிக்கையாளர்களுக்கு நீங்கள் ஏதும் சிறப்புச் சலுகை தருவது உண்டா?''

''ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31ம் தேதியும் ஜனவரி முதல் தேதியும் எங்கள் டீலர்களிடம் 'வாஷோ டெக்ஸ்' வாங்குபவர்களுக்குச் சிறப்புத் தள்ளுபடி உண்டு. அது வாடிக்கையாளர்களுக்கு பெருத்த லாபமாக இருக்கும். எங்களுடைய இன்னொரு சிறப்பு தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஏகப்பட்ட சர்வீஸ் சென்டர்கள்தான். எனவே சர்வீஸிங் ப்ராப்ளம் இல்லை.நாங்கள் சர்வீஸ் செய்யும் பாணிதான் எங்கள் கம்பெனியின் பெரிய வளர்ச்சிக்கு வாய்ப்பானது என்று கூட சொல்லலாம்.''

- மலர்விழி

இம்மாத இல்லத்தரசி



• கீதா



• சித்ரா



• ஜெயந்தி







• வித்யா

பொருள் : கிரைண்டர் மிக்ஸரைப் பயன்படுத்திச் செய்யும் பண்டம்.

மங்கையர் மலர் & ஃபிலிப்ஸ் இணைந்து நடத்தும் சிறப்புச் சமையல் போட்டியில் பரிசு பெற்றவை.

முதல் பரிசு -ரூ.300/-- மற்றும் ஃபிலிப்ஸ் மிக்ஸர் கிரைண்டர்

மலாய் கோப்தா.

தேவையான பொருட்கள்:

தக்காளி - ½ கிலோ,
உருளைக் கிழங்கு - ½ கிலோ,
காரட் - 100 கிராம்,
தேங்காய் - 1 மூடி,
ரஸ்க் - 100 கிராம்,
வெண்ணெய் - 100 கிராம்,
கிராம்பு - 4,
ஏலக்காய் - 2,
பட்டை - 1 துண்டு,
காரப்பொடி - 1 டீஸ்பூன்,
எண்ணெய் - 250 கிராம்,
உப்பு - தேவையான அளவு.

செய்முறை:

தக்காளி, காரட், தேங்காய் இவற்றை மிக்ஸர் கிரைண்டர் ஜூசரில் தனிதனியாக ஜூஸ் எடுக்கவும். தேங்காயைச் சிறிய அளவாக துண்டுகள் செய்து பால் எடுக்கவும். உருளைக் கிழங்கை வேக வைத்துத் தோல் உரித்துத் தூளாகச் செய்யவும். வெந்த பட்டாணியுடன் உருளை தூள், உப்புத்தூள், காரப்பொடி, இவற்றைச் சேர்த்து நன்கு கலந்து 3" நீளத்திலும், 1½" அகலத்திலும் உருளை போல் கெட்டியாக உருட்டி வைக்கவும். ரஸ்கை மிக்ஸியில் போட்டு தூள் செய்து உருளைகளை ரஸ்க் தூளில் நன்கு பிரட்டி எடுக்கவும்.

கிரேவி:- தக்காளிச்சாறு, காரட் சாறு இவற்றுடன் உப்பு சேர்த்து மிதமான தீயில் கொதிக்க வைக்கவும். இஞ்சி, பூண்டு, கிராம்பு, ஏலக்காய், பட்டை இவற்றை நன்கு அரைத்து வாணலியில் 2 டீஸ் பூன் வெண்ணெயுடன் அரைத்த விழுதைப் போட்டு நன்கு வதக்கி தக்காளி+காரட் சாறுடன் நன்கு கலக்கவும். அடுப்பிலிருந்து இறக்கிய பிறகு தேங்காய்ப் பால் சேர்த்து ஊறி வைக்கவும். இப் போது கிரேவி ரெடி. ஹாட் பவுலில் வைக்கவும்.

கோப்தா:- வாணலியில் எண்ணெய் காய்ந்தவுடன் ரஸ்க் தூளில் பிரட்டி வைத்துள்ள உரு ளைகளை மெதுவாக எண்ணை யில் போட்டு அதிகமாகக் கிளராமல், கோல்டன் ப்ரவுன் கலராக வரும் போது எண்ணெ யில் இருந்து அரித்து எடுக்கவும். சூப் பவுலில் கிரேவி 1 கரண்டி அளவு ஊற்றி அதன் நடுவில் சூடான கோப்தாவை நிற்க வைத்து அதன்மேல் பாகத்தில் ½ டீஸ்பூன் வெண்ணையை

வைக்கவும். வெண்ணை உருகி பார்ப்பதற்கும், சாப்பிடுவதற்கும் மிகவும் நன்றாக இருக்கும்.

பின்குறிப்பு:- *சாதாரண மிக்ஸியில் காரட், தக்காளி இவற்றை சாறு எடுத்தால் தோல், கொட்டை இவற்றுடன்தான் வரும். இவற்றை நாம் வடிகட்டியில் வடிகட்டும் போது வெறும் தண்ணியாகத்தான் சாறு கிடைக்கும். ஆனால் மிக்ஸர் கிரைண்டர் ஜூசரில் சாறு எடுத்தால் நல்ல கெட்டியான விதை, தோலில்லாத சாறு கிடைக்கும். இது என் அனுபவத்தில் கண்ட உண்மை.*

– கீதா சாம்பசிவம்,
சென்னை –32.

இரண்டாம் பரிசு ரூ.200/– மற்றும்- ஹேண்ட்மிக்ஸர்

ஃப்ரூட் வீட்-அல்வா

தேவையான பொருட்கள்:

நன்கு கனிந்த மாம்பழம் - 1,
பலாச்சுளை - 3,
மஞ்சள் வாழைப்பழம் - 3
சர்க்கரை - 600 கிராம்,
தண்ணீர் - 1 டம்ளர்,
நெய்(அ) டால்டா - ½ கிலோ,
சம்பா கோதுமை - 1 ஆழாக்கு,
கேசரி பவுடர் - 1 சிட்டிகை
ஏலக்காய - 8,
முந்திரி பருப்பு - 2 ரூபாய்க்கு.

செய்முறை:

முதல் நாள் இரவே சம்பா கோதுமையை ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதை 'மிக்ஸர் கிரைண்'டரில் போட்டு நன்கு அரைத்துப் பால் எடுத்துக் கொள்ள வேண்டும். இம்மாதிரி இரண்டு முறை தண்ணீர் ஊற்றி அரைத்துப் பால் எடுத்துத் தெளிய வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு நன்றாகத் தெளிந்ததும், மேல் நீரை கீழே ஊற்றி விட்டு, பாத்திரத்தின் அடியிலுள்ள கெட்டியான பாலை ஒரு கப்பில் ஊற்றி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு முக்கனிகளை நன்றாக அலம்ப வேண்டும். மாம்பழத்தைத் தோல் சீவி பிறகு நறுக்க வேண்டும். பலாச் சுளையையும் வாழைப் பழத்தையும் நறுக்கிப் போட்டு, 'மிக்ஸர் கிரைண்டரில்' அரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அரைத்த பழக் கூழை ஒரு கப்பில் எடுத்துக் கொள்ள வேண்டும். வாணலியை எடுத்து, 1கப் கோதுமைப் பாலுக்கு

புத்தாண்டில் புதுமையான பரிசு!

உல்லாச விடுதி போல் குடியிருப்பு...
ஒவ்வொரு வீட்டிலும் டெலிபோன் இணைப்பு



சென்னை கிண்டி அருகே உள்ள ராமாபுரத்தில் உல்லாச விடுதி போன்ற மாபெரும் குடியிருப்புப் பகுதியினை 'ஹோம்ஃபைண்டர்ஸ்' நிறுவனம் அதிநவீன முறையில் உருவாக்கி வருகிறது. இக்குடியிருப்பின் மொத்தம் 252 ஃபிளாட்டுகளில் முதல் கட்டமாக 76 டீலக்ஸ் ஃபிளாட்டுகள் கட்டி முடிக்கப்பட்டு குடியேற தொடங்கி விட்டார்கள். இரண்டாவது கட்டமாக 80 டீலக்ஸ் ஃபிளாட்டுகள் 1995 இறுதிக்குள் குடியேற தயாராகி விடும். ஒவ்வொரு ஃபிளாட்டுக்கும் டெலிபோன் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பது, இக்குடியிருப்பின் தனிச்சிறப்பு. மேலும் எல்லா அறைகளிலும் செராமிக் தரை, ஒவ்வொரு ஃபிளாட்டுக்கும் தனி வாட்டர் டேங்க் மற்றும் குழாய் வசதி, சமையலறையில் எக்ஸாஸ்ட் மின் விசிறி, டெலிபோன் மூலம் தொடர்பு கொள்ளக் கூடிய செக்யூரிட்டி சர்வீஸ், த்ரீ ஃபேஸ் மின்சாரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இக்குடியிருப்பு முழுவதும் எம்.எம்.டி.ஏ. மற்றும் வில்லிவாக்கம் பஞ்சாயத்தின் அங்கீகாரம் பெற்றது.

வீட்டுக் கடனுதவி வழங்கும் நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெறலாம்

சிறப்பு அம்சங்கள்

- இயற்கை எழில்மிக்க சுற்றுப்புற அமைப்பு
- ஒவ்வொரு ஃபிளாட்டுக்கும் டெலிபோன் இணைப்பு
- நீச்சல் குளம் • கடைகள் • மருத்துவ வசதி/குழந்தை நலம் • பொழுதுபோக்கு/சமூகக் கூடம்
- சாடிலைட் டிஷ் ஆன்டனா • வீடியோ சேனல்
- விளையாட்டுத் திடல்
- குடியிருப்பிலிருந்து வெளியே சென்று வர டீலக்ஸ் கோச் சர்வீஸ்.

உடனே தொடர்பு கொள்க :

ஹோம்ஃபைண்டர்ஸ் ஹவுசிங் லிமிடெட்

ரேஸ் வியூ டவர்ஸ், 71, மவுண்ட் ரோடு, கிண்டி,
சென்னை - 600 032. டெலிஃபோன் : 2340762/2340763

தேடித் தருவது வெறும் வீடல்ல — புது வாழ்க்கை!

EFFICIENT

2½ கப் சர்க்கரை போட வேண்டும். பிறகு 1 கப் பழக்கூழுக்கு 1 கப் சர்க்கரை போட வேண்டும். ஆக மொத்தமாக 600 கிராம் சர்க்கரை போட்டு 1 டம்ளர் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைக்கவும். சர்க்கரை கரைந்து லேசாகக் கம்பி பாகு வரும் பொழுது, கோதுமைப் பால், பழக் கூழ் இவைகளைப் போட்டு, சிறிது கேசரிப் பவுடர் சேர்த்துக் கிளற வேண்டும். ½ கிலோ நெய் (அ) டால்டாவை சிறது சிறிதாக போட்டு, நீண்ட நேரம் நன்றாகக் கிளற வேண்டும். 40 நிமிஷங்கள் கிளற வேண்டும். அடுப்பை 'சிம்'மில் வைத்துக் கொண்டு கிளற வேண்டும். மேலே தெறிக்கும். ஜாக்கிரதையாக இழுத்து கிளற வேண்டும். சம்பா கோதுமைக்கு ஜவ்வுத் தன்மை ஜாஸ்தி. ஆகையால் ரப்பர் மாதிரி கடைசியில் வாணலியில் ஒட்டாது வரும் பொழுது நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டி விடவும். பிறகு ஏலக்காய்ப் பொடி, வறுத்த முந்திரி பருப்பைப் போடவும். நன்கு ஆறியவுடன் வில்லை போடவும். அல்வா கிளறும் பொழுது "மனோரஞ்சித" வாசனை அடிக்கும்.

பி.எஸ்.சித்ரா,
சென்னை – 44.

மூன்றாம் பரிசு ரூ.100/– மற்றும் பழச்சாறு பிழியும் உபகரணம் (1லிட்)

ஜவ்வரிசி நுங்கு

தேவையான பொருட்கள்:

ஜவ்வரிசி – 250 கிராம்
முந்திரி – 100 கிராம்,
சர்க்கரை – 150 கிராம்,
பால் – 1½ லிட்டர்,
ஏலக்காய் – 5,
பச்சை கற்பூரம் - சிறிது
ரோஸ் எசன்ஸ் – சில துளிகள்.

செய்முறை:

முதலில் ஜவ்வரிசியை 3 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்.

முந்திரியை நெய் இல்லாமல் வறுத்து, 50 கிராம் சர்க்கரையை சேர்த்து, மிக்ஸர் கிரைண்டரில் பொடி செய்து கொள்ளவும். பாலை நன்கு சுண்டக் காய்ச்சி இத்துடன் சர்க்கரை, ஏலக்காய்ப்பொடி, பச்சை கற்பூரம் மற்றும் எசன்ஸ் சேர்த்து, நன்கு குளிர விடவும். பிறகு ஊற வைத்திருக்கும் ஜவ்வரிசியை, வடி தட்டில் இட்டு நன்றாக வடி கட்டவும். பின் ஜவ்வரிசியை மிக்சர் கிரைண்டரில் இட்டு, ஒரு நிமிடம் ஓட விடவும்.

இந்த ஜவ்வரிசியை சிறு உருண்டைகளாக செய்ய வேண்டும். இட்டிலித் தட்டில் தண்ணீர் தெளித்து, ஓர் உருண்டையை எடுத்து அந்தத் தட்டில் வைத்துப் பரப்பவும்.

அதன் மேல் 1½ தேக்கரண்டி முந்திரி சர்க்கரைக் கலவையைப் போடவும்.

பிறகு இன்னொரு உருண்டையை வைத்து மூடவும். லேசாக தண்ணீர் தொட்டு ஓரங்களை சரி செய்யவும். இட்லி பாத்திரத்திலோ, பிரஷர் குக்கரிலோ வேக விடவும். இதை ஆறிய பாலில் சுமார் ½ மணி நேரம் ஊற விட்டுப் பிரிமாறலாம். மேற் சொன்ன அளவிற்க்குச் சரியாக 15 நுங்குகள் வரும். உண்பதற்கு மிகச் சுவையாகவும் இருக்கும்.

– ஜெயந்தி செந்தில்,
கோவை – 2.

ஆறுதல் பரிசு ரூபாய் 50/- மற்றும் ½ லிட்டர் பழச்சாறு பிழியும் உபகரணம்.

தக்காளி தால் சப்ஜி.

தேவையான பொருட்கள்:

பெரும் பயிறு(அல்லது நிலக்கடலை) – 150கிராம்,
பெரிய வெங்காயம் – 2
பச்சை மிளகாய் – 4 (சிறியது)
இஞ்சி – சிறு துண்டு
தக்காளி – 1
காரப்பொடி – 2 ஸ்பூன்
உப்பு – தேவையான அளவு,



தயாரிப்பாளர்களுக்கு யோசனை

பூசு மஞ்சள் தூள் தயாரிப்பவர்கள் டேத் பவுடர் டப்பாக்களைப் போல் தயாரித்தால் நல்லது. மஞ்சள் கிழங்கு உரசவோ... பொடியை கொஞ்சமாக எடுத்துச் செல்லவோ நேரமில்லாத இந்த அவசர யுகத்தில் பவுடர் டப்பாவைப் போல் தயாரித்தால் தேவையான அளவு உபயோகிக்கவும்... தண்ணீர்பட்டு வேஸ்ட் ஆகாமலும் பயன்படும்.

- ரமாசந்திரசேகர்

மஞ்சள்பொடி, கடுகு, சீரகம்.

செய்முறை:

தக்காளி, பச்சைமிளகாய், இஞ்சி, மூன்றையும் மிக்ஸர் கிரைண்டரில் அரைக்கவும். கடுகையும் சீரகத்தையும் தாளித்துக் கொட்ட வேண்டும். பிறகு நறுக்கிய வெங்காயத்தை வதக்க வேண்டும். அது பொன் நிறமாக மாறுகையில் அரைத்தவற்றை அதில் விட்டு பச்சை வாசனை போக கிண்டவும். அதன் பின் வெந்த பயிர், தனி மிளகாய்ப்பொடி, உப்பு போட்டு கிண்டவும். தண்ணீர் தேவைக் கேற்ப விடவும். நன்கு கொதித்த பின்பு இறக்கி, சப்பாத்தி, ரொட்டி போன்றவற்றுடன் சேர்த்துச் சாப்பிடலாம்.

– வி. வித்யா
மதுரை - 10.

ஆறுதல் பரிசு ரூ.50/-- மற்றும் ½ லிட்டர் பழச்சாறு பிழியும் உபகரணம்

கஸ்டர்ட் பாசிப் பருப்பு சூப்

தேவையானவை:

பாசிப் பருப்பு – 50 கிராம்,
பெரிய தக்காளி – 3
வெங்காயம் – 1
பெரிய கேரட் – 1
முட்டைகோஸ் – 50 கிராம்
பச்சை மிளகாய் – 1
உப்பு, மிளகுப்பொடி – தேவையான அளவு,
கஸ்டர்ட் - 1 டீஸ்பூன்,
பால் - ½ கப்,
அஜினோமோட்டா – சிறிது
கொத்தமல்லி – கொஞ்சம்,
ஆரஞ்சு கலர் – சிறிது.

செய்முறை:

குக்கரில் 1½ டம்ளர் நீர் விட்டு பருப்பு, தக்காளி, கேரட், முட்டைகோஸ் பச்சை மிளகாய், வெங்காயம் போட்டு 5 நிமிடம் வேக விட்டு இறக்கவும். மிக்ஸியில் வெந்தவைகளைப் போட்டு நன்கு அடித்து எடுத்துக் கொள்ளவும். இத்துடன் நான்கு கப் நீர் கலந்து வடிகட்டி விடவும். இத்துடன் உப்பு, மிளகு போட்டுக் கொதிக்க விடவும். அரை கப் பாலில், கஸ்டர்ட் கலந்து, கலர்ப்பொடி சேர்த்து சூப்பில் விடவும். அஜினோமோட்டா, கொத்தமல்லி தழை போட்டு 5நிமிடம் நன்கு கொதிக்க வைத்து இறக்கி விடவும். பதினைந்தே நிமிடத்தில் நான்கு பேருக்கு சத்தான சூப் ரெடி.

–ஆர்.ரஜுலா ஜெயந்தா ராஜா,
அண்ணாமலை நகர்.

ஆறுதல் -பரிசு ரூ.50/-- மற்றும் ½ லிட்டர் பழச்சாறு பிழியும் உபகரணம்

மது மதுரம்

தேவையான பொருட்கள்:


கொத்துக் கடலை வெள்ளை – 1 கப்
பாசிப் பயறு – 1 கப்,
வெல்லம் – 2கப் பொடித்தது,
தேங்காய் – 1 மூடி,
நெய் – 2 டேபிள் ஸ்பூன்,
ஏலம்+கிராம்புத்தூள் - ½ ஸ்பூன்
முந்திரி – 25கிராம்.

செய்முறை:

கொத்துக்கடலை, பாசிப்பயறு இரண்டையும் முன்பே ஊறவைத்து வடிகட்டி முளைகட்ட வைத்து மறுநாள் குக்கரில் வேக வைக்கவும். ஆறியவுடன் மிக்ஸர் கிரைண்டரில் நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

வெல்லத்தைப் பொடித்துப் பாகு வைத்து கல் நீக்கி நன்றாகக் கொதித்துச் சிறிது இறுகியதும் தேங்காய்த்துருவலைச் சேர்க்கவும். பிறகு அரைத்த விழுதைச் சேர்க்கவும். வறுத்த முந்திரி, ஏலம் + லவங்கம் பவுடர் சேர்த்து இரண்டு டேபிள் ஸ்பூன் நெய்யையும் சேர்த்து நன்றாகக் கிளறி கலந்து வைக்கவும். சூடாகக் கிண்ணங்களில் இட்டு ஸ்பூன் போட்டுக் கொடுத்தால் குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை வாயில் போட்டால் போகும் விதமே தெரியாமல் காலியாகி விடும். சாதாரணமாகவே இந்த முளைகட்டி பயறு வகைகளை ப்ரிஜ்ஜில் வைத்துக் கொள்ளுதல் நலம். நினைத்தபோது இனிப்பு வகையோ கார வகையோ, சமையலிலோ சுலபமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

வி.வி.பானுமதி,
திருச்சிராப்பள்ளி – 6.




சின்னஞ்சிறு குழந்தைப் பருவம்,
'காவிட்டி' என்றால் என்ன என்பதே தெரியாத பருவம்.
அதே நிலையில் குழந்தையைத் தொடர்ந்து காப்பாற்றுங்கள்.

உங்கள் அன்புக் குழந்தைக்கு இந்த பருவம் திரும்பி வராது. அந்த சிரிப்பும்... குழந்தைப் பருவ சந்தோஷமும். குழந்தை அப்பருவம் முழுவதும் மகிழ்ச்சிகரமாகவே வளர உறுதிசெய்து கொள்ளுங்கள். காவிட்டி (பற்குழி) மற்றும் பற்சிதைவை சற்றும் அண்ட விடாதீர்கள். உபயோகிப்பீர் ஜீரோ காவிட்டீஸ் டூத்பேஸ்ட். இன்ட்டர்நேஷனல் கோல்கேட் கால்சிகார்டு உலகெங்கும் மேன்மேலும் அன்னையரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் விளங்குகிறது.

ஏனெனில் இன்ட்டர்நேஷனல் கோல்கேட் கால்சிகார்டிடம் மட்டுமே உள்ளது பிரத்யேக சர்வதேச ஃபார்முலா. இது உங்கள் குழந்தையின் பற்களில் இருக்கும் இயற்கையான கால்ஷியத்தை இழக்காமல் தக்க வைக்கிறது. பற்களை மேலும் வலுவடையச் செய்கிறது, காவிட்டி ஏற்படுவதைத் தடுக்கிறது.


இன்ட்டர்நேஷனல் கோல்கேட் கால்சிகார்டு குழந்தை வளர்ந்த பிறகு குழந்தைப் பருவத்தை எண்ணிப்பார்க்கும் போதெல்லாம் உங்கள் பாசப்பராமரிப்புக்கு நன்றியுணர்வைத் தெரிவிப்பார்கள்.





கோல்கேட் உலகிலேயே நம்பர் 1 காவிட்டி ஃபைட்டர்

Rediffusion/Bom/CP/488 k TM

11

சபாபதியின் மனைவி சுபத்ராவிடம் மேலும் சிறிது நேரம் பேசிவிட்டு மகாவும் காயத்ரியும் திரும்பினார்கள்.

மகாவின் மனத்தில் ஏனோ நெருடல் ஏற்பட்டது. சபாபதியின் மனைவி சுபத்ரா அப்படி இரக்கப்படும்படி இருந்தாள்!

அவளிடம் தனது கணவன் குற்றமற்றவர் என்று வாதாடுவதில் ஒரு கண்ணகித்தனமான ஆவேசம் இருந்தது.

கிட்டத்தட்ட நாற்பது நாட்களுக்குப் பிறகு பிரசாத் தனது வெளிப்புற நடவடிக்கைகளை முடித்து வீடு திரும்பினான்.

"ஹாய்!" என்று முழுக் குரல் கொடுத்து வீட்டில் சந்தோஷத்தை மிதக்க விட நினைத்தவனுக்கு,

அதற்குரிய வழக்கமான பதில் மனைவி வசந்தாவிடமிருந்து வரவில்லை என்பது தெரிந்தது.

மூன்று நான்கு தினங்கள் சென்று விட்டன. வீட்டில் தம்பதிகள் பேசுவதற்கு உபகாரமாக இருந்தது, அவர்களது சிறிய பெண் வதாதான்.

ஓர் இரவில் பிரசாத்துக்குப் பொறுக்காமல் போயிருக்க வேண்டும்.

"ஏன் வசந்தா உனக்கு என்ன? ஒரு மாதிரியாவே இருக்கே" என்று கேட்டான்.

உடனே அவள் பதில் பேசவில்லை. இரண்டு மூன்று முறை கேட்ட பிறகு பதில் கூறினாள்.

"நீங்களும்தான் வித்தியாசமா இருக்கிறீங்க" என்றாள் மெதுவாக.

"அப்படியா தோணுது? நான் அப்படி இல்லையே"... என்றான் அவன்.

"ஆமாம்" என்றாள் அவள்.

"இல்லை, வசந்தா நீ தவறா நினைக்கிறே"

"நோ, நோ... என்னைக் குற்றம் சொல்லாதீங்க"

அவன் முகத்தைத் திருப்பினான். அந்த இடத்தை விட்டு தாட்சண்யம் இல்லாமல் வெளியேறினான்.

"நாற்பது நாள் நான் வீட்டிலே சேர்ந்தாற்போல இல்லாமல் போயிட்டேன் நான் என்ன செய்ய முடியும்? என் கம்பெனி நிர்வாகி ரங்கா என்னை விடாம வெளியூர்லே உட்கார்த்திட்டார்" என்று வருத்தத்துடன் கூறினான் பிரசாத்.

எதிரே மகா சற்று தர்ம சங்கட நிலையில் உட்கார்ந்திருந்தாள்.

ஆபீசில் சென்று அவள் அவனை தனியாகச் சந்தித்திருந்தாள்.

இதுவரை இதுபோல் அவள் செய்ததில்லை. தனது ஸீனியர் வசந்தாவின் அனுமதி இல்லாமல் எதுவுமே செய்ததில்லை.

ஆனால் இந்தச் சந்திப்பை அவளே தனது பொறுப்பில் நிகழ்த்தியிருக்கிறாள்.

"மிஸ்டர் பிரசாத் உங்களுக்கு நான் எதுவும் சொல்லித் தர வேண்டியதில்லை. ஆனா உங்களுக்கு ஒரு பழங்கதை இருக்குன்னு எனக்கு சமீபத்திலே தெரிஞ்சது!"



காயத்ரி

"அட கடவுளே" என்றான் பிரசாத்.

"உண்மைதான் மகா. ஆனா என் வாழ்க்கையிலே அதன் பாதிப்பை நான் வளரவே விடலை. நானே என் மனசுக்குள்ளே..."

"ரைட், புரியுது. ஆனா நீங்க அப்படி ஏதோ ஒன்றுக்காக பல காரியங்கள் செய்யறது மற்றவங்களுக்கு சந்தேகம் கொடுக்கும்ன்னு நீங்க நினைக்கலை"

"அப்படி மற்றவர் புரிஞ்சுக்கும்படி நான் எதுவும் செய்யலையே"

"விதி அந்த மாதிரி செஞ்சுட்டது, பிரசாத்"

"என்ன செஞ்சது?"

"ஒரு பழைய கடிதம் எட்டு வருஷத்துக்கு முன்னாடி யாரோ எழுதினது! அந்தக் கடிதம் எட்டு வருஷத்துக்கு முன்னாடி விமான விபத்திலே சிக்கி உங்களுக்கு டெலிவரி ஆகாமல் போயிடுத்து சமீபத்திலே டெலிவரி ஆச்சு!"

"அப்படியா?" என்று திடுக்கிட்டுக் கேட்டான் அவன்.

"இதைப் பாருங்க"

தனது பையைத் திறந்து ஒரு கவரை வெளியே எடுத்தான். உள்ளே ஸெராக்ஸ் செய்த கடிதம் ஒன்று இருந்தது.

"இது நகல்தான் படியுங்க"

படிக்க ஆரம்பித்தான்.

மை டியரஸ்ட்,

தாங்கள் விரும்பியபடி விமானத்திற்கு வேண்டிய விஷயத்தைச் செய்தாகிவிட்டது. உங்கள் பணக் கஷ்டம் தீர்ந்துவிடும். சென்னை வந்ததும் சீக்கிரம் சந்திக்கிறேன்! எப்படி சந்திப்பது?

உங்கள் ப்ரிய காயத்ரி.

இருமுறை படித்தான்.

திடுக்கிட்ட கண்களுடன், "மகா! இந்தக் கடிதம் எப்படிக் கிடைச்சது?" என்றான் ஆச்சரிய தொனியில்

"நொறுங்கிய விமானத்திலிருந்து சிதறிய மெயில் பை ஒன்று சமீபத்தில் கிடைக்கப் பெற்றது. அதன் லெட்டர்கள் பட்டுவாடா செய்யப்பட்டன. அப்படி வந்த லெட்டரில் இது ஒன்று!" மகா விவரங்களைக் கூறினான்.

"இந்தக் கடிதத்தை வசந்தா படிச்



ஸ்ரீவேணுகோபாலன்

சாளா?" என்றான் வேகத்துடன்.

"ஆமாம்! அதிலேர்ந்துதான் அவங்க மன சிலே..." தலையை மெள்ள ஆட்டினான் அவன்.

"ஏன் பிரசாத் இந்தக் கடிதம் உங்களுக்கு ரொம்ப முக்கியமானதா?"

"எட்டு வருஷத்துக்கு முன்னாடி முக்கிய மானது. இப்போ இல்லை"

"இதில் சொல்லப்பட்ட விஷயம் உங்க ளுக்கு ஏற்கெனவே தெரிஞ்சதுதானா?"

"ஆமாம்! அப்புறம் அந்த காயத்ரிநாத னைச் சந்திச்சுட்டேன்!"

"காயத்ரிநாதனா?"

"ஆமாம்! என் நண்பன் நன்றாகக் கவிதை எழுதுவான் 'ப்ரிய காயத்ரி'னு போட்டுப் பான்! ஏர்லைன்லே வேலையாயிருந்தான்!"

மகாவுக்கு ஒரு தெளிவு விழுந்தது.

"அது ஆண்பிள்ளைதானா?"

"ஆமாம்"

"சரி, அவன் உங்களுக்கு என்ன உதவி செய்தான்?"

அவன் உடனே பதில் சொல்லவில்லை.

"ஏன் பிரசாத், நான் ஒண்ணு கேட்க லாமா?"

"கேளுங்க."

"அந்த விமானம் நொறுங்கி விழுந்ததே அதுக்கும் உங்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?"

அவன் பார்வை நடுங்கி நின்றது.

உதடுகள் அசைந்தன.

வார்த்தைகளை உருவாக்க முனைந்தான். ஆனால் அவை வரவில்லை என்பது தெரிந் தது.

சிறிது நிசப்தத்திற்குப் பிறகு, "நீங்க அப்படி நினைக்கறீங்களா?" என்று மெதுவாகக் கேட் டான் அவன்.

"கடிதத்தைப் படிச்சா யாராவது அப்படி நினைக்கலாமில்லே?" என்றாள் மகா.

அவன் பேசவில்லை.

அந்த விஷயத்தை எடுத்தது அவனுக்குப் பிடிக்கவில்லையோ!

அவ்வளவு சீக்கிரம் அவன் மனத்தில் உள்ள எல்லாவற்றையும் கிரகித்துவிட முடி யும் என்று அவளுக்கு நம்பிக்கை இல்லை!

"ஸாரி பிரசாத், உங்க மனசை நான் புண் படுத்திவிட்டேனா?" என்றாள் அவள் குழை வாக.

"இல்லை, இல்லை... நீங்க என்ன நினைக் கறீங்க..., என்ன ஊகம் பண்ணறீங்க, எல்லாம் எனக்குப் புரியுது. இதுபற்றி உங்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கேன்.

நாங்கள் சொல்வது, புதிய ஃபோர்ப்ஸ் மிக்ஸர் கிரைண்டரிலுள்ள ஹை-காப் மோட்டாரைப் பற்றிதான். அதில் சரியான அளவு காப்பர் வைண்டிங் உள்ளதால், மற்ற மிக்ஸிகளைப் போல இது அதிக சூடாவதில்லை. எனவே இதில் தயாரிக்கப்படும் இட்லி, வடை, கோஃப்தா, அல்வா போன்ற உணவு வகைகள் மிகவும் சுவையாக இருக்கின்றன.

தொழில்நுட்பத் துறையில் வல்லுநர்களால் ஹை-காப் மோட்டார் வடிவமைக்கப் பட்டுள்ளது. மேலும் இந்த மோட்டார் சமநிலையுடன் பொருத்தப்பட்டிருப்பதால், மிக்ஸியில் அதிர்வோ அல்லது ஆட்டமோ ஏற்படுவதில்லை... இத்தனை சிறப்பம்சங்கள், எத்தனை குறைந்த விலையில்!

எனவே இன்றே நீங்களும்
புதிய ஃபோர்ப்ஸ் மிக்ஸர்
கிரைண்டர் வாங்கிப்
பாருங்கள்.
அசர வைக்கும் அசல்
சுவை மீண்டும் பெறுங்கள் .



சிறப்பம்சங்கள்:

★ 3 ஜார்கள் ★ மாற்றுவதற்கேற்ற 4 பிளேடுகள் ★ சிறப்பான கார்ட் வைண்டர் ★ கூடுதல் பாதுகாப்பிற்கு ரீசெட் ஸ்விட்ச் கொண்ட ஓவர்லோடு மோட்டார் புரொட்டெக்டர் ★ இண்டிகேட்டர் லேம்ப்

தயாரிப்பாளர்: FAL இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
விற்பனை செய்வோர்:

LATHAM.

லேதம் இண்டியா லிமிடெட்

(ஃபோர்ப்ஸ் கோகக் குரூப்பின் கம்பெனி)
ஆர்த்தி சேம்பர்ஸ், மூன்றாம் மாடி,
189 அண்ணா சாலை, சென்னை-600 006.
போன்: 8524303, 8524222, 8524661
டெலக்ஸ்: 41-5247 ஃபேக்ஸ்: 044-8522012

விநியோகஸ்தர்கள்/டீலர்கள் விண்ணப்பிக்கவும்.

போர்ப்ஸ்

மிக்ஸர் கிரைண்டர்

சொல்லுவேன். நான் இப்போ மனசிலே சஞ்சலப்படறது வேறே விஷயம், மகா அது என்னை ரொம்பப் பாதிச்சிடுத்து அதன் பாதிப்புதான் வசந்தா மேலேயும் விழுந்திருக்கணும்..."

அவள் கேள்வியே கேட்கவில்லை.

அவனிடமிருந்து எதிர்பார்ப்பது போல் அவனையே பார்த்தாள்.

"கோர்ட்லே ஒரு சாட்சியம் சொன்னேன். அந்த விஷயந்தான்" என்றான் அவன்.

"சபாபதி விஷயந்தானே"

"ஆமாம்"

"நீங்க சொன்ன சாட்சி தான் சபாபதிக்கு ஆயுள் தண்டனை வாங்கிக் கொடுத்திச்சு"

"உண்மை! நான் சொன்னது தவறோன்னு என் மனம் குத்திக்கிட்டே இருக்குது"

"ஏன்! நீங்க கண்ணாலே பார்த்ததைத் தானே சொன்னீங்க"

"ஆமாம் ஆனா... இப்போ.. கண்ணாலே பார்த்ததும் பொய். காதாலே கேட்டதும் பொய். தீர விசாரிப்பதே மெய் என்பாங்களே அப்படித்தான் எனக்குத் தோணுது!"

"அப்படியா?" என்று சொல்லி வெறுமனே நிறுத்தினாள் அவள்.

"நான் சபாபதியை அன்னிக்கு ராத்திரி ஒரு நிழலாத்தான் பார்த்தேன் அந்த நிழல் தான் அவன்னு நினைச்சேன். அதிலே எனக்கு இப்போ சந்தேகம். அது என்னை வாட்ட ஆரம்பிச்சுடுத்து"

"ஏன் அப்படி?"

"அப்போ என் கம்பெனி நிர்வாகி ரங்கா என்னோடு ரொம்ப நெருங்கிப் பழகி, ஒரே உற்சாகம் கொடுத்தார். நானும் உண்மைக்காக ஏதோ உழைக்கிறேன்னு நம்பிக்கிட்டு அந்த சாட்சியத்தை சற்று அவசரப்பட்டுச் சொல்லிட்டேன்"

"இப்போ சபாபதி நல்லவன்னு தெரிஞ்சு போச்சா?"

"அது தெரியலை. தெரியக்கூட வேண்டியதில்லை."

"ஏன்?"

"எங்க நிர்வாகி ரங்கா பேரிலே எனக்கு நம்பிக்கை குறைஞ்சாச்சு. அதனாலேதான் அவர் பேச்சைக் கேட்டு, அவசரப்பட்டு சாட்சி சொல்லிட்டேனோன்னு...."

அவன் பேச்சை நிறுத்தினான்.

"நான் ஒண்ணு சொல்லட்டுமா?" என்றாள் மகா.

"என்ன?" என்று ஆர்வம் தூண்டப்பட்டு கேட்டான் அவன்.

"ஒரு சாட்சி! அது சின்னதுதான். ஆனால் முக்கியமாக இருக்கலாமோன்னு பாருங்க..."

"சொல்லுங்க."

"நீங்க அன்னிக்குப் பார்த்தது யூனிபாரம் போட்ட சபாபதியைத்தானே!"

"ஆமாம்" என்றான் பிரசாத்.

"இப்போ போன வாரம், நான் அவன் மனைவியை எதேச்சையா விசாரிச்சேன்!"

"ஓ அப்படியா! என்ன சொன்னாங்க?"

"சபாபதிக்கு தண்டனை விதிச்சக் கோர்ட்டிலே தீர்ப்பு நடந்தது. ஒரு ஆறுமாசத்துக்கு அப்பாலே, அவனது ஆபீஸ் ஷெல்பைத் திறந்து அதிலே இருக்கிறதை எல்லாம் கம்பெனிக்காரங்க அவன் மனைவிக்கு அனுப்பிச்சு வச்சாங்களாம்!"

"ஓ, அப்படியா? அந்த ஆண்ட்ரூஸ் கம்பெனியிலே ஒவ்வொருத்தருக்கும் ஒரு ஷெல்ப் உண்டு. யூனிபாரங்களை வச்சுக்கிறதுக்கு" என்றான் பிரசாத்.

"அந்த ஷெல்பை ஒழிச்சுத்தான் துணிகளையும் இதர சாமான்களையும் அவன் வீட்டுக்காரிக்கு அனுப்பி இருக்காங்க!"

அவள் தொடர்ந்தாள்.

"கணவரோட துணி என்கிறதினாலே பத்திரப்படுத்தி ஞாபகச் சின்னமா ஒரு பெட்டியிலே வச்சுக்கிட்டா. அதை இத்தனை வருஷம் கழிச்சுப் பார்த்தபோது ரெண்டு யூனிபாரம் இருந்திருக்கு. உள்ளே மூணு செட் யூனிபாரம் இருந்திருக்கணும்! அது அவளுக்குத் தெரியும்"

கண்ணைக் கொட்டியவாறு கேட்டுக் கொண்டிருந்தான் பிரசாத்!

அவள் தொடர்ந்தாள்

"ஒரு யூனிபாரம் காணாமல் போயிருக்கிறதே அதை வேறு யாரோ உபயோகப்படுத்தி இருக்கணும்!" அப்படி உபயோகப்படுத்தின யாரோ ஒரு நபரைத்தான் நீங்க சபாபதின்னு நினைச்சுக்கிட்டிருக்கீங்கன்னு




உங்கள் வீட்டில் மின்சாரத்தால் கொசுவை விரட்டும் சாதனத்தில் பயன்படுத்தப்படும் மருந்து கலந்த கொசுவத்தி மேட்டுக்குப் பதிலாகக் கடையில் விற்கும் கட்டி வில்லை சூடத்தைக் கொசு விரட்டியில் வைத்தீர்களானால் கொசு பறந்தோடிப் போகும். உடல்நலத்திற்கும் நல்லது. இது என்னுடைய அனுபவத்தால் கண்டறிந்த உண்மை. சிக்கனத்திற்கும் சிக்கனம்.

- எஸ். பிரேமா வாசன்

டிசம்பர் மாத மங்கையர் மலரில் 'தயாரிப்பாளருக்கு யோசனை' என்ற பகுதியில் வெளியான 'காலிங் பெல்' யோசனையைப் படித்தபின் எனக்குத் தோன்றிய யோசனையை எழுதியுள்ளேன். வீட்டிற்குள்ளேயே இருந்த இடத்தில் இருந்து அல்லது இரண்டு மூன்று இடத்தில் இருந்து கூட பதில் மணி தருவதற்கு மாற்று மணி வெளியில் தொங்கவிட்டு உள்ளிருந்தபடியே அதனை இயக்கலாம்.

- எஸ். எஸ். நாகராஜன்



அவன் வீட்டுக்காரி நினைக்கிறா" என்றாள் மகா.

'ஸ்ஸ்' என்று சப்தம் அவன் நாவில் எழுந்தது.

அவன் யோசிப்பது தெரிந்தது.

"என்ன நினைக்கறீங்க பிரசாத்?" என்றாள் அவள்.

அவன் இன்னும் யோசனையில் இருந்தான். அவன் யோசிப்பதற்கு இடம் கொடுத்துப் பேசாமல் இருந்தாள்.

சிறிது நேரத்தில் அவன் திடீரென்று எழுந்தான்.

"மகா நீங்களும் வாங்க," என்றான்.

"எங்கே?"

"ஒரு விஷயத்தை எனக்கு ஊர்ஜிதம் செய்யணும்"

இருவரும் கிளம்பினார்கள்.

கார் அந்த நாட்டுச் சாலையில் புழுதியோடு ஓடியது!

அடிக்கடி தோப்புகள் அதை மூடிக் கொண்டன.

அங்கங்கே எதிர் வண்டிக்கு அவர்கள் கார் ஓரம் கட்டியது.

முக்கால் மணி ஓடிய பிறகு ஒரு சாதாரண முள்வேலி போட்ட எல்லைக்குள் கார் நுழைந்தது.

மரங்களும், காய்கறிச் செடிகளும், பூச்செடிகளும் சுற்றிவர நிறைந்த ஒரு மத்தியில் ஒரு பண்ணை வீடு இருந்தது.

வாசலில் பித்தளைப் பூட்டு தொங்கியது. சுற்றிவரப் பார்த்து ஒரு கல்லை எடுத்து வைத்தான் பிரசாத்.

படீர் என்று இரண்டு மூன்று போடுகள்.

பூட்டு உடைந்து தொங்கியது.

உள்ளே நுழைந்தார்கள்.

இரண்டு இரும்பு அலமாரியும், ஒரு மர அலமாரியும் தெரிந்தன.

மர அலமாரி பக்கம் சென்று, அதன் கதவை அசைக்க முயன்றான்.

பூட்டியிருந்தது.

திரும்பவும் கல்லைக் கொணர்ந்து கதவின் நடுவில் ஓங்கிப் போட ஆரம்பித்தான்.

கதவு கிறியது!

பூட்டு நெகிழ்ந்தது.

பிரசாத் கதவைத் திறந்தான்.

வரிசையாக தடுப்புகளில் துணிகள் நிறைய செருகப்பட்டிருந்தன.

ஏதோ வேஷம் போடுவதற்கு உண்டான துணிகள் போல பல தரப்பட்ட வகைகள் அங்கே இருந்தன. போலீஸ் உடை, ராணுவ உடை, பாகவதர் உடை, அரசில்வாதி உடை....

தேடித் தேடித் துணிகளைக் கிளறிப் போட,

அவன் முகத்தில் ஏமாற்றம் ஏற்பட்டது.

அவன் தேடியது கிடைக்கவில்லை.

வருத்தத்துடன் திரும்பியபோது, அந்த காவி ஜிப்பா ஏன் அவ்வளவு பெரிய உருண்டையாக இருக்கிறது என்பதைக் கவனித்தான்.

அதை எடுத்துப் பிரித்தான்! உள்ளே கட்டு அவிழ்ந்ததும்,

ஒரு பேப்பர் பொதி தொப்பென்று விழுந்தது.

அதை எடுத்துப் பிரிக்க,

உள்ளே அந்த யூனிபாரம்! இரத்தக் கறைகளுடன் தென்பட்டது.

அவன் கண்கள் விரிந்து கொண்டு பார்க்க முகம் சிலை ஆகியது.

"மகா!"

"என்ன?"

"தடயம் கிடைச்சாச்சு!"

"இது சபாபதியோட யூனிபாரம்தானே?"

"அப்படித்தான் இருக்கணும்!"

"அப்போ கொலை நடந்த அன்னிக்கு சபாபதி மாதிரி வேறு யாரோ இந்த யூனிபாரத்தைப் போட்டிருக்காங்க இல்லையா பிரசாத்?"

"ஆமாம் பெரிய சதி இது..."

அதே நேரம் வாசலில் மிருதுவாக ஒரு கார் வந்து நின்றதை அவர்கள் கவனிக்கவில்லை.

காலடிகள் கேட்டதும் திடுக்கிட்டு பிரசாத் பரபரப்பு அடைந்தான். முகம் சீறியது.

"மகா! உடனே ஒளிஞ்சுக்க!" என்று மெள்ள இரைந்தான் அவன்.

(அடுத்த இதழில் முடியும்)

புயலை நம்மால் தடுக்க

இது ஒரு வியப்பான செய்தி கூறும் கட்டுரை. இதில் வரும் செய்திகள் எந்த அளவு சாத்தியம் என்பதை அறிஞர்கள் விளக்கலாம்.

இயற்கையின் சக்திகளை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதில் மனிதன் வெற்றிகண்டு வந்துள்ளான். இந்த வகையில் புயல் காற்றின் தாக்குதல் குறித்துப் பெருமளவில் முன்னறிந்து கொள்ளும் அளவில் விஞ்ஞான முறைகள் முன்னேறியுள்ளன. இருந்த போதிலும் "புயல்களை மனிதனால் தடுக்க இயலுமா?" என்ற கேள்விக்கு "இயலும்" என்று பதிலுரைக்கிறார் பேராசிரியர் வே. கணேசன். கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் உளவியல் துறையில் பணியாற்றும் இவர் பல கலாச்சாரங்களின் மனித செயல்பாடுகளின் காரணங்களை ஆராய்ந்து வருகிறார். முக்கியமாக இந்திய மற்றும் தென்னிந்திய, தமிழர் கலாச்சாரங்களை ஆராய்ந்ததன் மூலம் இவர் ஒரு செயல் ஆராய்ச்சித் திட்டத்தை உருவாக்கியுள்ளார். தென்னக அரசுகளுக்கு இவர் சமர்ப்பித்துள்ள ஒரு திட்டத்தில் புயல்களை நம்மால் தடுக்க இயலும் என உறுதியாகக் குறிப்பிட்டுள்ளார்.

புயல்கள் பொதுவாக புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களிலேயே அதிகம் தாக்குகின்றன. அதுவும் முக்கியமாக தமிழகத்தையும், ஆந்திராவையுமே இப்புயல்கள் அதிகம் தாக்குகின்றன. இவற்றை வலுவிழக்கச் செய்ய கடலை ஒட்டிய பிரதேசங்களில் உயர்வான சில குறிப்பிட்ட இடங்களில் இம்மூன்று மாதங்களில் தொடர்ந்து வெப்பமுண்டாக்கினால் புயல்களைத் தடுத்து மழையை மட்டும் பெற இயலும் என்கிறார் பேராசிரியர் கணேசன்!

பழங்காலங்களிலிருந்தே இந்தியர்கள் புயல் வரும் காலத்தில் சுற்றுப்புற சூழலை வெப்ப மடையச் செய்யும் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். உதாரணமாக நவராத்திரி, கார்த்திகை, சஷ்டி, சபரிமலை ஐயப்பன் பூஜை ஆகியவைகள் இந்த மூன்று மாதங்களிலேயே வரிசையாகக் கொண்டாடப் பட்டு வருகின்றன. இவற்றின் போது கீழ்க் கண்ட செயல்களால் சுற்றுப்புற சூழல் வெப்ப மடைகிறது.

அ). தீபங்கள் அதிகம் ஏற்றுதல் - வீடுகள், கோவில்களில்.(தொடர்ந்து பல நாட்களுக்கு)


ஆ) பட்டாசு வெடித்தல்.



இ) யாகங்கள் செய்தல் (தொடர்ந்து பல நாட்களுக்கு)

ஈ) அதிக சமையல் (தின்பண்டங்கள், திருமணங்கள்)

இவைதவிர சில முக்கிய இடங்களிலும் பல நாட்களுக்கு இரவு, பகலாக தொடர்ந்து எரியும் வகையில் பூதாகரமான விளக்குகளை ஏற்றிவந்துள்ளனர். இவற்றில் தொடர்ந்து ஏற்றப்பட்டுவரும் திருவண்ணாமலை தீபம் ஒன்றாகும். முற்காலத்தில் தொடர்ந்து மூன்று





இயலுமா?

மாதங்கள், பெரிய அளவில் எரிந்து வந்த தாகக் கூறப்படும் இந்தக் குன்றின் மேலிட்ட தீபம் தற்போது பெயருக்கு மட்டுமே ஏற்றப் பட்டு வருகிறது.

இந்தத் தீபத்தின் வெப்பத்தின் பாது காப்பில் 1890-லிருந்து 1930 வரை ஒரு சில புயல்களே தமிழகத்தைத் தாக்கியுள்ளன. முதல் இரண்டாம் உலக மகாயுத்தங்கள், சுதந்திரத்திற்கு பின்பு ஏற்பட்ட தொழில் மயம், நகர்ப்புறத்தை நோக்கி மக்கள் குடி பெயர்ந்து, ஆன்மீகத்திலிருந்து விலகல் காரணமாக இவ்விளக்கை தொடர்ந்தும், செறிவாகவும் எரியவைக்காத காரணத்தால் வெப்பம் ஏற்படுதல் குறைந்து 1931-1950-க்குள் புயல்கள் இரண்டு மடங்காகி 1951-70ல் மூன்று மடங்காகியுள்ளன. 1971-லிருந்து 1993வரை புயல் சேதங்கள் அதிகரித்து வருகின்றன.

புயல் என்பது எதனால் உருவாகின்றது? பூமத்திய ரேகைப் பிரதேசத்தின் மேலுள்ள விண்வெளியில் (10-12கி.மீ. உயரத்தில்) அளவுக் கதிகமான வெப்பம் ஏற்படுகிறது. வட, தென் துருவப் பிரதேசங்களின் மேலுள்ள விண் வெளியில் குளிர்ச்சி ஏற்படுகின்றது. இத் தகைய வெப்ப மாறு பாட்டை குறைக்கும் பொருட்டு பூமத்தியரேகை பிரதேசத்தின் மேலுள்ள விண்வெளியிலிருந்து வெப்பம் குளிர்ந்த கடல் நீர் பிரதேசத்தின் மேல் இறங்குகிறது. இதனால் கடல் நீர் வெப்ப மடைந்து நீராவியாகி மேல் நோக்கிச் செல் கிறது. இத்தகைய வெப்பக்காற்றோட்டமும், நீராவியும் மேல் கீழாக தொடர்ந்து இயங்கும் போது ஒரு வெப்ப நீர்கலந்த காற்று மண்ட லம் சுழற்சியடைந்து ஒரு உருளை வடிவில்

கிழக்கு மேற்காக நகரத் தொடங்குகின்றது. இது பூமியில் வடபாகத்தில் இவ்வாறாகவும், தென் பாகத்தில் மேற்கு-கிழக்காகவும் நகரும். வங்காள விரிகுடாக்கடலில் கிழக்கு மேற்காக நகரும் இந்தப் புயல்காற்று பெரும்பாலும் சென்னையிலிருந்து பாம்பன் வரையிலுள்ள பிரதேசத்தை நோக்கி (69 கி.மீ-100கி.மீ. வேகத்தில்) நகருகின்றது. இப்புயல் வெப்பப் பிரதேசத்திலிருந்து குளிர்ந்த பிரதேசம் நோக்கி நகரும். அதாவது தரையின் மேலுள்ள காற்று குளிர்ந்திருப்பதால் கடலிலிருந்து தரைப் பிரதேசம் நோக்கி நகரும்.

இத்தகைய புயலின் வேகத்தைக் குறைக்க விஞ்ஞானிகள் எந்த வழியையும் கண்டு பிடிக்கவில்லை. ஆனால் தமிழ் மக்கள் பண்டை காலத்திலேயே இதற்கான ஒரு சிறந்த வழியைக் கண்டு கையாண்டு வந்துள்ளனர். தரைப் பிரதேசத்தின் மீது காற்றை வெப்பமடையச் செய்வதால் புயல் வந்து தாக்குவதைத் தவிர்க்கலாம் என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டறிந்துள்ளனர். திருவண்ணாமலையில் ஏற்றும் கார்த்திகை தீபம் ஆயிரக்கணக்கான வருடங்களாக ஏற்றப்பட்டு வந்துள்ளது. இது புயல் காலத்தில்தான் ஏற்றப்பட்டு வந்துள்ளது. நவராத்திரி தொடங்கி தீபாவளி, கார்த்திகை மாதம் முழுவதுமாக மூன்று மாதங்களுக்கு இரவு பகலாக இவ்விளக்கு எரியவைக் கப்பட்டுள்ளது.



• திருவண்ணாமலை தீபம்

மலை மீது (900 மீட்டர்) உயரத்தில் பிரம்மாண்டமாக எரியும் இவ்விளக்கினால் உண்டாகும் வெப்பம், காற்றை வெப்பமடையச் செய்து, மேல் நோக்கி விண்வெளியில் செலுத்துவதால் காற்றழுத்த மண்டலம் ஏற்பட்டு- புயலை தரைமட்டத்திலிருந்து மேலெழச் செய்து வலுவிழக்கச் செய்திருக்கக் கூடும். திரும்பவும் விண்வெளியிலிருந்து வெப்பமானது உடனே அரபிக்கடல் பிரதேசத்தில்தான் கீழ் இறங்கி இருக்கக்கூடும். இவ்வாறு புயல்களை பூமியைத் தாக்காது பாதுகாத்ததன் மூலம் சீரான மழையை அக் காலத்தில் பெற்றிருக்க வாய்ப்பு உள்ளது.

புயல் வருவதனால் ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் உள்ள மேகங்களைக் கூட ஒரே இடத்தில் கண்டி இழுந்து அளவுக்கதிகமான மழையை பெய்விப்பதன்மூலம் ஒரு இடத்தில் வெள்ளமும் மற்ற இடங்களில் மழை இன்மையும் ஏற்பட ஏதுவாகிறது. அதனால் பருவமழை பொய்க்க புயல்கள் காரணமாகின்றன. புயல்களைத் தவிர்ப்பதன் மூலம், புயலினால் ஏற்படும் சேதம் மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் சேதம் ஆகியவற்றை தடுப்பது மட்டுமல்லாமல், பரவலாகவும் தொடர்ந்தும் விரிந்த நிலப் பகுதிகளில் மழையைப் பெற இயலும்.

இதனை அறிந்திருந்த பண்டைய தமிழ் மக்கள் திருவண்ணாமலை உட்பட மேலும் நான்கு இடங்களில் பண்டை தமிழகத்தில்

கிழக்கடற்கரை ஓரத்தில் கரையிலிருந்து 10கி.மீ. முதல் 100 கி.மீ. தூரத்திற்குள் ஐம்பூதத் தலங்கள் என்று ஐந்து சிவாலயங்களை உருவாக்கி - அங்கு அணையா நெருப்பு ஏற்றி வந்துள்ளனர்! மற்றும் இத்தலங்களில் புயல்தாக்கும் காலத்தில் (புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை) மாபெரும் சுடர் விளக்கேற்றியும், மாபெரும் வேள்விகள் வளர்த்தும் சிவ சக்தி வழிபாடு செய்து வந்துள்ளனர்.

ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று செயல்களுக்கு அதிபதிகளாகிய பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய கடவுள்களில் ஊழிக்காலத்திற்குக் காரணமாய் உள்ள சிவனை இந்தப் பருவகாலத்தில் வழிபடுவதன் மூலம், ஊழியை ஒத்த புயல், வெள்ளம், கடலின் சீற்றம் ஆகியவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்ற இந்த ஐந்து சிவத் தலங்களில் சிவ வழிபாடு செய்துள்ளனர். சிவனை ருத்ரனாகவும், சக்தியை சண்டியாகவும் கொண்டு இவ்விருவரையும் சிவ சக்தி ஐக்கியம் கோரி வழிபடும் ருத்ர - சண்டி யாகம் எனும் பெரும் வேள்வியை நடத்தி வந்துள்ளனர். மற்றும் அகண்ட மாபெரும் கல்லினால் ஆன அகல்விளக்கில் பெரும் திரிகொண்டு-நெய்யிட்டு தீபம் ஏற்றி, அதன் ஒளிப்பிழம்பையே சிவனும் சக்தியும் இணைந்த உமையொருபாகனாக வழிபட்டு வந்துள்ளனர் ஆன்மீக ரீதியிலான உருவக அல்லது குறிப்பு வழிபாடு மட்டுமின்றி இத்தகைய செயல்களால் தரை மீது உள்ள காற்றுவெளி வெப்பமடைந்து வான்நோக்கிச் சென்று விண்வெளிக்கு வெப்பத்தை உணர்த்தவும் - இதனால் புயலின் தாக்கம் அழிந்து விடவும் செய்திருக்கின்றனர்.


இவ்வைந்து சிவத் தலங்களும் கிழக்குக் கடற்கரை ஓரத்தில் சற்றேரக்குறைய 100. கி.மீக்கும் குறைந்த இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளன. திருக்காளத்தியில் தொடங்கி, காஞ்சி திருவண்ணாமலை, சிதம்பரம், திருவானைக்காவல் வரை இத்தலங்கள் அமைந்துள்ளன. இவை தவிர தமிழகத்தின் தென்முனையை புயலின் சீற்றம் தாக்காதிருக்க அரனும் அரியும் இணைந்த உருவாக வழிபடப்படும் ஐயப்பனுக்காக சபரிமலைக் கோவிலில் தேங்காய் மற்றும் நெய் கொண்டு எரிக்கும் குண்டம் ஒன்று மூன்று மாதங்களாக எரிந்து வரும் பழக்கம் இந்நாள் வரை தொடரப்பட்டு வந்துள்ளது.


இந்திய வானிலை ஆராய்ச்சித் துறையினர் சேகரித்துள்ள புயல் செல்லும் பாதைகள் குறித்த விவரங்கள் மூலமாக நாம் அறிவது என்னவென்றால் 1890-லிருந்து 1930 வரையிலான கால கட்டத்தில் முன்பாதியில் (1890-1930) புயல்கள் வெகுவாகக் குறைந்திருந்தன. பின்பாதியில் 1931-1970-லிருந்து புயல்களின் எண்ணிக்கையும் சக்தியும் மும்மடங்கு ஆகியுள்ளது. இதற்குக் காரணம் திருவண்ணாமலை தீபம் மற்றும் சிவாலயங்களில் நடைபெற்று வந்த வேள்விகள் குறைந்ததன் காரணமேயாகும். இவ்வாறு சுற்றுப்புற சூழலை வெப்பமடையச் செய்யும் செயல்கள் குறைந்ததற்குக் காரணம் 1931-க்குப் பிறகு ஏற்பட்ட முதல் இரண்டாம் உலக மகாயுத்தங்களினால் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி, மேலை நாட்டு நாகரிகத்தின் மேல் ஏற்பட்ட ஈடுபாடு, நகர்ப்புறம் நோக்கி குடிபெயர்தல் மற்றும் தெய்வ வழிபாட்டிலிருந்து விலகிச் செல்லுதல் ஆகியவை ஆகும். இன்று உலகிலேயே தொழில் நுணுக்க ரீதியில் வெகுவாக வளர்ந்துள்ள நாடுகளில் முதலிடம் வகிக்கும் ஜப்பானியர்கள் தங்கள் கலாச்சாரத்தையும் வழிபாட்டு முறைகளையும் கைவிடாதிருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

பண்டைய வழிபாட்டு முறைகள் பழைய விஞ்ஞான முறைகளையும் உள்ளடக்கி இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. இதனை இக்கால விஞ்ஞானிகள் பகுத்து ஆராய கடமைப்பட்டு உள்ளனர். உலகின் பல பாகங்களில் புயல் தாக்கத்திலிருந்து மக்களையும் அவர்கள் உடைமைகளையும் காக்க உயர்வான பிரதேசங்களில் வெப்பமடையச் செய்வதன் மூலம் வெற்றியடைய முடியும் என்று நாம் நம்பலாம்.

வலது கை கட்டை விரலில் நகச்சுற்று போல் கொப்புளம் வந்து மிகவும் அவதிப்பட்டேன் "விண்,விண்" என்று வலி தாங்க முடியவில்லை. ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. எலுமிச்சம்பழம் சொருகி, கிரீம் தடவி எதற்கும் சரியாகவில்லை. பக்கத்தில் தெரிந்த டாக்டரிடம் போனதில் சோப்பும், மஞ்சளும் கலந்து குழைத்துத் தடவச் சொன்னார். என்ன ஆச்சர்யம்! ஒரே நாளில் சரியாகி விட்டது.

- ஏ. பி. உஷா





இப்பொழுதுகூட அவளுக்குப் பயமாக இருந்தது. சந்தேகமாக இருந்தது. வழக்கமாக அவன் உட்காருவதைப் போலவே அந்த நாற்காலியில் சற்று சாய்ந்தாற்போல உட்கார்ந்திருந்தான். கைலியோடு தோளில் சுற்றிய துண்டுடன் அவன் அமர்ந்திருப்பதைக் கண்டதும் மீண்டும் அவளுள் ஒரு பதட்டம் வந்து ஒட்டிக் கொண்டது. அவன் குளித்து விட்டு இப்படித்தான் வந்து உட்காருவான். மறுகணம் அவன் முன்னே சிறு ஸ்டூல் போடப்பட்டு டிபன் வைத்துவிட வேண்டும். பெரும்பாலான சமயங்களில் டிபன் அவன் வயிற்றுக்குள் போகாது. வாயில் வைத்ததுமே அதன் சுவையைக்கூட உணர பொறுமையில்லாதவன் போல அவள் முகத்தில் துப்புவான். உப்பும், காரமுமாக சிதறிய துணுக்குகள் கண்களில் விழுந்து எரிச்சல் ஏற்படுத்தும்.




அவளுக்கு மறுபடியும் சந்தேகம் வந்தது. உட்கார்ந்து இத்தனை நேரத்திற்கு டிபன் தராது அவள் என்றுமே இருந்ததில்லை. திடுமென எழுந்து அறைந்து விடுவானோ. அவன் அறை விட்டானென்றால் எப்படியிருக்கும் என்று அவளுக்குத் திருமணமான மறுநாளே தெரிந்து போயிற்று. உப்புமா அவனுக்கு ஜென்மப்பகை என்று அவளுக்குத் தெரியாது. உப்புமா செய்யட்டுமா என்று கேட்டதற்கு மாமியார் செய் என்றாள். சாப்பிட அவன் வந்து உட்கார்ந்ததும் முகம் சிறுக்க உப்புமாவை பார்த்தான். அதைவிட கடுமையாக அவளைப் பார்த்தான். சட்டென என்ன ; ஏது என்று அவள் உணர்ந்து சுதாரிக்குமுன் வீரியமிக்க அறையொன்று அவளது கன்னத்தில் பாய்ந்தது. பளிச் சென்று மின்னல் வெட்டினாற் போலிருந்தது முதலில். பிறகு கன்னக் கதுப்புகளில் மிளாறு, மிளாறாக வலித்தது. அழக்கூட உணர்வற்று அவள் அப்படியே நின்றாள். அவன் எழுந்து எங்கோ போய் விட்டான். அவள் மாமியாரை பார்த்தாள். அந்தக் கண்களில் எங்கோ ஒரு மூலையில் சிரிப்பு மறைந்து கிடப்பது போலிருந்தது.

ஜேசுதாஸ்

அந்த நிகழ்ச்சிக்குப்பின் அவனைப் பற்றி அவன் கோபத்தைப் பற்றி ஓரளவு தனக்குப் புரிந்து விட்டதாக நினைத்தாள். ஆனால் அது தவறு என சீக்கிரமே தெரிந்து போனது. அவனுக்கு எது பிடிக்கும்... எது பிடிக்காது என்பது குறித்து அவனுக்கே தன்னைப் பற்றிய திடமான அபிப்பிராயம் இருக்குமா என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. அப்படித்தான் அவனது செயல்களும் இருந்தன. அவளுக்கு மட்டுமல்ல. அவனோடு தொடர்பு கொண்ட யாருக்குமே அவன் ஒரு புரியாத புதிராகத்தான் தெரிந்தான்.

வாசலில் நிழலாடியது. தெருக்கோடி வீட்டு பார்வதி மாமிதான். வாயில் முந்தானையை சுருட்டி வைத்து தனது துக்கத்தைக் கண்களில் காட்டினாள். பிறகு உள்ளே வந்து சற்று ஒதுங்கி நின்றாள்.

ஃபாஹிமாஸ் ஜிவல்ஹவுஸ் மங்கையர் மலருடன் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.




"சரசு...ஏய் சரசு..."

அவள் திடுக்கிட்டாள். கல்யாணமான நாளிலிருந்தே அவன் இப்படித்தான் அழைப்பான். அழைப்பான் என்பதை விட அதட்டுவான் என்பதே சரியாக இருக்கும். தனது காதருகில் கேட்ட அந்தக்குரல் வெறும் பிரமைதான் என்பதைச் சரியாக உணர்ந்து கொள்ளுவதைப் போல அவள் மீண்டுமொரு முறை அவன் முகத்தை நிமிர்ந்தாள். அப்பொழுதுதான் அவளுக்கு உணர்வு வந்தது. அவன் 'அது'வாகி கிட்டத்

'புத்தாண்டுக் கோலம்'

10 புள்ளி; 10 வரிசை



— உமாமகேஸ்வரி

தட்ட நாலைந்து மணி நேரமாவது ஆகியிருக்கும் என்ற உண்மை. அதை நிரூபிப்பதுபோல வாயருகே ஒரு ஒற்றை ஈ தாழப் பறந்து கொண்டிருந்து.

கொஞ்சம் கொஞ்சமாக வீடு இருட்டாகியது. மனிதக் கூட்டம் கசகசத்தது. யாரோ சுவிட்சையும் ஃபேனையும் ஒரு சேர தட்டினார்கள். உடலும், உள்ளமும் புழுங்கிக் கொண்டிருந்த அவளுக்கு சற்று மறைக்க இயலாத ஆசுவாசம் ஏற்பட்டது. அவன் வீட்டிலிருக்கும் சமயங்களில் சதா சர்வ காலமும் ஃபேன் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். மின் தடை பட்டு ஃபேன் இயங்காத சமயங்களில் அவளோ குழந்தைகளோ கை வலிக்க விசிற வேண்டும். விசிறியில் காற்று அதிகம் வராது என்று நாலாக மடிக்கப்பட்ட தினசரிகளினால் முகம் வியர்க்க, கை வலிக்க விசிறுவார்கள்.

குழந்தைகள் என்றால் அது தன் உதிரத்தால் விளைந்த உயிர்கள் என்ற பிரக்ஞை அவனுக்கு என்றுமே இருந்தது கிடையாது. அவன் சாப்பிடும் போது அவர்கள் யாரும் கண்ணில் எதிர்பட்டு விடக்கூடாது. அவன் வீட்டிலிருக்கும் போது அவர்களின் சத்தம் கூட கேட்டு விடக் கூடாது. தகப்பன் என்றால் சிம்ம சொப்பனம் என்ற அர்த்தம் தொனிக்க அவன் நடந்து கொள்வான். மூத்தவன் சங்கரன். பனிரெண்டு வயதாகிறது. கல்யாணமான மறுமாதம் ஜனித்தவன். எப்படிப்பட்டதொரு மன வக்கிரம் பிடித்தவன் என்றாலும் தனது முதல் உயிர் உதயமாவதை ஆவலுடன் எதிர்பார்ப்பான். புது வரவில் சற்றேனும் நிலமை மாறும் என எதிர்பார்த்து விஷயம் சொன்னாள்.

"என்னது?" அந்த ஒற்றைக் கேள்வியிலேயே அவனின் அதிர்வை... அவனின் முரண்பட்ட எண்ணத்தை அவள் கிரகித்துக் கொண்டாள்.

"நாளைக்கு ரெடியாயிரு... ஆஸ்பத்திரிக்குப் போகிறோம்?"

"எதுக்கு?"

"இப்ப வேணாம்... அப்புறம் பார்த்துக்கலாம்..."

"அப்புறமென்னா?"


அவளுக்குப் பதில் சொல்வது தேவையற்றது போல அவன் போய்விட்டான். மறுநாள் சொன்னது போலவே அவன் அவசரப்படுத்தினான்.

பலியாடுபோல அவன் பின்னே செல்வதைத் தவிர அவளுக்கு வேறு வழியேயில்லை. அது ஒரு அரசாங்க மருத்துவ மனை. நர்சுகள் கடுகடுத்த முகத்துடன் நோயாளிகளுக்கு ஊசி குத்திக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த அறையில் டாக்டரம்மா ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். அவன் உடையைக் கண்டதும் கியூ சற்று ஒதுங்கியது. ஏதோ லீவு வாங்க வழக்கமாக வரும் கான்ஸ்டபிள் என்று ஒதுக்க நினைத்த டாக்டரம்மா அவன் பின்னே அவனது சீருடையின் அதிகார வீச்சுக்கோ அதற்கென்றே அமைந்துவிட்ட முரட்டுத் தனத்திற்கோ சற்றும் ஒவ்வாத தோற்றத்தில் நடுங்கிக் கொண்டிருந்த அந்த அவளைக் கவனித்து விட்டாள். அவன் தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் எதையோ டாக்டரம்மாவின் முன்னே முணுமுணுத்தான். அவனது சிறுமைபட்ட ஆங்கிலமோ... இல்லை அதன் கருத்தோ அந்த டாக்டரம்மாவின் முகத்தைக் கோண வைத்தது. அவன் கருத்தை நிராகரிப்பவளாக அவனையே நிராகரித்து வெளியே போகச் சொன்னாள்.

நர்ஸ் ஒருத்தியால் மருந்து வீகம் அறைக்குள் அழைத்து வரப்பட்டவளுக்கு அழுகை வந்தது. அந்த அழுகையினூடே கையில் வெள்ளை உறையுடன் உள்ளே வந்த டாக்டரம்மாவின் காலைக் கட்டிக் கொண்டு அழுதாள். இடையே தன் உள்ளத்தைப் பேசினாள். டாக்டரம்மா அவள் தலையை ஒருகணம் ஆதுரத்துடன் தடவியவள் தோளைத் தட்டி விட்டு வெளியே போனாள்.

டாக்டரம்மா அவனிடம் என்ன சொல்லி பயமுறுத்தினாளோ தெரியாது. அவள் விருப்பம் நிறைவேறாது அவன் விரும்பாமலேயே வளர்ந்தது. ஒரு வழியாக சங்கரன் பிறந்தான். அடுத்து இரண்டு வருடங்களில் மறுபடியும் அவள் உண்டானபோது சற்று பொறுத்தே அவனிடம் சொன்னாள். இனி ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்தவன் போல அவன் பேசாதிருந்து விட்டான். அவளுக்குப் பெருத்த நிம்மதியாயிற்று. விசுவம் பிறந்தபின், அவளே வீடு தேடி வந்து சுகாதார செவிலியிடம் கேட்டு



14 புள்ளி; 4 வரிசை; 4 ல் நிற்க

— உமாமகேஸ்வரி

போய் அறுவை சிகிச்சை செய்து கொண்டான்.

"அண்ணே!" என்றலறிக் கொண்டு வந்த குரல் அவளது சிந்தனையைக் கலைத்தது. அவனது தங்கைகளுள் ஒருத்திதான். வந்த வேகத்தில் மார்பில் பட், பட் என்று அடித்துக் கொண்டு அழுதாள்.

இவள் இப்பொழுது அண்ணனுக்காக அழும் அழுகைகூட உண்மையா என்று தோன்றியது. அவனுக்கு மூன்று தங்கைகள். அவர்களில் இவள் மூத்தவள். அடுத்த இருவரும் சற்று தொலை தூரத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கிறார்கள். தந்தி போய் கிளம்பிவர எப்படியும் நடுச்சாமம் ஆகிவிடும்.

"அண்ணி.... எங்கண்ணனைப் பத்தி சொல்றோம்னு தப்பா நெனக்காதீங்க. அவன் கூட நாங்கள் கழித்த சிறுவயது பிராயம் கொடுமையானது. முரட்டுத்தனமாய் அடிப்பான். அவன் தகப்பனை மதிக்காத அம்மா செல்லம். அப்பா இறக்கும் வரை அவன் அவரிடம் ஒட்டவேயில்லை. அவனின் இந்த நிலைக்கு அம்மாவும் ஒரு காரணம். தன்னிடம் அனுசரணையாக பேசாத, தன் இழுப்புக்கு வளைந்து கொடுக்காத புருசனுக்கு எதிராளியாகவே அண்ணனை வளர்த்து விட்டாள்." இதோ அழும் இவள்தான் கல்யாணமான புதிதில் சொன்னாள்.

சட்டென கும்பல் விலகி பரபரத்தது. அவனது நிலையத்திலிருந்து சக ஊழியர்கள் வந்து மலர் வளையம் வைத்தார்கள். ஓரிருவர் மாலை போட்டார்கள். மூத்தவன் சங்கரனை அழைத்து கவர் பணம் கொடுத்தார்கள். அவன் பேந்த, பேந்த விழித்து விட்டு அம்மாவிடம் நீட்டினான்.

"அண்ணி ஆட்கள் வர ஆரம்பிச்கட்டாங்க. எடுக்க இனி எப்படியும் நாளை மதியம் ஆயிடும். துக்க பட்டினி நாம இருக்கலாம். ஆனா துக்கம் கேட்க வர்றவங்க நாளை வரை பசி பொறுத்து இருக்கணுமே. அவசரத்துல கிளம்பிட்டோம். பணம் கூட எடுக்கலை. வீட்ல ஏதாச்சும் இருந்திச்சுன்னா சங்கரன் கிட்ட கொடுங்க. சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணணும்."

மூத்த நாத்தனார் கேட்க கவர் பணத்தை அப்படியே கொடுத்தாள்.

"அய்யோ பாவமே... நேத்து ராத்திரிகூட டூட்டி முடிச்சு வந்தாரே..."

யாரோ முகம் தெரியாத பெண்மணியின் குரல் கூட்டத்திலிருந்து வந்தது.

உண்மைதான்! யார் கண்டார்கள். சாதாரணமாக அவன் வெளியில் அதிக நேரம் தங்குவதில்லை. எட்டு மணிகெல்லாம் வந்து விடுவான். டூட்டி விஷயமாக வெளியே தவிர்க்க முடியாது போகும் போதுமட்டும் விதி விலக்காக அவன் வர தாமதமாகும். ஆனால் நேற்று பத்து மணிக்கு மேலாகி விட்டது. வந்ததும் குளித்தான். சாப்பிட்டான். படுத்தான். ஆனால் காலையில் எழுந்திருக்கவில்லை. அவள் எழுப்பினாள். உலுக்கினாள். சட்சட்டென்று தன் தலையில் அடித்துக் கொண்டு குரல் கொடுத்தாள். தெரு விழித்துக் கொண்டது. டாக்டரை யாரோ அழைத்து வந்தார்கள். டாக்டர் கை பிடித்துப் பார்த்து உதடு பிதுக்கினார். 'காயமே பொய்யடா. காற்றடைத்த பையடா' என்றாயிற்று.

"ஆளைப் பாருங்களேன் கொஞ்சமாவது வாட்டமாயிருக்காரான்னு... புது மாப்பிள்ளை மாதிரி இதென்ன மாயக் களை வந்திருக்கு..."

வயதான மூதாட்டி ஒருத்தி குரலடைக்கக் கூறினாள்.

புது மாப்பிள்ளை!

அவளுக்கு அவன் புது மாப்பிள்ளையாக ஒரு நாள் அதிகாலைப் பொழுதில் அவளெதிரே வந்து நின்றது ஞாபகத்தில் கட்டது. அவனது தோளுக்கிணையாக யாரோ ஒரு அந்நியன்.

"வா!" என்று அதிகாரத்தோடு தன்னருகே நின்றவளை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைய முயன்றவனை இருகை விரித்துத் தடுத்தான்.

அவனோ இதெல்லாவற்றையும் பார்த்தவனாக அவளை விலக்கிச் சாய்த்து விட்டு உள்ளேபோய் கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

அன்று முழுவதும் குமுறிக் கொண்டிருந்தாள். குழந்தைகள் இரண்டும் அலங்க, மலங்க விழித்தன. அவளை விட்டு வெகு தூரம்


ஃப்ராலிகா 3-டி
கிடைத்த கை,
சும்மா இருக்குமா?
முதல் முயற்சி, டீ-ஷர்ட்டில் ஒரு சின்ன
டிசைன். பிரமாதம்! இது சுலபம்தான் போலிருக்கே.
அடுத்து, வளையல்களில் கை வண்ணத்தை
காமிப்போம். ஆஹா, ஃப்ராலிகா 3-டி
கலரோட அற்புதமே அற்புதம். இதோ, இந்த
இயர்ரிங்குல கூட கொஞ்சம் வேலை செய்யலாமே!
நல்லாயிருக்கும். அந்த வாட்ச் ஸ்ட்ராப், ஹேர்
பேண்ட், டாலர் மூன்றையும்
ஏன் விட்டு
வைக்கணும்?
அப்புறம் அந்த...
ஐயையோ!
யாராவது சீக்கிரம் என்
கையிலிருந்து இந்த கலர்
ட்யூபை பிடுங்கிடுங்க. இல்லைனா விபரீதமா
போயிடும், ஆமா!
Frolika 3D
பிரஷ் தேவையில்லை
மனம் போன
போக்கின்
கைவண்ணம்
camlin



சிறப்பு சலுகை விலை
VALID UPTO 31st JAN 1995
IN TAMILNADU & PONDICHERRY
Bonny Mix
THE TERRIFIX ENERGY MIX
Bonny Mix
Instant Porridge
Bonny Mix
Instant Porridge
ரூ. 3/-
தள்ளுபடி
ரூ. 2.50/-
தள்ளுபடி
ஃபோனி மிக்ஸ் எளிதில் தயார் செய்து பருகக்கூடிய சிறந்த
காலை மாற்று கஞ்சி உணவு. இது மூன்று வயது முதல்
அனைத்து வயதினருக்கும் ஏற்ற உணவு
DISTRIBUTOR
City Capital Foundation Ltd.
17, Luz Avenue, First Floor,
Mylapore, Madras - 600 004.
Phone: 4994133, 4995147
Fill in this coupon, and present it to your dealer.
Name:..
Address:..
....
....
Dear Dealer: In exchange for this coupon, please give this customer above rebate than normal price. You will be reimbursed for this amount along with 10% handling charges. Hindustan Foods Ltd., Goa.

போய்விட வேண்டுமென நினைத்தான். ஆனால் எங்கு போவது? அவனுக்குப் பிறந்த வீட்டில் பிடிதலம் இல்லை. அம்மா, அப்பா என்றோ அவனை கன்னி கழித்த கையோடு போய்ச் சேர்ந்து விட்டனர். ஒரே அக்காள். நெடுந்தொலைவில் எங்கோ இருக்கிறாள். எப்போதாவது வரும் கடிதம் தவிர போக்கு வரத்தெல்லாம் அறவே கிடையாது. சட்டென விம்பில் குழந்தைகளை அழைத்துப் போய் நின்றால் அதன் பின்னர் வரும் நாட்களை எப்படிச் சமாளிப்பது?.. வாழ்ந்தது போதுமென்று எதையாவது தின்று இல்லை ஆற்றிலோ, குளத்திலோ போய் விழுந்தாவது தன் உயிரை மாய்த்துக் கொள்ள அவள் துடித்தாள். ஆனால் காலைக்கட்டிக் கொண்டு அழும் குழந்தைகளை விட்டுச் செல்ல கடைசி நேரத்தில் மனமில்லாது தோற்றாள். கடைசியில் வேறு வழியின்றி அவள் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சட்டென ஒரு நாள் அவர்களுக்குள் சண்டை வந்தது. நாய்களைப் போல அடித்துக் கொண்டார்கள். எதற்கு என்று அவளுக்குப் புரியவில்லை. அவனது மனைவியைப் போலில்லை அவள். சுகாதார நிலையத்தில் உதவி செவிலியாக வேலை பார்க்கும் தைரியம், துணிவு அவளை அவனை விட்டு ஓட வைத்தது. அவன் அவளை மிரட்டினான். தன்னோடு இருத்திக் கொண்டு அவள் களையாகக் கொண்டு வரும் இரண்டாயிரம் ரூபாயை தன்னோடு தக்க வைத்துக் கொள்ள அரும்பாடு பட்டான். எதற்கும் மசிய வில்லை அவள். அவன் வேலை பார்க்கும் இடத்திற்கே சென்று அவனது மேலதிகாரிகளிடம் புகார் சொன்னாள். விளைவு? அரசாங்க வேலையிலிருக்கும் அவன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டது சட்டப்படி தவறு என தற்கால பணிநீக்கம் செய்யப் பட்டான்.

அவன் செய்யும் சகல அக்கிரமத்திற்கும் அவனது மனைவியாக வந்து வாய்த்த விதிக்காக அவள் கஷ்டப்பட நேர்ந்தது. சம்பளம் வராததால் அவனது குழந்தைகளின் சோற்றில் மண். அவனது சக ஊழியர் ஒருவரின் யோசனைப்படி மேலதிகாரியின் வீடு தேடிச் சென்று குழந்தைகளோடு அவரது காலில் விழுந்தாள். அவருக்கு இரக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் சட்டம் என்று ஒன்று இருக்கிறதே... அவர் உள்ளபடி நிலைமையைத் தெளிவாக அவளுக்குப் புரியும் படி சொன்னார்.

அவளுக்கு வேறு வழி தெரியவில்லை. குழந்தைகளின் பட்டினி... வீட்டு வாடகை பாக்கி... இவை யெல்லாவற்றையும் தீர்த்தாக வேண்டுமே... சுகாதார நிலையம் தேடிச் சென்று அவளைக் கெஞ்சினாள். புகார் மனுவின்பேரில் மேலதிகாரிகள் வந்து விசாரிக்கும்போது 'நான் அவன் மனைவியல்ல... எனக்கும் அவனுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை' என்று சொல்லும்படி அழுதாள்.


கொஞ்ச நாளே ஆனாலும் அவனுக்கு ரெண்டாம்தாரமாய் போய் பட்ட கஷ்டங்கள், சித்ரவதைகள் அந்த உதவி செவிலிக்கு இன்னும் மறக்க வில்லை. தன்னைப் போல உதறிவிட்டு ஓடி வர முடியாது காலத்துக்கும் அந்த வக்கிர புத்திக்காரனோடு காலந்தள்ளப் போகும் அவனின் மனைவி மீது அனுதாபம் ஏற்பட்டது. ஒரு பெண்ணுக்கு, உத்தியோகம் எத்தனை உயிர்நாடி, ஆயுதம் என அந்தச் சமயம் அர்த்தத்தோடு உணர்ந்தாள். பிறகு தனது மூத்தாளுக்கு... இல்லை சில நாட்களே அந்த உறவில் இருந்தவளுக்கு ஆறுதல் சொல்லி அனுப்பினாள். அந்தப் பெண் சொன்ன பொய்க்குப் பலனாக இழந்த

வீடு கட்டுவோருக்கு

பொதுவாக இப்போதுள்ள வீடுகளில் டைனிங்ஹால் டிராயிங் ரூமில் இருந்து பார்த்தால் நேரடியாகத் தெரிகிறது. சமயத்தில் கணவரது நண்பர்கள் யாராவது ரொம்ப நேரம் அரட்டை அடிக்க வந்து விட்டால் அன்று சாப்பாடு சாப்பிடவே ரொம்பவும் லேட்டாகி விடுகிறது. அதுவும் இரவு நேரமாக இருந்தால் பசி போய் மயக்கம் வரும் அளவுக்கு ஆகிவிடும். பிள்ளைகள் வேறு தவிப்பார்கள். சமையல் ரூமும் உட்கார்ந்து சாப்பிட வசதியில்லாத அளவு சிறியதாக இருக்கிறது. கட்டிட பிளான் போடுபவர்கள் இதற்கு ஏதாவது மாறுதல் செய்யலாமே.

— ராணி வின்சென்ட்





13 புள்ளி; 1 ல் நிற்க — உமாமகேஸ்வரி

வேலை திரும்பவும் அவளுக்குக் கிடைத்தது.

ஆட்கள் வருவதும், போவதும், கூச்சலும் கூக்குரலுமாக பகல் பொழுது ஓடி மறைந்தது.

ஒரு சாமம் இருக்கும். அவளது இரு தங்கைகளும் தத்தம் கணவன்மாரோடு அழுதபடி வந்திறங்கினார்கள். விடிய சற்று நேரமிருக்கையில் அவனது தாய்.. அவளது மாமியார் மார்பில் அடித்துக் கொண்டு அவள் காலடியில் வந்து வீழ்ந்தாள். அந்த அதிர்வில் அவன் உடல் உட்கார்ந்த வாக்கில் சற்று சாய்வதைப் போல தோன்ற, தன்னை மீறியதொரு உணர்வில் அது கீழே விழுந்து விடக் கூடாது என தாங்கிப் பிடித்தாள் அவள். மறுகணம் அவளுடல் பதறியது. அவன் இரும்பு கணக்காய் விறைத்துப் போயிருந்தான். ரொம்ப நாட்களுக்குப்பின் அவனை தொட நேர்ந்த நிலமைக்காக அவள் ரொம்பவே, துக்கித்துப் போனாள்.

பொழுது விடிந்தது. நேற்றைய இந்நேரத் துக்கெல்லாம் அவன் உயிர் போய் விட்டது தெரிந்து போனது. கிட்டத்தட்ட மணிக் கணக்கில் பார்த்தால் ஒரு நாள் ஆகிவிட்டது. அவன் 'அது' ஆகி.

ம்... எல்லாம் முடிந்து போய்விட்டது. தன் செயலாலும், செய்கையாலும் எல்லோருக்கும் ஒரு புதிராகி பலரது வெறுப்புக்கும், நிந்தனைக்கும் ஆளாகி நின்ற அவன் சடுதியில் உணர்விழந்து மண்ணுக்குள் போய் விட்டான். இதுநாள் வரை அவள் சுமங்கலி என்பதற்காகக்கூட அவளைப் பொருட்படுத்தாதவர்கள், இப்பொழுது அவளை அமங்கலமாக்குவதற்கு பு[illegible]ரமாக நின்றனர்.

அன்று அவனது சக ஊழியர் சிலர் வீடு தேடி வந்தனர். அவனது இறப்புக்கு அரசு தரும் பணம் மற்றும் பென்சனுக்கு அவள் தான் வாரிசு ஆதலால் நாளை தலைமை அலுவலகத்துக்கு வந்து சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாம். அவளது கையெழுத்தும் தேவையாயிருக்கிறதாம். முழுமையாக எல்லாம் நியதிப்படி அனுப்பினால்தான் பணம் அவளுக்கு வருமாம். எனவே அவளைச் சிரமம் பாராது துக்கத்தை ஒதுக்கி விட்டு தலைமை அலுவலகம் வர பணித்தார்கள்.

அவள் வாய் திறந்து பேசினாள். அது அவர்களுக்கு ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும்... இதுவரை கேள்வி கூட பட்டிராத ஒன்றாகவும் இருந்தது. துக்கம் தாளாது அவளுக்கு மூளை பிசகி போய் விட்டதோ என்றுகூட சந்தேகித்தார்கள். அவனது மனைவி என்ற முறையில்அந்தப் பணம் அவளுக்கு மட்டுமே உரிமைப் பட்டதென்றும், அதை அவள் நிராகரிக்கும் பட்சத்தில் அரசாங்கத்துக்குப் போய் விடுமென்றும் புத்தி சொல்லும் நோக்கில் எச்சரித்தார்கள். ஆனால் அவள் தெளிவாக நின்றாள். தான் கொண்ட கருத்தில் உறுதியாக வைராக்கியமாக நின்றாள்.

அவள் தன் பாதையில் முதலடி எடுத்து வைத்தபோது அந்தத் தெருவே முகவாயில் கை வைத்து விசனத்துடன் நின்று வழியனுப்பியது. அத்தியாவசியமான பொருட்கள் தவிர ஏனையவற்றை விற்று வீட்டு வாடகையை தீர்த்தாள். சொற்பப் பணத்தோடு நிறைய நம்பிக்கையையும் அதற்கு அச்சாணியாக தன் இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டாள். இந்தப் பறந்த உலகில் தன்மானத்தை விற்காமல்... உடல் உழைப்பால் வாழலாம் என்ற நம்பிக்கை அவளுக்கிருந்தது. அவளது குழந்தைகள் படித்து மனித தன்மையற்றவர்களாக வாழுவதைவிட, உழைத்துப் பிழைத்தாலும் மனத்தில் அன்பு, கருணை, இரக்கம் கொண்டவர்களாக வாழுவதையே அவள் மனம் விரும்பியது. பனிரெண்டு வருடங்களாக கணவனோடு அவள் வாழ்ந்த வாழ்க்கையை விட வெளி உலக வாழ்க்கை அப்படியொன்றும் பயங்கரமாக இருக்காது. இதுநாள் வரை பட்ட துன்பம் இனி தொடராது. தெரு கடந்து வீதிக்கு வந்து விட்டாள். பேருந்துகள் ஓடிக் கொண்டிருந்தன. மனிதர்கள் ஆளுக்கு ஆள் பரபரத்து ஓடிக் கொண்டிருந்தனர். அவளுக்குள் இதுநாள் வரை புழுங்கிக் கொண்டிருந்த உணர்வுகள் அத்தனையும் மறந்து... ஆரோக்கியமான சுவாசத்துக்கேற்ற காற்று உட்புகுந்து ஆசுவாசப்படுத்தியது. அதற்கேற்றாற்போல புது காற்று முகத்தில் மோதி கேசத்தைக் கலைத்தது.

மாலைநேர வேலைகள் முடிந்து பால்கனி செடிகளுக்கு நீர் ஊற்றச் சென்றாள் இந்திரா. இருள் துவக்கம்...; பால்கனி விளக்கு போட நினைத்தபோது மனதுள் முத்திரையாகிவிட்டிருந்த அம்மாவின் அறிவுரை...

"விளக்கு வைத்தப்புறம் செடிகளுக்கு தண்ணி ஊற்றக் கூடாதுடி..."

பக்கத்தில் நின்று கொண்டு அம்மா சொல்வது போன்ற உணர்வு. நினைவுகள் என்றும் இந்த மகத்தான விஷயம் மனித வாழ்க்கைக்கான அரிய வரம் என்ற வியப்பு ஏற்பட்டது. எங்கோ தொலைவில் உள்ள அம்மா இக்கணம் கண்ணெதிரே இருப்பதுபோல்... தொடர்ந்து அம்மா சம்பந்தப்பட்ட அத்தனை நினைவுகளும் அலை அலையாய்ப் புரண்டு வந்தன.

இலையும் தழையும் மொட்டும் பூவுமாய் குலுங்கிக் கொண்டிருந்த அத்தனை செடிகளுக்கும் நீர் ஊற்றிவிட்டு விளக்குபோட்டு இளம் இருட்டையும் ஒன்றுமில்லாததாக்கிய பளீரென்று பரவிய ஒளிவெள்ளத்தில் மின்னிய தொட்டிச் செடிகளை விழிகள் ஒளிர ஆசையுடன் பார்த்துவிட்டு உள்ளே வந்தாள் இந்திரா.

அலுவலகத்திலிருந்து வந்துவிட்டிருந்த அரவிந்தன் உடைகூட மாற்றாமல் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தான்.

"விளக்கு கூட போடாமல் பால்கனியில் என்ன செய்து கொண்டிருந்தே இந்திரா... வந்து எவ்வளவு நேரம் ஆச்சு தெரியுமா...?"

"மார்க்கெட் போன மீனாட்சி வர வழி காணோம். செடியெல்லாம் காய்ந்து போய்க் கிடந்தது பாவம். தீபா தூங்கிக் கொண்டிருந்தா...தண்ணி ஊற்றலாம்னு... சரியான கோழித் தூக்கம்தான் இதுக்கு. தூங்க ஆரம்பித்து அரை மணி ஆகலே... அதுக்குள்ள எழுந்தாச்சு. நீங்க போய் கை கால் கழுவிவிட்டு வாங்க..." குழந்தையை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

"குழந்தையைத் தூங்க வைக்க ஒரு நேரம் காலம் கிடையாதா... ஆடி ஓடி விளையாட வேண்டிய நேரத்தில் வேலை ஆகணுமேன்னு தூங்க வச்சுடறதா...?" அரவிந்தன் சிடுசிடுத்தான்.

"நானா தூங்க வைத்தேன். சிட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்தது. அப்படியே அவள் மடியில் சாய்ந்து தூங்கிட்டது. சிட்டி அவ அம்மாவுடன் மார்க்கெட் கிளம்பியபோது எடுத்து படுக்கையில் விட்டேன்..."

தீபாவை நெஞ்சோடு அணைத்துக் கொண்டபோது பால்கனிசெடிகளின் பூக்கள் அத்தனையும் செண்டாய்த் திரண்டு கைகளுக்குள் வந்தாற் போன்ற மென்மை? உலகம் முழுவதையும் தன் பிடிக்குள் அடக்கிக் கொண்டுவிட்டது போல் பெருமிதம் ஏற்பட்டது. சற்றுமுன் அலைக்கழித்த அம்மாவின் நினைவுகள் போன இடம் தெரியவில்லை. புருஷன் மறந்து போனான். பதினான்கு மாதங்கள் முன்புவரை... நிறை கர்ப்பிணியாய் இருந்தபோது கூட.... அரவிந்தன் அலுவலத்திலிருந்து திரும்பினால் போதும்... வராதவன் வந்திருப்பதுபோல் விழுந்து விழுந்து உபசரிப்பாள். கைகால் முகம் கழுவிக் கொண்டு வந்ததும் டவல் நீட்டுவது, வகை வகையான டிபனுடன் ஆவி பறக்கும் புது டிகாக்ஷன் காப்பி, அன்று வந்த கடிதங்களைக் கையில் வைப்பது....

"என்ன இந்திரா இது... நான் உன் கெஸ்டா என்ன...?" அவனே விளையாட்டாய் அலுத்துக் கொள்ளும் தினுசில்...

உயிர்

— சாந்தா தத் —





தீபா பிறந்த இந்தப் பதினான்கு மாதங்களில் அவன் மீதிருந்த அன்பும் நேசமும் அக்கறையும் குறைந்து விட்டது என்றல்ல. கவனிப்புதான் பங்கிடப்பட்டு விட்டது. 'இப்போது என் முழுக் கவனமும் தேவைப்படுவது குழந்தைக்குதான். இவன் சொல்வது போல் விருந்தாளியாக இருந்தால்தான் எத்தனை வேலைகள் இருந்தாலும் ஒதுக்கி வைத்து விட்டு பார்த்துப் பார்த்து உபசரிக்க வேண்டும். இவன் என்னவன். புரிந்து கொள்வான். குழந்தை நலத்தில் சம அக்கறை உள்ளவன்....'

பக்கெட்டில் நீர் விழும் சத்தம்... அரவிந்தன் முகம் கழுவிக் கொண்டு வரட்டும். குழந்தையைக் கொடுத்துவிட்டு காப்பி வைக்கலாம்.

மாற்றிமாற்றி முத்தங்களிட்டு தீபாவின் கன்னத்தை மேலும் சிவப்பாக்கினாள். அது பிறந்தது முதல் ஒரு கணம் கூட விட்டுப் பிரியாதவள். ஆனாலும் நீண்ட காலம் பிரிந்திருந்ததுபோல் இந்தத் தவிப்பு... தகிப்பு... பாசப் பிரவாகம்...! தீபாவுடன் விளையாடும் நேரங்களில்... தன் வெப்பமான அணைப்புக்குள் குஞ்செனப் பொத்திக் கொள்ளும் போது... அதற்கு டிரஸ் செய்து பாலூட்டும் வேளைகளில்... இப்படி எதுவுமே செய்யாமல் பூனைக் குட்டியாய்ச் சுருண்டு உறங்கிக் கொண்டிருக்கும் சமயங்களில் கூட.... அவளுள் பூஞ்சிதறலாய் ஒரு பரவசம். உணர்வுகளைத் திக்குமுக்காடச் செய்யும் சிலிர்ப்பு. உறங்கும் போது எந்தப் பருந்து வந்து கொத்திக் கொண்டு போய் விடுமோ என்று அஞ்சுபவள் போல் குழந்தையைச் சுற்றி கரத்தை இறுகப் பின்னியபடி கனவுகளிலும் அது உடனிருக்க...

'நம்பிக்கை இழக்க வேண்டாம். சாத்தியக் கூறுகள் நிறைய இருக்கின்றன. இருவருக்குமே கோளாறு எதுவுமில்லை...' டாக்டர்கள் திரும்பத்திரும்ப தைரியம் சொன்னாலும் இனி தன் வயிறு திறக்காது என்று முடிவு செய்து காய்க்காத குரோட்டன்ஸுக்கும் தனக்கும் என்ன வித்தியாசம் என்ற சுய வெறுப்புடன் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தபோது திருமணமாகி எட்டு வருடங்கள் கழித்து அபூர்வ குறிஞ்சி மலராய் கர்ப்பத்தோட்டத்தில் மொட்டவிழ்த்ததாலா...

குழந்தையே உயிராய்... உலகமாய்... வாழ்க்கையாய்... "உலகத்தில் இல்லாத அதிசயமாய் நீ ஒருத்திதான் குழந்தை பெற்று விட்டது போல் இந்த அலட்டல் எதுக்கு?" அரவிந்தன் எரிச்சலடைந்த நேரங்களும் உண்டு. முறைத்துப்பார்ப்பாள் இந்திரா. "எங்கே...நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்க பார்க்கலாம். உங்களுக்கில்லையா இந்தத் தவிப்பெல்லாம்... அசட்டுத்தனமா வெளியே கொட்டிடறேன் நான். பிரவாகமாய்ப் பொங்கும் பாசத்தை திரைகட்டி மறைக்கிற சாமார்த்தியம் உங்களுக்கெல்லாம் இயல்பா அமைந்த சுபாவம். ஆணாயிற்றே... நெஞ்சழுத்தத்துக்கு கத்துத் தரணுமா...நான்தான் பித்துக்குளியாட்டம் தத்துபித்துன்னு..." விழிமுனைகளில் நீர் திரள குரலடைக்க நிஷ்டூரமாய்ச் சொல்லும் போது பதறிப் போவான் அரவிந்தன்.

"சேச்சே... என்ன இது... இப்பதான் சரியான அசடாட்டம் நடந்துக்கறே. நான் ஏதோ பேச்சுக்கு சொன்னால் சீரியஸா எடுத்துக்கிட்டு..."


அவளைச் சீண்டி வேடிக்கை பார்ப்பானே தவிர குழந்தை தூக்கத்தில் முனகினால்கூட பொறுக்கமாட்டான் அரவிந்தன். அவளை முந்திக் கொண்டு அதை வாரி மார்பின்மீது போட்டுக் கொள்வான். திருமணமான புதிதில் அலுவலகத்தில் இருக்கும் நேரங்களில் ஃபைல்களில் ஒரு கண்ணும் கடிகாரத்தில் மறுகண்ணுமாய் வேலை செய்து மணி ஐந்தரை ஆவதுதான் தாமதம், ஃபைல்களை விட்டெறிந்து சிகப்பு சிக்னல்களைச் சபித்து பச்சை விளக்கு விழுந்ததும் புயலாய்ச் சீறி சாலைகளைக் கடந்து வீடு சேர்ந்து 'கண்ணம்மா...' என்று விரித்த கைகளுடன் மனைவியிடம் ஓடுவான். ஓரிரண்டு ஆண்டுகள் கழிந்த பிறகு காட்டாற்று வெள்ளம் போன்ற அந்த ஆர்ப்பாட்டம் ஆவேசமெல்லாம் படிப்படியாகக் குறைந்து இளமை வேகம் சற்று சமனப்பட்டு அவன் அன்பின் வெளிப்பாட்டில் ஒரு நிதானம் வந்தது. தீபா பிறந்தபிறகு அந்தக் காட்டாற்று வெள்ளம்

பேன் தொல்லை நீங்க

முதல் நாள் இரவு இரண்டு கைப்பிடி வேப்பிலையை இரண்டு குவளைத் தண்ணீரில் கொதிக்க வைத்து, ஆறியபின், மறுநாள் காலை தலைக்குக் குளிக்கும்போது, தலையை அந்த நீரில் அலசிவிட்டுக் குளித்தால் பேன் தொல்லை நீங்கும். இதே நீரை முகத்திற்கு உபயோகித்தாலும், முகத்தில் உள்ள மாசு மறு நீங்கி முகம் பளபளப்பாக இருக்கும்.

-விஜி





தயாரிப்பாளருக்கு ஒரு யோசனை

இப்பொழுது வரும் ஷூக்களின் லேஸ்கள் மிகவும் நீளமாக உள்ளதால் எவ்வளவுதான் குறைக்க முயன்றாலும் லேஸ் முடிச்சுகள் குழந்தைகளின் பாதங்களின் அடியில் சிக்கிக் கொண்டு அவர்கள் நடந்து வரும்போதும், ஓடி வரும் போதும் கீழே விழ வேண்டிய ஆபத்துகள் ஏற்படுகின்றது. ஆகவே ஸ்கூல் ஷூக்களில் லேஸ்களின் நீளம் குறைவாகவே இருப்பது நல்லது.

–பப்புலு

மீண்டும் தலை தூக்கியது. காலையிலிருந்து குழந்தையைப் பார்க்கும் ஆசையில் அந்த பழைய தீவிரம்...

அவர்களுடைய அருமையான தீபா விற்குதான் அந்த முன்னிரவு நேரத்தில் ஜுரம் வந்து விட்டது.

முகம் கழுவிக் கொண்டு வந்த அரவிந் தனிடம் குழந்தையைக் கொடுத்து விட்டு டிபன் காப்பி கொண்டு வந்தபோது குழந்தை மறுபடியும் தூங்கிவிட்டிருந்தது. அரவிந்தன் முகத்தில் கலவரம் படர்ந்திருந்தது.

"தீபுவின் உடம்பு சுடறது இந்திரா..."

பதறிப்போய் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். "இவ்வளவு நேரம் நார்மலா இருந்ததே... திடீர்னு எப்படி இது... அதான் இப்படி நினைச்சு நினைச்சு தூங்கறது..." அழுகை துருத்திக் கொண்டுவர... குரல் உடைந்திருந்தது.

"பயப்படாதே இந்திரா. மைல்ட் டெம்ப் ரேச்சர்தான். கொஞ்ச நேரத்தில் குறைந்து விடும்..." அவளுக்கு ஆறுதல் சொன்னானே தவிர அரவிந்தனுக்கு டிபன் தொண்டையில் இறங்க மறுத்தது.

'பாப்பா....!' உற்சாகமாய்க் கூச்சலிட் டபடி உள்ளே வந்தாள் சிட்டி.

"திருவிழா மாதிரி மார்க்கெட்ல இன்னா ஜனம்கறே... இந்த மீனாட்சி கடன்காரி இன் னும் வரலையேன்னு திட்டிட்டிருந்தயா... இந்த சிட்டி சனியன் வேற கூட வந்துட்டதா... ஒரே பேஜாருதான் போ... கொழந்தையோட வௌளயாடிட்டிருன்னா கேட்டாத்தானே..." நீளமாய் முறையிட்டபடி காய்கறிப் பையுடன் வந்த மீனாட்சி வாடிய கீரையாய்த் துவண்டு கிடந்த குழந்தையைப் பார்த்து அரண்டு போனாள்.

"பாப்பாவுக்கு என்னாச்சுமா...?" பயத்து டன் கேட்டாள் சிட்டி. அந்த ஏழு வயதுச் சிறுமியின் குரலில் பெரிய மனுஷிக்கான கவலை.

மேற்கொண்டு தாமதம் செய்யாது தீபாவை நர்சிங்ஹோம் எடுத்துச் சென்றார் கள். அதற்குள் ஜுரம் நூற்றிநான்கைத் தொட் டிருந்தது. அட்மிட் செய்ய வேண்டும் என் றார்கள். டிரிப்ஸ்_இன்ஜெக்ஷன்... நெற்றியில் யூடிகுலோன் துணி... என சிகிச்சை தொடர்ந்தது.

எதற்கும் கட்டுப்படவில்லை ஜுரம். குழந்தை கண்ணே திறக்க வில்லை. இன்ன ஜுரம் எனத் தீர்மானிக்க முடியவில்லை டாக்டர்களால். திடீர் எனப் பற்றிக் கொண்டு வந்த வேகத்தில் தீவிரமாகி... மூளைக்காய்ச் சலா.. அதுவும் தீர்மானமாய்ச் சொல்ல முடியவில்லை. ஏதோ ஒன்று... இரவு தாண் டினால்தான் பிஞ்சு உயிருக்கு உத்தரவாதம் என்று சொல்லி விட்டார்கள்.

இரவு தாண்டினால்தான்... உடலின் உதிரத்தையெல்லாம் சட்டையாய் உறிஞ்சி உயிர் துடிக்க வைக்கும் எல்லைக்கோடு....

அந்த இரவு இரக்கமின்றி மெதுவாக... மிக மெதுவாக நகர்ந்தது. உதவிக்கு வந்த நண்பர்கள் வெளி வராந்தாவில்... எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அங்கேயே பழி யாய்க் கிடந்தார்கள். இமைச்சிப்பிகள் இறுக மூடி நினைவற்றுக் கிடந்த தீபாவின் இருபுற மும் அமர்ந்திருந்த இந்திரா, அரவிந்தனின் கன்னங்களில் இடைவெளியற்று நீர்முத்துக் களின் ஊர்வலம்.

அன்று பின்மாலைப் பொழுதில் எவ் வளவு குதூகலமாய் இருந்தாள்... இப்படி யொரு விபரீதம் எதிர்கொள்ள வேண்டி வரும் என்பதற்கான அறிகுறி துளிகூடத் தெரியாத வகையில். இருள்படரும்வரை நன்றாக இருந்த குழந்தை...! வாரிசற்று உனக்கு நான் எனக்கு நீ என்று வாழ்க்கையெனும் நெடும் பயணத்தை சாரமின்றி கடக்க வேண் டிவந்து விட்டதே என்று நெட்டுயிர்த்த வேளையில் வறண்ட பாலையில் மழை குருத் தாய் வந்த நம்பிக்கை நட்சத்திரம் அகாலத் தில் உதிர்ந்து விடுமோ என்ற பயம் சிலீரெனக் கிளம்ப குழந்தைக்குக் குறுக்காய் நீண்டது இந்திராவின் கரம் 'என்னைப் பற்றிக் கொள். எனக்கு தைரியம் கொடு' என்பதுபோல்.

அவள் கையை ஆதரவுடன் பற்றி அழுத் தினான் அரவிந்தன். 'நல்லதே நடக்கும். கவலைப் படாதே...' விழிகளால் தைரியம் சொன்னான். இருவர் கரங்களும் இணைந்து

மேலும் கீழுமாய் எகிறிக் கொண்டிருந்த குழந்தையின் மார்புக் கூட்டின் மீது படர்ந்தன.

டாக்டர்களும் நர்சுகளும் மாறிமாறி வந்து தம் முழுத்திறமையும் திரட்டி முயன்று கொண்டிருந்தார்கள். அவர்கள் முகங்களில் தைரியம் தேடினாள் இந்திரா. அந்த முகங்கள் அவள் பக்கம் திரும்பவே இல்லை. மனிதர்கள் அபயம் அளிக்கத் தயங்கினாலும் தெய்வம் நிச்சயம் கைவிடாது என்று நம்பினாள். என் வாழ்வின் ஜீவனைக் காப்பாற்றிக் கொடுங்கள் என்று விழிகள் வழிய மனமுருகி வேண்டினாள். திருத்தணி முருகனுக்குப் பாலாபிஷேகம் செய்வதாகப் பிரார்த்தனை செய்து கொண்டாள். முண்டகக் கண்ணி அம்மனுக்குப் படையல் தருவதாக... திருப்பதி ஏழுமலையான் சந்நிதியில் குழந்தைக்கு முடியிறக்குவதாக... இன்னும் ஏதேதோ வேண்டுதல்கள். பிரார்த்தனை தந்த பலத்துடனும் நெஞ்சு நிறைய நம்பிக்கையுடனும் விடியலுக்காகக் காத்திருந்தாள்.

அந்த விடியல் நல்லவிதமாய் அமைந்தது. மருத்துவ முயற்சிகளும் ஆழ்ந்த நம்பிக்கையும் ஏமாற்றிவிடவில்லை. குழந்தை கண் திறந்து பார்க்க, தாமே செத்துப் பிழைத்தது போன்று தாராளமாய் மூச்சுவிட்டு ஆசுவாசமடைந்தார்கள் இந்திராவும் அரவிந்தனும். இனி பயமில்லை என்றாலும் இன்னும் மூன்று நாட்கள் வைத்திருந்து டிஸ்சார்ஜ் செய்தார்கள்.

தீபாவின் உடம்பு நன்கு தேறிய பிறகு ஊரிலிருந்து வந்திருந்த இந்திராவின் அம்மாவுடன் திருப்பதி, திருத்தணி மற்றும் சில புண்ணிய ஸ்தலங்களுக்குச்சென்று வேண்டுதல் நிறைவேற்றி விட்டு வந்தார்கள்.

ஒரு வாரகாலம் பார்க்காமலிருந்த குழந்தையை ஆசையுடன் அணைத்துக் கொண்டாள் மீனாட்சி. மொட்டைத் தலையைப் பாசத்துடன் வருடி விட்டாள். முன்போல் கன்னங்கள் கனிய முத்தங்கள் மட்டும் இடவில்லை. இந்திராவின் உத்தரவு அப்படி. ஜொள் வழியச் சிரித்தபடி சிட்டியிடம் தாவியது குழந்தை. நீண்ட இடைவெளிக்குப்பிறகு தீபா தன் கைக்கு வந்திருப்பதில் சிட்டிக்கு ஏக சந்தோஷம். எப்போதும் போல் தன்னுடன் விளையாட விடுவார்களோ மாட்டார்களோ என்ற ஏக்கமும் கூடவே எழுந்தது.

ஊரிலிருந்து சிட்டிக்கு வாங்கி வந்த புது கவுன், ரிப்பன், வளையல் தினுசுகளை மீனாட்சியிடம் கொடுத்தாள் இந்திரா. சிறுமியின் சந்தோஷம் இரட்டிப்பானது.

''நாளன்னிக்கு நாம் எல்லோரும் முண்டகக் கண்ணி அம்மன் கோவிலுக்குப் போறோம். இந்த வேண்டுதலும் முடிந்து விட்டால் சரி...'' இடையறாத அலைச்சல்... தூக்கமின்மை காரணமாய் சற்றே இளைத்திருந்தாலும் சோர்வையும் மீறி இந்திராவின் முகத்தில் ஒரு தெம்பு பளிச்சிட்டது.

முண்டகக்கண்ணி அம்மன் விசேஷ அலங்காரங்களுடன் ஒளிர்ந்து கொண்டிருந்தாள். சின்ன ஆடு ஒன்று பலிதரப்பட்டது. பூஜை நிறைவு பெற்றதும் குழந்தையை அம்மன் பாதத்தில் கிடத்தி நீர்கோர்த்த விழிகளுடன் மெய்யுருகிக் கரம் குவித்தாள். குழுமியிருந்த சிறுவர்களுக்குத் தாராளமாய் பிரசாதம் விநியோகித்து நிறைவுடன் வீடு திரும்பினார்கள்.

அன்று சிட்டிக்கும் வடை பாயாசத்துடன் விருந்து சாப்பாடு. எல்லோரும் சாப்பிட்டானபிறகு மீனாட்சியையும் சிட்டியையும் உட்காரவைத்து தானே பரிமாறினாள் இந்திரா.

உள்ளிருந்து ஏதோ வேலையாய் அரவிந்தன் அழைக்க... "வயிறு நிறைய சாப்பிடு மீனாட்சி. இது உன் வீடு. சங்கோஜப்படாதே. சிட்டி... என்ன வேணுமோ அம்மாகிட்ட கேட்டுச் சாப்பிடு, என்ன..." சிட்டியின் கன்னத்தில் செல்லமாய்த் தட்டி விட்டு உள்ளே சென்றாள் இந்திரா.

"...ம்மா..."

"என்னடி... இலைய எல்லாம் அப்படியே வச்சிருக்க... என்ன வேணும்...?"


"அம்மா...ங்..."

"சொல்லித் தொலையேண்டி..."

"அம்மா.... வந்து.... பாப்பா பொழைச்சிடுச்சின்னு பாப்பாவோட அம்மா இவ்வளவு சந்தோசமா இருக்காங்களே... கோவில்ல செத்துப் போச்சே, அந்த ஆட்டுக் குட்டியோட அம்மா அழுதுகிட்டிருக்குமில்லே பாவம்..."

வாயருகே சென்ற மீனாட்சியின் கையிலிருந்த வடை இலையில் விழுந்தது.

கேட்டுக் கொண்டே வந்த இந்திரா தடுமாறினாள்.



உங்கள் கவரிங் நகைகளின் மீது 'கலர் லெஸ்' நெயில் பாலீஷை தடவி வையுங்கள். சீக்கிரம் கவரிங் நகைகள் 'பல்லை'க் காட்டாது!

—ஆர். சீதா

Distinctly Elegant!



Bhm elegant®

T-SHIRTS, JEANS & CASUALWEAR

BHARAT HOSIERY MILLS

Factory: Khetani Mills Compound, 107/A-4, Bazarward, Sonapur Lane, Bail Bazar, Kurla (W), Bombay-400 070. Tel: 5145029 5142427.


Showroom: Manish Market, Shop No. 113, 114, Ground Floor, Senapati Bapat Marg, Opp. Dadar Railway Station (W), Bombay-400 028.

Dealers: Madras: M.G. Naidu, Rex Fashions, Poonams, Murugan Dresses, Vitan, London Stores, C. Breeze, Garment Centre, Ashirwaad. **Tambaram:** Lucky Dresses. **Coimbatore:** Shri Arthi Men's Wear, Vandana, Western Collections, Sathiya Readymades, M. Sonya. **Hosur:** Radha's Readymades. **Palani:** Kurinji Garments. **Nagercoil:** Nalla Perumal Readymades, Tower Garments, Ishwarya Textiles, Maham, Singaraya Nadar Emporium, Dressland. **Tuticorin:** Student's Readymades, Jasmine Readymades, Shabnam. **Marthandam:** City Readymades. **Aruppukottai:** Moorthy Textiles. **Madurai:** Balaji, Classic, Shri Krishna Cut PC, Satyam, Design, **Vellore:** Sarkar Readymades, Design, Mummy Daddy, **Karaikudi:** Kurinji Readymades. **Erode:** Flora, Bharni Emp, Santhi Dresses. **Ramnathpuram:** India Readymades. **Salem:** Aunty Uncle, Florentyna, Kays Enterprises, Milan. **Villu Puram:** Design Readymades. **Tindivanam:** Kanmani Dresses. **Cuddalore:** Sumangali Fashions, Jasmine Shoe Mart. **Thanjavur:** Kurinji Readymades, Maharaja Fashions. **Kumbakonam:** Seematti Dresses. **Tiruvarur:** Mura Readymades, Mummy Daddy. **Nagapattinam:** Mura Readymades Mohan Readymades. **Mayavaram:** Seematti Dresses. Tee Vee Textiles. **Kovilpatti:** Sangeeta Dresses, Mummy Daddy. **Tiruchy:** Anantha Agency, Krishna Readymade Hall, Geetha Silkcot, Pangajam Silks. **Tirunelveli:** Mummy Daddy, Cash N Carry, K. Shankar Mens Wear. **Pondicherry:** Dress Age, Ram Silks, Anand Silk House. **Karaikal:** Sekar Textiles. **Tiruchengode:** Sagar Readymades, Sargam Readymades.

மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம்.

புதனும் சுக்கிரனும் உதவும் நிலையில் உள்ளனர். 11 ஆம் இடத்தில் இலாபத்தில் உள்ள சனி உங்களுடைய தொழிலில், அல்லது உத்தியோகத்தில் இலாபகரமான நிலையை உருவாக்குவதில் உறுதுணையாக நிற்கிறார். எனினும் எட்டில் உள்ள குருவால் உடல் நலமும், மனநலமும் சற்றே பாதிக்கப் பட்டாலும், பாம்புக் கிரகங்களால் செய் தொழிலில் சற்று விக்கினமும் ஏற்பட்டாலும் பெரியதொரு பாதிப்பு இருக்காது. ஏனெனில் இராசியிலிருந்து 2, 4, 12 ஆகிய ரிஷபம், கடகம், மீனம் ஆகிய இராசிகளை குரு பார்ப்பதால் ஜீவனஸ்தானமும், சுகஸ்தானமும் நன்றாகவே இருப்பதுடன் விரயமும் குறைந்தோ, அல்லது சுபவிரயமோ ஏற்படுகின்ற நிலை இருப்பதால் கவலை தேவையில்லை. அரசுப் பணியில் உள்ளவர்களும், காவல்துறையினரும் சற்றுக் கவனமாகப் பணிகளைச் செய்வது நல்லது. குடும்பத்தில் ஒற்றுமையும், தாம்பத்திய வாழ்வில் அன்னியோன்னியமும் நன்கு அமையும். ஆனால் பணப் பற்றாக் குறை ஏற்படலாம். அதற்கேற்பச் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நலம், மற்றபடி தக்ஷிணாமூர்த்தி ஸ்லோகமும், ஆதித்ய ஹிருதய ஸ்தோத்திரமும் படிப்பது நல்லது. உங்கள் ஜன்ம நட்சத்திரமும், வியாழனும் கூடிவரும் நாளன்று உங்கள் செலவில் கொத்துக்கடலை சுண்டல் செய்து பக்தர்களுக்கு விநியோகிக்கலாம். ஜனவரி 12 - ந்தேதி அதற்கேற்றதொரு காலமாகும்.



ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 - ஆம் பாதங்கள்.

ராகுவும், குருவும் தவிர, ஏனைய கிரகங்கள் உதவும் நிலையில் இல்லை. என்றாலும், 9, 10க்குடைய யோககாரகனாகிய சனி ஆட்சியில் இருப்பதால் கெடுபலன்கள் ஏற்பட நியாயமில்லை. அத்துடன் குருவின் பார்வை இராசிக்கு உள்ளது. 11, 3 ஆகிய இடங்களுக்குள்ள குரு பார்வை நன்மையைச் செய்யும் வண்ணம்தான் உள்ளது. எனினும் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படலாம். உடல்நிலை கூட ஒரு நேரம் இருப்பதுபோல் மற்ற நேரம் இருக்காது. அலுவலகப் பெண்கள் தன்னுடன் புதிதாகப் பழகுபவர்களிடம் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சுக்கிரனால் சிறு பிரச்சனைகள் தோன்றலாம். ஆட்சியில் சுக்கிரன் இருந்து அவனது தசை நடக்கும் ஜாதகர்கள் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. அரசுத் துறைப் பணியானர்கள் கவனமுடன் பணியாற்ற வேண்டும். காவல் துறையினர் அது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் ஒரு பெண்ணின் சம்பந்தமான வழக்கு விஷயத்தைக் கவனமுடன் கையாள வேண்டும். பொதுவாக இராசிக்குக் குரு பார்வையுள்ளதால் எந்த நிலையிலும் குரு உங்களுக்கு உறுதுணையாக நிற்க கனக புஷ்பராகம் வைத்த மோதிரம் ஒன்றை அணிவது நல்லது. கனகதாரா ஸ்தோத்திரத்தைப் பக்தியுடன் படிப்பதன் மூலம் பொருளாதார ஏற்றத் தாழ்வினைச் சமாளிக்க முடியும்.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4 ஆம் பாதங்கள்,



தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம், நாரத்தம்பழ சாதம் செய்யும்போது 1 ஸ்பூன் ரசப்பொடியையும் சேர்த்துக் கிளறிப் பாருங்கள். அதன் ருசியே தனி தான்.

- மீனாகுமாரி

திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

கேது, செவ்வாய், புதன் ஆகிய கிரகங்கள் நல்ல நிலையில் சஞ்சாரம். அதனால் எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு. 6 இல் உள்ள அசுர குருவும், தேவகுருவும் தேவையற்ற வம்பைத் தேடித் தந்து செய்யும் தொழிலில் தடை ஏற்படுத்தலாம். ஆனால் புதன் வெற்றிக்கு வழிகோலுகிறார். இராசிநாதன் நல்ல நிலையில் உள்ளதால் பிரச்னைகளைப் பற்றிய கவலை தேவையில்லை. சென்ற ஆண்டு குரு பலம் இருந்தும் ஜாதகத்தில் செவ்வாய் தோஷம், புத்ர களத்திர தோஷம் அமைப்பின் காரணமாகத் திருமணம் கைகூடி வராதவர்கள், ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கத்தைத் தினமும் காலையில் ஒருமுறை வீதம் 48 நாட்கள் படித்து வந்தால் வரன் உங்களைத் தேடி வரும் வாய்ப்பினைப் பெறுவீர்கள். இராகுவால் குடும்பத்தில் சில பிரச்னைகள் உண்டாகலாம். ஆனால் கேதுவும் செவ்வாயும் தனலாபத்தையும், ஏற்படும் பிரச்னைகளைச் சமாளிக்க வல்ல சாமர்த்தியத்தையும், தர இருக்கும்போது, கவலை தேவையில்லையல்லவா? மற்றபடி இசைக் கலைஞர்கள், இலக்கியச் சொற்பொழிவாளர்கள், நாடகக் கலைஞர்கள் ஆகியவர்கள் பாராட்டுக்களையோ, பரிசையோ பெறுவார்கள். எனினும் பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்படலாம். உடல் நிலை பாதிக்காதவாறு முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய மாதம். மாலவனையும் வேலவனையும் வேண்டிக் கொள்ளுங்கள். வெற்றி பெறுவீர்கள்.

கடக ராசி :

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

ஓரளவிற்குச் சென்ற மாதநிலைதான் என்றாலும் சுக்கிரனால் எதிர்பாராத நிலையில் உங்கள் நண்பர் ஒருவர் உங்களுக்கு உற்ற சமயத்தில் உதவ இருக்கிறார். சுப நிகழ்ச்சி ஒன்றுக்கு வாய்ப்பு உண்டு. வீடு, வாகன யோகம் உண்டு. ஆரோக்கியத்தையும் தனலாபத்தையும் பெற மாதத்தின் முற்பகுதியில் சூரியன் உதவுவார். செவ்வாயின் சஞ்சாரம் சற்று மனக்கவலை அளிக்கலாம். அது கடன் சம்பந்தமாகவும் இருக்கலாம்; அல்லது வரவேண்டியதொரு தொகை வருவதில் ஏற்படும் கால தாமதத்தினாலும் உண்டாகலாம். ஆனால் 5-இல் உள்ள குரு உரிய நேரத்தில் உங்களுக்கு அருள் புரிய இருக்கிறார். அதனால் தனலாபமும் புத்திரர்களால் மகிழ்ச்சியும் உண்டு. தாம்பத்திய உறவும் குடும்பத்தின் கௌரவமும் சீராக இருக்கும். திருமணத்திற்காகக் காத்து நிற்கும் கன்னிகள் குருபலன் இருப்பதால், ஆண்டவனின் பாகரங்களைப் பக்தியுடன் பொழுது விடியுமுன் நீராடிப் பாடிப் பாருங்கள். குருபலன் முடியுமுன் திருமணம் கைகூடி நடந்தே தீரும். மாதத்தின் பிற்பகுதியில் பிரயாணம் செல்பவர்கள், பணப் பொறுப்பில் உள்ளவர்கள் ஆகியோர் சற்றுக் கவனமுடனும், பாதுகாப்புடனும் செயலாற்றுங்கள். இல்லையேல் உங்களுக்குள்ள குருபலன் திருடர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்.

சுக்கிரன் உங்கள் வீட்டுக்குச் சுற்றத்தார் வரும் வாய்ப்பினை அதிகப்படுத்துவார். ஆனால் அதேசமயம் 4-மிடத்தில் உள்ள குரு அப்படி வந்தவர்கள் மூலமே சில பிரச்னைகளையும் உண்டாக்கப் பார்ப்பார். 6 ஆம் இடத்தில் உள்ள புதன் மாதத்தின் முற்பகுதியிலும், பிற்பகுதியில் சூரியனும் உங்களுக்கு அனுகூலமான நிலையை உருவாக்குவார்கள். அதனால் தனலாபம் உண்டு. இலக்கியவாதிகள், அரசியல் துறையினர், கலைஞர்கள் ஆகியோர் பாராட்டினைப் பெறுவார்கள். 7 - இல் உள்ள சனி எதிரிகள் மூலம் தொல்லைகள் தரலாம். அதற்கு அங்காரகனும் துணை போவார். குறிப்பாக அரசியலில் உயர் பதவியில் உள்ளவர்கள், நிதி நிறுவனங்களில் இயக்குநர்கள், மாநில மாவட்டங்களில் உள்ள உயர் அதிகாரிகள் அனைவருமே சற்று சோதனையையும் சந்திக்க வேண்டிய சூழ்நிலை உண்டு. என்றாலும் சிம்மத்தில் சந்திரன்

இருக்கப் பிறந்த நீங்கள் எந்தச் சவாலையும் சூழ்நிலைக்கேற்ப ஏற்று, பதுங்க வேண்டிய நேரத்தில் நரியாகவும் பாயவேண்டிய நேரத்தில் புலியாகவும் மாறி வெற்றிக் கொடி நாட்டுவீர்கள். அந்த அளவிற்கு ராகு உங்களுக்கு மனோபலத்தையும், ஆரோக்கியத்தையும் தர இருக்கிறார். சுக்கிரனோ செல்வாக்கைத் தரப் பார்க்கிறார். கோட்சார விதிப்படி ஏழில் சனி இருப்பதால் உங்களைவிட தாழ்ந்த பெண் ஒருத்தியின் சேர்க்கையால் சில பிரச்னைகள் குடும்பத்தில் தோன்றலாம். இந்த நிலை சனி பகவான் மீனத்திற்குப் போகும்வரை உண்டு. எனவே, ஊனமுற்றவர்களாக உள்ள அனாதைகளுக்கு உங்களால் இயன்ற உதவியைச் செய்யுங்கள். அவர்கள் மனத்தில் புகுந்து சனி பகவான் உங்களை ஆசிர்வதிப்பார்.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்.

நீங்கள் மீன லக்கினத்தில் பிறந்தவர்களானால் உங்கள் ஜாதகத்தில் கோட்சாரப்படி இந்த மாத கிரக சஞ்சாரத்தை லக்கினம், சந்திரன் இவைகளை அமைத்துப் பார்க்கும் போது கிரக மாலிகா எனும் யோக அமைப்பைப் பார்க்கலாம். சனி மீனத்திற்குப் போகும் வரை அவரால் உங்களுக்குத் தொழிலில் லாபம் உபரியாகக் கிடைக்கும். எதிலும் வெற்றியும், நோயிலிருந்து விடுபடும் நிலையும் ஏற்படும். சுக்கிரனால் சுகமுண்டு. புத்திரோற்பத்திக்கும் வாய்ப்புண்டு. அதாவது இதுவரை இல்லாதவர்களுக்கு மழலை பாக்கியம் கைகூடிவரும். ஒரு புது நண்பரால் எதிர்பாராத தனலாபம் பெறுவீர்கள். பதவி உயர்வும் கிடைக்கும். மனத்தில் மகிழ்ச்சி நிரம்பி வழியும். குடும்பத்தில் அமைதியும் ஏற்படும். இத்தகைய நல்ல சூழ்நிலையிலிருந்தபோதிலும் சிம்மத்தில் உள்ள அங்காரகனும் சரி, அதன் ராசிநாதனாகிய சூரியனும் சரி, உடல்நலத்திற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் கண், ரத்தம் சம்பந்தப்பட்ட நோய்களினால் சிரமப்படும் சூழ்நிலையை உருவாக்கலாம். எனவே உணவு விஷயத்திலும், குடிக்கும் தண்ணீர், மற்றும் மது அருந்தும் பழக்கம் இருந்தால் அது விஷயத்திலும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. புதன், சனி ஆகிய நாட்களில் விஷ்ணு ஸ்தோத்திரம் மற்றும் கணாஷ்டகம் ஆகியவற்றைப் படிப்பதும் நல்லது.

துலா ராசி :

சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி,



சீரகம் அரைத்த மிக்ஸியிலேயே அரைத்து விட்டேன், சட்டினி புதிய வாசனையில், ருசியில் ஏகோபித்த பாராட்டுதல்களை எனக்குப் பெற்றுத் தந்தது. அதிலிருந்து சாம்பார், கூட்டு, போன்றவற்றிலும் இப்பொழுது சீரகம் இடம் பெற்றுள்ளது.

- காந்தாமணி

விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

இராசிநாதன் இல்வாழ்க்கையில் குறை ஏதும் வராமல் காப்பார். அத்துடன் பதவி உயர்வோ, அரசாங்கத்தினால் அளிக்கப்படும் கௌரவப் பட்டம் ஒன்றையோ பெறுவீர்கள். 5 - இல் உள்ள சனி பகவான் ஆட்சியில் உள்ளதால் அஞ்சத் தேவையில்லை. என்றாலும் சில்லரைப் பிரச்னைகள் உத்தியோகத்திலோ, செய்யும் தொழில் முறையிலோ ஏற்படுத்தலாம். இரண்டில் உள்ள குரு உங்களை எதிர்த்தவர்களைத் தோல்விக்குள்ளாக்கி வெற்றிக் கனியை உங்கள் கையில் தரலாம். குறிப்பாக அரசியல் துறையில் உள்ளவர்களுக்கு இது பொருந்தும். குருவுக்கு உறுதுணையாகச் சூரியனும் நின்று உங்கள் கீர்த்தியைப் பிரகாசிக்கச் செய்வார். தேர்தல் களத்தில் உள்ள இந்த ராசியில் பிறந்துள்ள அரசியல்வாதிகளுக்கு வெற்றியும் அதன் பயனாக அமைச்சர் பதவியும்கூடக் கிடைக்கலாம். 11 - இல் உள்ள அங்காரகன் அருளால் உங்கள் கடன்கள் அடைக்கப்படும் அளவிற்குத் தனலாபம் உண்டு. எனவே, அதற்கான முயற்சியில் இறங்கலாம். கடனைப் போக்கும் அங்காரகன் தோத்திரத்தைப் படியுங்கள். கைமேல் பலன் கிடைக்கும். உத்தியோக உயர்வு, புதிய பதவி என நல்லவை நடக்கக் கூடிய நிலைதான். புதுத் தொழில்களைக் கூட ஆரம்பிக்கலாம். நடிப்புத் துறையினருக்கும், கலைஞர்களுக்கும், பொற்காலம் ஏற்படுகின்ற காலகட்டம். ஆனால் பாம்புக் கிரகங்கள் அனுகூலமான நிலையில் இல்லை. எனவே, விநாயகருக்கும், துர்க்கைக்கும் அர்ச்சனை செய்யுங்கள்.

விருச்சிக ராசி :

விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

ரூ. 5000 முதலீடு செய்யுங்கள் !
ரூ. 5000 - த்தை மறந்து விடுங்கள் !
ரூ. 5000 - த்தை நினைத்திடுங்கள் !
ரூ. 10,000 - த்தை எடுத்துச் செல்லுங்கள் !

ஆம்! தனசக்ரா டிபாசிட் திட்டத்தில் உங்கள் முதலீடு 84 மாதங்களில் இருமடங்கு !

சேவையில் - நட்புடன்

LVB

தனசக்ரா டிபாசிட் திட்டம்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் முதலீட்டை இத்திட்டத்தில் முதலீடு செய்து 7 வருடங்களுக்கு மறந்ததாக நினைத்திடுங்கள்! 7 ஆண்டு முடிவில் உங்கள் தொகை இரண்டு மடங்காக உங்கள் கையில்! உண்மைதான்! மேலும் 10வது ஆண்டு முடிவில் 2 1/2 மடங்காக பெருகுகிறது. உங்களின் குறிப்பிட்ட கால தேவைகளுக்கு இத்திட்டம் உங்களுக்கு உதவும் இல்லையா?

சேமிப்பீர் - தனசக்ரா டிபாசிட் திட்டம்.


ஏனென்றால் - உங்களின் நல்வாழ்க்கையில் எங்களை பார்க்கின்றோம்.

சிறப்பம்சங்கள்:

- குறைந்த கால டிபாசிட் - ரூ.3000/-
- 10% ஆண்டு வட்டி!
- வாரிசுதாரரை நியமிக்க வசதி.
- கடன் வசதி.

ஜி.வி. ராவ்
சேர்மன்.

லக்ஷ்மி விலாஸ் வங்கி லிமிடெட்.
சேலம் ரோடு, காத்தப்பாறை,
கரூர் - 639 006, தமிழ்நாடு.





உயர்வான சேவையை நட்புடன் வழங்கும் - LVB

ADWAVE / LVB / 4857 TAM A



பல பள்ளிகளில் குளிர்காலத்திலும் பெண் குழந்தைகள் யூனிபார்மாக ஸ்கர்ட்தான் அணிந்து செல்ல வேண்டியுள்ளது. என் மகள் சின்னதாகிப் போன ஸல்வாரை முழங்காலுக்குக் கீழே உள்ள பாகத்தை வெட்டிவிட்டு மேலே உள்ளதை மடித்துத் தைத்து ஸ்கர்ட்டுக்கு உள்ளே போட்டுக் கொண்டு போய் விடுகிறாள். பொதுவாக பெண் குழந்தைகளுக்கு இம்மாதிரி அணிவது பல விஷயங்களுக்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கும்.

- சுபத்ரா நரசிம்மன்

(விருச்சிகத்திற்குச் சென்ற மாதம் பலன் எழுதும்போது சுக்கிரன் விருச்சிகத்திற்கு வரும் என்று எழுதுவதற்குப் பதிலாக தனுசுவுக்கு வரும் எனத் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிழையைப் பொறுத்தருள்க.) இந்த மாதத்தில் சுக்கிரனால் சுகம் உண்டு. சுபநிகழ்ச்சிக்கும் வாய்ப்பு உண்டு. இந்த மாதத்தில் பணியில் இருப்போர்களுக்கு இடமாற்றம் ஏற்படக் கூடிய வாய்ப்பு வந்தாலும் அதனால் பயன் அவ்வளவாக இருக்காது. கேதுவால் சிற்சில நன்மைகள் ஏற்படலாம். நகை வாங்கவோ, அல்லது பாத்திர பண்டங்கள் கிடைக்கவோ வாய்ப்பு உண்டு. எதிரிகளின் தொல்லை இருக்காது. சனீஸ்வரன் ஆட்சியில் இருப்பதுடன் உங்கள் ராசியையும் பத்தாம் பார்வையால் பார்க்கிறார். ஆனால் குரு இருப்பதால் அந்தப் பார்வையால் கெடுபலன் உண்டாகாது. மாதம் பூராவும் புதன் சாதகமாகச் சஞ்சரிக்கவில்லை. சூரியன் மாதத்தின் பிற்பகுதியில் உங்கள் நாணயத்திற்குப் பங்கம் வராமல் காப்பார். 10 - இல் உள்ள அங்காரகனால் தோல் சம்பந்தமான நோய்கள், மற்றும் திருட்டுப் பயம் ஆகியவை ஏற்படலாம். வழக்கு ஒன்றில் உங்களுக்கு வெற்றி உண்டு. முக்கியமாக துர்க்கைக்கு இராகு காலத்தில் அர்ச்சனை செய்யுங்கள். சனீஸ்வரன் மகரத்திலிருந்து கும்பத்திற்குப் பெயர்ந்த நாளிலிருந்து உங்களுக்குச் சற்று அலைச்சலும் அதேசமயத்தில் ஆதாயம் இல்லாத செலவினங்களும் ஏற்பட்டு வருகிறது என்பதை உணர்வீர்கள். எனவே, செலவோடு செலவாக திருநள்ளாறு போன்ற சனித் தலத்திற்குச் சென்று அர்ச்சனை செய்வது நல்லது. உங்களது லக்கினத்தை குரு பார்ப்பதால் மேலே கண்ட குறைகள் கடகம் ஆகியவற்றில் ஒன்றினை இலக்கினமாகக் கொண்டவர்களும் தசா புக்தி நன்முறையில் அமைந்தவர்களும் கவலைப்பட வேண்டியதில்லை.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்.

குழந்தைகளைப் பற்றிய அனாவசியமான கவலைகள் உங்கள் உள்ளத்தில் ஏற்படலாம். ராசிநாதனோ 12 - இல் சுக்கிர சம்பந்தம். மாதம் பூராவுமே தனலாபமும், சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது வஸ்திர இலாபமும் கிடைக்கும். ராகுவால் தானிய லாபம் ஏற்படும். இந்த ராகுப் பெயர்ச்சி ஏற்பட்டதிலிருந்தே நீங்கள் அதிகம் பெண்களுடன் பழகும் வாய்ப்பினைப் பெற்றிருப்பீர்கள். எனவே சற்று எச்சரிக்கையுடன் பழகுங்கள். இரண்டில் உள்ள புதன் உங்கள் பெயருக்குக் களங்கம் ஏற்படும் வகையில் சஞ்சரிப்பதை மறந்துவிட வேண்டாம். அத்துடன் சூரியனால் கண்ணில் கோளாறு ஏற்படலாம். மனக்கலக்கமும் ஏற்படும். எனவே குரு, கேது, வினாயகர், சூரியன், புதன் ஆகியவர்களைப் பற்றி வியாஸ பகவான் எழுதியுள்ள நவக்கிரக தோத்திரங்களைப் பாராயணம் செய்து வருவது நல்லது. சனியினால் எல்லாவிதத்திலும் இறுதியில் வெற்றி உங்களுக்கு ஏற்படும். கவலைப்பட வேண்டாம். பொருளாதாரத்தில் சரளமான நிலை இருந்தாலும் வரவுக்கு மீறிய செலவினங்களும் ஏற்பட்டுப் பொருளாதாரத் தட்டுப்பாடும் வரலாம். 12 - இல் உள்ள குரு அப்படிப்பட்ட சுபவிரயத்திற்குக் காரணமும் ஆவார்.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்.

குரு இலாபஸ்தானத்திலிருந்து மகரத்திற்கு 5 ஆம் வீடான ரிஷபத்தையும் 7 ஆம் வீடான கடகத்தையும் பார்ப்பதால் குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும். எதிர்வரும் தேர்வுகளில் குழந்தைகள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். விளையாட்டில் ஆர்வம் இருப்பவர்களுக்கு ஏற்ற

தொரு சூழ்நிலை உருவாகியுள்ளது. சுக்கிரன் 11 இல் மாதம் பூராவும் இருப்பதால் ஆகாய யாத்திரைக்கு வாய்ப்பு உண்டு. எனவே, வெளி நாடு சென்று வருபவர்களுக்கு ஆதாயம் ஏற் படும். சனி 2 ஆம் பார்யாயமாக இருப் பவர்களுக்குச் சனி எந்த விதத்திலும் தொல் லைகள் தராமல் நல்லதையே அருள்வார். திருமணத்திற்காகத் தயாராக இருப்பவர் களுக்குத் தை மாத வாக்கில் திருமணம் நடக் கும் வண்ணம் நிச்சயதார்த்தம் நடக்கும் வாய்ப்பு கனிந்து வந்துள்ளது. மற்ற எந்தக் கிரகமும் உதவும் நிலையில் இல்லை. எனவே, குபேர, லஷ்மி பூஜையை நன்கு அறிந்துள்ள ரிக்வித்துக்களைக் கொண்டு நடத்திப் பாருங்கள். எல்லாவிதத்திலும் எத்தனித்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். கலைஞர்கள், அரசியல்வாதிகள், அரசுத் துறையில் பணியாற்றியவர்கள் முதலானோர் கூடுதலான நன்மை பெறுவர். விநாயகப் புராணத்தைப் படிப்பது நல்லது.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்.

ரிஷப லக்கினத்தில் ஜனித்தவர்களுக்குச் சனி ஆதரவாக அனைத்தையும் தருவார். சூரியன் மாதத்தின் முற்பகுதியில் ஏதேனும் பரிசையோ, பாராட்டையோ பெறும் யோகத் தைக் கொடுப்பார். அது கலைத்துறை மூல மாகவும் வரலாம். அல்லது உங்களது கடந்த கால சேவைக்காகவும் தரப்படலாம். கேது வால் தனலாபம் ஏற்பட வேண்டும். தட்டிச் செல்லும் எந்தச் செயலானாலும் சுப்ரமண்ய புஜங்கத்தை ஒரு குருவின் மூலம் உபதேசிக் கப்பட்டு, படித்து வந்தீர்களானால் அதில் வெற்றி உண்டு. தற்காலிகமாக இல்லாமல் நிரந்தரமானதொரு பொருளாதார மேம்பாடு அடைவீர்கள். மற்றபடி புதன், அங்காரகன், இராகு ஆகியவர்கள் நல்லதைச் செய்வார் கள் என எதிர்பார்ப்பதில் பயனில்லை. எனவே, இடைவிடாத முயற்சி, உழைப்பு, கவனம் இருந்தாலொழிய முன்னேற்றம் அடைவது சற்றுச் சிரமமே. பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வுகள் உண்டு. எனவே, திட்டமிட்டு எதையும் செய்யுங்கள். ஆனால், தசாபுக்திக்கு ஏற்ப முயற்சி செய்வது நல்லது. இந்த ராசியில் பிறந்துள்ள பெண்கள் சனீஸ் வரனுக்கு வீட்டிலோ, கோவில்களிலோ இரும்பு அகல் விளக்கு ஏற்றுவது ஏற்றதொரு பரிகார மாக அமையும்.

மீன ராசி :

பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.


நீங்கள் பூரட்டாதியில் பிறந்தவர்களா னால் உங்களது நட்சத்திர நாயகன் உங்கள் ராசியைப் பார்ப்பதால் உயர்ந்ததொரு கௌரவத்தைப் பெற இருக்கிறீர்கள். வீட்டில் நிச்சயதாம்பூலம் ஒன்றை நடத்த வேண்டிய நிலை எதிர்பாராமல் அமைந்திடும். அரசியல் வாதிகளும் கலைஞர்களும் மிகச் சுறுசுறுப் பாக இருக்க வேண்டிய தருணம். தட்டிக் கழிக்கப் பார்க்காதீர்கள். வந்த வாய்ப் பினைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். 9 இல் உள்ள சுக்கிரன் மாதத்தில் 2வது வாரத் தில் சந்திரன் உச்சம் பெறும் சமயம் எதிர் பாராத தனலாபம் ஒன்றை அடைய உதவு வார். அதற்காக லாட்டரி கடையில் உள்ள சீட்டை வாங்கப் படையெடுக்க வேண்டாம். நலிவடைந்துள்ள உங்களது தொழிலில் அபி விருத்தி ஏற்பட்டாலே போதுமே! ஏதோ ஒன் றிரண்டு சீட்டுக்களை வாங்கிப் பார்க்கலாம். எதிர்பாராத தனலாபம் வருவது மாறி அதிக இலாபம் வருமானால் அதுவும் எதிர்பாராத தனலாபம்தானே? எனவே உழைப்பிற்கு முத லிடம் கொடுங்கள். நன்றாக வளமுடன் பிழைக்க அதுவே சிறந்த முதலீடாகும். அங்காரகன் இருக்கும் கடன்களை அடைக் கத்தக்க அளவில் பொருளாதார நிலையில் உதவுவார். மாதம் பூராவும் புதனும், சூரிய னும் கூட உதவும் நிலை. எனவே, எத்துறை யைச் சேர்ந்தவர்களுக்கும் ஏதேனும் ஒரு விதத்தில் தனலாபம் வந்தே ஆகக்கூடிய மாதம். திட்டமிட்டுச் செயல்பட்டால் கட்டப் பட்ட வீட்டைக் கூட விலைக்கு வாங்கலாம். அந்த அளவிற்கு வீடு வாகன யோகம் உண்டு. அருகம்புல்லைக் கொண்டு ஆனை முகத்தோனுக்கு அர்ச்சனை செய்யுங்கள்.

பி. கு. : நேயர்கள் அனைவர்க்கும் அன்பு கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த ஆண்டில் சுபிட்சமும், மாதம் மும்

வெந்நீரில்
இரண்டு ஸ்பூன்
தேன்விட்டு காலை, மாலை
இருவேளையும் சாப்பிட்
டால் 'ஆஸ்துமா' நோய்
உள்ளவர்களுக்குக் குணம்
தெரியும்.

– ஜா. ஐஸ்வர்யா





மாரி பெய்து நானிலம் செழிக்கவும் அமைதியும் ஆனந்தமும் நீடிக்கவும் எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி வணங்குவோம்.

"பதவி பூர்வ புண்யானாம்!"

ஒரு சமயம் காஞ்சி பரமாச்சாரியாரைப் பார்க்க வந்த ஒரு அம்மையார் முறைப்படி அவரை வணங்கிவிட்டு அவருக்குக் காணிக்கையாகத் தன் கைப்பட வரைந்த ஓவியங்களைக் கொண்ட இரு துணி களைச் சமர்ப்பித்தார். ஒன்றில் இரு பனை மரங்களுக்கிடையே உரலை உருட்டி இழுத்துச் செல்லுகின்ற பாலகோபாலனின் உருவம் வரையப்பட்டிருந்தது. அதையே உற்றுப் பார்த்த பரமாச்சாரியார், அதைக் காட்டி அதன் கதை தெரியுமா எனக் கேட்டார். தெரியாது எனக் கூறிய அந்த சகோதரிக்குத் தனக்கே உரிய மந்தஹாஸ வதனத்துடன் அக்கதையை எடுத்துக் கூறியதுடன், ஓவியம் வரையும்படி கூறி Gordon woodrofe எழுதிய Garland of letters என்ற புத்தகத்தையும் படிக்கும்படி கூறினார். அதற்குப் பின்னரே அந்தச் சகோதரி தஞ்சாவூர் ஓவியக் கலையில் ஈடுபாடு கொண்டு தங்க ரேக்குகளைப் பதித்துப் புராண ஓவியங்களை வரைவதில் திறன் பெற்று மூன்று தேசிய, மாநில விருதுகளைப் பெற்றதுடன், அக்கலையினால் வரும் வருமானத்தை ஏழைக் கன்னிப் பெண்களின் திருமணத்திற்குரிய திருமாங்கல்யம் செய்து அவற்றை ஸ்ரீ காஞ்சி மடத்திற்கு அளித்தும் வருகிறார். இதுவரை 145 மாங்கல்யங்களைக் கொடையாகக் கொடுத்துள்ளார். அவர் வரைந்துள்ள ஆயிரக்கணக்கான ரூபாய்கள் மதிப்பு கொண்ட இராமாயணக் காட்சிகள் கொண்ட படத்தைப் பார்த்தால் வியப்புக்குள்ளாகும் நிலை கட்டாயம் ஏற்படும். இந்த அளவிற்குப் புகழ் பெற்றுள்ளதொரு தெய்வீகக் கலையையும், கொடைத் திறனையும் ஒருவர் பெற்றுள்ளார் என்றால் அதற்குக் காரணம் அவர் பிறந்த நேரத்தில் அமைந்திருந்த கிரக அமைப்பேயாகும். இதை அவரது ஜாதகம், கைரேகைகளைக் கொண்டு அறியலாம்.

ஜாதக ராசிக்கட்டத்தில் லக்கினம் ரிஷபம். லக்கினாதிபதி சுக்கிரன் மகரத்திலும், மகரத்திற்கு அதிபதியான சனீஸ்வரன் ரிஷபத்திலும் இருந்தால் சிறந்ததொரு சனி, சுக்கிர பரிவர்த்தனை ஏற்படுகிறது. இந்த இலக்கினத்திற்கு இலாபாதிபதியான குரு, தரும கருமாதிபதியான சனியுடன் சேர்ந்தால் பிரபல ராஜ யோகமும், நுட்பக் கலைகளில் நிபுணராக விளங்கும் தன்மையும் ஜாதகருக்கு உண்டாகும். அத்துடன் 7 ஆம் வீட்டில் புதனும் சூரியனும் கூடியிருந்து, அவர்களை குருவும் சனியும் பார்க்க, அவ்வீட்டின் அதிபதியான செவ்வாய் மீனத்தில் இலாப நிலையில் இருந்தால் செய்யுந்தொழிலில் இலாபம் ஏற்படவும், அதற்குக் களத்திரத்தின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அதேசமயம் கொடைத் திறனும் ஏற்படும். இந்த அமைப்பைத்தான் உள்ளங்கையில் உள்ள ரேகைகளும், மேடுகளும் பிரதிபலிக்கின்றன. உள்ளங்கையில் விதி ரேகை (x - y) நன்கு அமைந்து, புதன் ரேகையும் (s - t), சூரிய ரேகையும் (a - b), விதி ரேகையில் O எனும் இடத்தில் சந்திப்பது பிரபல இராஜ யோகத் தைக் குறிக்கும். இருதய ரேகையும் (e - d), புத்தி ரேகையும் (h - i) உள்ளங்கையில் ஒரே சீராக இடைவெளி விட்டுச் செல்வதால் மனைவியின் தொண்டுக்குக் கணவரின் ஒத்துழைப்பு கிடைக்கும். சுக்கிர மேடும் (V) குருமேடும் (J) நன்கு அமையவும், குருமேட்டில் நல்லதொரு சாலமன் ரேகை (m-n) இருக்கவும் அமையப் பெற்றவர்களுக்கு நுண்ணறிவும், நுட்பக் கலைத் திறனும் ஏற்படும். இவ்வாறு உள்ளபடியே ஜாதக அமைப்பும், உள்ளங்கையின் மேடுகளும், ரேகைகளும் சிறந்த நிலையில் அமைந்தும் இருப்பதால்தான் மேலே கூறப்பட்ட சகோதரி கலைத் திறனும், கொடைத்திறனும் கொண்டவராகத் திகழ்கிறார். இத்தகைய வாழ்க்கை அமைய பூர்வ புண்ணியமும் தேவை. அதனால்தான் ஜாதக ஆரம்பத்தில் தெய்வ யக்ஞர்கள் எனப்படும் ஜோதிடர்கள் "பதவி பூர்வ புண்யானாம்" எனக் குறிக்கின்றனர்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்

திருமண மலர்

மணமகள் தேவை

✱ For only son 32 B.Com 5'-10"Makam Athreya gothram Brahacharanam subsect no bar settled Bombay Doha service wanted fair girl graduate Reply Box No.11481

✱ Employed Girls for Brahmin, Kaushikam, Vadama, only Son, Madras Employed, 26, Sisters already Married and settled, Subsects acceptable, Simple Terms. Simple Marriage. Box No.11482

✱ *இனம் இந்து செட்டியார். வயது 41, படிப்பு எஸ்.எஸ்.எல்.சி, தொழில் சொந்தமாக வியாபாரம் மாத வருமானம் 2500/- இத்துடன் ஓரளவு வசதியுள்ள மணமகனுக்கு, நல்ல குணமுள்ள மணமகள் தேவை. குழந்தைகள் இல்லாத விதவைகள் மற்ற இந்துக்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு கொள்ள வேண்டிய பெட்டி எண் : 11483*

✱ Wanted fair, good looking non-Kousika graduate bride for Vadama Iyer Boy, Printing Technologist, Kettai, 29yrs., 6ft. Own business (D.T.P.) In City.. Reply with horoscope to Box No. 11484

✱ Alliance for Bombay based Tamil Iyer Athreya Brahacharanam, Uthirattathi fair, 30, 167, B.Sc. D.C.P., owning Computer consultancy firm earning Rs.6000 plus monthly seeks very fair, wheatish, graduate, preferably Computer qualified girl. All subsects welcome. write to Box No . 11485

✱ *இந்து அசைவம் குருமன்ஸ் ஜாதியை சேர்ந்த வயது 29 உயரம் 168செ.மீ., படிப்பு எம்.டெக், இளமையான தோற்றத்தை உடைய பாம்பே PSUல் வேலை செய்யும் மணமகனுக்கு வேலையில் உள்ள அல்லது நன்கு படித்த செவ்வாய் தோஷம் உள்ள பெண் தேவை. ஜாதி, இனம் தடையில்லை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 11486*

✱ 'Alliance invited for an Iyengar Boy, divorcee without encumbrance, Vadoolam, Aswini, 34, own Business earning Rs.5,000/- P.M. Iyengar Girls excluding divorcees may apply to Box No . 11487

✱ Tamil Iyer Vadamal Kousika Gothram Boy 27, 160, 3500 perks Foreign Company At Delhi. Alliance invited from (Preferably Govt.) employed girl in Delhi. Reply Horoscope with details Box No. 11488

✱ *''கவரா நாயுடு, 35, அனுஷம், பி.எஸ்சி, 5'.8'', அழகான, ரூ.6000 மாத வருமானம் தரும் அளவில் மீன் பண்ணை நிலங்கள் உடைய மணமகனுக்கு, கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, அழகிய, படித்த, சுத்த ஜாதகமுடைய, நாயுடு பெண் தேவை. ஜாதகத்துடன் எழுதவும்.'' பெட்டி எண் : 11489*

✱ *தமிழ் செட்டியார்-பிள்ளை இனத்தைச் சேர்ந்த பி.எஸ்சி வரை படித்த மாதம் 4500/- ரூபாய் பெறும் 28 வயது உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வரனுக்கு ஓரளவு வசதியுள்ள அதே இனத்தைச் சார்ந்த குடும்பத்திலிருந்து படித்த பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 11490*

✱ *கவரா நாயுடு வயது 34, உயரம் 180செ.மீ, எம்.எஸ்சி, பி.ஜி.டி.சி.ஏ. சம்பளம் ரூ.7000/- சட்டப்படி விவாகரத்து பெற்ற களங்கமற்ற, அரசாங்க நிறுவனத்தில் அதிகாரியாக பணிபுரியும் மணமகனுக்கு அழகுள்ள, குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 11491*

✱ *நல்ல நிறமும், அழகும், வசதியும் உடைய இந்து நாடார் 42, 166 டெபுடி தாசில்தார் மாதம் ரூ.4300/- மற்றும் இதர குடும்ப வருமானம் மாதம் ரூ.5000/- பெறும் மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட படித்த அல்லது வேலையில் உள்ள பெண் தேவை. பெட்டி எண் : 11492*

✱ சொந்தத் தொழிலில் மாதம் மூவாயிரத்திற்கு மேல் சம்பாதித்துக் கொண்டு, கூட்டு முயற்சியுடன் சினிமா படம் தயாரிக்கின்ற, சொந்த ஊரில் தோட்டமும் வீடும் உள்ள இருபத்தைந்து வயது வன்னியக் கவுண்டர் மணமகனுக்கு இருபத்தைந்து வயதிற்குள், படித்த, வேலை பார்க்கும்/பார்க்காத பெண்தேவை. ஜாதி மத பேதம் இல்லை. பெட்டி எண் : 11493

✱ Educated sympathetic patient Tamil Brahmin girl as life partner for a 36yrs Old Blind boy well educated with foreign qualification higly Spiritual, Financially, Independent fair and medium, Unencumbered widows no bar. Box No. 11494

✱ *அஷ்டஸஹஸ்ரம், ஹரித கோத்திரம், உத்திராடம், 39, 175, 6000,* Diploma in Electrical Engg and Computer course இன்வெஸ்ட்மெண்ட் கன்ஸல்டன்டாக இருக்கும் நல்ல அழகான பையனுக்கு வேலையில் உள்ள (அல்லது) இல்லாத மணமகள் தேவை. பிராமண ஜாதியில் உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம், குடும்ப விவரம் அனுப்பவும். பெட்டி எண் : 11495

✱ Alliance invited from girls below 25 employed/willing to go for job for Vadamal, Kousika, Iyer, non-graduate boy 28, 158, 3000 Accounts Assistant in a reputed company in Delhi. Subsect No bar. Reply to Box No. 11496

✱ *திருநெல்வேலி சைவ வேளாளர் பிள்ளை வகுப்பு - படிப்பு பி.எஸ்சி, புனர் பூசம், வயது 28, 5'6'' சொந்த வியாபாரம், நிரந்தர மாத வருமானம் ரூ.5000/-க்கு மேல் உள்ள வாலிபருக்கு அதே இனத்தை சேர்ந்த அழகிய குடும்பப் பாங்கான பெண்தேவை. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண் : 11497*

✱ *வடமாள், கௌசிக, ஐயர் உத்திரட்டாதி எம்.எஸ். (கம்ப்யூட்டர்) 28, 162,* Fair *பெரிய கம்பெனியில் வேலையில் உள்ள பையனுக்கு, வடமாள் பிரிவு எம்.எஸ்.சி. கம்ப்யூட்டர்* good looking girl *தேவை. பெட்டி எண் : 11498*

✱ *வடமாள் ஐயர் ஹரிதகோத்திரம் விசாகம் பி.எஸ்சி, 27, 170, ரோகிணி, பி.எஸ்சி, 25, 175 ஆகிய இரு பையன்களுக்கு வேலைக்குச் செல்லும் வரன்கள் தேவை. பையன்*

கள் வேலை சென்னை தனியார் துறைகளில். விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 11499

* பிரஹசரணம், கர்க கோத்திரம், பட்டதாரி, புனர்வசு, உயர்ந்த கம்பெனியில் மாதம் 5.000/- தவிர இதர சலுகைகள் உள்ள 5'6'' உயரமுள்ள நல்ல ஆரோக்யமான கெட்ட பழக்கம் எதுவும் இல்லாதவர், திருமணமான 3 மாதத்தில் பிரிந்துவிட்ட ஐயர் பையனுக்கு தகுந்த மணமகள் 30 லிருந்து 35 வயதிற்குட்பட்ட நல்ல குடும்பத்து அடக்கமான பட்டதாரி பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 11500

* அம்பர் சோழியான் பாரத்வாஜம் அஸ்வதி, 33, 157செ.மீ, 1200, தனியார் கம்பெனியிலுள்ள மணமகனுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த குடும்பப் பாங்கான வேலைக்குச் செல்லும், செல்லாத மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் :11501

* "கிருஷ்ணன் வகை (B.C) வங்கி ஊழியர், 36 வயது, தாரமிழந்தவர், மூன்று குழந்தைகள் உள்ளனர். மேலும் குழந்தைகள் பெற்றுக் கொள்ள விருப்பம் இல்லை. குமாரி 30 வயதுடைய தாய்மையடையும் வாய்ப்பில்லாத அன்புள்ளமும் தியாக மனப்பான்மையும் கொண்ட வாழ்க்கைத் துணை தேவை." பெட்டி எண் : 11502

* Alliance invited from Madhawa Kannada speaking Parents of girls aged 25 years Government/private employed Madras for varan of same subsect - Upmanyu Vasistha Gothram aged 28/5'6"/D.M.E./2500 working in reputed company Madras. Apply with Horoscope. Box No. 11503

* Vadama, Kousika Boy, S.S.L.C, 2500, 160, 27, Poosam, Employed in reputed private company in Indore (M.P) preference employed girl settled in North India simple marriage sub-sects considered with Horoscope Reply Box No. 11504

* துளுவ வேளாள முதலியார், வயது 27, மிருக சீரிஷம் நட்சத்திரம் மேஷலக்னம் DECE படித்து ICFல் ரூ.2500/- பணியில் உள்ள மணமகனுக்கு இதே வகுப்பைச் சேர்ந்த படித்த மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 11505

* வடமாள், பாரத்வாஜம், மிருகசீரிஷம் 3ம் பாதம், 30, 171செ.மீ, எம்.காம், Inter ACS இன்ஸ்பெக்டர் சென்ட்ரல் எக்சைஸ் பெங்களூர், 4200 வருமானம் உள்ள வரனுக்கு, பட்டப்படிப்பு, வேலையில் உள்ள, இல்லாத மணப்பெண் தேவை. பெட்டி எண் : 11506

* Vadama Kousika Pooradam 4th Padam 5'.6" Age 31, B.Com, Central Government Transferable job Rs.3500, seeks good looking preferably not employed girl. Apply with Horoscope Bio Data. Box No. 11507

* Alliance invited for Iyer Vadamal Boy, Srivatsa Gothram, Thiruvonam, 5'7", 35 Years, Suddha Jatakam B.Sc NIIT, Employed in Central Govt. Secretariat, New Delhi, from Beautiful, Graduate Girl working in Central Government, Bank L.I.C. Transferable to Delhi, Hyderabad. Box No. 11508

* Wanted fair, Good-Looking, tall post Graduate Bride, preferably MCA, M.Sc., B.E. for Iyer Boy, Koundinya Gothram, Rohini star, Aged 27 years, M.S.(Computer Engg) Employed in USA. Apply with Horoscope to Box No. 11509

* "Vadama, Vadoolam, Ashwathy, B.Sc, 27yrs, 180cm, 5,500, smart working as Medical Representative in reputed Company at Trichy with clean habits seeks graduate girl from a decent family. reply with horoscope to Box No. 11510

* வடமாள், கௌண்டின்ய, திருவாதிரை 32, 7000, M.Sc,M.Ed.,P.G.D.C.A, முதுகலைப் பட்டதாரி ஆசிரியராக வேலை பார்க்கும் சொந்த வீடுள்ள, ஒரே அழகான பையனுக்கு L.I.C./Bank/Govtல் வேலைபார்க்கும் பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 11511

* Alliance invited for Srivatsa, Vadama, thiruvathirai boy 33, 175, 3600 plus good family property Higher Secondary, Typing, Shorthand, Computer Courses passed employed Madras private concern Sub-sect No Bar No Dowry. Box No.11512

* பிராமணர் வடமாள், கௌசிக கோத்திரம், பூரம் நட்சத்திரம், 29வயது, பி.காம், சென்னை தனியார் கம்பெனியில் சிப் ஸலர். மாத வருமானம் ரூ.5400, சொந்த வீடு, உயரம் 168செ.மீ. மணமகனுக்கு வேலைக்குப் போகும் படித்த குமாரி ரூ.1500 to 2000/சம்பளம் பெறும் அழகான மணமகள் தேவை. பெட்டி எண் : 11513

* "Alliance invited from Educated Employed girls for boy 28, 182, 2500, Manager Private sector poised for bright future Illathu Pillai, Ezhava, B.Com, GD in FCA.Also Doing CA. Reply Box No. 11514

* Palghat Iyer, Vadama Athreyam, Hastham, 40, 165, 5500, Junior Engineer Bombay Telephones, Qualified Telcom Engineer Services, invites alliance from tall, fair good looking Iyer girls below 34 Bombay employed/ others transferable. Details/ to Box No. 11515

* மாநில அரசு உத்தியோகம், 3700, பி.யு.சி. வயது 43, அசைவ வேளாளர், சொந்த வீடு, நடுத்தர வசதி. மனைவியை இழந்து இரு ஆண் குழந்தைகள் (வயது 10,4) உள்ளவருக்கு, நல்ல குணமும், பரந்த மனப்பான்மையுள்ள மணமகள்/ குழந்தைகளில்லா விதவைகள் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 11516

* Alliance for Vathimal, Kousigam, Ayilyam, 30, 167cms, Ranbaxy Group Chandigarh Employed, Rs.3400, From parents of girls with stenography knowledge. Sub-sect No Bar. Box No. 11517


* தஞ்சை சைவ பிள்ளை, வயது 28, உயரம் 174செ.மீ, AMIE/Mech சம்பளம் ரூ.6,000/- இஞ்சினியராக தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பையனுக்கு, வேலையிலுள்ள அல்லது நன்கு படித்த அழகான மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விபரத்துடன் எழுதுக. சுத்த சைவ உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 11518

* Hindu Nadar Bachelor 29, 165, 5800, fair, Non-smoker, teetotaller, College lecturer belonging to educated family seek alliance from fair, beautiful, well-qualified and decent employed Nadar bride. Box No. 11519

* Alliance invited for, Maharashtrian, Hindu, Mahar (SC) Station Master in Southern Railway 32, 160, 3900, M.Sc. Middle class from Tamil Hindu girls around 23-25 years graduate, unemployed, beautiful, Homely. Caste No Bar. Box No. 11520

* "Alliance invited for Vathima boy, Bharadwaj, Swathi, B.Com, with Computer Diploma, 27, 170, 4000, Decent Marriage, good family Background must, Reply with Horoscope, family details." Box No. 11521

* கார்காத்த வேளாளர் 26, 177, பி.எஸ்ஸி, கம்ப்யூட்டர் டிப்ளோமா சென்னை தனியார் துறையில் உதவி மேலாளர் சொந்த வீடு. அதே இனத்தில் சிறப்பான நல்ல தோற்றமுடைய குடும்பப் பாங்கான வேலைக்கு செல்லாத பட்ட



ஸ்ரீ லக்ஷ்மி வெங்கடேச்வர கோடி நாமயக்ஞம் - திருப்பதி

From 7th Oct '94 to 22nd Jan '95, 108 Days

திருப்பதி புனிதப் பயணம் - அன்புடன் அழைக்கிறோம்

பூர்ணாஹுதி விசேஷ பூஜை - 22.1.95

கோடி நாம யக்ஞத்தின் பூர்ணாஹுதி பூஜை

ஸ்ரீ லக்ஷ்மி வெங்கடேச கோடிநாம யக்ஞத்தின் பூர்ணாஹுதி பூஜை, ஆங்கில புத்தாண்டு ஜனவரி மாதம் 22ம் தேதி 22.1.95 (தை மாதம் 8ம் தேதி ஞாயிற்று கிழமை) திருப்பதி - திருச்சானூர் நவஜீவன் சப்தகிரி ஆச்ரமத்தில் சென்னை ஸ்ரீ புவனேச்வரி ஸ்வாமிகள் தலைமையில் ஸ்ரீஸூக்த ஹோமத்துடன் விசேஷமாக நடைபெற உள்ளது. கோடி நாமயக்ஞம் - எழுத்து வேள்வியில் இது நாள்வரை பங்கு கொண்ட ஆஸ்திக அன்பர்கள், பூர்ணாஹுதி பூஜைக்கும் சௌகர்யப்பட்டால் நேரிலும் வந்து கலந்து கொள்ளலாம். பூர்ணாஹுதி பூஜையன்று FTT, FGTM, FTK இம்மூன்று திட்டங்களிலும் பங்கு கொண்ட அன்பர்களின் தேர்விலும் நேரில் பங்கு கொள்ளலாம்.

நலம் தரும் பூர்ணாஹுதி விசேஷ பூஜை.

ஆஸ்திக அன்பர்கள் எழுதி அனுப்பிய ஸ்ரீ வெங்கடேச திவ்ய நாமாவளிகளை பூஜையில் வைத்துள்ளோம். பூணாஹுதி பூஜையில் நேரில் கலந்து கொள்ள இயலாதவர்கள் தங்களுடைய உடல் ஆரோக்கியம், குடும்பத்தில் அமைதி, பதவி உயர்வு, விரைவில் திருமணம் கைகூடுதல், வியாபாரம் - தொழிலில் முன்னேற்றம் அல்லது உலக க்ஷேமம் போன்ற கோரிக்கைகளில் ஏதேனும் ஒரு முக்கிய கோரிக்கையை குறிப்பிட்டு ரூ. 200/- காணிக்கையாக by MO/DD அனுப்பும் ஆஸ்திக அன்பர்களின் சார்பாக பூர்ணாஹுதி பூஜையன்று ப்ரத்யேகமாக நட்சத்திர சாந்தி ஹோமம் செய்வித்து, வெள்ளிகாசு டாலருடன் பிரசாதம் by Regd. Post ல் அனுப்பி வைக்கப்படும்.

குறிப்பு : தயவு செய்து MO கூப்பனில் தவறாமல் ஆஸ்திக அன்பர் தங்களுடைய பெயருடன் பிறந்த நட்சத்திரத்தையும், SVK நெம்பரையும் குறிப்பிட வேண்டுகிறோம். நேரில் கலந்து கொள்ள விரும்பும் ஆஸ்திக அன்பர்கள், மற்றும் சென்னையில் உள்ள இதர பஜனை கோஷ்டிகள், ஸஹஸ்ரநாம மண்டலி அன்பர்கள் தங்களுடைய சொந்த செலவில் 21.1.95 மாலைக்குள் திருப்பதி சேர வேண்டுமாய் வேண்டுகிறோம். இடவசதி கோரும் அன்பர்கள் ஜனவரி 10 தேதிக்குள் விவரம் அனுப்ப வேண்டுகிறோம்.

விசேஷ வேண்டுகோள் :

குறிப்பிட்ட கோரிக்கையுடன் ரூ. 200/- by MO/DD மூலமாக கீழ் குறிப்பிட்டுள்ள அட்ரஸுக்கு காணிக்கை அனுப்பும்படி வேண்டுகிறோம். தவிரவும் திருப்பதி நவஜீவன் சப்தகிரி ஆச்ரமத்தின் ஆன்மிக - சமூகநல திட்டங்களுக்கும் வசதி படைத்தவர்கள் இயன்றவரை காணிக்கை அனுப்ப வேண்டுகிறோம். ஜனவரி 15க்குள் (15.1.95) தங்களிடம் உள்ள SVK படிவங்களை எழுதி பூர்த்தி செய்து அனுப்ப வேண்டுமாய் கேட்டு கொள்கிறோம்.

நாராயண சேவையில்
K.S. ஆசார்ய
Organiser.

ச்ரேயோ பூயாத் ஸகல ஜனானாம்.

K.S. ACHARYA, Organiser
SRI LAKSHMI VENKATESWARA KOTINAMA YAGNYAM
NAVAJEEVAN SAPTAGIRI ASHRAM,
P.O. TIRUCHANUR, TIRUPATI - 517 503.

தாரி பெண் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 11522

* Wanted accompalished girl for Bhardwaja Iyer boy 30, 163, FRCS under going training in cardio thoracic in an Eminent Hospital in U.S. Reply with details and Horoscope to Box No. 11523

* சோழிய வெள்ளாளர் அவிட்டம் 1ம் பாதம் பி.ஈ., 27, 164, 6000 டெல்லியில் புகழ் பெற்ற கம்ப்யூட்டர் நிறுவனத்தில் இஞ்ஜினியராக வேலை பார்க்கும் பையனுக்கு தகுந்த உயரமுள்ள அழகான மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பி.ஈ. கம்ப்யூட்டர்ஸ், பி.ஈ. எலக்ட்ரானிக்ஸ், எம்.வி.ஏ., எம்.எஸ்ஸி கம்ப்யூட்டர், பிஜி சாஃப்ட்வேர் விரும்பத் தக்கது. படித்துக் கொண்டிருந்தாலும் சரி. ஜாதகம், குடும்ப விபரங்கள், எழுதவும். பெட்டி எண் : 11524

* Vadama, Kousika, Magam, M.Com, 5'.7", aged 32 years employed in a Nidhi company, salary Rs.2.500/- seeks educated girl (Employed Unemployed) Sub-sects no bar. Apply with Horoscope to.11525

* "கன்னட தேவாங்கர், பாலிவார் குலம், வயது 30, பி.எஸ்ஸி., கோவையில் சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு அதே இனத்தில் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த படித்த, லட்சணமான மணமகள் தேவை. கோவை, பெரியார் மாவட்டங்கள் விரும்பத்தக்கது. பெட்டி எண் : 11526

* Alliance invited from suitable MBBS, MS, MD, Girls around Thirty for Iyengar Professor Leading American University, Tall, Fair, Dynamic Personality, clean habits, Divorcee within days without Encumberances. Visiting India soon. Reply Box No. 11527

* Alliance invited from unemployed graduate non Vadoolam Vadamal Iyer girl (21 to 23) for Bank Employee, B.Sc, 28, 170, 4000, Chithirai. No bar for Employed Reply with Horoscope. Box No. 11528

